திராவிடநாடு
BALU BROS
1954

விலை
ரூ. 1—0—0

திராவிடநாடு

மலர் 12
இதழ்
28, 29, 30, 31

★ பொங்குக இன்பம் ★

பொங்கற் புதுநாள், தமிழர் திருநாள்! எங்ஙனமோ, ஓர் விழாக்கோலம் அமைந்து விடுகிறது, வீடெல்லாம், நாடெங்கும் நேற்றுவரை இருந்துவந்த சங்கடம் ஓய்வெடுத்துக் கொள்கிறது, எங்கிருந்தோ ஓர் மகிழ்ச்சி, இல்லம் புகுந்து, இதயம் புகுந்து, தமிழரைப் பொலிவுள்ள பேசும் பொற்சித்திரமாக்கிவிடுகிறது.

புத்தாடை! பாற்பொங்கல்! புன்னகை! மழலை! கொஞ்சுமொழி! கனிவு! மகிழ்ச்சி! தாய்மையின் அழகொளி, குடும்ப பாசம்! விழாக்கோலம்!—அட்டியின்றி அன்று அரும்பும் மலர்களின் பட்டியல் கூறின் விரியும்! வறுமை ஒழிந்துவிடுவதில்லை—அன்று தலைகாட்ட அஞ்சுகிறது! விசாரத்திலிருந்தும் மக்கள் விடுபட்டுவிடுவதில்லை—அன்று ஓய்வெடுத்துக் கொள்கிறது. ஏக்கமும் பெருமூச்சும், இன்ப மொழிக்கு இடமளித்துவிட்டு, மூலை சென்று பதுங்கிக்கொள்கிறது. வேறு எந்த விழாவுக்கும் இல்லாத ஓர் தனித்தன்மை, மணம், தமிழர் திருநாளன்று கிடைக்கிறது. இல்லம் எல்லாம் இந்த இன்பம் பெறவேண்டும்—இன்றுபோல் என்றும் அந்த இன்பம் இருந்திடும் நிலையில் நாடு அமைந்திட வேண்டும், என்ற என் விருப்பத்தை வழங்குகிறேன், உங்கள் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ளவன் என்ற நிலையில் உள்ளவனாதலால். பொங்குக இன்பம்! தங்குக என்றும்!

திராவிட முன்னேற்றக் கழகம், வீணர் விழாக்களை வெறுத்தொதுக்குவது—அறிவீர்—காரணமும் தெரியும்.

கழகம், பெரும் பொறுப்புகளைத் தாங்கிக் கொண்டு, பாடு அறிந்து ஒழுகும் அமைப்பு—எதிர்ப்பாளர்களும், வசவாளர்களும் கழகத்தைக் கடிந்துரை[illegible]து இதனாலேயே கனி மரத்தை நோக்கித்தானே கற்கள் பறக்கும், பட்டமரத்தின் மீதா!!

விழாக் கொண்டாட நேரம் இல்லை—வீண் விழாக்களைக் கொண்டாடுவது தமிழர் நெறிக்கு உகந்ததல்ல, என்ற எண்ணம் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம். சீரும் செல்வமும் பெரும்பாலோருக்கு இல்லை, ஏழ்மையும் இயலாமையும் மக்களில் பெரும்பாலோரைக் கப்பிக்கொண்டுள்ளன. இந்நிலையில், விழாக்கள் கொண்டாட, வாய்ப்பும் வசதியும் கிடைத்தல் இல்லை, என்பதைக் கழகம் நன்கு அறியும். அதிலும் கடந்த ஆறு ஆண்டுகளாக, தொல்லையைத் தாங்கித் தாங்கி, திராவிடப் பெருங்குடி மக்கள் நொந்துகிடக்கின்றனர். நொந்த உள்ளத்திலே வேல் பாய்ச்சுவதுபோல, திராவிடத்தின் மீது அரசியலார் அடக்குமுறையை வீசி, அதனால் ஏற்பட்ட புண்கண்டு புன்னகை புரிகின்றனர்.

பொங்கற் புதுநாள் கொண்டாடும் இல்லங்களில்—திராவிட இல்லங்களில் — இதேபோது, சிறைக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, திராவிடச் செம்மல்கள்—தூத்துக்குடித் தோழர்கள்—மனைவியையும் விழாக்கோலம் கொள்ளும் தாயகத்தையும் எண்ணிக் கண்ணீர் விட்டவண்ணமிருக்கும், காட்சி தெரியத்தான் செய்யும்—கவலை துளைக்கத்தான் செய்யும்.

“மகன் இல்லையே — மனையில்! பொருள் தேடி, பிழைப்பை நாடி, நெடுந்தொலைவு சென்றிருந்தாலும், திருநாளன்று இல்லம் வருவான், இன்பம் பெறுவான். இன்றோ, இங்கே பால் பொங்கவேண்டும், அங்கே அவன் கண்ணீர் பொங்கிக் கொண்டிருக்குமே, காவற் கூடத்திலே” என்று எண்ணித் தவிக்கும், தாய்மார்களைக் காண்கிறேன்—மனம் கரைகிறது.

“சென்ற ஆண்டு, பொங்கற் புதுநாளன்று, அவர்......” என்று எண்ணிக் காதலரைப் பிரிந்து வாடுவோரைக் காண்கிறேன்—மனம் கரைகிறது, இந்த நிலையை உண்டாக்கிவைத்த ஆளாள்வோரின் போக்கு, உள்ளத்தைத் தாக்குகிறது.

அப்பா எங்கே!—என்று கேட்கும் மழலை—அதற்குப் பெருமூச்சைப் பதிலாக அளிக்கும் தாய். இந்த ஆண்டு பொங்கற் புதுநாளன்று, இல்லம் பலவற்றிலே, இந்த கலக்கமளிக்கும் நிலை. அணிந்துள்ள மாலையில், புகுந்து கிடக்கும் நச்சுப் பூச்சிகள், அரிப்புத் தருவதுபோல், விழாக் கொண்டாடும் வேளையில், ஆட்சியாளர் தந்துள்ள அடக்குமுறை இருக்கிறது. கவலை எழலாகாது என்று கூறிட, நான் கன்னெஞ்சக் காரனுமல்ல, கனவுலகில் உலவுபவனுமல்ல. எனவே மகனைப் பிரிந்திருக்கும் தாய்க்கு, கணவனைப் பிரிந்திருக்கும் நல்லம்மைக்கு, அப்பாவைக் காணாது தவிக்கும் சிறுவர்களுக்கு, ஒன்று மட்டுமே கூறுவேன்—நீவிர் கொண்டுள்ள கவலையையும் கலக்கத்தையும் நானும், என் போன்றே கழகத்தவர் ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர்; ஆறுதலை நாம் ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொள்ளத் தான் வேண்டும் கலக்கம் வரத்தான் செய்யும்—எனினும், கண்ணீரை, கொடுமை செய்யும் அடக்குமுறையாளர் காணவிடலாகாது—வீரர் சிறையில் உள்ளனர், வீணர் அமுல் செய்கின்றனர்—எனினும், பால்பொங்கும், பாகு கலந்த சுவை அளிக்கும், பக்குவமாகச் சமைத்திடும் போது; அதுபோல், அடக்குமுறை அழிந்துபடும், அறம் பொங்கி எழும், இன்பம் வழிந்து வரும், காலமறிந்து, முறையுணர்ந்து பணியாற்றினால் என்ற பேருண்மையை எண்ணி ஆறுதல் மட்டுமல்ல, மகிழ்வும் பெறவேண்டுகிறேன்.

இவ்வாண்டு பொங்கற் புதுநாளன்று, ஏறத்தாழ ஐயாயிரம் இல்லங்களிலே அறப்போரில் ஈடுபட்டு, சிறையிலே கஞ்சிக் கலயத்தை ஏந்தி நின்ற தோழர்கள், உள்ளனர். சிறை சென்று வந்தவன், மீண்டும் செல்ல வேண்டியவன் என்ற முறையில் என் நன்றியையும் பாராட்டுதலையும் அவர்களுக்குக் கூறி, இன்று பொங்குவது பால் மட்டுமல்ல, வீரச் செந்தேன் கலந்து பொங்குகிறது—தாயகத்துக்குத் தகுதியான பொங்கலைப் படைத்த வீரர்காள்! வாழிய நீவிர்! என்று வாழ்த்துகிறேன்.

மகிழ்வது மட்டுமல்ல, மகிழ்வூட்டுவது, இவ்விழாவின் தனிச் சிறப்பு.

மகிழ்வு நாம் பெற, உழைத்தோர்க்கெல்லாம் நாம் மகிழ்வளிக்க வேண்டும் — மாண்பு பிறக்க வேண்டும்.

உழவரும் பாட்டாளியும், நாடு வாழ வழி செய்து தந்தோர்.

அதோ நம் உடன்பிறந்த மங்கை நல்லாள், புதுப்பானையிலே கொட்டும் அரிசி, அவன் உழைப்பிலே உருவானது. அதனைப் பொங்கலாக்க உதவும் எரிபொருள், அவன் வெட்டித்தந்தது. தத்திநடக்கும் குழந்தையும், துள்ளிவிளையாடும் செல்வியும், ஏறுநடைபோடும் தம்பியும், இளமையை ஒருகணம் பெறும் போக்கிலே உள்ள பெரியவர்களும், அணிந்துள்ள புத்தாடை, அவன் நெய்தது! ஆமாம்! விழாக்கோலம் அவனால் வந்தது! அவன் விம்மினால் அது விழாவாகாது—களிப்பு உண்மையும் உயர்வும் உடையதாக இருத்தல் வேண்டுமானால், பாட்டாளி தந்த பரிசு இவ்விழா என்ற பாடம் பெறவேண்டும்—பிறர்க்கும் எடுத்துரைக்க வேண்டும்—பாட்டாளியின் வாழ்விலே வளம் உண்டாகும் பாதையை அமைக்கும் பணியினைச் செய்வோம் என்று சூள் உரைத்திட வேண்டும். பார்முழுதும் ஏர்முனையிலே!—என்ற பாடல், இதயகீதமாகவேண்டும். கழகத் தோழர்கள், பொங்கற் புதுநாள் தரும் களிப்பினை, இக்கடமையாற்றுவதற்கான ஆற்றல் பெறப் பயன்படுத்த வேண்டுகிறேன்.

தமிழர் திருநாளாம் இப்பொன்னாளில், நாம் விழாக்கொண்டாடும் இந்தத் திராவிடம், அன்று இருந்த எழில் நிலை, இன்று உள்ள தாழ்நிலை, எதிர்காலத்தில் அது அடைய வேண்டிய உயர்நிலை, இவை குறித்த எண்ணம் உள்ளமெல்லாம் பொங்கவேண்டும்—அனைவருக்கும் மகிழ்வுடன் விழா விருந்தளிக்கும் பான்மைபோலவே, இந்த எண்ணப் படையலையும் நாட்டவருக்கு அளித்திடவேண்டுகிறேன். நாம் ஈடுபட்டுள்ள அரும் பணியின் மேம்பாடு, நாடு அறிந்திடச் செய்தல் வேண்டும்

வறுமை கொட்டினாலும், வன்கணாளர்கள் தாக்கினாலும், புன்மை இருள் நாட்டைக் கப்பிக் கொண்டிருந்தாலும், புல்லர்கள் பகையைக் கக்கினாலும், நாம் துவக்கி நடாத்தி வரும், விடுதலைப் போர்ப்பணி, வெற்றிதந்த வண்ணமிருக்கிறது என்ற கருப்பு, காண்கிறோம்—அதனைக்காண உழைத்த தோழர்களுக்கெல்லாம் எனது நன்றி. கரும்பைச் சுவைத்திடும்போது பல் இடுக்கிலே சிக்கிடும் துரும்பு துளைத்துக் குருதி கசிவது போன்றதே, அடக்குமுறைதரும் தொல்லை என்று கருதுங்கள். தாயைக்கேளுங்கள், அடுப்படி வெப்பத்தைத் தாங்குவது எப்படி என்று, பொங்கற்படைய... காணவேண்டும் என்ற எண்ணம் போ... வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள என்... வார்கள்; உமது துணைவியைக் கே...

கள், இன்று மட்டும் கூச்சத்தைத் தழுவிக் கொள்ளாமல் பேசும்படி கேளுங்கள், அதோ வாழையை எடுத்துக் குழைத்து வாயருகே கொண்டு செல்கிறானே வீரமணி, அவனை ஈன்ற பொழுது, எங்ஙனம் வலியைப் பொறுத்துக் கொண்டார்கள் என்று! பதில் கிடைக்காது! ஒரு ஆசை முத்தம் கிடைக்கும், உங்களுக்கு அல்ல—அந்தப் பயலுக்கு!!

தாயக விடுதலைக்காக நாம் தாங்கிக் கொள்ளத்தான்வேண்டும் தொல்லை பலவற்றை!! தாங்கிக் கொள்ளும் பண்பு வளர்ந்துவிட்டது.! இனி, பால் பொங்க, முறைப்படி தேவையான காலம் வேண்டும்—பால் பொங்கும், நிச்சயமாக. வண்ணக் கலயங்களும், தீட்டுக்கோலும் திரையும் கிடைக்காததால், ஓவியன், மனத்திரையிலே பதிந்துள்ள ஓவியத்தைத் தீட்டாதிருந்திட மாட்டான்—காலம் தேவை துணைப்பொருள்களைப் பெற, எனினும் ஓவியம் தீட்டப்படும் என்பதுமட்டும் உறுதி! ஓவியனல்லவா ஓவியம் தீட்ட விரும்புகிறான்!! இயலாது போவது எங்ஙனம்? தாயகத்தின் தளைகளை நொறுக்கி, விடுவித்து, தன்னரசைச் சாய்த்திட்ட சழக்கருக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தி விரட்டிட, நாட்கள் பலவாகக் கூடும்—நமது கரங்களிலே போதுமான அளவு வலிவு ஏறக் காலம் தேவைப்படக்கூடும்! எனினும் என்ன! தாயகத்தின் விடுதலையைப் பெறாமலா இருந்துவிடுவோம் வீரரன்றோ, உரிமை கொண்டோரன்றோ, திராவிடரன்றோ, திராவிடத்தைக்காண முனைகின்றனர்! எங்ஙனம் அது இயலாது போகும்! இடர்பலகிளம்பத்தான் செய்யும், தொடர்ந்து தொல்லைகள் துரத்தி வந்து தாக்கத்தான்செய்யும்—செய்பினும் என்.! வெற்றி பெறாமலிருக்க, நாம், என்ன, அறமற்ற நோக்குடனா பணியாற்றுகிறோம், ஆற்றலற்றவர்கள் வழிவந்தவர்களாகவா உள்ளோம், இல்லையே! அறமும் அதனைக் காத்திடும் திறமும் பெற்றிருந்த மறக்குடி பிறந்தவர்களல்லவா, நாம், நமது பிறப்புரிமையைப் பெறப்புறப்பட்டுவிட்டோம்; பெறுவோம்!

இன்று நம் எதிரே தெரிவதெல்லாம், சிந்தையை நைந்திடச் செய்யும் காட்சிகள்—ஐயமில்லை—எனினும் அவைகண்டு, ஆகுமா நம்மால் என்று அயர்ந்திடத் தேவையுமில்லை.

நேற்றுப் பிறந்த வேற்று மொழி, நம் வாழ்க்கை வழியாம் தமிழ் மொழியை வீழ்த்திட இயலுமா என்று சுழற்கண்கொண்டு நோக்கிடக் காண்கிறோம்—ஆயினும், அந்த வேற்று மொழியைத் தடுத்திட உயிரை ஈந்த வீரரின் கல்லறை நமக்குக் களிப்பையும், மாற்றாருக்குக் கலக்கத்தையும் தந்திடக் காண்கிறோம்,—வெற்றி நமதே என்ற நம்பிக்கை கொள்கிறோம்.

அரசு, எங்கோ உள்ள தில்லியில் அமைக்கப்பட்டு, இங்குள்ளார் 'அரசாளும் கோலமும் அடிபணியும் நிலையும்' பெற்றுள்ள கேவலத்தைக் காண்கிறோம்—ஆயினும், இஃது இழிதன்மை, நமது மாண்புக்கும், வரலாற்றுக்கும் பழி தேடும் புன்மைச் செயல், எனவே இதனை மாற்றியே தீர வேண்டும் என்ற மன உறுதி, நமது கோட்டத்திலே மட்டுமல்ல, மாற்றாருக்கு ஆளடிமை செய்யும் நிலைக்குச் சென்றுள்ளவர்களின் கோட்டங்களிலே கூட, ஓரோர் சமயம், வெளிப்படக் காண்கிறோம்—வெற்றி நமதே என்று களிப்பெய்துகிறோம்.

வளமற்ற வயல்கள், வறண்ட ஆறுகள், வாடிய பயிரென்றுள்ள மக்கள்,—நாம் காணும் காட்சிகள் — துக்கமும் வெட்கமும் தளைக்கத்தான் செய்யும்—எனினும், பொன் கொழிக்கும் நாடாக இருந்த 'அந்த நாட்கள்' பற்றிய எண்ணம் தோன்றாமலில்லை! இடிந்த கோட்டைகள், தூர்ந்த அகழிகள், மண்மேடாகிப்போன மாளிகைகள்—கண்டதும் கவலையைத்தான் தருகின்றன. மறுகணமோ, முன்னாள் எழிலை நினைவிலே கொண்டுவந்து சேர்க்கின்றன, இந் நாள் இழிவு துடைக்கப்படும், நாளை நமது நாடு, முல்லைக் காடென மணம் கமழும், பண்படுத்த நாம் இருக்கிறோம், உழைப்போம், உழைப்போம், வெற்றி பெறுவோம், என்ற நம்பிக்கை பிறக்கத்தான் செய்கிறது.

தாயகத்தின் விடுதலைக்காக, எளியோராகிய நம்மால் அமைக்கப்பட்டுள்ள கழகம், அழைப்பு விடுத்திடும் போதெல்லாம், நாடாள்வோர், காண்பது என்ன! எங்கிருந்தோ கிளம்புகிறது படை!! யாராரோ போர்க்கோலம் கொள்கிறார்கள். கூப்பிடும் குரலும். குடிலிலிருந்துதான் — பதிலளிக்கும் வீரர்களும், மாளிகை உறைவோரல்ல! போரின் கடுமை, தாக்குதலால் நேரிடும் விளைவு—இவைபற்றிய எண்ணம் எழக்காணோம், களத்திலே வீர முழக்கம் கேட்கிறது, கழகம் அறிவிப்பு அனுப்பியதும்.

தாயகம் விடுதலை பெற வேண்டும் என்ற பெரு நோக்கன்றிப் பிறிதோர் துணையற்ற நிலையில் உள்ள, நமது கழகம் விடும் அன்பழைப்புக்கே இந்த வகையிலே, வீரர் பதிலளித்து, ஏறு நடை போட்டு, களம் வந்து சேருகிறார்கள் என்றால், கழகம், ஒரு விடுதலைப் பாசறை பெற வேண்டிய வசதிகளையும் துணைகளையும், பெற்றால்.........! எண்ணுவதே செந்தேனைச் சுவைப்பதற்கு ஒப்பாக உளதன்றோ! அதோ, களிறு உலவும் அந்தக் காட்டைக் கடந்தால், ஓர் சிற்றாறு, அதைக் கடந்திடல் எளிது, கடந்ததும், அவள்......! என்று எண்ணி, வழி நடக்கும் காதலன் உள்ள நிலை

யன்றோ, நமது நாட்களில் நமது கழகத்துக்கு, பிறகேன் மகிழ்ச்சி பொங்காது! குன்றம் கொண்டோர், அதனைத் திருப்பித் தந்தே தீருவர்—கேட்கும் நாம், உரிமையாளர். குன்றம், நமது தாயகம்.

அழகிய சிறு குன்று—அரணாக அமைந்திருக்கிறது, அரசுக்கு,

அரசு, அளவிற் சிறியது, மாண்பினில் பெரிது.

வாழ்த்தாதார் இல்லை! வாரி வழங்குதலாலும், பண்புடன் ஒழுகியதாலும், பாவாணர் போற்றினர், மக்கள் வாழ்வில் வளம் எய்தி மகிழ்ந்தனர்.

பெரிய அரசுகள், சிறுமைச் செயல்களிலே ஈடுபட்டன—இவ்வரசு அறமும் அன்பும் இணைந்ததோர் எழிலரசாகத் திகழ்ந்தது.

பாரியின் அரசு, புலவர் பெருமக்களுக்கு, போற்றத்தக்க பொன்னோவியமாகக் காட்சி அளிக்கிறது.

மகளிர் இருவர்—பாரிக்கு. கட்டழகும் கல்விச் செறிவும் கொண்ட கன்னியர்.

மண்ணாசை அற்று, மாண்புடை அரசுமுறையைக் குறிக்கோளாகக் கொண்டு, குடி தழீஇ, கோலோச்சிவந்த பாரி, பெருநிலமாண்டோரின் பகைக்கு இரையானான்— அரசு எழிலிழந்தது—உரிமைபறிபோனதால். பாரிமகளிர், புழுதிபடிந்த பொற்சித்திரங்களாயினர்,

மூதாட்டி ஔவை, இந்நிலையில் அம்மகளிரைக் கண்டார்—கண்ணீர் மல்கினார். வள்ளல் பாரியின் மகளிர், தமிழ்பெருமாட்டியைக் கண்டனர், 'அந்த நாட்களை'—எந்தையும் எழிலரசும் இருந்த நாட்களை எண்ணிக்கொண்டனர், விம்முதற்கு அல்ல, ஔவையாரின் புலமைக்கு ஏற்றவகையில் அவரை வரவேற்று உபசரிக்க, '-அந்த நாள்' இல்லையே, என்ற ஏக்கத்தால். பாரிமகளிரிடம், இப்பண்புதானே இருக்கும்! பகைவர், மண்ணைத்தான் அள்ளிச் சென்றிடமுடிந்தது—பண்பு எங்கே போகும்! எவர் பறித்திட இயலும்!!

அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்! —என்று கூறிக்கசிகின்றனர், கன்னியர்.

வெண்ணிலா! குன்றின்மீது அதன் குளிர் ஒளி! அந்த ஒளியின் தண்மையைவிடச் செம்மையான குணம் கொண்ட பாரி!!

எந்தை இருந்தார்! எமது அரசும் பிறர் கொள்ளவில்லை! அஃதன்றோ அன்னையின் வருகைக்கு ஏற்றவகை அளிக்கும் காலம்! இல்லையே!!-என்று எண்ணியே பாரிமகளிர், எந்தையும் உடையேம்! எம்குன்றும் பிறர்கொளார்! என்று கூறி, இப்போதோ வேற்றூர் எமது குன்றினைக் கைப்பற்றிக் கொண்டனர்— எங்ஙனம் முடிந்தது?—வீரம் மிக்கவர் அன்றோ, ஈரமுள்ள நெஞ்சினரான பாரி?—எந்தையும் இலமே! எமது தந்தை இல்லை, இறந்துபட்டார், குன்று மாற்றூரிடம் சென்றது. அதனாலேயே என்று எடுத்துரைத்து, அன்று, ஔவை மூதாட்டியின் அகத்தை—ஏன்! இன்று படிக்கும்போது நமது மனதையுந்தான்!-நெகிழச் செய்தனர்.

பாரிமகளிர், அற்றைத் திங்கள், அவ்வெண்ணிலவு, குன்று, எந்தை!—என்று இழந்த இன்பத்தை எண்ணிக் கசிந்துருகிய நிலையிலே, இன்று நாம்—திராவிடர்—இருக்கிறோம்.

தண்ணொளியும் தன்னரசும் இழந்தோம்—நாடு, அடிமைக் காடாகிவிட்டது. எனினும், ஒப்புயர்வற்ற தன்னரசையும் அதனைத் தழைத்திடச் செய்யும் ஆற்றல்மிக்க எந்தையையும் இழந்தாலும், பாரிமகளிர் பண்பினை இழந்திடாதிருந்த பான்மைபோல, தன்னரசு இழந்த நாமும், பண்பு இழந்தோமில்லை—எனவே, இழந்த இன்பத்தை மீட்டிடும் ஆற்றலை, வாய்ப்பை இழந்துவிடவில்லை! இற்றைத்திங்கள் இழிவும், பழியும், இடரும் தாக்கிடுவது உண்மை! எனினும், இழந்த குன்றம், மீண்டும் நமதாகும் என்ற நம்பிக்கை நாதம் கேட்கிறது, நரம்புக்கோர் புது முறுக்கு ஏறுகிறது—விழியிலே ஏக்கம் மடிந்து, ஆர்வப் பொறிகிளம்புகிறது— சூளுரைத்துவிட்டோம், சுடுசொல் அல்ல, கெடுமதியாளரின் பிடியிலே சிக்கிச் சீரழியும் நமது அரசு மீண்டும் நமதாக வேண்டும்— அதற்கான அரும்பணிக்கு, நம்மை நாம் ஒப்படைத்து விட்டோம்—முயல்வோம், வெல்வோம்!

இந்த உற்சாகமும் உறுதியும் நம்பிக்கையும் பொங்குக! என்று கூறி, என் அன்பு கலந்த நன்றியை அனுப்புகிறேன், பாகு, கரும்பு, செந்நெல், கனிவு, மழலை, களிப்பு ஆகியவற்றுடன் இதனையும் கலந்து பொங்கவிடுக! பொங்குக இன்பம்! தங்குக எங்கும்!!

அன்பன்,

அண்ணாதுரை.

நமது பாதை

[பூவாளூர். அ. பொன்னம்பலனார்]

கத்தி எடுக்காமல், இரத்தம் சிந்தாமல், படை திரட்டாமல், காந்தியடிகள் உயிருள்ள போதே ஜனாப் ஜின்னா, தனது அரும்பணியால் பாகிஸ்தான் பெற்றுவிட்டார். இதை, எந்த தேசபக்தர்களாலும், அகண்ட இந்தியாவைத் துண்டிக்காதே—பாரதமாதாவை வெட்டாதே என்று கூறி, தடைசெய்ய முடியவில்லை. இன்று, பாகிஸ்தான் தனியாட்சியாக இயங்குகின்றது.

* * *

ஆந்திரத் தனி மாகாணம் பிரிந்து தீரவேண்டும் என்று பல ஆண்டுகள் கிளர்ச்சி செய்தார்கள்—இறுதியில், பொட்டி சீராமுலு உண்ணாவிரதத்தால் உயிர் துறந்தார். கிளர்ச்சி பலப்பட்டது—ரயில்கள் நிறுத்தப்பட்டன; பொருள்கள் சூறையாடப்பட்டன; போக்குவரத்துகள் தடைபடுத்தப்பட்டன; போலீஸ் அதிகாரிகள் உட்பட ஒரு அறையில்வைத்துப் பூட்டப்பட்டார்கள்; தந்தி தபால் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டன. மக்கள் எழுச்சியை—ஆத்திரத்தை அடக்கமுடியவில்லை. ராணுவம் வந்தது—அமைதி நிலவியது. ஆந்திர மாகாணம் பிரிய எவ்வித அட்டியும் இருந்ததில்லை. எல்லைக் கமிஷன்களும் வந்துபோன பிறகு ஆந்திர மாகாணம் தனியாகப் பிரிந்தது.

* * *

நாட்டைப் பிரிப்பது நாசகாரியம் என்றும், நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மான உணர்ச்சியும் கொண்டு கிளர்ச்சிகள் செய்வதெல்லாம், 'நான்சென்ஸ்' 'சிறுபிள்ளைத்தனம்' 'முட்டாள்தனம்' என்றெல்லாம் நாவடக்கமின்றிப் பேசிவந்த ஆசியாவின் ஜோதி—அகண்ட இந்தியாவின் முடிசூடா மன்னர்—வடநாட்டு ஆதிக்கத்தில் பிறநாட்டை அடிமைப்படுத்திவைக்கத் திட்டமிட்டிருக்கும் பண்டித நேருவே வந்திருந்து, ஆந்திரத் தலைநகரம் அமைக்க மந்திரிமார்களை வாழ்த்தி உபதேசங்கள் கூறிவிட்டுச் சென்றார்.

அதே பண்டித நேரு அவர்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற முரசறைகேட்டு நடுக்கங்கொள்வதில் பொருள்தான் என்ன?

திராவிடம் தேய்ந்துபோய் வடநாடு வளம்பெற—இனி ஆதிக்கம் செலுத்த—திராவிட மக்கள் என்றென்றும் வடநாட்டு அடிமைகளாய்—பாதம் தாங்கிகளாய்—கூலிகளாய்—கோழைகளாய்—சுயமரியாதை அற்றவர்களாய்—உயிர் வாழ்ந்திடமாட்டார்கள் வடநாட்டார் ஆதிக்கம் ஒழிந்த திராவிடநாட்டுத் தனியரசை—ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் தனித்தியங்கும் கூட்டாட்சியை அமைக்க—நிறுவ—இங்குள்ள திராவிடர்கள் வீறுகொண்டுள்ளனர் என்பதை, ஜூலை 15ந்தேதி தமிழகமெங்கும் ரயில் நிறுத்தக் கிளர்ச்சியின்மூலம் வட நாட்டு சர்க்கார்—பிரதமர் பண்டித நேரு அறியும்படி செய்திருக்கிறோம்.

நம் வளர்ச்சியைத் தடைப்படுத்த எவராலும் இனி முடியாது, நாம் வளர்ந்துகொண்டே போகிறோம். நம் சக்தி மேலும் மேலும் பெருகிக்கொண்டே இருக்கிறது என்பதை, எல்லோரும் அறியும் வாய்ப்பை நம் மாகாண முதலமைச்சர், அவரது அடக்குமுறை மூலம் உண்டாக்கிவைத்தார்.

1953 ஜூலை 14ல் ஆச்சாரியாரின் புதுக்கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு மறியல் செய்யத் திட்டம், கல்லக்குடியை டால்மியாபுரம் என்று மாற்றியது அநீதி—அதை உடனே கல்லக்குடியாக மாற்ற அணிவகுத்துப் புறப்படுக; ஜூலை 15ல் பகல் நேரத்தில் ரயில் புறப்படாமல் நிறுத்தம் செய்க—இது, பொதுச்செயலாளர் அண்ணாவும் செயற்குழுவும் செய்த முடிவு. இந்த முடிவை நடவாமல் தடைசெய்ய நம் அண்ணாவை, அருமைத் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், கே. எ. மதியழகன், என். வி. நடராசன், ஆகியவர்களைச் சிறைப்படுத்தினார்கள், ஜூலை 13ம் தேதி இரவு. ஜூலை 14 நிகழ்ச்சி நடைபெற்றது. ஜூலை 15ல் ரயில்கள் நாடெங்கும் நிறுத்தப்பட்டன. டால்மியாபுரம் கல்லக்குடியாக மாறிற்று.

ஜூலை 15ல் மட்டும் ஐயாயிரம் மக்களுக்குமேல் ரயில்வே நிறுத்தக் கிளர்ச்சியில் சிறைபட்டார்கள். துப்பாக்கிப் பிரயோகங்கள், போலீஸ் தடியடி தர்பார்கள், கண்ணீர்ப் புகை, சிறைவாசத்தில் கொடுமைகள் எல்லாம் நிகழ்ந்தன. ஆறு உயிர்கள் பலி. மக்கள் உணர்ச்சி குன்றினார்களில்லை! வழக்கு மன்றத்தில் நிறுத்தி குற்றம் சாட்டினார்கள்; தண்டனை அளித்தார்கள்—ஆளளந்தார்கள். மண்டையை உடைத்துப், கைகளையும் கால்களையும் இழக்கும்படியாகத் தாக்கினார்கள். ஆயினும், உறுதி உள்ளம்கொண்ட இளைஞர்கள் புற்றீசல்கள்போல் வெளிக் கிளம்பினார்கள். தூத்துக்குடியில் சதிவழக்குகளும், கல்லக்குடி வழக்குகளும், ஐவர்மீது உயர்நீதி மன்ற அப்பீல் வழக்குகளும்—எத்தனை தொல்லைகள் கொடுத்தாலும், உணர்ச்சிப் பெருக்கு அளவிட முடியவில்லை ஐவர் வருகை லட்சக்கணக்கான மக்களுடைய ஆதரவும் வரவேற்பும்; கலைஞர் கருணாநிதி வருகை—வெள்ளம்போல் மக்கள் கூட்டம்: தூத்துக்குடி நிதிக்கு இருபதினாயிரம் தேவை—இதோ தருகின்றோம். தாய்மார்கள் பொதுமக்கள் விவசாயிகள், வியாபாரிகள். அதிகாரிகள் எங்கள் பங்குகளைச் செலுத்துகின்றோம்—என்று முன்வருகின்ற மகிழ்ச்சியான செய்தியைக் கண்டு நாம் பெருமிதமடைகிறோம்.

இதே சமயத்தில், நம்மை விரோதிகளென்றும், எறும்பென்றும், வகுப்புவாதிகள் என்றும், இவர்கள் கணக்கை முடித்துவிடுகிறேன் என்றும், வரலாற்றில் இடம்பெறும்படி செய்கிறேன் என்றெல்லாம் நம் மாகாண முதலமைச்சர் பேசினார்; பக்தர்களை ஏவினார்—அன்றொரு நாள். இன்றோ, மூன்று மாதத்தில் பதவியைவிட்டுப் போய்விடுகிறேன்; நம்பிக்கையில்லாத் தீர்மானம் வேண்டாம் என்று தம் குழுவினர்களைக் கேட்டுக்கொள்ளும் நிலைமையிலுள்ளார். இது, நமது பாதையின் வெற்றிக் காட்சியாகும். நாம் நேர்மைக்காகப் போராடுகிறோம். ஆகவே, கவடு சூதற்ற நமது பாதை வெல்லும். வெற்றிபெறுவோம்.

அழகான பெண், ஒளி முகம் படைத்த உருக்குலையா மங்கை, வெள்ளை உடையால் அவள் அன்ன நடைக்கு அழகு சேர்க்கிறாள். சிவந்த கழுத்திலே ஒரு கறுப்பு மணி மாலை. அந்தக் கோதி முடித்தக் கூந்தலை யுடைய கோதை—தலையிலேஒருகூடை யுடன்தெருவிலே போகிறாள். அப்பழுக்கற்ற பௌவனத்தின் தனித்தன்மை வாய்ந்த அழகு ஊர்வலம். இருள்படிந்த தெருவிலே அவள் நடந்து செல்வது—வையத்துமண்ணுக்கு வழிவிழைந்த வானத்துத் தாரகைதான் வந்துற்றதோ என எண்ணத் தோன்றியது. அந்த ஜோதி மழை பொழியும் சொர்ணச்சிலையின் தலையிலே கூடை. கூடையிலோ துர்வாடை! ஆமாம்—அழகியின் தலையில் ஒரு அழுகிய உருவம். கூடையின் அடிப்புறத்தைத் தாங்கியிருக்கும் அவள் இளங்கரங்கள் சுமை தாங்காமல் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அந்த சுந்தரவல்லி போய்க்கொண்டுதானிருக்கிறாள். சோகத்திலும் ஒரு சோபிதம் இருக்கிறது என்பதை அவளது எழில் வதனம் கவிஞர்கட்குக் காட்சியாக்கிக் கொண்டிருக்கிறது. கூடையிலே அமர்ந்துள்ள அழுகிய உருவமோ புன்னகை புரிந்தவண்ணமிருக்கிறது. அந்தப் புன்னகை எதையோ ஒரு இன்பத்தை எதிர்பார்த்து மலரும் புன்னகை புன்னகையில் விசாரத்தைக் காணவேண்டுமா? ஆசைப்படுவோர் அந்த உருவத்தின் இனிப்பைப்பார்த்துக் கொள்ளலாம். கூடையிலே இருந்த அந்த உருவம் ஆண். தனக்கென உரிய உடலில் கால் பாகத்துக்குமேல் இழந்துவிட்ட மனிதன்; மகரிஷி! மௌத்கல்யர் என்னும் பெயருடைய மகான்.

'பெரிய'மனுஷன் 'பெரிய'ஆள் 'பெரிய'செல்வந்தன் 'பெரிய'பண்ணையார் என்பதுபோல 'பெரிய' வியாதி என்று ஒன்றுண்டே; அந்தப் பெருவியாதியால் பிடிக்கப்பட்டவர் அந்தப் பெரிய மகான். அவர்தான் தன்னுடைய அழகான மனைவியின் தலையில் ஏறிக்கொண்டு தெருவில் போகிறார்.

"போடி வேகமாக!"

"போய்க்கொண்டுதானேயிருக்கிறேன்; பிராணபதி!"

"நளாயினி! நடவேகமாக! அதற்காக என்னைக் கீழே போட்டுவிடாதே—நீவிழுந்தாலும் பாவாயில்லை!"

"என் தெய்வமே! என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறீர்கள்? என் கூடுவிட்டு ஆவிபோனாலும் கூடையைக் கீழேபோட மாட்டேன். கூடையிலென்ன வியாபாரப் பொருளாஇருக்கிறது—வீட்டுச் சாமானா தூக்கிச் செல்கிறேன்—விலை மதிக்க வொண்ணா என் ரத்தின மல்லவா தாங்கள்! தங்களையா கீழே போட்டுவிடுவேன்—அபசாரம்! அபசாரம்!"

குஷ்டரோகக் கணவனை கூடையில் சுமந்து—கோமளத்தாமரையெனும் முகத்திலே சோகத்தை சுமந்து—அந்த நடக்கும் பொன்வண்டு நளாயினி போய்க்கொண்டிருக்கிறாள். எங்கே போகிறாள்? தீர்த்தமாடவும், க்ஷேத்ராடனம் செய்யவும் கணவன் விரும்புகிறான்; அந்தப்பக்திப்பசியைத்தீர்த்துவைக்கவேண்டும் என்பதற்காகவா அந்த எந்திழையாள்—இந்த வேலையை மேற்கொண்டிருக்கிறாள்? இல்லை! இல்லை! பின் என்ன? பர்ணசாலையைவிட்டுப் பர்ணசாலைக்குமாறுவதற்காகவா அந்தப்பயணம் நடைபெறுகிறது. பாவையை வாகனமாகக்கொண்டு? அதுவுமில்லை! பின் எங்கேதான் போகிறார்கள்? தவம் புரியவுமல்ல! தலம் காணவுமல்ல! பிறகு எங்கே போகிறார் தபோதனர்? தாசிவீட்டுக்குப் போகிறார்! ஏன்? "வேசித் தொழில் கூடாது! காசிநாதனைத்தொழு!" என்று போதனை புரிவதற்காகவா? அதற்காகவும் செல்லவில்லை; அந்தக் குஷ்டரோகி. பரத்தையின்வீட்டைப்பக்திகூடமாக்க அல்ல! பகவான் பற்றிய விளக்க முரைக்க அல்ல! கமண்டலமேந்தியார் செல்வது கணிகையின் கட்டிலறைக்கு! முனிவரின் மோகமுக்கண்ணனைக்காண அல்ல! நான்குகண்களும் சந்திக்க—அந்த நயனலலிதத்தை வந்திக்க! பொருளுக்கு சுகம் வழங்குவாளின் அகம் நாடி புருஷனைக் கொண்டுசெல்லும் நளாயினி—பூத்திருக்கும் ரோஜா! அந்த ரோஜா, அழுகிப்போன வண்டை கருகிப்போன ஒரு மலரிடம் எடுத்துச்செல்கிறது! அதோ கணிகையர் தெருவும் வந்துவிட்டது. நளாயினியின் உடல்வலியும் தீர்ந்தது. அவள் கணவனின் உள்ள வெறியும் கொஞ்சம் அடங்கியது. தேடிய இடத்துக்கு வந்துவிட்டனர். கூடையை இறக்கிவைத்தாள். வலிமிகுந்த உடம்பை ஒருமுறை நெளித்து வளைத்துக் கொண்டாள். "வான்வில்லோ" என்பர் வர்ணனையாளர் அருகே இருந்தால்! "மான் துள்ளுமா இப்படி!" என்பர் ஏடெழுதுவோர்! "ஒரு விநாடி அப்படியே வளைந்து நில் போதும்: உலகை விலையாகக்கேட்கும் ஓவியம் தீட்டுகிறேன்" என்பான் சித்திரக்காரன் அருகே நின்றால்! அத்தகைய தோகைமயிலாள், தன் துணைவனுக்கு இரவுத்துணை

தேடி எழுந்து விட்டாள் இழிமகளின் இல்லத்துக்கு. அலங்காரக் கரங்களால் அந்தவீட்டின் கதவைத் தட்டினாள் தட்டுவதற்கு முன் திறக்கப்பட்டது வீடு. திறப்பதற்கு முன் எட்டிப்பார்த்தது ஓர் முகம். அந்தமுகம் கண்டார் மௌத்கல்யர். "சுகம் கண்டேன்! சுகம்கண்டேன்!" என்று சுருதிவிட்ட வித்வான்போல் கூவினார், சுருக்கம் விழுந்த முகத்திலே பயங்கரமான ஒளி. ரத்தங்கசியும் கன்னங்களிலே புன்னகை உண்டாக்கிய ஆழமான பள்ளம். கிழிக்கிடக்கும் உதடுகளிலேயே காமக்கிறுக்கு வெளிப்பட்டது. விரலற்ற கரம் நீட்டி அந்த வேசிப்பெண்ணை ஆசையுடன் வாழ்த்தினார். குஷ்டரோகியின் கும்மாளங்கண்ட இல்லத்துக்காரி "வந்தவிஷயம் என்ன?" என்றாள். "எல்லாம் நம்சொந்த விஷயமே!" என்றார் ரிஷீஸ்வரர். நளாயினி பேச ஆரம்பித்தாள்.

"பெண்பாவாய்! இவர் என் கணவர். நான் பதி சொல் தவறாத பாவை. உன்னகம் நாடி வரவேண்டுமென்றார். அவர் மனங்கோணாமல் நடந்து கொள்ளடி மாதரசி!"

தாசிப்பெண், நளாயினியின் வார்த்தை கேட்டுத் திடுக்கிட்டாள். கணவனை தாசி வீட்டுக்கு அழைத்து வரும் மனைவியை இன்றுதான் முதன் முதலாகப்பார்க்கிறேன் என்று தனக்குத்தானே ஆச்சரியப்பட்டுக் கொண்டாள். அந்த அதிசயத்துடனே அந்தக் குஷ்டரோகியின் அவலக்ஷணமான முகத்தை வெறுப்புடன் ஏறிட்டுப்பார்த்தாள். அவள் ஒருமுடிவுக்கு வருவதற்கு முன்பாகவே, நளாயினி ஒரு பொன் முடிப்பை அவள்முன்னே நீட்டினாள். "சம்மதம்" என்று தாசி மகளும் கண்ஜாடை காட்டினாள். கூடையிலிருந்த குஷ்டரோகமகானை தாசிப்பெண் அன்போடு அணைத்தெடுத்து அம்சதூளிகா மஞ்சத்துக்குப்போய் விட்டாள். பெருமூச்சுடன் அந்த வீட்டைவிட்டுக் கிளம்பினாள் நளாயினி. கையிலேயிருந்த கூடையை வாசலிலே வைத்துவிட்டு "காலையில் வருகிறேன்" என்று காவலாளியிடம் கூறிவிட்டுப் போய்விட்டாள்.

* * *

புழுதி படிந்த பூச்செண்டுபோல் போகும் நளாயினியை ஒரு குரல் தடுத்து நிறுத்துகிறது. "நளாயினி! அன்புள்ளதோழி! கொஞ்சம் நில்லேன்" என்று கூறியபடி ஒரு பெண்மணி ஓடிவருகிறாள். பக்கத்து ஆஸ்ரமத்திலே உள்ளவள் அந்த அழகி. "உலகா நீயா! இந்நேரத்தில் எங்கேயடி வந்தாய்?" என்று வழியும் கண்ணீரைத்துடைத்தபடி கேட்கிறாள் நளாயினி. "சோலைப்பக்கம்போனேன்–நீவருவதைப் பார்த்ததும் வந்தேன்—ஆமாம்—நளாயினி! உன்னை ஒன்றுகேட்கிறேன் கோபித்துக்கொள்ளமாட்டாயே!" என்று பீடிகை ஆரம்பிக்கிறாள் உலகா. "என்னடி உலகா! தாராளமாகக் கேள்" என்று சிரிப்பை வரவழைக்க முயலுகிறாள் நளாயினி.

"எவ்வளவுதான் புருஷனிடத்திலே அன்புப் பக்தியும் இருந்தாலும், அவனைத் தாசி வீட்டுக்குக் கொண்டுபோய் நீயே விட்டு வருவது என்பது...... எனக்கு அவ்வளவாக......"

"உலகா! போதும் நிறுத்து — பெண்களுக்குக் கணவனே தெய்வம். கணவரின் ஆசைகளை நிறைவேற்றுவதே கற்புக்கரசிகளின் லக்ஷணம். என் கண்ணாளர் பிணிகொண்டவராயிருக்கலாம். ஆனால் அவர் எனக்குத் தேங்கனி; தெரியுமா உனக்கு. புருஷனிடம் எப்படி நடக்கவேண்டும் என்று நீ எனக்குப் புத்தி சொல்லாதே! என்னைப் பார்த்து நீயும் திருந்திக் கொள்."

'நளாயினி! என்னை மன்னித்துவிடு! உன்னுடைய அன்பையும்—பதி பக்தியையும் தவறாக நினைத்துவிட்டேன் க்ஷமித்துவிடு நளாயினி! உன் போன்ற வைராக்யமுள்ள புண்யவதியையும்—பத்தினியையும் ஈரேழு பதினாலு உலகிலும் காணமுடியாது. நீ பத்தினி—நீ பத்தினி!"

"உலகா நீ என்னை உணர்ந்து கொண்டால் போதும்—நான் உன்னை மன்னிக்கவேண்டாம். நீ என்போல் கற்புக்கரசியாக இரு! என் போன்ற பத்தினிகளைப்பின் பற்று! நான் வருகிறேன்"

இதைச் சொல்லிவிட்டு நளாயினி தன் ஆஸ்ரமம் நோக்கிப் போனாள். உலகாவும் தன் தவறை உணர்ந்து, "நளாயினி பத்தினி" என்று தோத்திரம் செய்தவாறு அதைவிட்டு நகருகிறாள். அப்போது ஒரு வாலிபன் ஓடிவந்து உலகாவின் கண்களைப் பொத்துகிறான். இருவரும் அங்குள்ள சோலைப் பக்கம்போய் விடுகிறார்கள், சிரிப்பைக் கொட்டியபடியே!

* * *

விம்மி விம்மி அழுதபடி ஆஸ்ரமத்துக்குள்ளே நுழைந்து தரையில் குப்புற விழுகிறாள் நளாயினி. அவளது நீலத் திருவிழிகளிலேயிருந்து நீர்வீழ்ச்சிகள் புறப்படுகின்றன. முழுநிலவை மறைக்கும் முகிலென அவள் முகம் மறைக்கிறது விரிந்துகிடக்கும் கருங் கூந்தல்

சோலையின் பக்கமிருந்து ஒருகீதம் ஆஸ்ரமத்துக்குள்ளே கேட்கிறது. அழுது கொண்டேயிருக்கும் நளாயினி அந்த கீதத்தை கவனிக்கிறாள். ஆம்—உலகாவின் குரல் அது! அதோடு இன்னொரு ஆண் குரலும் கீதமிசைக்கிறது! "என்னைப் பத்தினியென ஒத்துக்கொண்டு— என் கரங்களைக்கண்ணிலே ஒத்திக் கொண்ட உலகா, தன் காதலனுடன்—கள்ளக் காதலனுடன் கனிமரச் சோலையில் இன்ப கீதம் பாடுகிறாள். என் வயதுதான் அவளுக்கும், அவளைவிட அழகி நான். நானோ இங்கே நாதியற்றுக்கிடக்கிறேன். தேனே! மானே! என்று அவளை வர்ணித்துக் கொண்டிருப்பான் அவள் காதலன்."

> அதிகார போதை ஒரு பயங்கரமான தொத்து நோய். அது யார் யாரை ஆண்டுகிறதோ அவர்களையெல்லாம் கெடுத்துவிடுகிறது.
>
> —ஷெல்லி.

இப்படி எண்ணுவதெல்லாம் எண்ணுகிறாள் நளாயினி. மீண்டும் அழுகிறாள். ஆஸ்ரமத்துக்கதவு திறக்கப்படுகிறது. அழுகையை நிறுத்துகிறாள். ஆனால் கண்களைத் துடைக்கவில்லை; கதவைத் திறந்துகொண்டு ஒரு பெண் உள்ளே வருகிறாள். ஏறத்தாழ நளாயினியும் அவளும் ஒரேமாதிரி காணப்படுகிறார்கள். இருவரும் சேர்ந்து நின்றால், "யார் நளாயினி?" என்று கண்டு பிடிப்பதே கஷ்டமாகிவிடும். வந்த பெண், நளாயினி அருகில் உட்காருகிறாள். நளாயினியும் எழுந்து உட்காருகிறாள். "வா இதயா வா!" என்று தேம்பியபடி வரவேற்கிறாள் நளாயினி.

'நளா! ஏனம்மா இப்படி எப்போதும் அழுது கொண்டேயிருக்கிறாய்?"

"காரணமா கேட்கிறாய்! இதயா! தணலிற் புழு வாய்த்தவிக்கிறேன் நான் என்பதை நீ அறிய மாட்டாயா? அதோ ஜோடியாகக் கூவும் பறவைகளின் சங்கீதத்தைக் கேட்கிறாயா நீயும்! சோலைப்புறமிருந்து காதலர் மீட்டும் வீணகானம் எத்தகைய விரக தாபத்தை ஒரு பருவமங்கைக்கு எழுப்பும் என்பதை நீ அறியமாட்டாயா! அறிவாய்! இதயா! அனைத்தும் அறிவாய்! அறிந்தும்—எனக்கு ஆறுதல் கூறுவதற்காக இப்படி மௌனம் சாதிக்கிறாய்—இல்லையா!"

"உண்மைதான் நளாயினி! உலகா உன்னை பத்தினி என வாழ்த்தினாள்—அதையும் மறைந்து நின்று கேட்டேன்—அந்தப் புகழ் வெளிச்சம் மட்டுமே போதுமென்று திருப்தி அடைய வேண்டியதுதான்!"

"இதயா! உண்மையாகச் சொல்! நான் பத்தினியா? எப்படி? எப்படி?"

"ஆமாம்! குஷ்டரோகம் பிடித்த கணவனை தாசி வீட்டுக்கு அனுப்பியிருக்கிறாயே!"

"கிண்டல் செய்யாதே—இதயா! குஷ்டரோகம் பிடித்தவனோடு கூடிக்கிடக்க எனக்கு விருப்பமில்லை. அவனோ என்னை ஆசையோடு அழைக்கிறான். அணைக்கவோ என் கை நடுங்குகிறது. ஆகவேதான் அவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பினேன். என் அழகுக்கு ஆபத்துவராமல் அவன் ஆவல் தீர்ந்தால் சரியென்று எண்ணினேன். இந்தத் தந்திரம் உனக்குத்தெரியாதா இதயா!"

"நானறியாதது ஒன்றுண்டா நளாயினி! ஆனாலும், உலகா நம்பியிருக்கிறாள்; உன் பதி பக்தியை! குஷ்டரோகியைத் தாசி வீட்டுக்குத் தலையிலே தூக்கிக் கொண்டுபோனதைப் பெரிய பதிபக்தி என உலகா எண்ணுகிறாள்"

"தலையில் தூக்கிக் கொண்டுபோனேன் என்கிறாயே நீயும்! திருத்திக்கொள்! கூடையில் வைத்து தலையில் தூக்கிக்கொண்டு போனேன். குஷ்டரோகியைக் கையால் தொட்டு தலையில் தூக்கிப்போக எனக்கென்ன பைத்யமா? அதெல்லாம் ஜாக்கிரதையாகக்கூடையில் வைத்துத்தான் கொண்டுபோனேன்."

"நளா! உன் கணவன் எவ்வளவு கடுமொழிகளைக் கூறினாலும்—எதிர்த்து ஒரு சொல் கூறாத கற்பரசி என நேற்றுகூட உலகா என்னிடம் உன்னைப் புகழ்ந்தாள்."

"கணவன் திட்டினான்—நான் மறுமொழி பேசவில்லை. உண்மைதான்! குஷ்டரோகிதானே திட்டுகிறான் என்று அலட்சியப்படுத்தினேன். நானும் அவனுடன் பேசினால் பேச்சு வளரும். அந்த வாதத்தின் காரணமாக அவனோடு நெருங்கி நின்று வார்த்தையாட வேண்டும். அதற்காகத்தானடி அந்தக் குட்டம் பிடித்தவன் குரைத்துக்கொண்டிருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்."

"உம்—எப்படியோ பத்தினி என்ற பட்டம் பெற்றுவிட்டாய்—பார் புகழும் பதிவிரதை—பதி பக்தி மிகுந்தவள் என்றெல்லாம் உலகா புகழ்ந்துவிட்டாள் உன்னை!"

"உலகாவுக்கு என்னடி தெரியும் என் உள்ளத்தில் இருக்கும் எரிமலை! பத்தினி பட்டம் போதுமா பருவக்களை சொட்டும் இந்தப் பரிதாபத்துக்குரியவளுக்கு! சொல்லடி இதயா! சொல்லு! சுகவாழ்வுக்கு ஒருவழி சொல்லு."

"வழி சொல்லுகிறேன் — நளாயினி! நான் ஒரு புதிய வரம் தருகிறேன். இந்த ஜென்மத்தை சீக்கிரம் கழித்துவிட்டு விரைவில் அடுத்த ஜென்மம் எடு! அந்த ஜென்மத்தில் நீ திரௌபதியாகப் பிறக்கப் போகிறாய்! ஒரு கணவன் இருந்தும் உனக்கு உற்சாகமில்லை. உல்லாசமில்லை. உள்ளமோ வேதனைக்களமாயிருக்கிறது உனக்கு! ஆகவே அடுத்த பிறப்பில் ஐந்து கணவரோடு ஆனந்தவாழ்வு வாழ அருமையான வரம் தருகிறேன்"

"இதயா! இது உண்மையா?"

"பொய் இல்லை! புதுவாழ்வு ஆரம்பமாகிறது உனக்கு! புது வாழ்வு — புனர் ஜென்மம்— இரண்டும் பொருளில் ஒன்றுதான்! அதைப் புரிந்துகொள்ளடி என் தோழி!"

"புரிந்துகொண்டேன்" என்று பூரிப்புடன் துள்ளியபடி நளாயினி, இதயாவைத் தழுவிக்கொள்கிறாள். சோகக் கண்ணீர், ஆனந்தக் கண்ணீராக மாறிவிட்டது அவளுக்கு! அந்த ஆஸ்ரமத்தில் இன்பகீதம் ஆரம்பமாயிற்று.

★

குறிப்பு:— புராணக் கதைப்படி நளாயினிதான் திரௌபதையாகப் பிறந்திருக்கிறாள்.

❁

அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறைக்குப் பின் 'திராவிட நாடு" 7-2—54 முதல் தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.

பவழ பஸ்பம்

சி.என். அண்ணாதுரை.

“சகலாவல்லியே! நீ சாய்ந்திருக்கும் சர்ப்பாசனம் சந்திரசேகர பூபதிக்குச் சந்தனக் கட்டை விற்றதிலே கிடைத்த இலாபத்தால் வாங்கியதுதான். மாலையில் நீ மினுக்கிக்கொண்டு நிற்கிறாயே, பளிங்கு அறையிலே, நிலக்கண்ணாடி, அது, எது தெரியுமா? ஏவலப்பனுக்கு என்னாலே பெருங்கஷ்டம் வந்தது என்று எவனெவனோ பேசினானே, அந்தச் சமயத்தில், அவனுடைய சஞ்சலத்தைப் போக்க, நான் தந்திரமாக என் மதியை உபயோகித்ததால் வந்தது. அவன், இதனை 60 பொன் கொடுத்து வாங்கினான் என்று நான் கேள்விப்பட்டதாகச் சொன்னேன், அவன் 600 பொன் கொடுத்துப் பெற்ற பொருள் அது என்பது எனக்குத் தெரியும்! அழுதுகொண்டே கொடுத்தான், அதன் முன்புதான் நீ சிரித்துக்கொண்டே நிற்கிறாய், சிங்காரியாக. உன் உடை, உல்லாசம், மாளிகை, தோட்டம், வண்டி வாகனம், வேலையாள், இவைகளை வேதாந்தம் தேடித் தரவில்லை, மாயாஜாலப் பொருள்களல்ல! மக்கள் மன்றத்திலே நீயும் உன் சகாக்களும் பேசினீர்களாமே, கொள்ளை இலாபம் அடிக்கும் கூட்டத்தின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று; அந்தக்கொள்ளை இலாபம் கொடுத்த பொருட்குவியலிலே நீ இருக்கிறாய்! ஏழைகளின் இரத்தத்தை நாங்கள் குடிக்கிறோம் என்று ஏசினீர்களாமே, கூட்டத்திலே. அந்த இரத்தத்தை, நான் கெட்டவாடை போக்கித் தங்கக் கோப்பையிலே ஊற்றித் தந்தேன் உனக்கு, அதை நீயும் பருகினாய். உனக்காகத்தான் நான் அந்த வேலையையும் செய்தேன். உன் அழகுக்கேற்ற அந்தஸ்து தேடிக்கொடுத்தேன். கண்டவர் பேச்சும் காட்சிப் பொருளாக்கினேன். பரிபூரண திருப்தியுடன் பாலும் பழமும் சாப்பிட்டுக்கொண்டு பரிமளவாடை கொண்ட பஞ்சணையில் நீபடுத்துத் தூங்கினபோதெல்லாம், நான் பாழும் கணக்குகணக்கு என்று அதிலே மூழ்கி, இவ்வளவு போக போக்கியங்களை உனக்கு அளித்தேன். நீ, மக்கள் மன்றத்தில் பேசுகிறாய்! மக்கள் கூட்டத்திலிருந்து உன்னைத் தேடி எடுத்து, சீமாட்டியாக்கினேன். நீ சீறிச் சீறிப் பேசினாயாம், மன்றத்திலே. அறிவு கெட்டவளே! நான், வணிகன். இலாபம் பெறுவது என் தொழில். அதை அனுபவிப்பவள் நீ. அனுபவிக்கும் சுகத்தையும் மறந்து, அந்தச் சுகத்தை உனக்கு அளிக்கவே, சுவடியும்கையுமாகக் கிடக்கும் எனக்கு நன்றி செலுத்துவதை விட்டு, யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு, தாறுமாறாகப் பேசிவிட்டு வந்தாயே, இது தகுமா? நான் சாமர்த்தியமாகத் தொழிலை நடத்தியிரா விட்டால், நீ எங்கு இருப்பாய்! என்ன செய்துகொண்டிருப்பாய்! பாவம் சுடச்சுட நடுப்பகல் வெயிலில் தலையில் சோற்றுச் சட்டியைச் சுமந்துகொண்டு, அங்காடிச் சாவடிக்கு வந்து, எனக்குப் பரிமாறும் பணிப்பெண்ணாக இருந்திருப்பாய். பட்டமகிஷிபோல் உன்னை இப்போது வைத்திருக்கிறேன்; பக்குவம் பெறவில்லையே, நீ. வியாபார முறையை மாற்றப்போகிறீர்களாமே நீங்கள்! வஞ்சனையை வாட்டி வதைத்து, கருணையை முடிசூட்டப் போகிறீர்களாமே. உங்கள் முதுகுக்குச் சூடிட மன்னன் கட்டளை பிறப்பிக்கப் போகிறான். ஜாக்ரதை. நாளை முதல் நீ அந்த நாசகாலர்களுடன் சேராதே. நமக்கிருக்கும் மதிப்பைக்கெடுக்காதே. இந்த மண்டலத்தில் நான் வியாபாரம் செய்வதுபோலச் செய்து பொருள் திரட்டுபவர்கள் பலர் உண்டு. அதிலே பாதகம் இல்லை! வல்லவன் வாழ்வது இயற்கை. இதை மாற்ற முயலும் பேர்வழிகள் வெறும் வீணர்கள். அரசன் அடங்காக் கோபம் கொண்டுள்ளான். நீ என் மனைவி என்பதை மறவாதே. வணிகனுக்கு வாழ்க்கைப்பட்ட உனக்கு வாயாடி வேலை வேண்டாம்!”

சீறிச் சீறிப் பேசினான், கணவன்; சிந்திய கண்ணீரைத் துடைக்கவும் மனமின்றி, அவன் உரையைக்கேட்டுக் கலங்கினாள், அவன் துணைவி, புருஷன் கோபத்தால் காரசாரமாகப் பேசுகிறானே என்பதல்ல.

அவள் கலக்கத்துக்குக் காரணம். அவன் கூறினது உண்மை; அவைகளை அவள் உணராமலேயேதான் இருந்து வந்தாள். அவன் சொன்னபிறகுதான், உண்மை அவளை உறுத்தத் தொடங்கிற்று. அதனாலேயே, அவள் அவ்வளவு கலங்கினாள்.

* * *

புத்தருடைய பொன்மொழிகள் நாட்டிலே பரவிக் கொண்டிருந்த காலம். பூபதிகள், சிலர் புத்தமார்க்கத்தையே தழுவியும் கொண்டனர். பண்டைய மார்க்கம் நிலைத்திருந்த சில மண்டபங்களிலேகூட, சிலர், புத்தமார்க்கத்தைக் கடைப்பிடித்து, பிக்ஷுக்களாகிவிட்டனர். ஓங்கிவளரும் புத்த சமயத்தைத் தடுப்பது, பலமான புயலை விலைகொடுத்து வாங்குவதற்கொப்பாகும் என்று யூகமுள்ள மன்னர்கள் உணர்ந்து நடந்தனர். ருத்ரதேவன் ஆலயமும் அதற்குப் பக்கத்திலேயே புத்தமடமும் கட்டலாயினர். புத்த பிக்ஷுக்களைக் கண்டவுடனே, தமது ஆதிக்கத்துக்கு உலைவைக்கிறார்களே இந்தப் புதுமுறைக்காரர்கள், என்று கோபம்தான் சனாதனமார்க்கப் பூஜாரிக் கூட்டத்திற்கு. ஆனால் வெளியே தெரியவிடுவதில்லை. பௌத்தம், அரிய பெரிய உண்மைகளுக்கு இருப்பிடம், தூய்மைக்குப் பிறப்பிடம், என்று பாராட்டிப் பேசுவர்; இந்த உத்தமமான கோட்பாடுகள் சாமான்யமானவைகளன்று, என்று புகழ்வர். இங்ஙனம் புகழுரைகூறிப், புதுமுறைக்காரரை மயங்கவைத்துவிட்டு, மெள்ளத் தமது மார்க்கத்தைப்பிணைப்பர்; இம்முறைகள் அனைத்தும் உபநிஷத்துக்களிலே உள்ளன, வேதசாரம் அது என்று கூறுவர். அவர்களின் வஞ்சகம், பசும் புற்றரையிலே, வளைந்து நெளிந்து செல்லும் சர்ப்பம்போல் உலவிற்று, வேங்கை போலப் பாயமுடியாது, வேந்தர் பலர் புதிய மார்க்கத்தை ஆதரித்து வந்ததால் சனாதனமார்க்கம் சாகசத்தால் மட்டுமே சாகாது தப்பமுடியும் என்றநிலை. ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு வந்தது மக்களிடை. அதாவது போக போக்கியங்களிலே ஒருவகைச் சலிப்பு, கொஞ்சம் வெறுப்பு. புத்தரின் வாழ்க்கை வரலாற்றினை, பிக்ஷுக்கள் கூறிடக்கேட்டு நெஞ்சு நெகிழ்ந்த மக்களுக்குச், சுகம் சுகம் என்று அலைவது, கானல்நீர் வேட்டை என்ற எண்ணம் ஏற்பட்டது. போக போக்கியத்திலே பலன் இல்லை என்ற எண்ணம், வேறு ஒரு எண்ணத்தைக் கொண்டுவந்து சேர்த்தது. ஏன் சிலர் போக போக்கியத்திலே புரளவேண்டும்? ஏன், மக்கள் கஷ்டத்தில் உழலவேண்டும்? மக்களை இந்த நிலையில் வைத்திருப்பது கொடுமை அல்லவா? இந்தக் கொடுமையைச் செய்து சிலர் கொள்ளைப் பணத்தைக் குவித்துக்கொண்டு, கோபுரம் அமைத்த மாளிகையும், தடாகம் உள்ள தோட்டமும், அமைத்துக் கொண்டு வாழுவானேன். முத்து, பவளம், வைரம், வைடூரியம் பட்டு முதலியவற்றை, நாட்டுக்கு நாடு எடுத்துச்சென்றுவிற்றும்; உள் நாட்டிலேயே பொருள்களை, ஒன்றுக்குப்பத்தாக விற்பதும், ஏழைகள் தலையிலே தாங்க முடியாத சுமையை ஏற்றுவதும் கொடுமை. பாடுபடும் மக்களைப் பராரியாக்கிவிட்டு, ஒரு சிறு கூட்டம் மட்டும் பல்லக்குப் பரிவாரத்துடன் வாழ்வது, அக்ரமமல்லவா, என்ற எண்ணம் தோன்றி, மக்கள் மன்றம், என்ற ஓர் சபை அமைந்தனர். மாத்தடியில் தோன்றி, சாவடியில் குடி ஏறி, பிறகு ஒரு அழகிய மாடி வீட்டிலேயே, நடைபெற ஆரம்பித்தது, மக்கள் மன்றத்தின் கூட்டம்.

* * *

மருதவல்லி, அகவல் அம்பலவாணக் கவியின் அழகு மகள். வணிகருக்கு வாழ்க்கைப்பட்டவள். அம்பலவாணரின், கவிதைகளிலே, சமுகத்திலே ஏழைகள் படும்பாடுகளே, கருத்தாக இருக்கும். எனவே, மருதவல்லியின் மனதிலே, மக்கள் மன்றத்தார் பேசியவைகளின் வித்து ஏற்கனவே ஊன்றப்பட்டிருந்தது. மக்கள் மன்றத்தினர் பேசப்பேச அவள் மனதிலே, வித்து முளைவிட்டுச் செடி கொடியாகிவிட்டது. அவளுடைய முயற்சியாலும் உதவியாலுமே, அந்த அழகான மாடி வீட்டிலே, மக்கள் மன்றம்கூட ஆரம்பித்தது. மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும் நிலைமாறி, மருதம், பேச ஆரம்பித்தாள் மன்றத்திலே. அம்பலவாணரின் அருங்கவிதைகளால் உண்டான அரிய கருத்துக்களை, மருதவல்லி, மக்கள் மன்றத்திலே, எடுத்துக்கூறி, மன்றத்தினருக்கே புதிய பார்வை பிறக்கச் செய்தாள். சில புத்தபிக்ஷுக்களும், மக்கள் மன்றத்தினருக்கு உதவி செய்யலாயினர். மன்னன், மக்களை ஏய்ப்பதில் மதிமிக்கவன்; "மொட்டைத்தலையருக்குமடமும், கொட்டை கட்டிகளுக்குக் கோயிலும் கட்டிக் கொடுத்துவிட்டால், சட்டமும் சாந்தியும் நிலைத்துவிடும், பயம் என்ன," என்பது அவனுடைய ஆட்சிமுறை. மக்கள் மன்றத்தின் வளர்ச்சிபற்றி, அவன் கேள்விப்பட ஆரம்பித்ததே, மருதவல்லியின் புகழ் ஓங்கிய பிறகுதான். மன்னன் முதலிலே கொஞ்சம் கவலைப்பட்டான், பிறகோ, "ஓ! நமது நவகோடியாரின் மனைவி மருதவல்லிதானா மக்கள் மன்றத்துக்கு ஜீவன். அவ்விதமாயின் அஞ்ச வேண்டுவதில்லை; மன்றத்தின் சக்தியை, சிறியதோர் யுக்தியால் போக்கிவிடமுடியும்" என்று யோசித்தான். வழக்கப்படி, கைகட்டி வாய்பொத்தி நின்று, காரியம் ஏதேனும் உண்டோ என்று கேட்கவந்த வணிகர் நவகோடியாருக்கு, அன்று மன்னன் ஆசனம்தந்தான். குளிர்ந்தபானம் கொடுக்கச் செய்தான் பணியாளை ஏவி; புன்னகையுடன் பேசலானான்.

"நவகோடியாரே! நமது எல்லையில் உள்ள சந்தனக் காட்டிலே, இரண்டாண்டு கட்டை வெட்டி, விற்பனை செய்யும் உரிமையை உமக்கு அளித்திருக்கிறோம். அதற்கான பட்டயம் தயாராகிவிட்டது" என்றான் மன்னவன். நவகோடியார், மன்னன் முன் மண்டியிட்டுத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். "காட்டிலே சந்தனக் கட்டை வெட்டும்போது, ஏதேனும் ஆபத்து ஏற்படக்கூடுமல்லவா! அதற்காக, பத்து போர்வீரர்களை நீர் பணிபுரிய அமர்த்திக்கொள்ளலாம் என்றும் ஓர் உத்தரவு பிறப்பிக்கிறேன்" என்று மன்னன் கூறினான். நவகோடியாருக்கு, காவலனின் கருணையின் காரணம் புலப்படவில்லை. அரசனுடைய அன்பு, சில சமயங்களிலே ஆபத்தின் முன் அறிவிப்பு என்பதுமட்டும் தெரியும் வணிகருக்கு. எனவே, யோசிக்கலானான்!

“நவகோடியாரே! உம்மிடம் ஒரு இரகசியம் கூற விரும்புகிறேன். ஆண்டவன் விதித்த முறைப்படி, அரசனும் ஆண்டியும் அனைவரும் தத்தமக்கு ஓர் நிலை எனப் பெற்று உள்ளனர். இந்தத் தத்துவம் தவறானது என்று பேசுவது, பாபச் செயல். ஏழை எளியோருக்கு உபகாரம் செய்யத்தான் வேண்டும். தயாபரன் தனம் தருவதே அதற்காகத்தானே! ஏழைகள் தங்குமிடம், சாப்பாட்டு விடுதி, சாவடி, இவைகள் அமைக்கவேண்டும். ஆனால், ஏழையைப் படைத்தவன் இறைவனாகமாட்டான் என்று பேசுவதா? ஏழையின் நிலைமைக்குக் காரணம், அவனுடைய “விதி” அல்ல, பிரபுக்களின் சூழ்ச்சி என்று பேசுவதா? இது போன்ற பாப மொழி பேசுவோர் படுபாதாளத்திலே வீழ்வது மட்டுமல்ல, மக்களையுமன்றோ மீளா நரகுபுகவைப்பர்” என்று கூறினான் மன்னன். நவகோடியார், “அரசே! அதற்கென்ன சந்தேகம்” என்றான்; அவனுடைய வழக்கமான பாடம் அது. “இத் தகாச்செயல் புரிவோரைத் தண்டிக்க நெடுநேரம் பிடிடிக்காது” என்றான் மன்னன். “ஒரு வார்த்தை சொன்னால் போதாதோ, ஊறி உலகைக் கெடுக்கும் அந்தக் கும்பலைத் தூக்கு மேடைக்கே இழுத்துச் சென்றுவிடமாட்டார்களோ, படையினர்” என்று, வீராவேசத்தோடு வணிகர் பேசினார். “உண்மை! ஆனால், அங்ஙனம் நான் உத்தரவு பிறப்பித்தால் உமது உத்தம மனைவியார், மருதவல்லி அம்மையாருமன்றோ சாகவேண்டும்!”—மன்னன் கடைசியில் அம்பை எய்தான். அடிவீழ்ந்து எழுந்தான் வணிகன், கெஞ்சினான்; மன்னன் பிறகு மக்கள் மன்றத்திலே மருதவல்லி பேசுவது பற்றிக்கூறி, உடனே, மருதவல்லியைக் கண்டித்து, மன்றத்துடன் கொண்டுள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளச் செய்யவேண்டும், என்று எச்சரித்தான். நவகோடியார், அதன்பிறகே, மருதவல்லியைக் கண்டித்தார்.

மருதவல்லி, பணம் தேடித்தேடி பண்பை இழந்துவிட்ட, தன் கணவனிடம் வாதாடி, அவனைத் திருத்துவது முடியாதகாரியம் என்பதை உணர்ந்தாள். கணவனுடைய கருத்திலே நெளிந்துகொண்டிருந்த சுயநலத்தையும் பேராசையையும் சாகடிக்கத் தக்கதிறமை தனக்கு இல்லை என்பதையும் உணர்ந்தாள். இவற்றைவிட அதிகத் தெளிவாக வேறொன்றையும் மருதவல்லி உணர முடிந்தது. கணவன் மனம் கோணாமல் நடந்துகொள்வோம், நாட்டிலே உள்ள காட்டு முறையைப் போக்க நாம் தானா இருக்கிறோம். மற்றவர்கள் அக்காரியத்தைக் கவனித்துக் கொள்ளட்டும், நாம் ‘குடும்ப விளக்காக’ இருந்து விடுவோம், என்ற எண்ணத்தைத் தன்னால்கொள்ள முடியவில்லை என்பதை உணர்ந்தாள். வாழ்வுக்காகக் கொள்கையை மறந்துவிட முடியாத அளவுக்கு, மருதவல்லியின் மனம் உரம் பெற்றுவிட்டது. எனவே, இனிக் கொள்கைக்காகப் பணிபுரிவது, அதற்காக, ‘விடுதலை’ பெறுவது என்ற துணிவும் பிறந்துவிட்டது.

அந்த அழகிய முகத்தோற்றத்தையும் அன்பு வழியும் விழிகளையும் கண்டு, நவகோடியார், பரவசமடைந்த காலம் ஒன்று உண்டு; அது பேழைகளிலே, முத்து, பவழம், வைடூரியம் நிரம்பாததற்கு முன்பு!

அரண்மனையிலே செல்வாக்குப் பெற்றுள்ள நிலையில்; இருக்கிறோம் — இந்த மருதம் அரசிளங்குமரிகளுடன் அளவளாவி அகமகிழ்வதைவிட்டு, அறமாம், நெறியாம், அன்பாம் அருளாம், சங்கமாம் சன்மார்க்கமாம், இவ்விதமான கவையற்றவைகளைக் கட்டி அழுகிறாளே என்று கவலைப்பட்டான் முதலில்; மன்னன் மிரட்டியபிறகோ, மருதவல்லிமீது நவகோடிக்கு வெறுப்பே பிறந்துவிட்டது —வெண்ணிலாவின்மீது ஏற்பட்ட மோகம், அந்த வெறுப்பை அதிகமாக்கிவிட்டது. வெண்ணிலா, அரண்மனைப் பணிப்பெண். அலங்காரத்தால் அழகுக் குறைவையும், ஆடல் பாடலால் வஞ்சகத்தையும் மறைத்துக்கொண்டிருந்த மயக்க மொழியினள்.

நவகோடியாரின் மனைவியாக இனியும் இருத்தல் இயலாது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டாள் மருதம். நள்ளிரவுச் சந்திப்புகளும், அவசர அணைப்புகளும் போதாது, மாளிகையிலேயே வெண்ணிலா வந்திருக்கவேண்டும் என்ற அளவுக்கு ஆசைக் கனல் புகுந்துவிட்டது நவகோடியார் உள்ளத்தில். எனவே கவிராயருக்கு ஓலை அனுப்பப்பட்டது. மகளைக் கண்டு அறிவுரை கூறி, ஒழுங்காக நடந்துகொள்ளச் சொல், இல்லையேல், உன்னோடு அழைத்துச் செல், என்பதே ஓலையின் கருத்து—வெண்ணிலாவின் வெற்றிகளிலே அதுவும் ஒன்று — அதிக விலை கொடுத்தும் அந்த வெற்றியை அவள் பெறவில்லை, இரண்டொரு ‘இச்’சொலிகள் மட்டுமே செ[illegible]ிட்டாள்.

மக்கள் மன்றத்தின் எதிர்காலமே, மருதவல்லியின் நிலை என்ன ஆகிறது என்பதைப் பொறுத்திருந்தது. பொறி பறக்கப் பேசினாள்! அறம் என்றாள், போர் என்றாள், முழக்கத்துக்குக் குறைவில்லை. எனினும், வசதியான மாளிகை வாழ்வை இழக்க நேரிடும் என்று தெரிந்ததும், மருதவல்லி, கொள்கையைக் கட்டிப் பாரண்மீது போட்டுவிட்டு, சீமாட்டி வாழ்வையே நடத்துகிறாள் என்று நிலை ஏற்பட்டுவிட்டால் மன்றத்திலே திகைப்பு மிகுந்துவிடும், மூடுவிழாத்தான் பிறகு! மருதவல்லி இதனை நன்கு அறிந்திருந்தாள். மனப்போர் பலமாக, மக்கள் மன்றத்தின் எதிர்காலம், தன் முடிவுடன் இணைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தாள், காட்டிக்கொடுக்கும் கயமைக்குணம் அவளிடம் தலைகாட்ட மறுத்தது. ஆனால், கணவனைவிட்டு விலகுவது, கொள்கைக்காக என்ற உண்மையை அறியாத மக்கள் கோணல் நடத்தைக்காரியோ என்று சந்தேகித்தால் என்ன செய்வது என்ற சஞ்சலம்மட்டும் அவளை வாட்டி வந்தது. வெண்ணிலா வீண்வதந்திகளைப் பரப்புவாள் என்ற அச்சமும் இருந்தது மருதவல்லிக்கு. தலையணை நனைந்தது, கூந்தல் பளபளப்பை இழந்தது, இறுதியில் சஞ்சலத்தையும் அச்சத்தையும் கடந்தாள். கவிராயரிடம் தன் உள்ளக்கிடக்கையை ஒளிவு மறைவு இன்றி எடுத்துரைத்தாள்.

“நான் பெருமை அடைகிறேன் மகளே! பெருமை அடைகிறேன்! வீரமும் அறமும் உருவெடுத்ததுபோல் இருக்கிறாய். வா, அம்மா! இனி நாம் நமது இல்லம் செல்வோம்” என்று கவிராயர் கூறியபோது, நீண்ட நாட்களாக அவளை விட்டுப் பிரிந்திருந்த புன்னகை திரும்பிவந்து தவழ்ந்தது

"தொலைந்தால் போதும். மனைவியாகக்கொண்ட தோஷத்துக்காகப் பணம் வேண்டுமானாலும் அழுகிறேன்" என்று நவகோடியார் கூறியபோது "பணமா! வேண்டாமப்பா......உன்னிடம் இருப்பது அது ஒன்றுதானே, கட்டிக்காத்துக்கொண்டிரு" என்று முதியவர் கூறினார். மருதவல்லி தாக்கவந்த நவகோடியாரைத் தைரியமாகவே தடுத்து நிறுத்தினாள். தந்தையும் மகளும், மாளிகையைவிட்டு வெளி ஏறினார்கள்—மன்னன் மகிழ்ந்தான், வெண்ணிலா விருந்தளித்தாள் தோழிகளுக்கு!

விளக்கமில்லாத மக்கள், தன் மகளைக்குறித்துக் கேவலமாகப் பேசுவர் என்பதை எண்ணி, கவிராயர் சிறிது ஆயாசமடைந்தார் எனினும், தூற்றலைத்தாங்கிக் கொண்டு, தூயவாழ்க்கையாலும், தொண்டின் சிறப்பாலும், மக்களின் ஏளனத்தையும் வீழ்த்தவல்லவள் மருதவல்லி என்ற தைரியம் அவருக்கு இருந்தது. கிராமம் சென்று, சிறுர்களுக்கெனப் பள்ளியொன்று அமைத்து அதிலே மருதத்தைப் பணியாற்ற ஏற்பாடு செய்வது என்று திட்டமிட்டார். மருதவல்லியோ மனதிலே வேறோர் திட்டம் வகுத்து வைத்திருந்தாள். ஊர்ச்சேர்ந்த வந்ததும், தந்தையின் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, மருதம் "அப்பா! இனித் தாங்கள் வீடு செல்லலாம் நான் போகவேண்டியஇடம் இதோ" என்றுகூறி, புத்தமார்க்க போதனைக்காக அமைந்திருந்த மடாலயம் ஒன்றைக் காட்டினாள். ஒரு கணம், திகைத்துப்போனார் கவிராயர்—எனினும் மாற்றமுடியாதமுடிவு அது என்பதையும், மக்களின் கேலியும் எதிர்ப்பும்கூட மகளைத் தீண்டமுடியாத நிலையைத் தாத்தக்க திரு அகம் அந்த இடம் என்பதையும் உணர்ந்தார். "மகளே! தடைகூற நான் யார்! தள்ளாத பருவம் எனக்கு; உன் துணை கிடைக்கும் என்று எண்ணினேன். தூயஒளி உன்னை அழைக்கிறது. குழந்தாய்! சென்று சேவை செய்! நான் என் கடைசிமூச்சு இருக்கும்வரையில் அறிவுப் பணிபுரிந்தே வருவேன்" என்று கூறினார். மருதவல்லி மடாலயம் சேர்ந்தாள், கவிராயர் கிராமம் சென்றார், வெண்ணிலா நவகோடியார்மாளிகை புகுந்தாள்!

* * *

மக்கள் மன்றம் மகிழ்ந்தது. மருதவல்லியின் 'தியாகம்', மன்றத்தின் பெருமையை மண்டிலம் அறியச் செய்தது. கொள்கைக்காக வாழ்வின் சுவையை இழக்கும் பண்பு வளரும் புத்தமார்க்கம் வெல்லும் என்ற நம்பிக்கை பலப்பட்டது. மன்னன் மார்த்தாண்டனுக்கு அடக்க முடியாத கோபம். இனித் தாக்கித் தீருவது என்ற முடிவுக்கு வந்தான்—தாக்கீதுகள் கிளம்பின, புத்த மடாலயங்களைக் கலைத்து விடும்படியும், சதிகாரர்களைச் சிறைப்படுத்தும்படியும், மருதவல்லி தங்கியிருந்தது, புத்த மடாலயம் கூட அல்ல, புத்த மார்க்கம் அளித்த நன்னெறியின் மாண்புகளை மக்களிடம் எடுத்துரைத்து, மாசு துடைக்கும் பிரசாரம் புரியும் அமைப்புத்தான் எனினும், அந்த மடாலயத்துக்கும் மக்கள்மன்றத்துக்கும் இருந்ததொடர்பைக் காரணமாகக் காட்டி, புதிய மார்க்கப் போதனை என்ற திரை மறைவில் வெளிநாட்டு வேந்தனை வரவழைத்து அரநாட்டைத் தாக்கச் சதி செய்கிறார்கள் என்று மன்னன் மார்த்தாண்டன் கூறினான்—சட்டம் கொட்டலாயிற்று. மருதவல்லி மகிழ்ந்தாள். அறநெறிப் போதனையில் ஈடுபட்ட மக்கள் மன்றம், ஆதிக்கம் புரியும் அரசனை அச்சமடையச் செய்திருக்கிறது என்பதை எண்ணிப் பெருமகிழ்வு கொண்டாள். இதுகள் சக்திக் காணப்போகும் காரியம் என்ன, இவர்கள் என்ன செய்து விட முடியும், என்று இறுமாந்து கிடந்த மன்னன், இவர்களைச் சிறையிலே தள்ளினால் மட்டுமே, அரநாடு தன் ஆதிக்கத்தில் இருக்கும் என்று எண்ணிட வேண்டிய கட்டம் இவ்வளவு விரைவிலே வந்து விட்டதே என்பதை எண்ணிப் பூரிப்பும் பெருமையும் அடைந்தாள். சிறைக்குமட்டுமல்ல, சித்ரவதைக்கே தயாராக இருக்கிறார்கள் தன் நண்பர்கள் என்பதைக் கண்டறிந்த போது, மருதவல்லிக்குப் பெருமை ஓங்கி வளர்ந்தது. வெற்றி! வெற்றி! என்று தனக்குள் கூறிக் கொண்டாள். பிடி! அடி! என்று மன்னனுடைய போர்வீரர்கள் கொக்கரித்தனர், மருதவல்லியின்

டில்லி தர்பார்

'கப்சிப்' தர்பார் நடத்தியதாகக் கேலி செய்யப்படும் பாதுஷாக்கள் காலத்தைவிட, இன்றுள்ள டில்லி தர்பார், எந்த வகையிலே நிர்வாகத் திறமையைக் காட்டுகிறது, என்று கேட்டால்மட்டும் காங்கிரஸ் நண்பர்களுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது.

நெய்
ஜீப்கார்
ரெடிமேட் வீடு
ஜப்பான் துணி

இவ்விதம் பலவகை கொண்ட பட்டியல் இருக்கிறது, டில்லி தர்பாரின் நிர்வாக ஊழலையும் திறமைக் குறைவையும் எடுத்துக் காட்ட! ஒரு அலுவலிலாவது, தீட்டிய முறையில் திட்டம் நிறைவேற்றப்பட்டதாகவோ, எதிர்பார்த்த பலன் கிடைத்ததாகவோ, கூறமுடியாது! கேட்டால், புருவத்தை நெறிக்கிறார்கள் புள்ளிவிவரம் காட்டும்போது புலம்புகிறார்கள்.

ஹிராகுட் அணைக்கட்டுத் திட்டத்துக்கென, செலவிடப்படப்போகும் தொகை 48 கோடி, என்றார்கள்.

இப்போது 92 கோடி ரூபாய்க்கு செலவு தாவிக் குதிக்கிறது.

இதன் நிர்வாகத்திலே காணப்படும் திறமைக் குறைவையும், ஊழலையும், சர்க்கார் நியமித்தகணக்கு ஆய்வுக்குழுத்தலைவர் B. தாஸ், என்பவரே, எடுத்துக் காட்டிக் கண்டித்திருக்கிறார்.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கதியும் இதேதான்! 37 கோடி ரூபாயில் திட்டம் நிறைவேறும் என்றார்கள். 88 கோடி ரூபாய் விழுங்கிவிட்டிருக்கிறது. நிர்வாகமும் கண்டனத்துக் குரியதாகவே இருக்கிறது. உள்ளதைச் சொன்னாலோ, உடம்பெரிகிறதே என்கிறார்கள்! மக்கள் பணம் பாழாவது சரியா? கேட்பார் இல்லையா?

செவியிலே, வெற்றி! வெற்றி! என்ற சத்தமே கேட்டது.

* * *

"உண்மையைக் கூறிவிடு. சதித்திட்டம் என்ன?"

"திட்டம் என்ன என்று கேள் — சதி ஏதும் கிடையாது. மமதை நிறைந்த மன்னன், கபடம் நிறைந்த குரு, இந்த இடுக்கிலே சிக்கிச் சீரழியும் மக்களை அறிவு பெறச் செய்து, விடுவிப்பதே எமது திட்டம்"

"விடுதலைப் போரா! வீராங்கனையே! விழி, வேலாகுமோ! மொழி, கணையோ! மன்றமாம், மன்றம்! நாட்டுக்கும் மதத்துக்கும் நாசம் தேடும் காவிகள் கூடிடும் குகைக்குப் பெயர், மன்றம்!"

"எது அப்பா, காவிகள் கூட்டம்? உத்தமமான கொள்கைக்காக உயிரையும் இழக்கத் துணிந்து, ஊராள்வோனிடம் ஊழியம் செய்து, கொழுக்கும் உலுத்தர்களின் உறுமலைச் சட்டை செய்யாது மக்களின் நல்வாழ்வுக்காகவும், மார்க்கத்தின் மாசுபோக்கவும் பாடுபடும் நாங்களா காவிக்கூட்டம்"

சிறைவிசாரணைக் கூடத் தலைவனால் அதற்குமேல் பேச முடியவில்லை. மருதவல்லியின் பேச்சிலே கனல் தெறித்தது. உடலிலே இரத்தம் பீறிட்டு வருமளவு சவுக்கடி விழுந்தது. பதறவில்லை! மருதவல்லியின் அஞ்சா நெஞ்சு கண்ட மற்றவர்கள், கொஞ்சநஞ்சம் கொண்டிருந்த அச்சத்தையும் நீக்கிக் கொண்டனர். விடுதலை தருவதாயினும், தமது பிரசாரத்தை விட முடியாது என்று சூள் உரைத்தனர். எங்கிருந்து 'இதுகளுக்கு' இவ்வளவு துணிவு பிறந்தது? எங்கோ உலவிய புத்தனுக்கு, இப்படி, நாடெங்கும் படைகளா! என்ன ஆச்சரியம்! என்று எண்ணினன், சிறைக்கூடத் தலைவன்—அவனையும் புத்தமார்க்கம் தழுவ முனைந்தது—மிக்க சிரமப்பட்டு அதனைத் தடுத்து நிறுத்தினன்.

* * *

அரநாடு புரட்சியைப் பொசுக்கியே தீரும், புது மார்க்கம் புக இடமளிக்காது, என்று 'முழக்கமிட்ட மார்த்தாண்டன், அறநெறிப் பிரச்சாரம்செய்து வந்த மருதவல்லி போன்றோரைச் சிறையிலே தள்ளியதோடு விடவில்லை, இதனையே வாய்ப்பாகக்கொண்டு, 'வருவாய்' தேடவும் ஒரு வழி வகுத்துக்கொண்டான். புரட்சிக்காரர்கள், புது மார்க்கத்தைப் புகுத்த முனைவோர், ஆகியோரைச் சிறைப்படுத்துவதுடன், அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது என்று திட்டமிட்டான். துளியும் தொடர்பு அற்ற பல செல்வர்களையும், புது மார்க்கத்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் சிறையில் தள்ளி, பெரும்பொருள் அபராதம் செலுத்தச் செய்தான்—வளமிக்க வயல்கள், சிங்கார மாளிகைகள், பொற்குவியல்கள், பறிமுதலாயின! பணம் படைத்தோர்களிடையே புதிய பீதி உண்டாயிற்று. புதிய மார்க்கத்துக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காக, தேரும் திருவிழாவும், அபிஷேகமும் ஆராதனையும் பழைய கடவுளருக்குச் செய்து, 'பக்தர்' கோலத்தைக் காட்டினர், பலர். வெண்ணிலா, வேலுடையான் கோயிலுக்கு நடத்திய உலாஉற்சவம், நவகோடியாரின் அடிவயிற்றைக் கலக்கிவிட்டது—அவ்வளவு பெரும் செலவு—வெண்ணிலாவுக்கு ஊர்ப்பிரமுகர்கள், உயர் குடும்பத்தினரின் புகழ்மாலை கிடைத்தது! வெண்ணிலாவின் 'பக்தி' ஒளி குறித்து அரண்மனையிலும் பேசப்பட்டது. நவகோடியாருக்கு வர இருந்த ஆபத்தை நீக்கிவிட்டதாக வெண்ணிலா கருதி மகிழ்ந்தாள்—ஆனால், வேல் பாய்வதுபோலச் சேதி வந்தது, மருதவல்லியின் மாஜி கணவன் என்ற காரணம் காட்டி நவகோடியாரையும் மன்னன் குற்றம் சாட்டப்போகிறான் என்று தெரிந்தது. வெண்ணிலா விம்மினாள்.

* * *

"கடுகடுத்த முகமல்லவா காட்டினாய், கள்ளி! காவி உடைக்கு ஏற்றபடி நடந்துகொள் என்று ஏசினாயே! உன் கண்கள் கமலம் என்றேன், பவளம் உன் அதரம் என்றேன், முத்துப் பற்கள் என்றேன், செந்தேனே! என்றேன்—ஆண்டிக்கு ஆகாது இந்தக் காரியம் என்றல்லவா, அன்று சொன்னாய். அறிவிலி! அன்று நான் ஆலயத்துக்கு மலர்தொடுத்து அளிப்பவனாக இருந்தேன் என்கிற அலட்சியம்தானே உனக்கு! இன்று நான் மார்க்க விசாரணைக்கூடத் தலைவனாகிவிட்டேன்; காலடி வீழ்கிறாய், அல்லவா? உன் மயக்கு மொழிக்கு நான் வீழ்வேன் என்று எண்ணாதே. நவகோடி கிடைத்துவிட்டான் என்ற மண்டைக் கர்வத்தில், இருந்தாய். படு! படு! அவன் சொத்துப் பறிமுதலாகும்! அவனுடன் இருந்த உனக்கும் சிறைதான்! சிரிக்கவும் தைரியம் வருகிறதே, உனக்கு! இந்தச் சாகசத்துக்கு, நான் பலியாகமாட்டேன்! மோகனப் பார்வையைக் கண்டு நான் ஏமாறமாட்டேன்! ஏ! வெண்ணிலா! சற்று விலகியே நில்! ஆடை நெகிழ்ந்தால், என் உறுதி ஒன்றும் கவிழ்ந்துவிடாது. அந்த ஆட்கொல்லிப் பார்வையை வேறு ஏமாளிமீது செலுத்து. போ! போ! இங்கு ஏன் நிற்கிறாய்! என் அருகே வராதே! சீ! எழுந்திரு, என் பக்கத்தில் ஏன் உட்காருகிறாய். பத்தினித் தங்கமல்லவா நீ! என்னைத் தொடலாமா! வேண்டாம், வேண்டாம், உன் சரசம்! விளக்கை அணைக்காதே! விடு! விடு! போடி மாயக்காரக் கள்ளி! யாருக்கு வேண்டும் உன் முத்தம்! உஹூம்......முடியாது.........வேண்டாம்......கீழே தள்ளிவிடாதே......வெண்ணிலா! வெண்ணிலா...... அன்பே! இவ்வளவு ஆசையை எங்கே ஒளித்து வைத்துக் கொண்டிருந்தாய்......இந்த இன்பத்தைப் பெற நான் எவ்வளவு ஏங்கிக்கிடந்தேன்...இன்று தான் உன் திரு உள்ளம் இடமளித்ததா.........தேனே! தேவாம்ருதமல்லவா தருகிறாய்! பேசாதே......நீ பேசவே கூடாது...உன்னை நான் விடவே மாட்டேன்......தன் உடலில் பாதியை உமையவளுக்குத் தந்த சிவமதக்காரனல்லவா நான்! சக்தி! நம் சக்தி!...... ஆஹா! இந்த விருந்தை நவகோடியானல்லவா பெற்று வந்தான்...கண்ணே! வெண்ணிலா!.....கட்டளையிடு... என்ன செய்ய வேண்டும், அவனைக் காப்பாற்றுவதா, உனக்காகச் செய்கிறேன்.........காரியம் முடிந்ததும் மறந்து விடுவாயோ என்னை...இந்த அன்பு நிலைத்து இருக்குமா...அடிக்கடி வருவாயல்லவா......அன்பே! இன்பமே!......

* * *

மார்க்கத்தைக் கெடுப்பவர்களை விசாரித்துத் தண்டனை அளிப்பதற்காக நிறுவப்பட்ட தனி விசாரணைக் கூடத்தலைவன் தானப்பனின், படுக்கை அறைப்பதிகம் மேலே இருப்பது. வெண்ணிலாவுக்காக, தானப்பன் பதிகம் பொழிந்தான், அவள் அதற்கேற்ப அபிநய விருந்தளித்தாள். நவகோடியார் தப்புவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஒளி நிரம்பிற்று, அறையிலும் வெண்ணிலாவின் மனதிலும்.

* * *

நவகோடியாரைக் காப்பாற்றுவது மட்டுமா, சிறையிலே உள்ளவர்கள் அனைவரையும் விடுவிக்கவும் செய்யலாம், வெண்ணிலாவுக்காக, என்றுதான் தானப்பன் எண்ணினன்; அவள் மகிழ்வளித்தபோது. கதிரவன் கிளம்பினன், அவன் மனதிலேயும் புது எண்ணம் உண்டாயிற்று. பொருளும் தட்டிப் பறித்தாக வேண்டும் என்று திட்டமிட்டான். நவகோடி வருவான் என்பது தெரியும், வெண்ணிலா, உருத்திராட்ச மாலையை அறுத்தபடி, அதைத்தானே அவனிடம், முன்னாள் இரவு சொன்னாள். மறந்துவிடவா முடியும்!

“புத்தமதத்தைப் புகுத்த அல்லவா சதி செய்கிறார்கள். இரக்கம் காட்டலாகாது இந்தத் தீயவர்களிடம்—திருநெறியை ஒழிக்கத் திட்டமிடுகிறார்கள்.”

“ஏழை எளியவர்களை எப்படியோ மயக்கிவிட்டார்கள்”

“இல்லாதவனிடம் ஆத்திர மூட்டினால் எதையும் செய்வானல்லவா!”

‘ஒரு பிரபல வியாபாரியின் மனைவியும் இதிலே சேர்ந்திருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது”

“மன்னன் சீற்றத்துடன் இருக்கிறான்.”

தானப்பன், அடுத்த தானப்பனுடன் உரையாடல் நடத்துகிறான், வெண்ணிலாவின் ஏற்பாட்டின்படி, நவகோடியார் வருகிறார், காலடி வீழ்கிறார்.

“ஐயனே! என்னைக் காப்பாற்றக் கோருகிறேன். என் மனைவி......மகாபாபி......”

“பதறாதே அப்பா, பதறாதே! என்ன செய்யலாம், உன் தீவினை அவள் உருவில்!”

“எப்படியாவது அவளை மீட்டாக வேண்டும். அவளுக்காக அல்ல. என் மனைவி இப்படிப்பட்டவள் என்று தெரிந்தால் என் மானம் போகும், வியாபாரம் நாசமாகும்”

“உண்மைதான். சொத்தும் பறிமுதலாகக்கூடும்”

“ஆமாம் அரசன் கடுங்கோபத்துடன் இருக்கிறார் அரசைக் கவிழ்க்கச் சதிசெய்தால் கோபம் வராமலிருக்குமா”

“மன்னன் கோபிப்பது மணிமுடி பறிபோகுமோ என்பதற்காக அல்ல. மதம் — நமது மதம் — புராதன மார்க்கம்—வேதநெறி—இதை நாசம் செய்ய ஒருகூட்டம் கிளம்பி இருக்கிறதே என்ற கோபம்தான்”

“தாங்கள்தான் நல்வழி காட்டவேண்டும்”

“நேற்றிரவு வெண்ணிலா ஒளியுடன் இருந்த நேரம், நான் இது குறித்து யோசித்தவண்ணமிருந்தேன். நவகோடியாரே! சதிபுரியும் ஒரு பெண்ணை ஏனய்யா துணைவியாகக் கொண்டீர். உமது கண்களை மறைக்கும் அழகியோ அவள்! எவ்வளவு அழகு இருந்தாலும், என்னய்யா! மதத்தை நாசமாக்குபவளிடம் மையல் கொள்ளலாமா!”

“அவளைக் கண்டால், யாரும், சதிகாரி என்று கூறமுடியாது ஐயனே!”

“முகம் நிலவு என்றே வைத்துக்கொள்ளுமய்யா, பொற்கொடி, பூங்கொடி! என்றுகூடப் புகழ்ந்து கூறத் தக்கவள் என்றே வைத்துக்கொள்—அதற்காக — ஒரு பெண்ணின் பிரேமைக்காக, மார்க்கத்தை இழப்பதா”

“நான் அவளை இழக்கச் சம்மதித்தேனே...முன்னால் இருந்த தொடர்பல்லவா, இன்று ஆபத்தாக உருவெடுக்கிறது”

“ஏதாகிலும் செய்ய இயலுமா என்று யோசிக்கிறேன். இவ்வளவு ஆபத்தும் வந்திராது, உன் போன்றவர்கள் சரியாக நடந்துகொண்டிருந்தால். மடம்கட்ட, மகேஸ்வர பூஜைசெய்யப், பணம் கேட்கும்போது கையை விரித்து விடுகிறீர்கள்.”

“காணிக்கை தயார்சித்தமாக இருக்கிறேன்...... மருதவல்லியைக் குற்றமற்றவள் என்று கூறிவிட்டால் போதும்”

“பெயர் மருதவல்லியா! அழகான பெயர். வணிகரே! உமக்கு என்ன வயதாகிறது, அறுபது இராது?”

“ஐம்பது முடிந்தது—கவலையால் முதுமை தெரிகிறது”

“இந்த மருதம் இருபதாண்டுப் பெண்ணோமே...”

“ஏறக்குறைய முப்பது இருக்கும்...”

“சரி! மருதம், சித்தசுவாதீன மற்றவள் என்று கூறிவிடுகிறேன்—மருத்தவருடைய வாக்கு மூலமும் கிடைக்கச் செய்கிறேன்—விடுதலை கிடைத்துவிடும்—விவரமாக நான் ஏதும் கூறத்தேவையில்லை என்று கருதுகிறேன்—வில்வ பூசைக்காக, ஒரு சிறு கிராமத்தைத்தானமாகத் தந்தால போதும்”

“கட்டளைப்படி நடந்துகொள்கிறேன்”

* * *

வெண்ணிலாவின் விருந்தும் சீமானின் காணிக்கையும் பலனளித்தது; சிறைக்கூட அதிகாரியிடம், நவகோடியார், தானப்பன் தந்த தாக்கீதையும் மருத்துவர் தந்த ஓலையையும் எடுத்துக்கொண்டு சென்றார்.

“ஓஹோ! அப்படியா? நானே சந்தேகப்பட்டேன்” என்றான் சிறைக்கூடத்தலைவன்.

“வெளியே சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு இருந்தேன் வெகு காலமாக” என்றான் வணிகன்.

விடுதலைக்கு உத்தரவிட்டான்—விழுந்து விழுந்து சிரித்தாள் மருதவல்லி.

“பைத்யமா! எனக்கா! யார், என் கணவரா கூறினார்? உண்மைதானய்யா, உண்மைதான்! பலமுறை, பைத்யக்காரி நமக்கு என்ன குறை, மாளிகை இருக்கிறது மனோகரமாக, செல்வம் இருக்கிறது ஏராளமாக, ஆனந்தமாக அனுபவிப்பதைவிட்டு, ஊர்த் தொல்லையை உன்மேல் போட்டுக்கொண்டு அவதிப்படுகிறாயே, இதுஎன்ன பைத்யக்காரத்தனம் என்று அவர் கூறியிருக்கிறார். பைத்யமய்யா, எனக்கு, பைத்

யம்! உல்லாச ஓடம் கொந்தளிக்கும் கடலிலே செல்லக் காண்கிறேன். ஓடத்திலே, பார்வை பழுதான பணந்தேடிகள் கூத்தாடக் காண்கிறேன், குழப்பம், பீதி, ஏற்படத்தானே செய்யும்!" என்று மருதவல்லி கூறக்கேட்ட, சிறைக்கூடத்தின் தலைவன், பரிதாபப்பட்டான், பித்தம் முற்றிவிட்டது என்று எண்ணிக்கொண்டு. மாளிகைக்கு அழைத்துச் சென்றான் நவகோடி. வெண்ணிலாவின் விழி, மருதத்தை ஓராயிரம் கேள்வி கேட்டது. மருதவல்லியின் சிரிப்பின் பொருள் அவளுக்கு விளங்கவில்லை.

"பெயர், வெண்ணிலாவா! அழகான பெயர். அவருக்கு உன்னிடம் ரொம்ப ஆசையா? இருக்கும், இருக்கும். ஆவலைக்கிளறும் விழிதான் உனக்கு. வெண்ணிலா! நான் அவருக்கு ஏற்றவளாக முடியாமற் போய்விட்டது. உன்னால் அவருக்கு அந்தக் குறை தீரட்டும்" என்று மருதவல்லி சொல்ல, வெண்ணிலாவுக்கு இலேசாகப்பயமே உண்டாயிற்று. மன்னனின் கோபத்தைத் தடுக்கத் தந்திரமாக, மருதவல்லிக்குப் பைத்யம் என்று கூறச்செய்தோம், பார்க்கப்போனால், இவளுக்கு உண்மையாகவே பைத்யம் போல அல்லவா இருக்கிறது என்று எண்ணித் திகிலடைந்தாள்,

* * *

நீண்ட நாட்கள் மருதவல்லியை மாளிகையில் அடைத்துவைக்க முடியவில்லை. வெண்ணிலாவுக்கு வேறோர் பயமும் புகுந்துவிட்டது. மருதவல்லியை மீண்டும் நவகோடி விரும்ப ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம், எனவே, மருதவல்லியை விரட்டத் திட்டமிட்டாள். இதற்குள் கவிராயர் வந்துசேர்ந்தார், சேதியைக் கேள்விப்பட்டு. தந்தையும் மகளும் மீண்டும் மாளிகையை விட்டுக்கிளம்பினர்.

"மேனி வாடி வதங்கிவிட்டது மகளே!"

"மனம் வளமாகிவிட்டதப்பா"

"கறுத்துப்போய்விட்டிருக்கிறாய் கண்ணே!"

"உடல்தானே! உள்ளத்திலே புதிய ஒளி இருக்கிறதப்பா இப்போது"

தந்தையும் மகளும், கவலையற்றுப் பேசுகிறார்கள்—மாளிகையை இழந்தோம், இன்ப வாழ்வு இழந்தோம் என்பதுபற்றிய கவலையற்று.

* * *

"என்னங்க! புரட்சி எப்ப வருதுங்க. இந்த ஆடியிலேயாவது வரும்ங்களா?" என்று கேலிபேசுகிறார்கள் பேதைகள்.

"டேய்! அதோ, கிழவன் கைத்தடியைப் பார்த்திங்களா! மந்திரக் கோலடா அது, மந்திரக்கோல்" என்று ஏளனம் செய்கிறான் ஒரு காலி.

மருதவல்லி சிரிக்கிறாள். "அப்பா! இவ்வளவு பேர்களையும் குணப்படுத்தவேண்டும். வேலை ரொம்ப இருக்கிறது, ஓயாமல் உழைத்தாகவேண்டும்" என்று கூறுகிறாள்.

* * *

ஓயாமல் உழைக்கிறார்கள் இருவரும், திக்கற்றோருக்கு உதவி புரிகிறார்கள், கலனான ஒரு கோயிலில் குடியேறி, அங்கு கூன், குருடு, செவிடு, ஊமை, கைகால் இழந்தவர் ஆகியோரைத் தங்கவைத்து, பிச்சை எடுத்தும், சிறு உதவித் தொகைகள் திரட்டியும், அன்னமிடுகிறார்கள். திக்கற்றவர்கள் இருப்பதுபற்றி அதுவரை துளியும் கவலைப்படாத அரசு, ஆலயத்தை அவர்கள் தமது இருப்பிடமாக்கிக்கொண்ட செய்தி தெரிந்ததும், வேகமாகக் கிளம்பிற்று, அவர்களைக் காப்பாற்ற அல்ல, ஆலயத்தைக் காப்பாற்ற!

"ஏ! கிழம்! இதென்ன தண்டச்சோற்று மடமாக்கிவிட்டிங்க, தண்டாயுதபாணி கோயிலை" அரசனுடைய படையினர், முதியவரைக் கேட்கிறார்கள், மருதவல்லி பதில் கூறுகிறாள்.

"கோயில் கலனாகிவிட்டது, யாரும் இப்போது இங்கே வருவதில்லை"

"அதனாலே, இதுகளுக்கு வீடு ஆக்கிவிட்டாயா, கோயிலை"

"வௌவால்கள்தானப்பா இங்கு வட்டமிட்டுக் கொண்டிருந்தன"

"வாயாடியாச்சே நீ, தெரியுமே தேவாலயத்தை அசுத்தமாக்கினால் என்ன தண்டனை தெரியுமா?"

"அசுத்தமாக்கவில்லையே. இங்கே இருந்த குப்பை கூளத்தை நான்தான் கூட்டி எடுத்து அப்புறப்படுத்தினேன்"

"வீண்பேச்சுப் பேசாதே. நாளைக் காலை வருவோம், இடம் காலியாக இருக்கவேணும்—இல்லே... மறுபடியும் கம்பி எண்ணவேண்டியதுதான்!"

மிரட்டிவிட்டு, மேலதிகாரிகளிடம் கூறச் சென்றார்கள் படையினர். பெருமூச்செறிந்தபடி, மருதவல்லி, திகைத்துக் கிடந்த திக்கற்றோரைப் பார்த்துவிட்டு, "இந்தக் கண்றாவிக் காட்சியைக் காண மறுக்கிறார்கள் கருணாமூர்த்திகள்" என்று கூற, முதியவர், "நேரம் ஏது மகளே! தேரும் திருவிழாவும் காணவே காலமெல்லாம் செலவாகிவிடுகிறதே! கைகால்போனதுகளைக் காண நேரம் ஏது! வா, வா, இவர்களை அழைத்துக்கொண்டு, வேறிடம் போகலாம்" என்றார்.

"வேறு எங்கே அப்பா போவது?" என்று விசாரத்துடன் மருதவல்லி கேட்க, கவிராயர் ஒளி நிரம்பிய கண்களால் அவளைப் பார்த்தபடி, "எங்கே போனார் புத்தபிரான்! காடு, மேடு, எங்கெங்கோ சென்றாரே, அழகான அரண்மனை அவருக்கென்று இருந்தும். அன்னக்காவடிகள் நாம்—எங்கு போனால் என்ன! வா, மகளே! வா! மரத்தடியெல்லாம் நமது மாளிகைதான்" என்று கூறினார். மருதவல்லி, தந்தையின் கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டு, "என் குருவப்பா, நீ, எனக்கு ஞானகுரு!" என்று கனிவுடன் கூறினாள், பெரியதோர் மரத்தடி புதிய மாளிகையாயிற்று. தொடர்ந்து தொண்டு செய்துவந்தனர்.

* * *

வெண்ணிலாவும் தொடர்ந்து தொண்டு செய்துவரவேண்டியிருந்தது—தானப்பன் விடமறுத்தான். துவக்கத்திலே அவனுக்குக் கோபம்தான், நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவன் தன்னைக் கொடுமை செய்கிறானே என்பதால். பிறகோ அவனுக்கு அது பழகியும் விட்டது, பலனும் கிடைக்கலாயிற்று. சந்தேகம் கிளப்பிற்று நவகோடிக்கு, கேட்

கும் துணிவு எழவில்லை, துணிவு எழக் காலம் பிடித்தது. ஆனால் அதற்குள் வெண்ணிலா வேங்கையாகி விட்டாள்.

"எல்லாம் உனக்கு ஆபத்து வராமல் தடுக்கத்தான்" என்று நவகோடியிடம் கூறினாள், "என்னால் அந்தக் கிழத்தின் தொல்லையைச் சகித்துக் கொள்ள முடியாது" என்று தானப்பனிடம் கூறினாள். தானப்பன் சீமானாகி விட்டது, வெண்ணிலாவுக்குத் தெரியுமல்லவா!

தானப்பன், அடிக்கடி மிரட்டலானான் சீமானை. சீமானே வேகமாகச் சாமான்யராகிக் கொண்டு வந்தார்! இந்நிலையில், வெண்ணிலா தானப்பன் அமைத்துக் கொடுத்த புதிய மாளிகைக்கே சென்று விட்டாள். விசாரம் நவகோடிக்கு. ஆத்திரமும்தான், ஆனால், என்ன செய்வது!

தானப்பன் புதிய வெடிகுண்டு வீசினான்.

"அடிக்கடி மன்னர் கேட்கிறார், உம்மைப்பற்றி. நான் பல தடவை சமாதானம் சொல்லிப் பார்த்தாகி விட்டது. எப்படியாவது, மருதத்தை பழையமார்க்கத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தாக வேண்டும். அதை நீ செய்து முடிக்காத வரையில் உன் மீது சந்தேகம் இருந்து கொண்டே தான் இருக்கும். எந்த நேரத்திலும் ஆபத்து வரக்கூடும், என்மீது நொந்து கொள்வதில் பயனில்லை" என்று கண்டிப்பாகக் கூறி விட்டான்.

வெண்ணிலாவை அபகரித்துக் கொண்டான்—செல்வமோ கரைந்துவிட்டது— மிரட்டுகிறான் முரட்டுத்தனமாக; என் செய்வது, என்று திகைத்தார் நவகோடி. தானப்பன், இந்தப் புதியபோக்குகொண்டதற்கு தக்ககாரணமும் ஒன்றிருந்தது புதுமார்க்கம் சென்றவர்களை ஆசைகாட்டியும் அச்சமூட்டியும், பழைய மார்க்கத்துக்கு திரும்பிவந்து சேரும்படி செய்வது, திட்டமிட்டு நடந்துவந்தது. திரும்பிவந்தவர்கள், பழையமார்க்கத்தின் பெருமைகளை எடுத்துக் கூறியதுடன், புதியமார்க்கம் கேவலம் நாத்திகம் என்று கூறிவந்தனர். பழையமார்க்கத்தாகர்கள் இந்த வேலையை வெற்றிகரமாக நடத்திவந்தனர்.

பயக்கமொழி கேட்டேன், கெட்டேன்!

மதுக்குடம் போலிருந்தது அவள் விழி, ஏய்க்கப்பட்டேன், நாத்திகனானேன்.

மண்டையிலே ஒரே குடைச்சல். கைகால் இழுத்துக்கொண்டது, கண் அவிந்துபோயிற்று, ஆண்டவன் கனவில் தோன்றி பாவிகளைவிட்டு விலகு! புண்ய மார்க்கத்தில், புராதன மார்க்கத்தில் வந்துசேர் என்று கூறினார். தவறை உணர்ந்தேன், புதிய மார்க்கத்தை விட்டுத்தொலைத்தேன், உடனே தீவினை அகன்றது, தன்யனானேன்.

இங்ஙனம் தப்புப்பிரசாரம் நடைபெற்றது; தெளிவற்ற மக்கள் மனதிலே, மீண்டும் புராதன மார்க்கத்திடம் பற்று பலமாயிற்று. மூடநம்பிக்கை பலப்படலாயிற்று.

மருதவல்லி, புதிய மார்க்கத்தை விட்டொழித்து புராதன மார்க்கத்தை மீண்டும் வந்தடைந்தால், பெரும்வெற்றி கிட்டும்—விருது தனக்குக்கிடைக்க வேண்டும் என்பது தானப்பனின் எண்ணம். எனவே தேளானான். நவகோடி துடியாய்த்துடித்தார். மரத்தடி மடாலயம் விரிவடைந்தது— பொறுப்பும் பாரமும் வளர்ந்தது; தந்தையும் மகளும் தளராது உழைத்து வந்தனர், தோழர்கள் பலர் துணை நின்றனர். புத்த மதம் பரவியிருந்த மண்டலங்கள் சிலவற்றிலிருந்து, உதவி அவ்வப்போது கிடைத்துவந்தது—உதவியைக் கடுகளவினதாக்கும் வகையில், வேறு மண்டிலங்களிலே,புராதன மார்க்கத்தால் கொடுமைப்படுத்தப்பட்டுப் புகலிடம் தேடிவந்தவர்களின் தொகை பெருகிற்று. தொகை பெருகியபோது, கடும் நோயும் படை எடுத்தது; மருத்துவரின் முயற்சி போதுமான பலன் அளிக்கவில்லை. இருமல், காசம், இளைப்பு, ஈளைகட்டி, இழுப்பு இப்படிப் பலப்பல நோய்கள். பவழ பஸ்பம் தயாரித்துத்தந்தால், கடும் நோயைக் களையலாம் என்றார் மருத்துவர், உயர்தரப் பவழமோ விலை அதிகம்—மருதவல்லியைச் சுற்றிலுமோ அன்னக்காவடிகள்.

பகுத்தறிவுக்குப் பொருந்துமா?

இன்று தென்னாட்டிலே எங்கு பார்த்தாலும் உயர்ந்த கோபுரங்களை உடைய கோயில்கள் இருக்கின்றன. எனக்குத் தென்னாட்டிலே யாத்திரை செய்வதென்றால் மிகவும் ஆனந்தம்! இவ்வளவு கோவில்கள் இருந்தும் இன்று நாட்டு மக்களிடையே பக்தி இருக்கிறதா என்றால், 'இல்லை!' என்று தான் கூறவேண்டியிருக்கிறது. எப்படி இருக்கமுடியும்? பல லட்சக்கணக்கான மக்கள் சஞ்சலத்தினாலும், பசியினாலும் புழுக்கள் போல துடிதுடித்துக் கொண்டிருக்கும்பொழுது ஒரு சிலர் பட்டுடைகள் உடுத்தி, உண்டு கொழுத்து உப்பரிகையிலே உல்லாசமாக இருக்கின்றதைப் பார்க்கும்பொழுது மக்களுக்கு எப்படிக் கடவுள் நம்பிக்கை ஏற்படமுடியும்!

கடவுள் சிலரை மாளிகையில் வசிக்கும் மாபெரும் பணக்காரர்களாகவும், பலரை மண் குடிசையில் வசிக்கும் ஏழைகளாகவும் படைத்திருக்கிறார் என்றால் எப்படி அவர்மீது அன்பு ஏற்படமுடியும்? அப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒத்துக்கொள்ளத்தான் முடியுமா?

இதைக் கேட்டால் சிலர் சொல்லுகிறார்கள். ஏழையாக பிறப்பதற்குக் காரணம் "விதி, பூர்வ ஜன்ம பாபம்" என்று. இது உண்மையா? பகுத்தறிவுக்கு பொருந்துமா?

நான் சொல்லுகிறேன்! கடவுள் நல்லவர் தான்! ஆனால் அவர் படைத்த மனிதர்களில் மிருகக்குணம் படைத்தவர்கள்தான் ஏழை-பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வான சமுதாயத்தைச் சிருஷ்டித்து ஏழை மக்களை வஞ்சித்து சுகேபாகமாக வாழ்கிறார்கள்.

—சங்கர்ராவ்தேவ்.
(சிவகங்கையில்)

மருத்துவர், கிடைத்த மூலிகைகளைத் தருவார், பிறகு ஆயாசமடைவார். பவழபஸ்பம் செய்தால் நல்லது என்று பன்னிப்பன்னிக் கூறுவார். மருதவல்லி, நிலைமை கஷ்டமானதாகிவருவது கண்டு வருந்தினாள். அதேபோது, தானப்பனால் தாக்கப்பட்ட நவகோடியாரின் நிலைமையும் அவளுக்குத் தெரிய வந்தது, பரிதாபப்பட்டாள்.

*   *   *

"படமெடுத்தாடும் பாம்பாகிவிட்டான் தானப்பன். பழைய மார்க்கத்துக்கு நீ திரும்பியாகவேண்டுமாம், இல்லையானால் என்மீது பழி தீர்த்துக்கொள்வானும். என்ன செய்வேன் மருதவல்லி! அவனுடைய பேராசைப் பசியைப் போக்கப் பெரும்பணம் தொலைத்தேன். அதே முறையில் நீண்டகாலம் செய்துவரவும் முடியாது. என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையதுதான். நீ, புதிய மார்க்கத்தவளாக இருக்குமட்டும் எனக்கு ஆபத்துதான்" என்று புலம்பலானார் நவகோடியார்.

"வேறு நாடு சென்று விடுவோமா?" என்று யோசனைகூறிய மருதவல்லிக்கு அவர் கூறின பதிலெல்லாம், "இங்கே உள்ள என் நிலபுலம் தோட்டம் தோப்பு வியாபாரம் இவை என்ன ஆவது?" என்பதுதான்.

பவழபஸ்பத்துக்கு வழி என்ன என்று கண்டுபிடிப்பதா, இந்தப் பரிதாபத்துக்குரியவரின் ஆபத்தைத் தடுக்க என்ன வழி என்று கண்டறிவதா, என்ன செய்வாள் மருதவல்லி.

நோயாளிகள் மரணப்படுக்கையில்—மருத்துவர்கள் நிலைமையை எடுத்துக்கூறியபடி—நவகோடியோ, தனக்கு வர இருக்கும் ஆபத்தை எடுத்துக்கூறியபடி. மருதவல்லியின் மனதிலே கடும் போர் மூண்டது. தானப்பன் நாள் குறித்துவிட்டான்; நவகோடியார் மருதவல்லியின் காலில் விழ்வதுதான் பாக்கி—மற்ற அளவு தீர்ந்துவிட்டது.

*   *   *

மருதவல்லி மாளிகை திரும்பினாள்—மரத்தடியினர் திடுக்கிட்டனர்—தானப்பன் கூடத்திகைத்துப் போனான் — நவகோடியார் களிப்புக்கூத்தாடினார். மருதவல்லி புதிய மார்க்கத்தவரைவிட்டுப் பிரிந்துவிட்டாளாம், பழைய மார்க்கத்தில் சேர்ந்து கொண்டாளாம் என்று ஊரார் பேசிக்கொள்ளலாயினர். சிலர் கேட்கவே செய்தனர், மருதவல்லி புன்னகை புரிந்தாள், வேறுபதில் இல்லை, கவிராயர் கண்ணீர் சொரிந்தார்—மகளைப்போய்ப்பார்க்கவும் அவருக்கு மனம் இல்லை.

"பேதைப்பெண்! அவ்வளவுதான் அவளால் முடிந்தது!" என்று முணுமுணுத்துக்கொண்டார்.

*   *   *

புதிய மார்க்கத்தைப் பொசுக்கிட அரசன் கொடுமையான முறைகளைக் கையாண்டும், கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள புது மார்க்கத்தினர் முன் வருவது கண்டு, பழய மார்க்கத்தைத் தம் பிழைப்புக்கும் ஆதிக்கத்துக்கும் வழியாக்கிக் கொண்டிருந்த பூஜாரிக் கூட்டம், திகைத்தது. ரசமான பாடல்கள், சுவையுள்ள காதைகள், களிப்பூட்டும் கூத்துகள் ஆகியவைகள் மூலம் புராதன மார்க்கத்தைப் புகுத்தும் பணியிலே, புது உற்சாகம் காட்டி வேலைசெய்து பார்த்தனர். பலன் விரும்பிய அளவு ஏற்படவில்லை. விசாரப்பட்டனர்.

கொடுமைகளுக்கு ஆளான மக்களோ, புத்தர் உண்மையைக் கண்டறிய எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதை எண்ணினர். என்றும் தோன்றாத அளவுக்கு மனதிலே அவர்களுக்குத் தைரியம் ஏற்பட்டது

மமதை நிரம்பிய மன்னர்கள், செருக்குமிகுந்த சீமான்கள், புத்த மார்க்கம் தந்த பொன்னொளியின் காரணமாகச் சீலர்களாகிவிட்டனர் என்று செய்திகள் பல பக்கங்களிலுமிருந்து வந்தவண்ணமிருந்தன.

போக போக்கியத்திலே மூழ்கிக்கிடந்தவர்கள், புத்தரின் புத்தொளிகண்டு, ஆசைகளை அகற்றிக் கொண்டனர்; சுயநலத்தை விட்டொழித்தனர், என்று செய்திகிடைத்தது. அரசனுடைய அக்ரமத்தால் தாக்கப்பட்ட அரநாட்டு மக்கள், இன்றில்லாவிட்டால் நாளை, புத்தபிரானின் பொன்னொளி, இங்கும் பரவியே தீரும் என்று நம்பினர். கொடுமைகளைக் கண்டு கொதித்து எழும்போக்கினரோ அக்ரம ஆட்சியை எதிர்த்தொழிக்கவேண்டும் என்று துடித்தனர்.

மக்கள் மனதை மாற்றிக்கொண்டு வரும் புத்தப் புயல் ஒரு புறம்.

அக்ரம ஆட்சியை அழித்தொழிக்கவேண்டும் என்ற புரட்சிப்பொறி மற்றோர்புறம்.

இருபெரும் சக்திகளும் ஒன்று கூடிவிட்டால்? மன்னன் மார்த்தாண்டன் இதனைத்தான் எண்ணி அஞ்சினான்.

அரசனுடைய தயவு தமக்கு இருந்தும், மக்களுடைய எதிர்ப்பு வளருவதுகண்டு, பூஜாரிக் கூட்டம கோபமும் வருத்தமும்கொண்டது. மக்களை, 'ராஜ பக்தி—பழையமார்க்கபக்தி' கொண்டோராக்குவதற்கான வழியிலே, தளராது உழைத்துவந்தனர்.

பழைய மார்க்கத்திலே ஓரளவு பற்று வைத்துக் கொண்டிருப்போரிலே சிலருங்கூட, மன்னனுடைய ஆட்சி முறையிலே காணக் கிடக்கும் கேடுகளை ஒழித்திடவேண்டுமென்பதிலே ஆர்வம் காட்டினர்.

மன்னராட்சியை ஆதரித்தவர்களிலே சிலர், மக்களுடைய எதிர்ப்புணர்ச்சிக்குக்காரணமே, பழையமார்க்கத்தைத் தமது சுயநலத்துக்குப் பயன்படுத்தும் பூஜாரிக் கூட்டத்தின் புரட்டுதான் என்று எடுத்துரைத்தனர்.

இவர்களிடம் வாதாடுவதே, பூஜாரிக் கூட்டத்தினருக்குக் கடினமானதாக இருந்தது.

"அரசன் ஆண்டவனின் அம்சம்! ராஜனாவது, என்றால், பூர்வபுண்யவசந்தான் காரணம்."

"அரசன் அக்ரமம் புரிந்தால்? நாட்டுக்குக் கேடுதான், மக்களுக்கும் கேடுதான்........"

"அப்படிப்பட்ட ஆட்சியை எதிர்த்து ஒழிக்கும் கடமை மக்களுடையதல்லவா......"

"சிவ! சிவ! அரசனை எதிர்ப்பதா? யார்? மக்களா? ஆட்சி முறையைப் மாற்றுவதா! மக்களா? மக்களுக்கு ஏது அந்த உரிமை? எப்படி முடியும் மக்களால்! ஆண்டவனுடைய அம்சத்தை அழிக்கக் கிளம்புவது, ஆண்டவனை அவமதிப்பதாகுமே! ஆண்டவன் சும்மா விடுவாரா?"

"மக்கள் மடிகிறார்கள்! அவர்களுடைய சொத்து சூறையாடப்படுகிறது—சுதந்திரம் நசுக்கப்படுகிறது..."

"துக்ககரமான சம்பவங்கள் தான்!"

"கற்பழிக்கப்படுகிறார்கள் பெண்கள்! கட்டி வைத்துக் கொளுத்தப்படுகிறார்கள் ஆடவர்கள்!"

"மனம் பதறத்தான் செய்யும்!"

"கொதித்தெழும் மக்கள், எவ்வளவு வலிவுள்ள படையையும் எதிர்த்து ஒழிக்கும் வல்லமை பெறுவார்கள்! சந்தேகமா? சிறைகளைத் தூள் தூள் ஆக்கிவிட முடியும். சிங்காரக் கொலு மண்டபங்களை மண்மேடுகளாக்கமுடியும்! தீயோனின் அரண்மனையைத் தீக்கிரையாக்கமுடியும்!"

"முடியாது! முடியும் என்ற எண்ணம் கொள்ளவும் கூடாது. அவ்விதமான எண்ணம் கொள்வதே மாபாபம்!"

"பாபமா! மக்களைக் காப்பாற்றக் கிளம்புவதா மாபாபம்!"

"மதியில்லையே உனக்கு! உன்னையும் உன்போன்ற ஜீவராசிகளையும் படைத்து ரட்சிக்கும் ஆண்டவனுடைய காரியத்தைச் செய்ய, நீ, கிளம்புவதா! அவன் ஆணை கேட்டுத்தானே சூரியன் காய்கிறான், அளவோடு! சூரியனால், உலகையே, பஸ்மீகரமாக்கிவிட முடியுமே, செய்கிறானா! செய்ய அனுமதிக்கிறாரா ஆண்டவன்! கடல்நீர் அவ்வளவையும் கண்மூடிக் கண்திறப்பதற்குள், கதிரவனால் குடித்துவிடமுடியும்—அலைகள் நிரம்பிய கடலை, மணற்காற்றடிக்கும் பாலைவனம் ஆக்கி விடமுடியும்! சூரியன் செய்கிறானா! செய்யவிடமாட்டார் கடவுள்! சர்வசக்திபடைத்தவர், எம்பெருமான். அவர் அறிவார், எதை, எப்படி, எப்போது செய்ய வேண்டுமென்று! அவருக்குத்தான் தெரியும்!"

"ஆண்டவனுடைய வல்லமையை, யார் சந்தேகித்தார்கள்! அரசனுடைய அக்ரமத்தை அல்லவா, எதிர்த்து அழிக்கவேண்டும், என்கிறோம். அந்த அக்ரமம் ஒழிக்கப்படாவிட்டால், மக்கள் வேதனையிலிருந்து விடுதலை பெறமாட்டார்களே!"

"எப்படி, எப்போது, மக்களின் வேதனையைப் போக்கவேண்டும் என்பது பகவானுக்குத் தெரியும். மழையைப் பொழியச்செய்பவன், நீயா! காற்றை, வீச வைப்பவன், யார்—நீயா? பைத்யக்காரா! பைத்யக்காரா! அதுபோலவேதான் இதுவும். அரசனைத் திருத்தவும் ஆட்சி முறையை மாற்றவும் ஆண்டவனால்தான் முடியும். மக்களைச் சோதிக்க மகேசன், எத்தனையோ வழிகளைக் கையாள்வார்! மன்னனைக்கொண்டு, மேலும் மேலும் வரிகளைப் போடச்செய்வார்! காராக்கிரகத்திலே மக்களை— தலைவர்களைக்கூட — தள்ளும்படி, மன்னனை ஏவுவார்! தாங்கமுடியாத அளவுக்குக் கஷ்டங்கள் ஏற்படுகிறபோது, மக்களின் நிலை எப்படி இருக்கிறது, நினைப்பு எப்படி இருக்கிறது, என்பதைக் கண்டுகளிக்கக்கூடச் செய்வார்!"

"கொடுமைகளைச் செய்பவர் மன்னன்—மகேசன் அல்ல என்பதை மக்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டார்கள். அதனால்தான் மக்களிடம் எதிர்ப்புணர்ச்சி வீறிட்டு எழுகிறது."

"முதலில் எழும்—பிறகு விழும்! தெரியுமா விஷயம், மாளிகை வேண்டாம், கணவனே வேண்டாம் என்று கூறிவிட்டு, புதுமார்க்கத்தாருடன் கூடித் திரிந்துவந்த மருதவல்லி, நமது புராதன மார்க்கத்துக்கே திரும்பிவந்து சேர்ந்து விடப்போவது!! சத்யம் வெல்லும்! பொறுமைதான் வேண்டும்."

* * *

"வேத நிந்தகர்கள்! சண்டாளர்கள்! பாஷாண்டி மத ஸ்தாபகர்கள்! ஆச்சார அனுஷ்டான விரோதிகள் என்றெல்லாம் கூறினோம்..."

'சர்வநாசம் சம்பவிக்கும்! சர்வேஸ்வரனின் கோபத்துக்கு ஆளாவீர்! என்றுகூடத்தான் சொன்னோம்......"

"வெள்ளத்தை, வைக்கோற் போர்களைப் போட்டுத் தடுக்க முயற்சித்தோம்...பலன்......?"

"பூஜ்யம்தான்! ஏன் மக்கள் மனதிலே பயம் தோன்றவில்லை......கிறின கோட்டைத் தாண்டினால் ரௌரவாதி நரகம் சம்பவிக்கும் என்று நம்பி, நடு நடுங்கிக்கொண்டிருந்த மக்கள், இப்போது நிமிர்ந்து நிற்கிறார்கள் — நாம் அதிகமாக அதட்டினால், புருவத்தை நெறிக்கிறார்கள் — இப்படி ஆகிவிட்டதே நிலைமை......முன்பெல்லாம், ஸ்ரீமன் நாராயணமூர்த்தியுடைய லீலா விநோதங்களைப்பற்றிய திருக்கதைகளைக் கூறினால், எவ்வளவு பக்தி சிரத்தையோடு கேட்பார்கள்—எவ்வளவு உருகுவார்கள்—கோபாலகிருஷ்ணன் குழலை எடுத்தார், அதரத்தில் வைத்தார், மதுரகீதம் பொழிந்தார், கீதம் கேட்டதும், கொல்லவந்த புலியும் சாக இருந்த பசுவும், அம்பு எய்திடச் சென்ற வேடனும், அவனால் இறந்திட இருந்த பறவையும், சகல ஜீவராசிகளும் பிரம்மானந்தமடைந்தன என்று கூறினபோது, எவ்வளவு குதூகலமடைந்தார்கள்—கோவிந்த நாமத்தைப் பஜித்தார்கள்......"

"கோபிகைகளுடன் கண்ணன் பிருந்தாவனத்திலே ஆடிப்பாடி இருந்த ஆனந்தக் காட்சியை வர்ணித்தபோது, மக்களின் முகமெலாம், செந்தாமரையாகிவிடும்......"

"காணிக்கை குவியும்—பூஜைகளோ அமோகம்—பூதேவர் என்ற பெயருக்கு ஏற்றபடியான நிலைமை நமக்கு......அந்தப் பொற்காலம் போயே, விட்டதே!"

"வேள்வி என்றால், வீண் என்கிறார்கள்! யாகப்பசு என்று கேட்டால், ஜீவஇம்சை என்கிறார்கள்—தானம் என்று கேட்டால், அதிகாரப் பிச்சையா என்றுமிரட்டுகிறார்கள், தவசிகள் என்று சென்னால், எதைத்துறந்

தீர்கள் என்று கேட்டுக் கேலி செய்கிறார்கள்......... சகிக்கமுடியவில்லை, அவர்களுடைய போக்கை! புரியவில்லை, ஏன் இப்படி போக்கு மாறிவிட்டது என்று! இதை நீக்கும் மார்க்கமோ துளியும் தெரியவில்லை...”

“எல்லாம் புத்தன் கிளப்பிய புயலின் விளைவுதான்.”

“அண்டசராசரங்களைப் படைத்தஐயனின் மார்க்கத்தை, புத்தப்புயல் அழித்துவிடுவதா......”

“புத்தன்மட்டும் யார்? ஐயன்படைப்புதானே!”

“ஐயனேதான், என்றுகூடத்தான் சொல்கிறார்கள்.”

“ஒரு காரணம், எனக்குத் தெரிந்த அளவிலே கூறுகிறேன்......”

“எதற்கு......?”

“புத்தமார்க்கம் பரவுவதற்கு......காரணம் என்ன என்றால், புத்தனுடைய கதை மக்கள் மனதை உருக்குகிறது — ராஜகுமாரன் — போக போக்கியத்தைத் துறந்து அழகு மனைவியையும், குழந்தையையும் பிரிந்து, அடவி எல்லாம் சுற்றி அலைந்து, மக்களுக்குச் சேவை செய்தார், என்று கதை கூறும்போது மக்கள் மனம் பாகாய் உருகத்தான்செய்கிறது. மனிதனுடைய துக்கத்துக்குக் காரணம் என்ன, விமோசனத்துக்கு வழி என்ன, என்பதைக் கண்டுபிடிக்க சித்தார்த்தர் பட்டபாடு, கேட்போர் மனதைக் கரையச்செய்கிறது. பொன்னிறமேனி மயங்க, தேகம் துரும்பாக இளைத்துப்போக, அன்ன ஆகாரமின்றி அடவியிலே அலைந்து சிந்தித்துச் சிந்தித்து ஞானத்தைக் கண்டறிந்தார் என்று கூறுகிறார்கள்—கேட்கும்போது, மக்கள் சொக்கிப் போகிறார்கள்.”

“போமய்யா,போம்! புத்தி கெட்டுப்போய் உளறுகிறீர்! அரச போகத்தைத் துறந்தாராம், அடவியிலே அலைந்தாராம்...பதினான்கு ஆண்டுகளய்யா, பதினான்கு ஆண்டுகள்—ஒன்றல்ல இரண்டல்ல, பதினான்கு ஆண்டுகள் கானகவாசம் நம் ஐயன் இராமபிரானுக்கு—மரஉரி—கனியும் காயும் உணவு—தரைதான் பஞ்சணை...... கல் மனமும் கரையுமே, ராம காதைகேட்டு......”

“ஆமாம்—முன்பு! இப்போது, மக்கள், ஸ்ரீராமர், அடவிசென்றது, அங்கு ஈரேழாண்டு வாசம்செய்தது எல்லாம், அவருடைய தகப்பனாரின் வாக்கைக் காப்பாற்றத்தான்—மக்களுக்காக அல்லவே—புத்தர், மக்களுக்காக அல்லவா, அரச போகத்தைத் துறந்தார். என்று கேட்கிறார்கள்.”

“கேட்பார்களய்யா, கேட்பார்கள்! அவர்களின் நாக்கை அறுக்கத்தக்க வீரர்கள் இல்லை இப்போது, அதனால் கேட்கிறார்கள்......”

“கானகத்திலே கஷ்டம் அனுபவித்தான பிறகு, ராமபிரான், நாடு திரும்பி பட்டாபிஷேகம் செய்துகொண்டு சுகப்பட்டார் — புத்தர், துறவியானவர், துறவியாகவே இருந்துவிட்டார்—இது வேறு மக்கள் மனதை மயக்கிவிடுகிறது......”

“மயக்கும், மயக்கும்! எவ்வளவு காலத்துக்கு என்பதைப் பார்த்துவிடுகிறேன்......”

“ஒவ்வொரு மண்டலமாகப் பரவுகிறது புதிய மார்க்கம்......”

“இங்குமட்டும் என்னவாம்! நேர்த்தியான யாகம் நடத்தி எவ்வளவு காலமாகிறது—ஏதோ ஆலய பூஜைகள் நடக்கின்றன — வேறு என்ன விசேஷம் நடக்கிறது.........”

“மன்னனிடம், கூறினேன்—ஆகட்டும் பார்ப்போம்—என்று இழுத்தாற்போலத்தான் பேசுகிறார் ....செலவு அதிகமாகுமோ என்று ஆயாசப்படுகிறார்.........”

“காமக் கூத்தாட மட்டும் காசைக் கரியாக்கத் தயங்குவதில்லை — கடவுள் காரியமென்றால், கையை விரிக்கிறார்.........”

“நானும், ஒவ்வொரு விநாடியும் யோசித்தபடியேதான் இருக்கிறேன்—என்ன செய்வது, என்ன செய்வது என்று......”

“நாங்களும், மக்கள் முன்போலப் பக்திசிரத்தையுடன் கேட்டாலும் கேட்காவிட்டாலும், பகவத் கதைகளைக் கூறியபடிதான் இருக்கிறோம்...”

“மாபலி கதையைமட்டும், கூறவேண்டாம், இப்போது......”

“ஏன்?”

“வேண்டாம்! மாபலியிடம் மூன்றடி தானம் வாங்கிய மகாவிஷ்ணு, பிறகு, விஸ்வரூபமெடுத்து இரண்டு அடிகளால், பூலோகத்தையும் வான லோகத்தையும் அளந்துவிட்டு, மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று கேட்டு, மாபலியின் சிரத்தின்மீது வைத்தார்.........”

“ஆமாம், அதுதான் மகாத்மியம்......”

“அதுபோல,அரசர்களை அடுத்து தானம் தருமம் கேட்டுப் பெறும் குருமார்கள், கொஞ்சம் இடம் கிடைத்தாலும், அரசுகளையே அபகரித்துக்கொள்வார்கள்—இதற்கு மாபலி புராணமே போதும்—என்று விதண்டாவாதிகள், மக்களிடம் சொல்லிவைத்திருக்கிறார்கள்—அதனால்தான், மாபலி கதை கூறவேண்டாம்......”

“மற்றக் கதைகளை......”

“கூறுங்கள்......ஆனால் எதைச் சொன்னாலும், கொஞ்சம் திரைமறைவுடன் சொல்லவேண்டும்...... எதற்கும் நாம் பொறுமையை இழந்துவிடக்கூடாது! புத்த மார்க்கம் பெரும்புயல்தான், எனினும் அதைச் சமாளிக்கும் வலிமை நமக்கு உண்டு என்ற நம்பிக்கை நிரம்பவேண்டும். பாருங்களேன், அதிசயத்தை! சிங்காரமாளிகை வாழ்வை இழந்து, சிறைக்கோட்டம்

பிறருக்கு உழைத்து உழைத்து உருக்குலையும் மக்களை உற்பத்திசெய்யவும், அவர்களை விடுதலை அடையவொட்டாமல் அழுத்திவைக்கப் பயன்படுகிற ஆபத்தான ஆயுதங்களில் மிக முக்கியமானது—மதம்.

—லெனின்

செல்லத்துணிந்த மருதவல்லி, மீண்டும் சிமாட்டியாகி விடச்சம்மதிக்கவில்லையா! நவகோடியார், எவ்வளவு திறமையாக—வெற்றி பெற்றிருக்கிறார், கவனியுங்கள்! மருதவல்லியின் மனம் மாறினதை, மகத்தான புண்ய கதையாக்கி மக்களிடம் கூறவேண்டும்.''

"காரிருளிலே தோன்றும் மின்னல்போல இருக்கிறது, மருதவல்லியின் மனமாற்றச்சம்பவம். தோன்றி மறைந்திடும் மின்னலாகிவிடக்கூடாது மருதவல்லி சம்பவம். அதை 'திவ்யஜோதி'யாக்கிக் காட்ட வேண்டும். மருதவல்லி, பிக்ஷுக்களின் பொய்யுரைகளைக் கேட்டு மயங்கினாள். கணவனை எதிர்த்தாள், பதியை விட்டுப் பிரிவது மாபாபம் என்ற சாதாரண அறிவையும் இழந்தாள், ஆனால் நவகோடியார் பரமபக்தர், தெய்வ நம்பிக்கை உள்ளவர், எனவே அவர் எப்படியும் எம் பெருமான் அந்தப் பேதைப் பெண்ணின் அஞ்ஞானத்தைப்போக்கி ரட்சிப்பார் என்ற திடசித்தத்துடன், பகவானைப் பஜித்து வந்தார், விசேஷ பூஜைகள்நடத்தினார்; அதன் பலனாக, மருதவல்லியின் அஞ்ஞானம் அழிந்தது, புது மார்க்கம் ஒருபுரட்டு என்பதைஉணர்ந்தாள். கசிந்து கண்ணீர்மல்கி, கணவன் பாதத்தில் வீழ்ந்துவணங்கினாள். நவகோடியார், "என் பாதத்தில் வீழ்ந்துவணங்கினால் என்ன பலன்? பெண்ணே! ஐயன் பொற்பாத கமலத்தை வணங்கு — அவர் உன் பாபத்தைப் போக்குவார், அருள் பாலிப்பார்'' என்று உபதேசம் செய்தார். மருதவல்லி இப்போது புதியதோர் முகதேஜசோடு இருக்கிறார்! — இப்படியும் இதைவிட ரசமாகவும், கூறவேண்டும். மருதவல்லியின் மனமாற்றச்சம்பவம், கலம் உடைபட்டபோது கிடைத்த தெப்பக்கட்டைபோன்றது! பக்குவமாகப் பயன்படுத்த வேண்டும்.''

* * *

மருதவல்லி மாளிகை திரும்பிய சம்பவம், வைதீக வட்டாரத்திலே ஒரு திருவிழாவாகக் கருதப்பட்டது. எங்கும் இதே பேச்சுதான்! ஒவ்வொருவர் ஒவ்வோர் வகையான விளக்கமளித்தனர் இதற்கு. மருதவல்லியோ, யாரிடமும் இது பற்றி ஏதும் பேசவில்லை— மனதிலே ஏதோ ஓர் தீர்மானமிருக்கிறது என்பது, முகத்திலே தெளிவாகத் தெரிந்தது. நவகோடியார், ஊரிலே கெம்பீரமாக உலவினார்.

* * *

வேலுடையான் கோயிலிலே விசேஷபூஜைக்கு நாள்குறித்துவிட்டார் நவகோடியார். பூஜை நாளன்று மருதவல்லி ஆலயம்சென்று தரிசனம் செய்வது என்றும் பிறகு அங்கு கூடிடும் பக்தர்களிடம் புதிய மார்க்கத்தைவிட்டுத்தான் விலகிய காரணத்தை எடுத்துரைத்துப் பழைய மார்க்கத்தின் மேன்மையை விளக்குவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மன்னன் வரையில் சேதி சென்றது; மண்டிலமே திடுக்கிட்டது, தானப்பன் அரசகுருவே ஆகிவிடக் கூடும் என்று பேசிக்கொள்ளப்பட்டது.

பழைய மார்க்கத்துக்குத் திரும்பும் புனிதவதியை வாழ்த்தினர் பலர்.

செல்வர்கள் காணிக்கை செலுத்தினர் — மருதவல்லிமூலம், விசேஷ பூஜாநாளன்று வேலுடையான் கோயிலுக்குத்தர.

மருதவல்லியும், நவகோடியாரிடம் காணிக்கை கேட்டாள்—விலையுயர்ந்த பவழமாலைகள்!! ஆபத்து நீங்கும், அந்தஸ்த்து உயரும் என்ற மகிழ்ச்சியில், நவகோடியார் பவழமாலைகளைக் கொண்டுவந்து குவித்தார். அவைகளை அணிந்துகொண்டு, தன் உருவைத்தானே பார்த்துச் சிரித்தாள் மருதவல்லி.

"இது என்ன பைத்யம் மருதம்! பவழமாலையிடம் இவ்வளவு பைத்யமா உனக்கு? வைரம் இருக்கிறது, விலையுயர்ந்த வேறு மாலைகள் உள்ளன'' என்றார் நவகோடி. எனக்கு பவழம் என்றால் கொள்ளை ஆசை என்று கூறினாள் மருதவல்லி.

அதிர்வேட்டுகள் முழங்கின! மறுநாள் விசேஷ பூஜைக்கு அறிவிப்புகள். மருதவல்லியின் மாளிகையிலே வேதம் ஓதப்பட்டது. பஜனைக் கோஷ்டிகள் வீதிகளில் வலம் வந்தன. வெண்ணிலாவுக்கு புதிய வைரமாலையைத் தந்து மகிழ்ந்தான் தானப்பன்.

நள்ளிரவு! கவிராயர் கவலையுடன் படுத்துப் புரண்டுகொண்டிருக்கிறார். காசநோய்க்காரரின் இருமல் இங்கு அதிர்வேட்டென இருக்கிறது. மருதவல்லி இரைக்க இரைக்க ஓடிவந்தாள்—தலைமீது இருந்த மூட்டையைக் கீழே போட்டாள்.

"அப்பா! அப்பா!''

"யாரது? என் மகளா? மருதமா?''

"ஆமப்பா, நான்தான் அப்பா!''

"மகளே! இதென்ன நள்ளிரவில்''

"கடைசி இரவு அப்பா இது.........அதோ உம் காலடியில் இருப்பது பவழமாலைகள்......பவழ பஸ்பம் வேண்டுமளவுக்கு தயாரிக்கலாம்......இவ்வளவும் தந்தார்.....நாளைக்குக் காட்டிக்கொடுக்கும் விழா!...நான் உயிரோடுஇருக்குமட்டும் அவருக்கு ஆபத்துத்தான்... பவழ பஸ்பம் தயாரித்து இவர்களைக் காப்பாற்று... என்னால் இவ்வளவுதான் முடிந்தது......இதற்குமேல் தொண்டாற்ற முடியாதப்பா......புத்தமார்க்கத்துக்கு என் சேவை இந்த அளவு தானப்பா.......நல்ல பவழமப்பா, நல்ல பவழம்...விலை உயர்ந்த பவழம்... மருத்துவர் கேட்டபடி...பவழ பஸ்பம்.........பவழ பஸ்பம்.........!!

* * *

கோவெனக் கதறினார் கவிராயர், உடன் இருந்தோர் அலறி எழுந்தனர், மருதவல்லியின் பிணத்தைக் கண்டனர். விஷம் வென்றுவிட்டது.

திராவிடம்--என் குறிக்கோள்

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

நான், சிறுவனாயிருந்தபோது, ஒரே ஒரு ஆசையால் என் உள்ளம் கொழுந்து விட்டெரியும். அப்போது, நான் தீவிர தேசபக்தனாக, காங்கிரஸ் இயக்கத்தைப் பின்பற்றிக் கொண்டிருந்த காரணத்தால் அந்த நேரத்தில் பெரும் பேச்சாளர்களாகத் திகழ்ந்த திரு. வி. க., ஸ்ரீனிவாசய்யங்கார், சத்திய மூர்த்தி, வரதராசுலு, முத்துராமலிங்கத்தேவர் ஆகியோரின் பேச்சுக்களைக் கேட்டு, அவர்களைப் போலவே நானும் பேசவேண்டும் என்ற ஆசை ஆழமாகப்பதிந்து விட்டது. இந்த ஆசையின் காரணமாகவே, நான் முயற்சி செய்து செய்து, என் பள்ளியில் முதல்தரப் பேச்சாளனாக ஆக முடிந்ததுடன், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், டி. ஆர். சக்கரபாணி அய்யங்கார் ஆகியோரால், பேச்சுப் போட்டிக்கான பரிசும் பெறத் தகுதியுடையவனானேன்.

சிறு வயது முதல் நான் பேசப் பழகியவனே தவிர, எழுதத் தெரிந்தவனல்ல.

ஆகவே, அண்ணா அவர்கள், இந்த ஆண்டு 'திராவிடநாடு' பொங்கல் மலருக்காக, நான் ஏதாவது கட்டுரை எழுதித்தரவேண்டுமென்று பணித்தபோது, சற்று திகைப்படைந்தேன்; எதை எழுதுவது என்ற நினைப்பில், காலங்கடத்தி வந்ததைக் கண்ணுற்ற அண்ணா அவர்கள், "எதையும் எழுதத் தோன்றாவிட்டால், உன்னுடைய வாழ்க்கையில் குறிப்பிடத் தகுந்த சில முக்கிய அரசியல் குறிப்புகளையாவது எழுது. கழகத் தோழர்களுக்கு அவைகள் உபயோகமாக இருக்கக்கூடும்" என்று சொன்னார்.

அதன்படியே இந்தக் கட்டுரையில், என் வாழ்நாளில் எதிர்ப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கிறேன். சுயசரிதம் எழுதும் அளவுக்கு நான் பெரிய மனிதனில்லையானாலும், அண்ணாவின் உத்தரவுக்குக் கீழ்படிந்தே ஆகவேண்டுமல்லவா?

எனது பள்ளிப் படிப்பைக் கடலூர் முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில் துவக்கினேன். மாணவப் பருவத்தில் நான் நடந்து கொண்ட முறைகள் இப்போது நினைத்தாலும் சற்று பெருமைபடக்கூடியனவாகவே உள்ளன. கடலூர் இளைஞர் மன்றம், இளைஞர் சொல்வன்மைக் கழகம், ராமகிருஷ்ணா வாசகசாலை ஆகிய தேசிய இயக்கச் சார்புடைய கழகங்களில் செயலாளனாகப் பணியாற்றியதின் மூலம், பொது மக்களிடம் நெருங்கிப் பழகவும், அவர்களுடைய குணாதிசயங்களைத் தெரிந்து கொள்ளவும் பெரும் வாய்ப்பேற்பட்டது.

அந்தக்காலத்தில், தேசீய இயக்கத்தின் கிளர்ச்சிகளான, உப்பு சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல், ஜவுளிக்கடை மறியல், பகவத்சிங் தூக்குக் கண்டனம் போன்ற சமயங்களில், நான் ஆற்றிய தொண்டு, என்னைப் புரிந்துகொள்ள மக்களுக்கு ஒரு வாய்ப்பேற்பட்டது.

ஆகவே, எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறிவிட்டு பள்ளியைவிட்டு வெளிவந்த 1938-ம் ஆண்டிலேயே—என்னுடைய 20-ம் வயதிலேயே—மக்களைப் புரிந்துகொண்டேன். மக்கள் என்னைப் புரிந்துகொண்டார்கள்.

பள்ளியைவிட்டு வெளி வந்ததும் தீவிர தேசபக்தனாகப் பணியாற்றும் எண்ணத்தில், காங்கிரசுக்கு எதிர்ப்புக் காட்டிய எதிர்க்கட்சித் தோழர்களை நான் நடத்திய முறை இருக்கிறதே, அதை இப்போது நினைத்தால், மிகவும் வேதனை ஏற்படுகிறது.

குறிப்பாக திராவிடரியக்கத்தினர் என்றாலே அப்போது எனக்கு வேம்பு. ஆனால், அவர்கள் சொல்லி வந்த, கடவுள்—மத எதிர்ப்புக் கருத்துக்களிலே நான் ஒத்துப்போவதுண்டு. திராவிடம் பிரியவேண்டும் என்ற அரசியல் பேச்சு வரும்போதுதான், என்னை நானே மறந்துவிடுவேன். 'தேசியத் தலைவர்களையா, அவமதிப்பது?" என்று துள்ளிக் குதிப்பேன்.

இறுதியாக ஒருநாள் எங்கள் ஊரில் நடக்கவிருந்த திராவிடரியக்கக் கூட்டத்தைக் கலைப்பது என்ற முடிவில், கூட்டத்திற்குப்போன நான், பெரியார் அவர்களும், பொன்னம்பலனார் அவர்களும் பேசிய பேச்சைக் கேட்டு புதுமனிதனானேன்! அந்தக் கூட்டத்திலே, பேசப்பட்ட பேச்சுக்கள், எதிர்ச்செதிரே வாதம் புரிவது போலவே இருந்தன. காட்டப்பட்ட காரணங்களோ, அந்தக் காந்தியே வந்தாலும், மறுக்கமுடியாதபடி இருந்தன.

அடுத்து அண்ணா, தோழர்கள் நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி ஆகியோர் தொடர்ச்சியாகப் பேசிய பொதுக் கூட்டங்களுக்

குப் போன காரணத்தால், திராவிட நாடு பிரிந்தால் தான், தென்னாட்டு மக்களுக்கு விமோசனம் பிறக்கும் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

* * *

1937-ல் நடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரசின் சார்பில் நான் வேலை செய்து, எங்கள் தொகுதியில் அபேட்சகராக நின்றவரை, கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்து வெற்றியுறச் செய்த நான் இப்போது காங்கிரஸ் ஒழிந்தாக வேண்டும் என்று சொல்வதற்கான காரணம் என்ன என்பதைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

1937-ம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்ட சூழ்நிலையில், காங்கிரஸ் பதவிக்குவரும் என்று நிச்சயமாகத் தெரிந்ததும், பணமூட்டைகளும், ஜமீன்தார்களும் வரிசையாக உள்ளே வர ஆரம்பித்தார்கள். உண்மையாக உழைத்து வந்த தொண்டர்கள் மிருகத்தனமாக ஒதுக்கப்பட்டதைக் கண்டித்த ஊழியர்கள் காங்கிரசிலிருந்தே வெளியேற்றவும் பட்டார்கள்!

தேசிய இயக்கச் சரித்திரத்திலேயே, தென்னாற்காடு மாவட்ட வன்னிய சமூகத்தின் தொண்டு மகத்தானது. மாவட்டத்தின் மக்களில் 75 சதவிகிதம் வன்னிய சமூக மக்களே. இவ்வளவு பெரும் எண்ணிக்கையுடைய ஒரு சமூகத்தாரின் நிலை, மிகவும் மோசமானதாக, தாழ்த்தப்பட்டோருக்கு அடுத்தபடியான நிலையில் உழன்று கொண்டிருந்தார்கள். தாழ்வாகக்கிடக்கும் ஒரு நிலையைப்பயன்படுத்தி மாவட்டத்தின் சிறுபான்மை பணக்காரர் ஆதிக்கத்தார்,அன்னியனை ஆட்டிவைத்த பேயாட்டம் சொல்லுந்தரமன்று. இந்தக் காலத்தில்தான் 1940-ல் நான் உத்தியோக வாழ்வைத் தொடங்கினேன். மணிலா மார்க்கட் கமிட்டியில் குமாஸ்தா வேலைக் கமர்த்தப்பட்டேன்.

இதுபோன்ற தாழ்வான நிலையை அகற்றவேண்டுமென்று நினைத்த சில பெரு மக்களால் 1944-ல் "தென்னாற்காடு மாவட்ட தமிழரசர்குல வாலிபர் சங்கம்" என்று ஒரு சங்கம் தோற்றுவிக்கப்பட்டு, வன்னியர் முன்னேற்றத்துக்காகப் பாடுபடவாரம்பித்தது.

1945-ல் தென்னாற்காடு மாவட்ட வன்னியர் மாநாடு கடலூரில் நடத்தப்பட்டு S. S. ராமசாமி (படையாச்சி) அவர்களை தலைவராகவும், என்னைச் செயலாளனாகவும் கொண்ட வன்னியர் சங்கம் ஏற்படுத்தப் பட்டது.

வேலையில் இருந்து கொண்டே. வன்னியர் குலத்துக்காகவும், தாழ்த்தப்பட்டோருக்காகவும் என்னால் முடிந்த தொண்டாற்றிவந்தேன்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்தின் சார்பில் ஆம்பூரில் ஓர் மாநாடும் நடைபெற்றது.

ஆம்பூரில் நடைபெற்ற மாநாட்டின்போது, மாணிக்கவேலர் முன்னிலையில், எனக்கு, 'பிரசங்க மணி' என்ற பட்டம் சூட்டப்பட்டது. என்னை மேலும் மேலும், ஊக்குவித்து உற்சாகப்படுத்தவே இந்தப்பட்டம்கொடுத்தார்களென்று நினைத்தேன்.

இந்த மாநாடுகளுக்குப் பிறகு, வன்னியர் தூது கோஷ்டி காங்கிரசின் மேலிடத்துக்குத் தூது சென்றது. பயன், பூஜ்யம்தான்! மாநாடுகளின்மூலம் ஒரே குரலில் முழக்கும் வன்னிய சமுதாயத்தாரைத் திருப்திப் படுத்தும் நோக்கத்துக்காக, அவ்வப்போது பதவி கொடுக்கப்பட்டாலும், அவைகள், பணமூட்டைகளின் கையாள்களுக்கும், படிக்காத தோழர்களுக்குமாகவே இருந்தன.

இந்த நிலையைக்கண்டு மனம் நொந்த வன்னியர்கள், உடனே ஒரு மாநாடு கூட்டி, "இனி காங்கிரசை ஆதரிக்கமுடியாது; அதிலிருந்து விலகித் தீரவேண்டும்" என்றமுடிவெடுக்கப்பட்டது.

அதன்படியே, வன்னியர்கள் காங்கிரஸ் எதிர்ப்பு முகாம் அமைத்துக்கொண்டிருந்த காலத்திலேயே, சட்டசபைத் தேர்தல் வந்தது.

கடலூர் தொகுதியில் S S. ராமசாமி படையாச்சி அவர்களும், திண்டிவனம்—செஞ்சித் தொகுதியில் கோபாலக் கவுண்டரும் போட்டியிட்டு தோற்றுப் போனார்கள். அதன் பிறகு அரசியல் நிர்ணய சபைத் தேர்தல் வந்தது. 10 லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்றிருந்தபடி, வன்னியர்கள் மொத்தம் 80 லட்சம் பேர் இருப்பதால் 8 பிரதிநிதிகளுக்கு ஸ்தானம் ஒதுக்கவேண்டும் என்று வன்னியர்கள் சார்பில் கோரப்பட்டது. அது மறுக்கப்படவே, கடைசியில் 1 பிரதிநிதியாவது கொடுங்கள் என்று மன்றாடியும் பயனற்றுப்போயிற்று. மாணிக்கவேலர் துணிந்து தேர்தலுக்கு நின்று, தோல்வி கண்டார். அடுத்து, ஜில்லா போர்டு தேர்தல் நடைபெற்றது. தென்னாற்காடு ஜில்லாவில், வன்னியருக்கும்—காங்கிரஸ்காரருக்கும் கடுமையான போட்டியிருந்தது.

இதற்கிடையில், கடலூர் மாணவர் சங்கத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சொற்போர் நிகழ்ச்சியில், காங்கிரஸ் பதவிக்கு வரக்கூடாது. அது வந்தால், நாட்டுக்குக் கேடு என்று பேசி வெற்றிபெற்றதன் விளைவாக, நான் வேலை பார்த்துவந்த அலுவலக மேலதிகாரிகளுக்கு என்னைப்பற்றிய தாறுமாறான தகவல்களை அனுப்பிவைத்தனர். இது தெரிந்து 23—11—50 தேதியன்று சேர்மன் எம். சண்முக உடையார் அவர்கள் என்னை எச்சரித்து அனுப்பினார்கள். அதற்குப் பிறகும் ஏற்பட்டசில்லரைத்தொந்திரவுகளின் காரணமாக, எங்கள் கட்சித் தலைவர் எஸ். எஸ் ராமசாமி அவர்களின் அனுமதியுடன் 29—11—50-ல் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்

பொங்கல் வாழ்த்து

ஸ்ரீ ஆழ்வார் விலாஸ் நியூஸ் மார்ட்,

திருநெல்வேலி ஜங்ஷன்.

எங்கள் கடைக்கு விஜயம்செய்யும் அன்பர்களுக்கும், வாடிக்கைகாரர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

A. ஆழ்வார் தாஸ்,

ஏஜண்ட் "திராவிடநாடு"

டேன். இந்த எனது செய்கை பலருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

என்னுடைய ராஜிநாமாவுக்குப் பிறகு, தலைவர் எஸ். எஸ் ஆர். அவர்களும், மற்றும் சில முக்கிய நண்பர்களும் பொருளுதவி செய்வதாகக் கூறி, தேர்தலுக்கு நிற்குமாறு சொன்னார்கள். அவர்களுடைய உதவியில் எனக்கிருந்த தைரியத்தில், துணிந்து போட்டியிட்டேன். கோழிப்பெட்டிச்சின்னத்துடன், உழைப்பாளிக் கட்சி சார்பில் நின்ற என்னை எதிர்த்து 4 பேர் போட்டியிட்டனர். எல்லோருக்கும் மேலாக மெஜாரிடி வாக்குகளை எனக்களித்து மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். பெரியார், கருணாநிதி, அரங்கண்ணல், தில்லை-வில்லாளன், மதியழகன், வீரமணி, பெரிதும் தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள்.

* * *

இந்தச் சந்தர்ப்பத்தில், நான் போட்டியிட்ட உழைப்பாளிக் கட்சி எப்படி உருவானது என்பதைப் பற்றியும் சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

ஜில்லா போர்டுத் தேர்தலில், வன்னியர் சார்பாகவே நின்று போட்டி போட்ட காரணத்தைச் சாக்காக வைத்து, வன்னியகுல மக்களுக்கெதிரானவர்களால் வகுப்புவாத ஸ்தாபனம் என்ற பழிப்பெயர் சூட்டப்பட்டதாலும், அரசியல் ரீதியில் இயங்கவேண்டும் என்ற காரணத்தாலும், வன்னியர்கள், தாழ்த்தப்பட்டோர் மற்ற வகுப்பினர்கள் எல்லோரும் விரும்பியபடி, எஸ். எஸ். ராமசாமி அவர்களைத் தலைவராகவும், என்னைச் செயலாளனாகவும் கொண்ட 'உழைப்பாளர் கட்சி' என்ற கட்சி உருவாக்கப்பட்டு, அதை அரசாங்கமும் அரசியல் கட்சியாக ஒப்புக்கொண்டு, கோழிச் சின்னத்தைக் கொடுத்தது.

நான் போட்டியிட்ட விக்கிரவாண்டி தொகுதியில், காங்கிரஸ் சார்பாக, ல. ப. பாஷ்யம் ரெட்டியாருக்கும் எனக்கும்தான் பெருத்த போட்டியிருந்தது. அதேபோல, என்னுடைய தொகுதி உள்ளிட்ட திண்டிவனம் பிர்க்காவுக்காக நடத்தப்பட்ட பார்லிமெண்ட் தேர்தலில், உழைப்பாளர் கட்சி சார்பாக தோழர் திருக்குறள் முனுசாமி அவர்களும், காங்கிரஸ் சார்பாக, 'தினமணி' முதலாளி கோயங்கா என்ற வடநாட்டுக்காரரும் நிறுத்தப்பட்டனர்.

பொதுவாக, முனுசாமியையும் என்னையும் எதிர்த்து நின்ற இருவரும் பெரும் பணக்காரர்கள் பணத்தை நம்பியே போட்டியிட முன்வந்தவர்கள். 'அவர்கள் கார் ,கிளப்பும் புழுதியில் நாங்கள் புதைந்துவிடுவோம் என்று ஆரூடம் கணிக்கப்பட்டது. இறுதி வெற்றி எங்களுக்கே. அதாவது மக்களை நம்பினவர்கள் வெற்றிபெற்றோம். பணம் தோற்றது—அதிகார வெறி தோற்றது. வடநாட்டு ஏகாதிபத்தியம் பல்லுடைபட்டது!

* * *

சட்டசபையில் நான், பெரியார், அண்ணா ஆகியோர் இட்ட பணியினைத் தட்டாது செய்து முடிக்கிறேன். சமயம் நேருகிறபோதெல்லாம், திராவிட நாடு தனியாகப் பிரிய வேண்டியதின் அவசியத்தைச் சட்டசபையில் எடுத்துச் சொல்கிறேன்.

சென்ற ஆண்டு சட்டசபையில் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானம் ஒன்று கொண்டு போனேன். எல்லை குறிப்பிடும்படி கேட்டார்கள். எல்லை குறித்துக் கொடுத்தேன். அதன் பிறகு, அது டெல்லி ஆட்சியின் சம்பந்தப்பட்ட விவகாரம் என்று சொல்லி விட்டார்கள்.

டால்மியாபுரம் பெயர் மாற்றப் போராட்டம், புதுக்கல்வித் திட்ட எதிர்ப்பு, ரயில் நிறுத்த அறப்போர் ஆகிய முப்பெரும் போராட்டங்களுக்கு அடிகோலிய, லால்குடி, சிதம்பரம், சென்னை ஆகிய மூன்று, தி. மு. கழக மாநாடுகளிலும் கலந்து பேசியிருக்கிறேன்.

அண்ணா அறிக்கைப்படி, என் தொகுதியில் கல்வித் திட்ட கண்டனக் கூட்டங்கள் மூன்று நடத்தி ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கையெழுத்துக்களை வாங்கி யனுப்பினேன். தி. மு. கழகத் துணைச் செயலாளர். தோழர் கே. எ. மதியழகன் தலைமையில் கண்டன ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

போராட்டத்தின் காரணமாக தி. மு. கழகத் தோழர்களும், பொறுப்பு வாய்ந்த தலைவர்களும் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்ட நேரத்தில், தி. மு. க. சார்பாக புதுக்கல்வித் திட்டம், துப்பாக்கிப் பிரயோகம், ஜெயில் நிர்வாகத்தில் ஏற்படும் குறைபாடுகள், ஆகியவைகளை சமயத்தில் மந்திரிகளையும் பேட்டி கண்டு கவனித்து வந்தேன்.

அண்ணா சிறைக்குப்போகும் சமயத்தில், என்னை அழைத்து தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் பொறுப்பாளராக இருக்கும்படி என்னைக்கேட்டார்கள். நானும் அதைத்தட்டவில்லை. இப்பெரும் பொறுப்பை என்னால் நிறைவேற்றமுடியுமா என்ற அச்சம் இருந்த நேரத்தில் அண்ணா அவர்கள் அறிக்கைப்படி தி. மு. கழகக்கிளை நிர்வாகிகள், தோழர்கள் ஒத்துழைப்பால், வேலைகளை உற்சாகமாக முடிந்தவரையில் கவனித்து வந்தேன். இதற்கிடையில், சுற்றுப்பயண நிகழ்ச்சிகளையும் கவனித்துக் கொண்டேன். தூத்துக்குடி நிதி திரட்டும் வேலையிலும் கவனம் செலுத்தினேன்.

அண்ணா அவர்கள் வெளிவந்ததிலிருந்து எனக்கு சிறிது ஓய்வு. என்னுடன் ஒத்துழைத்த எல்லா தோழர்களுக்கும் என் நன்றி. திராவிடம் பிரிவதற்கான எத்தகைய கடினமான பணிகளையும் ஏற்றுக்கொண்டு செய்யத் தவறமாட்டேன் என்பதையும். கூறிக்கொள்கிறேன்.

★

நம் உள்ளத்தைச் சிறைப்படுத்தும் பழைய பழக்க வழக்கங்கள் தொலையவேண்டும். மனிதனை மனிதன் பிளவுபடுத்தும் சாதிமத வேற்றுமைகள் அழியவேண்டும். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும்.

—வால்ட்விட்மன்.

காட்டுமிராண்டி

பண்டிதர், வெகு எளிதில், 'காட்டுமிராண்டி' என்று ஏசிச் சென்றுவிட்டார். அந்தக் 'காட்டுமிராண்டி' எப்படிப்பட்டவன் என்பதை கவிஞர் ஹரீந்திரநாத் ஒரு கவிதையில், தீட்டியிருக்கிறார். கவிதையைப் படித்தபோது, கருத்தில் உருவான சித்திரம், இது.

[அண்ணல்]

இயற்கையன்னையின் தொட்டில்போல அமைந்த, அழகானதோர், ஊர். மலைகள் எல்லையாகவும், மாநதிகள் மாலைகள்போலவும், மரக் காடுகளும் புள்ளினங்களும் அழகூட்டும் அணிமணிகளாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் அந்த ஊரின் நடுவே, ஓர் வீடு. ஓடோ, சிமெண்டோ, இல்லை. தென்னை மரத்தின் ஓலைக் கீற்றுகளாலும் மூங்கில் கழிகளாலும் கட்டப்பட்ட அந்த வீட்டுக்குள்......

தாய்:—கடல் நுரையைப் பழிக்கும் இந்தப் பருத்தியிருக்குமட்டும், ஆடைக்குக் கவலையில்லை......

மகன்:—தோட்டத்தில் விளைந்த துவரையும் அவரையும், மாவும் வாழையும், கொண்டுவந்திருக்கிறேன். அருமையான குழம்பும் ருசியான உணவும் சமைக்கலாம்......

தந்தை:-பூமியன்னையின் மேலாடை போன்ற நெற்கதிரைப் பார்த்தாயா? கழனியும் கதிரும் இருக்குமட்டும் கவலையில்லை, நமக்கு...

மருமகள்:-அத்தான்! அருவி தேங்கிய குளத்திலிருந்து கொண்டுவந்தேன் தண்ணீர். தெள்ளத் தெளிந்த இந்நீர், தெவிட்டாத அமுதம், நமக்கு... (நால்வரும், இனிய உரையாடிக்கொண்டிருக்கின்றனர். வீட்டுக் கொல்லையில் மேய்ந்து கொண்டிருக்கிற ஆடு மாடுகளும், நிலா முற்றத்தில் துள்ளிக்கிடக்கும் மான் குட்டியும், கரும்பைக் கடித்துக் கொண்டிருக்கும் வீட்டுக் குழந்தையும், கண்ணுக்கு விருந்தாயிருக்கிறது.)

தாய்:-இந்தத் தறியைக் கொண்டு, வேண்டிய ஆடைகளை நெய்துவிடுவேன், நான்...

தந்தை:-கழனியும் நானும் இருக்கும் வரையில், உணவுப் பொருளை மலையாகக் குவிப்பேன், நான்...

மகன்:-தோட்டம்— ஆடு மாடு— எல்லாவற்றையும் வளர்ப்பேன், நான்...

மருமகள்:-சமைக்க—படைக்க— இன்னிசைபாட, இருப்பவள், நான்...

தத்தமது வேலைகளை மகிழ்ச்சியோடு கூறிக் கொண்டிருக்கின்றனர். குழந்தைச் செல்வன், வீட்டுக்கு முன்னாலேயிருக்கும் புன்னை மரத்தின் கிளையில் தாவி, உலுக்குகிறான்! கண்ணைக் கவரும் புன்னை மலர்க்கொத்துகள், அந்தி நேரத்து மஞ்சள் வெயிலை அள்ளித் தெளிப்பது போல், உதிர்கின்றன. அந்த அழகுக் காட்சியைக் கண்டவாறு, தந்தை கழனிக்குப் புறப்படுகிறார். மகனும்மருமகளும் அருவியோரம் சென்று அகமகிழக் கிளம்பிவிட்டனர். தாய், தன் பேரக்குழந்தையின் மழலைத் தமிழில், சொக்கிக்கிடக்கிறாள். தென்றல் சுமந்துவரும் அகிலின் மணம், உள்ளத்தைத் துளைக்கிறது! மூங்கில் புதர்களிலிருந்து எழும்பிவரும் ஒலி, வீணைகானமாகக் கேட்கிறது! கூடு திரும்பும் பறவைகளின் கூட்டம், கடலலைகள் வானத்துக்கும் தாவி விட்டனவோ? எனும் ஐயத்தைக் கிளறுகிறது. இந்த இன்பமான நேரத்தில் புது நபர், ஒருவன் தள்ளாடியபடி வருகிறான். தலையிலே தொப்பி, மூக்கிலே கண்ணாடி, காலிலே பூட்ஸ், கையிலே துப்பாக்கி, முதலியவைகளோடு வரும் அவனைக்கண்ட குழந்தை, பாட்டியைப் பார்த்து ஆனந்தத்தோடு கூவுகிறது—'ஆத்தா! ஆத்தா! புதுக் குரங்கு, 'புதுக் குரங்கு', என்பதாக. தாய், எட்டிப் பார்த்து, திகைக்கிறாள்— பிறகு பேரனுக்குச் சொல்கிறாள், 'செல்லமே! அது குரங்கல்ல- மனிதர் போலத் தெரிகிறது.' குழந்தைக்கு ஒன்றும் விளங்கவில்லை, விழித்தபடியிருக்கிறது-பயத்தால், அல்ல! வியப்பால்!! தன் அப்பாவைப் போலவோ, தாத்தாவைப் போலவோ இல்லாமல், என்னென்னமோ உடுத்திக் கொண்டு, நெற்றியில் ஏதோ சிவப்பும் வெள்ளையும் பூசிக்கொண்டுவரும், அந்த உருவத்தைக் காணக் காண, குழந்தை கைகொட்டிச் சிரிக்கிறது. தள்ளாடியபடி நடந்துவந்த அந்த ஆள், வீட்டின் முன் கிடந்த மரத் துண்டின்மேல், உட்காருகிறான்.

தாய்:-யார், நீ?

அவன்:-நாகரிகபுரி! வேட்டையாட காட்டுக்கு வந்தேன்.

பேரன்:-வேட்டையென்றால் என்ன ஆத்தா?

தாய்:—தெரியவில்லையடா, கண்ணே!

அவன்:-இது தெரியவில்லையா? வேட்டையென்றால், காட்டுப்பட்சிகளையும், மிருகங்களையும் சுடுவது...

தாய்:-கொலைபுரிவதா!

அவன்:-கொலையல்ல, அதற்குப் பெயர்; பொழுது போக்கு!!

பேரன்:-எங்க அப்பா, பொழுதுபோக்க இப்படிச் செய்வதில்லையே...தோட்டத்து மல்லிகையைப் பறித்து, வாழைநாரால் தொடுத்து, அம்மாவின் தலையிலன்றோ, வைப்பார்!

அவன்:-நீங்களெல்லாம், காட்டிலிருப்பவர்கள். நாகரீகம் இல்லாதவர்களுக்கு, பொழுதுபோக்கத் தெரியாது.

தாய்:-அது என்ன, ஐயா, நாகரிகம்? சிகப்பா அல்லது கருப்பா! (அவன், இடி இடியெனச்சிரிக்கிறான். தன்னுடைய உடை, தான் பேசும்மொழி, தான் வைத்திருக்கும் பொருள்கள், இத்தனையையும் காட்டி, நாகரிக விளக்கம் தருகிறான். குழந்தைக்கு கதை கேட்பதுபோலிருக்கிறது. புது நபரின் கையிலிருந்த துப்பாக்கியைச் சுட்டிக்காட்டியபடி).

தாய்:-இது, என்ன?

அவன்:-துப்பாக்கி...

தாய்:-அப்படியென்றால்!

அவன்:-சொன்னால்: புரியாது... செய்துகாட்டுகிறேன்.

என்று கூறிவிட்டு, குறிபார்த்துச் சுடுகிறான், வெடி சப்தம் கேட்ட குழந்தை, திடுக்கிட்டு, பாட்டியைக் கட்டிக் கொள்கிறது! அவனது குறிக்கு அகப்பட்டதால், அலறி வீழ்ந்த மான் குட்டியொன்றைக் கண்ட தாய், அலறுகிறாள்.

தாய்:-பாவி! ஒரு உயிரைப் போக்கிவிட்டாயே?

அவன்:-மான் போனதற்கா, இவ்வளவு வருத்தம். காட்டில் வசிக்கும் உங்களைப் பார்த்தால், சிரிப்பு, வருகிறது! இந்தத் துப்பாக்கியால், நாங்கள் மனிதர்களையே, சுட்டுக்கொல்வோம்...

தாய்:- ஐயோ! உன் சகவாசமே வேண்டாம். போய்விடு! இங்கிருந்து போய்விடு!!

என்று கூச்சலிடுகிறாள். தன்னுடைய மான்குட்டி செத்ததைக் கண்ட குழந்தையின் கண்ணில் நீர்வழிகிறது! அந்தக் கோபத்தில், வீட்டோரம் அடுக்கிக்கிடந்த, கற்களை யெடுத்து அவன்மீது. அள்ளி அள்ளி வீசுகிறது!. குழந்தை வீசும் கற்களைக் கண்ட அவன், பயப்படவில்லை—அவன் கண்களில் ஆனந்தம் தென்படுகிறது.. அந்தக் கற்களையெல்லாம் ஆவலோடு, எடுத்துவைத்துக் கொள்கிறான்...

பேரன்:-ஆத்தா! ஆத்தா!! இந்தப் பித்தனைப் பார்த்தாயா? நம் வீட்டுக் கல்லையெலலாம் மூட்டை கட்டிக்கொள்கிறான்!

தாய்:-ஏய்! நாகரிகபுரி!! என்ன [illegible]லை, இது? தோட்டத்து வேலியாகப் பயன்படும் கற்களையெல்லாம் ஏன் எடுக்கிறாய்!!

அவன்:-இவையெல்லாம் சாதாரணக் கற்களல்ல! இது, ரத்னம். இது, வைரம். இதில், தங்கம் கலந்திருக்கிறது.

தாய்:-தங்கம், ரத்னம்... அப்படியென்றால்...?

அவன்:-இவைகளுக்கு விலை மதிப்பிட முடியாது...என் ஊராருக்குக் கிடைத்தால், ஏராளமாகப் பணம் தருவார்கள்...

தாய்:-விலை! பணம்!!—என்ன, சொல்கிறாய்?

அவன்:-இதுகூடத் தெரியாதா, உங்களுக்கு! அநாகரிகம்!!

பேரன்:-ஆத்தா! வா, ஆத்தா. இவன் ஒரு பித்தன். நாம்போய், இந்த மான்குட்டியைப் புதைக்கலாம்... (தாயும்பேரனும், போகமுயற்சிக்கிறார்கள். அவன், அவர்களை நோக்கி, ஓடுகிறான். ஒரு கத்தை நோட்டுகளை நீட்டுகிறான்...)

அவன்:-இந்தப் பணமெல்லாம் தருகிறேன்! இன்னும், ஊரிலிருந்து, ஏராளமாகக் கொண்டுவந்து தருகிறேன். இந்தக் கற்களையெல்லாம், கொடுங்கள்...

தாய்:-எங்களுக்கெதற்கு, இது? இதைக் கொண்டு, தோட்டத்துக்கு சுவர், எழுப்பவா முடியும்!

அவன்:-இதனால், எல்லாம் செய்யலாம்—இது தான், பணம்! இதைவேண்டாமென்று யாரும் சொல்லமாட்டார்கள்...எங்களூரில இது இருந்தால்தான், வாழமுடியும்—அரிசி வாங்கலாம், ஆடை வாங்கலாம், ஆலைகள் வாங்கலாம், ஆடம்பரமாக வாழலாம்...

பேரன்:-ஆத்தா! நல்ல பைத்யம், இவன்...... நம்மைக்கடித்துவிட்டாலும் விடுவான். வா, வா!

தாய்:-பைத்யக்காரன்தான்!

என்று சொல்லிவிட்டு, வீட்டுக்குள் சென்றுவிடுகிறாள். அருவிக்கரையில் ஆனந்தமாகப் பொழுதைக் கழித்துவிட்டு, மகனும் மருமகளும், நிலவின் ஒளியில், சிங்காரச் சிட்டுகள்போல வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கண்ணில், கற்களையெல்லாம் மூட்டைகட்டிக்கொண்டிருக்கும் அவன், தென்படுகிறான். மகன், அவனிடம் நெருங்கிப்பார்க்கிறான். மருமகள் வேடிக்கையாக அவனைப் பார்த்துவிட்டு, உள்ளே செல்கிறாள். மகனோடு, அவன், உரையாடுகிறான். அவன் கூறும் வார்த்தைகள் யாவும், மகனுக்கு, வேடிக்கையாயிருக்கிறது. அதைக்கண்டு, ரசிக்கிறான் அப்

தெரியுமா?

காங்கிரசைத்தான் நாடு முழுக்க முழுக்க ஆதரிக்கிறது என்று முழக்கமிடுகிறார்களல்லவா! கடந்த பொதுத் தேர்தலில் இந்தியாவில் காங்கிரசுக்குக் கிடைத்த மொத்த ஓட்டுகள்,

44799392

காங்கிரசலலாதாருக்கு மொத்தம் கிடைத்த ஓட்டுகள்.

49786558

காங்கிரசை எதிர்த்து நிற்கும் கட்சிகள் பலவாகவும், தங்களுக்குள் பகைமை கொண்டும் இருப்பதுதான், இன்று காங்கிரஸ் சர்க்கார் இருப்பதற்குக் காரணம். மொத்தத்தில், நாடு காங்கிரசுக்கு எதிரான ஓட்டுகளைத்தான் அதிகம் அளித்திருக்கிறது.

போது, அவன் கொண்டுவந்த 'மது'வை ஊற்றிக் குடிக்கிறன்!

மக:—ஏய்! என்ன, அது? தண்ணீரா!

அ:—தண்ணீரல்ல; உள்ளத்தைக் குளிரவைக்கும் தேவாமிர்தம்......

மக:—என்ன, அமிர்தம்?

அ:—தேவாமிர்தம்!

மக:—அப்படியென்றல்......

அ:—எங்கள் ஊரில், என்னைப்போன்ற பெரிய மனிதர்கள் வாழ, இந்த அமிர்தம்தான் வழிகாட்டுகிறது. இதன் பெயர், தேசியம்! நீயும் கொஞ்சம் குடிக்கிருயா...

மக:—ஐயோ, இரத்தம்போல் சிவப்பாயிருக்கிறதே!

அ:—ஆனல் ருசி நிறைந்தது — இதைக் குடியேன்...

குடிக்கிறன், மகன். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தலை சுற்றுகிறது. அவனே, தன்னுடைய நாகரிகபுரியின் சிறப்புகளையெல்லாம், செப்பிக்கொண்டிருக்கிறன்.

* * *

புகை மயம்! அங்கே ஓர், கூட கோபுரம், அதனுள், ஓர், அறை. அதன் நிறம், இரத்தமயமாயிருக்கிறது. அறையின் சுவர்களிலெல்லாம், மண்டையோடுகளை மாலையாக அணிந்த படமும் சுடுகாட்டில் பிணத்தைத் தின்னுபவனின் படமும், மண்டையோட்டை ஏந்திக்கொண்டு உடம்பெல்லாம் சுடுகாட்டுச் சாம்பலை பூசிக்கொண்டிருப்பவன் படமும், தொங்கிக்கொண்டிருக்கிறது. அந்த அறையின் நடுமையத்திலிருக்கும் கட்டிலொன்றில், மகன் உறங்கிக்கொண்டிருக்கிறன். ஆணும் பெண்ணுமாக இருவர், அவனுக்கு, விசிறிக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் பேசிக்கொண்டிருக்கிருர்கள்.

பெண்:—என்ன, இப்படி, தூங்குகிறன்?

ஆண்;—தூங்கட்டும்! நல்ல போதை. அது தெளியாமலிருப்பதுதான், நல்லது.

பெண்:—இவன் எழுந்ததும், இவனை 'ராஜா!' என்று அழைப்போம்......

ஆண்:—விபீஷணு! வேதாந்தனு!!—என்ற பட்டங்களைச் சூட்டி அழைப்போம்...

பெண்:—எப்பொழுதும் உமக்கு இந்த வேதாந்தப் புத்தி போவதில்லை...

ஆண்:—உனக்கு மட்டும் ராஜ்ய ஆசை போய்விட்டதோ?

ஆண்:—நமக்குள் சண்டையேன்? நாமிருவரும் ஒற்றுமையாயிருந்தால்தான், இவனை ஆட்டிப்படைக்க முடியும் — இவன் காட்டிவிருக்கும் பொருள்களையெல்லாம், காசாக்க முடியும்!

இவர்களின் பேச்சுக் குரலால், மகன், சிறிது விழித்துக்கொள்கிறன். எதிரே, ஒரு விசித்திரமான மாதும்—அவளுடன் ஒரு வேடிக்கையான மனிதனும் நின்றுகொண்டிருப்பது தெரிகிறது. அந்த மாது, உடம்பெல்லாம், தங்கத்தை உருட்டியும் வளைத்தும் சுமந்துகொண்டிருக்கிருள். அந்த மனிதன் நெற்றியிலெல்லாம் ஏதோ அணிந்திருக்கிறன் — கழுத்தில் கொட்டை கட்டிக்கொண்டிருக்கிறன் — தலைமயிர் மொட்டையடிக்கப்பட்டு உச்சியில் மட்டும் நாலைந்து மயிர்கள் தொங்குகின்றன.

ம:—யார் நீங்கள்?

பெண்:—பிரபோ! நான், உங்கள் பணிப்பெண்.

ம:—பெயர்...?

பெண்:—இந்தி!

ம:—நீ, யார்?

ஆ:—ஜேஹிந்த்! மகாராஜா...

ம:—என்னது?

ஆ:—ஜே...ஹிந்த்!

ம:—அப்படியென்றல்......?

ஆ:—உங்களை வணக்குவதற்காக, நமது ராஜ்யத்தில், நாம் கையாண்டுவரும், ஒரு சொல்...

ம:—கேட்கக் கடுமையாயிருக்கிறதே! ஊம்...உன் பெயர்?

ஆ:—வைதீகம்!

என்று கூறியபடியே, ஒரு கோப்பை, போதையை ஊற்றித்தருகிறன். மகன், அதைக் குடித்துவிட்டு, மீண்டும் மயங்குகிறன்.

வைதி:—இந்தியாளே! நாம் தரும் தேசிய போதை தீருவதற்குள், உணவுகளைக் கொண்டுவா, விழித்ததும், தருவோம்.

இந்தி:—உணவா? எங்கே போவது!

வைதி:—இவ்வளவு பெரிய மாளிகையில், எங்காவது இருக்கும்...

இ:—எல்லாம், தீர்ந்துபோய்விட்டது! சுடையியாக இருந்த ரொட்டித்துண்டையும் எலி, இழுத்துக் கொண்டுபோய் விட்டதே!!

வை,—இந்தக் கதையெல்லாம், கேட்கவில்லை, நான். போ! இங்கேயில்லையென்றல், கடைத் தெருவுக்குப்போய், வாங்கிவா. விழித்ததும், விருந்து வைக்காவிடில், நம் ஆசை இடிந்துவிடும். பசிகாணுத பறவை, இவன்!

இங்:—அழகாகச்சொல்கிறீர், ஆனல், பணம்?

வை:—பொக்கிஷத்திலிருந்த வெள்ளிப் பணத்தையும், எலி, இழுத்துச் சென்றுவிட்ட தாக்கும்!

தீர்த்துவிட்டார்கள்.

காங்கிரஸ் சர்க்காரின், ஐந்தாண்டுத்திட்டம் என்ற பெயரால் இதுவரை 2069 கோடி ரூபாய் செலவு செய்து தீர்த்துவிட்டார்கள். இவ்வளவு பணம் தீர்ந்தபிறகு, ஐந்தாண்டுத்திட்டம், எதிர்பார்த்த அளவு பலன் தரவில்லை, வெற்றிகிடைக்கவில்லை என்று காங்கிரஸ் தலைவர்களே கூறி வருகிருர்கள்.

இங்:—கேலியில்லை, உண்மை.

வை:—சரி! கையில் பணமில்லையென்றால், கடன் வாங்கு...

இங்:—எத்தனை தடவைதான், வாங்குவது? இந்த மாளிகையைக் கட்டியதிலிருந்து ஒரே கடன்... கடன்...கடன் மயமாக வாங்கிக்கொண்டுதான் இருக்கிறோம்.

வை:—வேறென்னசெய்வது? நமது நாகரீகபுரியை நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டுமே! நாம் என்ன, காட்டுமிராண்டிகளா? பயப்படாமல், கடன் வாங்குவோம்...கிடைக்காவிடில் பிச்சையெடுப்போம்... இல்லையேல் திருடுவோம்...

(இந்திப் பெண்ணாள், அறையைவிட்டு வெளியேறிச் சென்று, ஒரு தட்டில், சில கோதுமைச் சப்பாத்திகளைக் கொண்டுவந்துவைக்கிறாள். மகனை, எழுப்புவதற்காக, தன்னுடைய வாய்திறந்து, பாடுகிறாள். அந்தப் பேரிரைச்சலில், விழிக்கிறான், மகன். அவன் முன், உணவுத்தட்டு நீட்டப்படுகிறது.)

ம:—என்ன, இது?

இ:—தங்களுக்கு நாங்கள் தயார் செய்த, விசேஷ உணவு...

ம:—ஐயோ! பல்லெல்லாம் வலிக்கிறதே—நாவுக்கு ருசியில்லையே—எங்கே, அரிசி! சோறில்லையா, இங்கு? கொஞ்சம் சோறு வேண்டும்!

வை:—தாங்கள் இந்நாட்டின் முடிசூடா மன்னர். அரிசிக்கும் கோதுமைக்கும் வித்யாசம் பாராட்டக் கூடாது...

ம:—வயிறு கிள்ளுகிறதய்யா, வைதிகம்—வயிறு கிள்ளுகிறது! அம்மா—அம்மா!!

வை:—முடிசூடா மன்னர், தாயகத்தை எண்ணக் கூடாது. தாயை நினைப்பது, தவறென்பது, இந்நாட்டின் சட்டம்.

ம:—சட்டம்...என்ன, அர்த்தம் இதற்கு? எங்கே என் தாய்! எங்கே என் மனைவி! எங்கே என் தாய், அகம்!!

வை:—தாயின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதற்குப்பதில், ஈஸ்வரன் நாமத்தை ஜபித்தால், பசி தீரும்—பலன் பெருகும்.

ம:—என்ன சொல்கிறாய், நீ?

வை:—ஈசன் நாமத்தை ஜபியுங்கள் மன்னவா!

ம:—சபிக்கவா! ஜபிக்கவா!!

வை:—ஜபித்தல்—அப்படியென்றால், ஸ்தோத்தரித்தல்—அப்படியென்றால் கும்பிடுதல்.

கவிழ்வதற்கு முன்பு!

துப்பாக்கியால் துளைக்கப்படமுடியாத அமைப்புள்ள காடிலாக் மோட்டார், 82000 ரூபாய் விலையில் வாங்கினார், ஷேக் அப்துல்லா, காஷ்மீர் முதலமைச்சர் என்ற முறையில்! அதை வாங்கின சில வாரங்களிலே, பதவிபறிக்கப்பட்டது, சிறையில் தள்ளப்பட்டார். இப்போது, குலாம்பக்ஷி, அதிலே பவனிவருகிறார்!

ம;—எங்கேயிருக்கிறான், அந்த ஈஸ்வரன்? அவனைக் கும்பிட்டால், அரிசிச் சோறு கிடைக்குமா?

வை:—கேவலம் அரிசிச் சோறுமட்டுமா—ஐயன், கைலாயபதவி அளிப்பார்—ரட்சிப்பார்.

ம:—அதென்ன கைலாயம்?

வை:—அங்குதான், ஈஸ்வரன் வாழ்கிறார்...

ம:—சரி! சரி!! பசிதாங்கமுடியவில்லை, காட்டு அந்தக் கைலாயத்தை. நீ சொல்லும் ஈஸ்வரனையாவது, பார்த்து வரலாம்...

வை:—அவ்வளவு எளிதல்ல, அங்கே போவதும்—அவரைக் காண்பதும்.

ம:—ஐயோ! இதென்ன கொடுமை — நான் எங்கிருக்கிறேன்? அம்மா! அம்மா!!

இந்தியாள், கஞ்ஜாடை காட்ட, வைதீகன் கோப்பையை நீட்ட, அதை வாங்கிக் குடிக்கிறான், மகன். போதை தலைக்கேறுகிறது.

வை:—தங்களைப் பேட்டிகாண எல்லோரும் காத்திருக்கிறார்கள்! வரச்சொல்லவா?

மக:—பேட்டியா? அதென்ன!

வை:—தாங்கள் இந்நாட்டின் முடி சூடா மன்னரல்லவா? தங்களைக் கண்டுபேசி—விஷயங்களைத் தெரிந்துகொள்ள வந்துள்ளார்கள்.

மக:—சரி! வரச்சொல்.

மேலெல்லாம் 'மை' தடவிக்கொண்டு, பெருத்த தொந்தியுடன் ஒருவர் நுழைகிறார். "நமஸ்தே! நமஸ்தே!!" என்று சொல்லிக்கொண்டு...

மக:—என்ன அது?

இ:—இவர் பெயர், பத்திரிகை — உங்களுக்கு வணக்கம் செலுத்துகிறார்.

ம:—ஊம்...வணக்கம்! ஐயா, பத்திரிகை! வயிறு பசி தாங்கமுடியவில்லை. ஏதாவது கொண்டுவந்திருக்கிறீரா?

பத்:—நிறைய கொண்டுவந்திருக்கிறேன்!

ம:—எங்கே? எங்கே?

பத்:—இதோ!

ம:—இதென்ன...?

பத்:—பத்திரிகை — இதில், பசி போக்குவது சம்பந்தமான பல ஆலோசனைகளைச்சொல்லியிருக்கிறேன்...

ம:—ஐயோ! என்னை, ஏன் இப்படி வாட்டுகிறீர்கள்? எனக்கு, ஆலோசனைவேண்டாம். என்னைவீட்டில் கொண்டுபோய்விட வழி செய்யுங்கள். என் கழனியில் உழைத்து அரிசி தேடத் தெரியும், எனக்கு — என் இடத்துக்குப் போய்விட்டால் போதும், எனக்கு...

பத்:—இப்படி, பிரித்துப் பேசுதல் கூடாது;தகாது ஆகாது. அமெரிக்கர் பார்த்தால் ஆயாசப்படுவார்கள்—பிரிட்டிஷார் கேட்டால் நம்மை ஏளனமாக நினைப்பார்கள். நாமெல்லாம் ஒரே குலம்—ஒரே இனம் — இன்பம், துன்பம், எல்லாவற்றையும் நாம்பகிர்ந்தனுபவிக்க வேண்டும்.

ம:—சீ! வேதனைத் தேளே...வாதனைப்படும்

எனக்கு வழி காட்டத் தெரியாத நீ, போதகனை கூற வேண்டாம்—போ, போ, இவ்விடத்தைவிட்டு.

மகனின் சீற்றம் கண்ட பத்திரிகை, நழுவுகிறார். அவர் வெளியேறியதும், இன்னொருவர் நுழைகிறார்.

பருத்ததொந்தி — விகாரமான உருவம் — மார்பிலே ஒரு நூல்—நெற்றியெல்லாம், நீறு. அசைந்து, அசைந்து, நடைபோட்டு வருகிறார். அவரைக் கண்ட வைதீகம், ஓடி உபசாரம் செய்து அழைத்து வருகிறார்

ம:—யார், இந்த விசித்திர மனிதர்?

தொந்த:—நானா? அடியேன் சாட்சாத்பிராமணன்!

ம:—அப்படியென்றால்...

பிராம்:—பூலோகவாசிகளிலே உயர்ந்தவன்...

ம:—உயரமாக இல்லையே!

பிரா:—உயரமல்ல, பிரதானம். மூளை பலமும், வேதாந்த விளக்கமும் மிக்கவன். சாத்திரம் யாவும், கரைகண்டவன்.

ம:—வேதாந்தம்—சாத்திரம், என்றால், என்ன?

தரா:—இகலோக இச்சைகளிலிருந்து மனுஷாளையெல்லாம் சாயுச்யபதவிக்கு அழைத்தேகும், சன்மார்க்க வழிகள்...

ம:—நீ சொல்வது, விளங்கவில்லையே எனக்கு...

பிரா:—விளங்காது! வேதவிஷயங்கள் இலகுவில் விளங்கிடாது!!

ம:—அது கிடக்கட்டும்...உன் தொந்தி ஏன், பெருத்திருக்கிறது.

பிரா:—தாங்கள் கேட்பது, நேக்கு, விளங்கவில்லை!

ம:—அது என்ன நேக்கு?

பிரா:—நேக்குன்னா...நேக்குன்னா...

வை:—எனக்கு என்பதை இவா, இப்படித்தான் சொல்றது...

ம:—சரி.....சொல்.....எல்லோரையும் விட உன் தொந்தி ஏன் இப்படிப் பெருத்திருக்கிறது?

பிரா:—நாங்கள்ளாம் பகவானின் ஆத்மாவுக்கு ஒப்பானவர்கள். பூதேவர்கள்! பூமியில், பகவானுக்கென்று அனுப்பப்படும் பொருள்கள்யாவும், எமக்குத்தான் சொந்தம். அதனால், கடவுளைப் பூஜிக்கவருகிறவாள், தரும்-நைவேத்யம், காணிக்கை, அது இதெல்லாம் எங்களிடம் சேருகிறது!

ம:—ஒன்றுமே புரியவில்லையே, எனக்கு! பகவான், கடவுள்... இதெல்லாம், என்ன?

வைதீக:—முன்பு சொன்னேனே, ஈஸ்வரன்! அவருக்கு அனந்தகோடி நாமதேயங்கள், உண்டு...

ம:—அவரிடம்போனால், பசிதீரும் என்றீரே! இவர், அவருக்கு படையல் போடவேண்டும், என்கிறாரே!!

பணம் பாழாகும் வகை

மகாபாரதத்தை அராபிய மொழியில், சிரியா நாட்டுப் புலவர் மொழிபெயர்த்திருக்கிறார், இந்த ஏட்டின் உரிமையை, 84,000 ரூபாய் விலை கொடுத்து, இந்தியாவின் கல்வி அமைச்சர், மௌலானா ஆஜாத் வாங்கி இருக்கிறார்!

பிரா:—இப்படியெல்லாம், வேத ரகஸ்யங்களைக் கிண்டிக்கிளர்ரது, பாவம்—அவாளை, நாஸ்திகான்னு, வேதம் சொல்றது...

ம:—ஊம்! சொல்லித் தொலையும்...

பிராம்:—முப்பத்து முக்கோடி தேவர்கள்...

ம:—தேவர்கள்...?

பிராம்:—ஆமாம்! பகவானைப் போன்றவர்கள்—அவாளுக்கு அனுப்பப்படும் படையல்களையெல்லாம், பூதேவாளாகிய நாங்கள், ஜீர்ணம் செய்யவேண்டிய இக்கட்டிலிருக்கிறோம். அதனாலேயே, தொந்தி பெருக்கிறது—அதையும் தாங்கிக்கொண்டு, பூலோகத்தில் உயிர் வாழவேண்டியிருக்கிறது!

மக:—கஷ்டமான காரியம்தான்!

இந்த நேரத்தில், இன்னொரு ஆள், இதே தொந்தியுடன் ஓடிவருகிறார்—கூச்சலிட்டுக்கொண்டு. அதைக் காணும், மகனுக்கு, ஒன்றும் புரியவில்லை.

ம:—யார், இந்த, ஆள்?

வை:—இவரும் பிராமணர் தான்—ஆனால் வைஷ்ணவமதம்.

ம:—என்னது?

வை:—வைஷ்ணவமதம்!

ம:—மதம் என்றால்...

வைதீ:—ஈஸ்வரனை அடையும் வழி...

ம:—ஊம்...தலைவலி அதிகமாகிறது...இந்த ஆள், ஏன் இப்படி ஓடிவருகிறார்...

வைணவர்:—நம்பாதீர்கள்! நம்பி விடாதீர்கள்! நீங்கள்!! இந்தப்பிராம்மணர் சொன்னதைநம்பவேண்டாம் அவர் சொன்ன கடவுள், உண்மையான கடவுளல்ல. நான் சொல்லப் போகிறவர்தான், உண்மையானவர்...

ம:—என்ன?

ஒன்றும் புரியாமல், விழிக்கிறான்—முன்வந்த பிராம்மணரும் பிறகு வந்தவைணவரும் சண்டை போட்டுக் கொள்ள ஆரம்பிக்கிறார்கள். வைதீகர், சமாசம் செய்ய முயல்கிறார். அவர்கள் விடாமல் சண்டை போடுகிறார்கள்.

பிராம்:—பூணூல்மேலடித்துச் சொல்லுகிறேன், உன் கடவுள், லோகரட்சனல்ல...

வைண:—என் திருநாமத்துமீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன், உன் கடவுள், உலகரட்சகனல்ல...

பிராம்:—உன் கடவுள், ஒரு காமாந்தகாரன்!

வைண:—உன் சிவன், நூரு, ஸ்திரீலோலன்!!

பிராம்:—விஷ்ணு ஒரு வேடதாரி!

வை:—சிவன் ஒரு பிச்சாண்டி!

பிராம்:—முட்டாள்! உன் கடவுள் உன்னைப் போன்றவர்!!

வை:—மூடா! உன் கடவுளுக்கு உன்னுடைய புத்திதான்...

பிரா:—டேய்! மாபாதமா!!

வை:—டேய்! அக்கிரமக்காரா!!

ம:—எனிப்படி இவர்கள் சண்டைபோட்டுக்கொள்ளுகிறார்கள்...?

இந்தி:—யாருடைய ஈஸ்வரன், பெரியவர் என்பதற்காக...

ம:—இதற்கு சண்டையா? இவர்கள் எந்த ஊர்!

இந்தி:—ஒரே ஊர்க்காரர்கள்தான்!

ம:—இருந்துமா, இந்தச் சண்டை?

இந்த நேரத்தில் ஒருவன், பயந்துகொண்டே, நுழைகிறான். அவனைப்பார்த்த வைணவரும் சிவ பக்தரும் சேர்ந்துகொண்டு விரட்டுகிறார்கள்.

ம:—வைதீகம்! அவனையேன், அடிக்கிறார்கள்?

வை:—அவனை, அடிக்கத்தான் வேண்டும்!

ம:—ஏன், என்று கேட்கிறேன்?

வை:—அவன், பஞ்சமன்!

ம:—அப்படியென்றால்...

வை:—ஈஸ்வரனின்பாதத்திலே பிறந்தவன்...

ம:—ஈசனின் குழந்தைதானே, அவனும்!

வை:—ஆமாம்! ஆனால்...

ம:—அவனையும், நீ சொல்லும், உலகரட்சகன் தானே படைத்தான்.

வை:—ஆமாம்! ஆனால்...

இப்போது, பஞ்சமனுக்காகப் பரிந்து மூவர் வேகமாக ஓடிவருகின்றனர். அவர்களைக் கண்டதும் பஞ்சமனை அடித்த இருவரும், பதுங்குகின்றனர். வைதிகமும், இந்தியாளும் நடுங்குகின்றனர்.

ம:—யார், அந்த மூவர்?

வை:- இந்து:—ராட்சதர்கள்! காட்டுமிராண்டிகள்!

ம:—அப்படியென்றால்...

வை, இங்:—மூடர்கள்! நாகரீகம் தெரியாதவர்கள்!

ம:—பெயர்...?

வை, இங்:—கேட்பதே, பாபம்!

ம:-பரவாயில்லை, சொல்லும்.

வை:—ஒருத்தன் பெயர், அறிவு! இன்னொருத்தன் பெயர், உழைப்பு!!

மற்றொருத்தன், இந்தியாளின் கணவன்...

ம:—கணவனா? கணவனைக் கண்டு நீயேன், பயப்படுகிறாய்!

இங்:—அவனை, எனக்குப் பிடிக்கவில்லை!

ம:—அவன், பெயர்?

இங்:—சுதந்திரம்!

உழைப்பு, அறிவு, சுதந்திரம்—மூவரும், வீரர்கள் போல் வருகிறார்கள், முன்நோக்கி. திடீரென்று அவர்கள்மீது, பதுங்கியிருந்த மதக்காரர்கள் பாய்கின்றனர்—எங்கோ போயிருந்த பத்திரிகையும் பாய்கிறான்—வைதிகன் அடிக்க ஓடுகிறான் — இந்தியாள் கயிறு ஒன்றை எடுத்துக்கொண்டு பாய்கிறாள்...

* * *

"ஐயோ! பாபம்!!"—என்று கூச்சலிட்டுக்கொண்டு கண்விழித்த, மகன், தன் முன்னிலையில் வீட்டின் மருமகள்—தன் மனைவி, உட்கார்ந்து இருப்பதைக் கண்டான். இரவு நீங்கி, கதிரவன் கிளம்பிக்கொண்டிருந்தான்!

மரு:—அத்தான்! ஏனிப்படி உளறினீர்கள்?

மக:—நான் என்ன, புல்தரையிலே, தூங்கினேனா?

மரு:—ஆமாம்! எழுப்ப எழுப்ப எழுந்திருக்கவேயில்லை...

மக:—ஆமாம்! நல்ல மயக்கம். எங்கே, அந்தமோசக்காரன்?

மரு:—யார்? நாகரிகம் என்றானே, அவனா!

மக:—ஆமாம்! அவன் என்னென்னமோ, சொன்னான்...

மரு:—சொல்லி, உங்களை மயக்கிவிட்டு—நம் வீட்டையே கொளுத்த முயன்றான்...

மக:—என்ன?

மரு: ஆமாம்! நாம், காட்டுமிராண்டிகளாம் — சொன்னான். நாம், இங்கிருப்பது, கூடாதாம்கூறினான்.

மக:—பிறகு...?

மரு:—தாயாரைக் கட்டிப் போட்டான்...என்னிடம்...தகாத முறையில்...

மக:—ஐயோ!

மரு:—குழந்தையைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினான்...

மக:—ஐயயோ!!

மரு:—அந்த நேரத்தில், அப்பா வந்தார்—அவனைத் தூக்கிக்கொண்டுபோய்...

மக:—கொன்றுவிட்டாரா? பாவி, ஒழியட்டும்!

மரு:-இல்லை! மலைக்குக்கீழ், விட்டு விட்டுவந்துவிட்டார்!!

அவனுடைய முகத்தில், ஆனந்தம். களைப்புநீங்கியவனாய் வீட்டுக்குள், நுழைந்தான். அடுப்பில், வெள்ளிபோன்ற சோறு, பொங்கிக்கொண்டிருந்தது. குழந்தைச்செல்வன், இறந்துபோன மான்குட்டியைப் புதைத்த இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். தாய் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தாள்...

தாய்:—ஒரு நாளில், வெறியன், என்னபாடுபடுத்திவிட்டான்?

தந்தை,-என் உயிர் உள்ளளவும், யாரும், எதுவும் செய்யமுடியாது.

மகன்:—நானும், இனி, ஏமாறமாட்டேன்!

மருமக:-சூரியன், உதித்துவிட்டான்!

புதிய மடாதிபதி
(கற்பனைக் கூத்து)

இடம்பெறுவோர்:—மடாதிபதி அருளாளர், முருகதாசர், கந்தபூபதி, மாசிலாமணி, சித்ரா, பக்தர், பணியாட்கள், போலி மடாதிபதி.

நிகழ்ச்சி இடம்:—மடாலயமும், அதைச் சுற்றி உள்ள இடமும்.

பாழடைந்த சாவடி

[சாலை ஓரத்தில் உள்ள சற்று கலனான சாவடியில் அழுக்கேறிய உடை யணிந்த ஒருவன் படுத்துப் புரண்டு கொண்டிருக்கிறான்... தூக்கம் வரவில்லை. மடத்து, பண்டாரங்கள் இருவர், ஏதோ பேசிக்கொண்டு அவ்வழியே வருகிறார்கள்.]

ஒருவன்:—திட்டம் நன்றாகத்தான் இருக்கு... வெற்றி கிட்டினால் தானே...

மற்றொருவன்:—வேலை செய்தால்தானே வெற்றி கிடைக்கும்...

ஒரு:—வேலையும் சிக்கிரம் நடந்தாகவேண்டும்......

[சாவடிப்படியில் உட்காருகிறார்கள்]

மற்:—கண்மூடி மக்கள் — கொட்டித் தருகிறார்களே, கேட்கும்போ தெல்லாம்...

ஒரு:—நாம்தான் மிரட்டுகிறோமே... ...நரகம் என்று...

மற்:—எல்லோரும் அல்ல........... தொகை குறைந்துகொண்டே வருகிறது...

ஒரு:—பக்தர்கள் தொகை குறைந்துவிட்டால் பிறகு அது நமக்குத்தானே நஷ்டம்...

மற்:—(ஆயாசத்துடன்) நமச்சிவாயம்......... நமச்சிவாயம்!...மடமும் இருக்கவேண்டும்...அவனும் தொலையவேண்டும்...அதற்கு உன் திட்டம் தான் சிலாக்யமானது...... (சுற்று முற்றும் பார்க்க, படுத்துப்புரண்டபடி இருப்பவன் தெரிகிறான்—உற்றுப் பார்க்கிறான்—மீண்டும் மீண்டும் பார்க்கிறான்—கூட இருப்பவனை அழைத்துக் காட்டுகிறான்—இருவரும் படுத்திருப்பவன் அருகே சென்று உற்றுப் பார்க்கிறார்கள்...... ஆச்சரியத்துடன்.)

ஒரு:—சரியான பாத்திரம்...!

மற்:—(படுத்திருப்பவனைப் பார்த்தபடி) திட்டம் பலித்தது...வெற்றி...நிச்சயம்.

[தட்டி எழுப்புகிறார்கள். கண் விழித்து அவர்களைப் பார்த்து விட்டு]

படுத்:—காவி உடை கண்டதும் கன்னத்தில் அடித்துக் கொள்ளும் கபோதி நானல்ல... போங்கள்... போங்கள்...

ஒரு:—(மற்றவனைப் பார்த்து) இவனே சரியான ஆயுதம் மடத்தானை ஒழிக்க...

படுத்:—என்ன உளறல் இது......ஆயுதமாம் ஒழிப்பதாம்...

மற்:—அப்பா...அச்சம் வேண்டாம்.... அரனடியார்கள் நாங்கள்... அருளாளர் சீடர்கள்!

படுத்:—ஓஹோ! ஜடாமுடி தாரியின் சீடர்களா! வாட்ட வருத்தமின்றி, வாழ்வதால் ஓங்கி வளர்ந்திருக்கிறார்கள்...ஊரார் உழைப்பை உறிஞ்சும் உலுத்தர்களே! நான் ஓர் பாட்டாளி ...ஆனால் ஏமாளியல்ல! உழைப்பாளி...ஊர் சொத்தைத் தின்றுவிட்டு ஓம் நமச்சிவாயா என்று கூவிக்கிடப்பவனல்ல; என் முன் என்ன வேலை? வேறு இடம் பாருங்கள்...

ஒரு:—கந்தபூபதி! காரியம் பலித்தே விட்டது. நம்மவர்களிடம் இவ்வளவு துவேஷம் கொண்டுள்ள இவனே சரியான ஆயுதம்...

கந்தபூபதி:—முருகதாசரே! முடித்துவிடலாம்.

[படுத்திருந்தவன் எழுந்துஉட்கார்ந்து கோபத்துடன்]

படு:—யாரப்பா நீங்கள்.........சாவடியிலே உறங்குபவனைத் தொல்லை தருகிறீர்கள்........

கந்:—கோபியாதே அப்பா! நாங்கள் பண்டாரங்கள்... ஆண்டிகளிடமா ஆத்திரம் காட்டுவது......!

படு:—ஆண்டிகளாம், ஆண்டிகள்! மோசாண்டிகளே! ஊரிலே எவ்வளவோ மக்கள் உழைத்து அலுத்துக் கிடக்க, உண்டு கொழுத்து ஊன் சுமந்து திரிகிறீர்களே, உங்களுக்கு வெட்கம், மானம் இல்லை!

[இருவரும் கோபம் கொள்ளாமல் களிப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறார்கள்]

கந்:- கோபியாதே நண்பா! எமது காவியைக் கண்டு கலங்காதே—! (அருகே உட்கார்ந்து) பொருள் தருகிறோம்... ....வறுமையை ஓட்டிவிடுகிறோம் ஒரு இலட்சம் தருகிறோம்.

படு:- (கேலியாக) ஒரு இலட்சமா! ஓட்டாண்டியாகிய எனக்கா? என்னய்யா கேலியா செய்கிறீர்கள்... ......பதிகம்பாடி ஓட்டாஞ்சல்லிகளைத் தங்கமாக்கப் போகிறீர்களா.........!

முரு:- (சிறிது சலிப்புடன்) மாயமும் அல்ல, மந்திரமும் அல்ல......உண்மையாகவே பணம் அப்பா ......பணம்.

கந்:- இதோ பாரப்பா! பண்டாரக் கூட்டம் என்றாலே உனக்குப் பிடிக்கவில்லையல்லவா?

படு:- பண்டாரக் கூட்டத்திடமா பகை! இல்லை! எவனொருவன் ஊராரை ஏய்க்க மதவேடம் புனைந்து திரிந்து மதோன்மத்தனாக வாழ்கிறானோ அவனை நான் மனிதனென்றுகூட மதிப்பதில்லை......... ஏனெனில்......

கந்:- விளக்கம் வேண்டாம்......உன் அபிப்பிராயத்தை மறுக்கவில்லை......சரி, அப்படிப்பட்ட மதோன்மத்தர்களின் மன்னனை வீழ்த்த உனக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தால்......(குறும்பாகப் பார்க்கிறான்)

படு:- (ஆர்வத்துடன்) மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்!

கந்:- மெத்தச் சந்தோஷம்... இனி கேள் சேதியை...

முரு:- கந்தபூபதி! தனி இடம் சென்று பேசுவது...

படு:- சரி, கிளம்புங்கள்.........

[மூவரும் புறப்படுகின்றனர்]

மடாலயம்

[மடாலயக் கூடத்தில் மடாதிபதி அழகிய அலங்காரப் பீடத்தில் அமர்ந்துகொண்டு, எதிரே பக்திப் பரவசத்திலே உள்ள ஒரு சீமானுக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிறார். மடாதிபதியின் கையாள் உடன் இருக்கிறான்.]

அருளாளர்:- (கெம்பீரமும் உருக்கமும் கலந்தகுரலில்) ...கவே, எவனொருவன் இந்திரியங்கள் எனும் துஷ்டக் குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாளமிட்டு அடக்கி, நன்னெறி எனும் பாதையிலே செலுத்துகிறானோ, அவனே அரனடி என்னும் திருத்தலத்தை அடைவான்.

[கையாள், பக்திச்சீமானைப் பார்க்கிறான். சீமான், அருளாளர்காதணி விரலணி இவைகளைக் கண்டு ரசிக்கிறார்.]

இடையே இச்சை எனும் நச்சுக் கொடிகிடக்கும்.

[அருளாளர் எதிரே உள்ள பழத்தட்டுகளைப் பார்க்கிறார், பக்தர்]

பச்சென்றிருக்கிறதே என்று எண்ணிச்சிக்கினால் சீரழிவர். அதனைக் கடக்கவேண்டும். அதற்கு நிராசை எனும் சாட்டை கொண்டு குதிரையைத் தட்டவேண்டும். மெய்யன்பனே! பரமனருள் பெற்றவர்கள் எல்லோரும் இங்கனம் செய்தே முக்தி பெற்றனர்.

சீமா:- (கண்களை மூடியபடி) ஆஹா! தன்யனானேன், குருநாதா! உணர்ந்தேன்.........

[மடாலயத்தின் வேறோர் பகுதியில், கந்தபூபதி முருகதாசர், படுத்திருந்தோன் மூவரும் இரகசியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சலிப்புடன், படுத்திருந்தோன் பேசுகிறான்.]

படு:- புரிகிறதய்யா, புரிகிறது......பன்னிப் பன்னிப் பேசிப் பாதிப் பிராணனை வாங்கிவிடவேண்டாம்.

முரு:- நண்பா! சாமான்யமான காரியமல்லவே.

படு:- சரி, சரி...மதயானையின் மண்டையைப் பிளக்க வேண்டும்.

கந்:- அதற்கு ஏற்ற ஆண் சிங்கம், நீ...

படு:- இரத்தம் குடிக்கும் நரிகள்—?

கந்; (அசட்டுச் சிரிப்புடன்) நாங்கள் என்றுதான்வைத்துக்கொள்ளுமய்யா...

படு:- (உறுதியாக) இதோ பாரய்யா, பண்டாரம்! நான் இந்தச் சதிக்குச் சம்மதிப்பது என் சொந்த இலாபத்துக்கல்ல... அவன் போனால் நீயோ... நீயோ... பட்டம் பெறுவது நிச்சயம்... எனக்கு இலாபம் இல்லை.

கந்:- கேள், கொடுக்கப்படும்...

படு:- கேட்கத்தானே போகிறேன்...மடத்தை உங்கள் கையிலே ஒப்படைக்கிறேன்... ஆனால், அங்கு விழா அன்று கிடைக்கும் பணம் அவ்வளவும் எனக்கு...என் விருப்பப்படி நடப்பேன் — குறுக்கிட்டால்...தொலைத்துவிடுவேன்.

கந்:- ஒரு நாள் உன் இராஜ்யம்! அவ்வளவுதானே...

படு:- அவ்வளவேதான்...என் திட்டப்படி நடந்தால் வெற்றி—தெரிகிறதா...

முரு:-சந்தேகமே வேண்டாம்...சர்வேஸ்வரன் மீது ஆணை...

படு:-(வெறுப்புடன்) சர்வேஸ்வரனை ஏனய்யா அழைக்கிறீர்கள், சண்டாளத்திட்டம் போட்டுவிட்டு...

கந்த:-பழக்கத்திலே வந்துவிட்டது, சம்போ, சர்வேஸ்வரா, என்று சொல்லிச் சொல்லி...

[மடாலயக் கூடத்தில் பக்தன் அருளாளர் எதிரே வீழ்ந்து வணங்கியபடி]

பக்:-சம்போ! சர்வேஸ்வரா! குருநாதா!...

[அமர்ந்ததும்]

மடா:-மெய்யன்பனே! பொன்னார் மேனியனைப்

போற்று! போகபோகாதிகளில் இலயிக்கும் சுபாவத்தை மாற்று. பார், பிறகு— பாரிலே, இன்பம், பரமபதத்திலே எல்லையில்லா ஆனந்தம் தோன்றும்.

கை:—மடாலயத்திடம்... விசேஷமான அக்கரை... ஏதேதோ செய்யவேண்டும் என்று அவருக்கு நெடுநாட்களாக அவா...

மடா:—அம்பலவாணு! அவனருள் பெற்றவர்க்கே அவ்வெண்ணம் உதயமாகும். மலட்டு மாடு, மதுரமான பால் தருமா?

[கந்தபூபதி அங்கு வருகிறான். அவனைக் கண்டதும் கையாள் குறும்பாகச் சிரிக்கிறான். மடாதிபதி கண்களை மூடிக்கொள்கிறார்.]

கை:-ஸ்வாமி நிஷ்டையில் இறங்கி விட்டது...வாரும், போவோம்...

[வணங்கி விட்டுச் செல்கிறார்கள்]

மடா:—(அவர்கள் சென்ற பிறகு, கண்களைத் திறந்து) காயா—பழமா?

கந்த:—காயும் கனியுமே இந்தக் கந்தன் கைபட்டால்.

மடா:—(மலர்ந்து) பழம் எவ்விடத்தது?

கந்த:—தோட்டம் அருகாமையில்தான்.........ஆனால் வேலியும் காவலும் உண்டு...

மடா:—(கோபப்பார்வையுடன்) வேலியும் காவலும்! எவருக்குமா...

கந்த:—(புன்னகையுடன்) அதிபருக்குக் கிடையாது... கனி கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டேன்— கட்டளையைத்தான் எதிர்பார்த்து நிற்கிறேன்... கனி, தங்க நிறம்!

மடா:—(பூரித்து) அம்மையப்பன் அருள்கலந்ததோ...?

கந்த:—மருள் கிளம்பிற்று........ முதலில்—கனி, வைணவம்...

மடா:—திருப்பாவை திருவெம்பாவை மாநாடு நடத்துவோம்!

கந்த:—லாவண்யவதி.

மடா:—உனக்கா தெரியாது...

கந்த:—வஞ்சிக்கொடி!

மடா:—நஞ்சிராதே...

கந்த:—பஞ்சலூர் அல்ல...பக்குவமாகப் பயிரான பாரிஜாதம்

மட:—பெயர்...

கந்த:—சித்ரா...

மடா:—என்ன அருமையான நாமதேயம்...என்னதான் அலங்காரம் செய்துகொண்ட போதிலும், இந்தச் சடையும் முடியும் சனியனாகவன்றோ இருக்கும், கன்னியின் கண்ணும் கருத்தும் கலங்குமோ! கச்சி ஏகம்பா!

மடாலயத்தை அடுத்த ஒரு விடுதி

[நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டிருக்கிறாள், எழில் உள்ளமாது. கட்டிலின் மீது கந்தபூபதி உட்கார்ந்திருக்கிறான்.]

கந்த:—சொக்கிவிடுவான், சித்ரா!...சொர்ணபிஷேகம் உனக்கு...

சி:—சகிக்காது அவன் நடை உடை பாவனை...

கந்த:—சித்ரா! உன் சாமர்த்யத்தைத்தான் நாங்கள் சகலரும் நம்பிக்கொண்டிருக்கிறோம்.

சி:—எனக்கு அதிகம் சொல்லவேண்டுமா...
[மோகப்பார்வை காட்டி]

சி:—எப்படி...!

கந்த:—(பரவசமாகி) சித்ரா...

சி:—குருநாதருக்குத் துரோகம் எண்ணலாமா... (குறும்பாக)

கந்த:—(தாவிச் சென்று சித்ராவின் காதைப் பிடித்திழுத்து அருகே நெருங்கியபடி) சித்ரா...!

சி:—(அவன் முதுகைத்தட்டி) பைத்யமே! சித்ரா சித்ரா என்று ஜெபம் செய்து கொண்டிருந்தால் போதுமா...நேரமாகிறதே...

வசந்த மண்டபம்

[மடாலயத் தோட்ட வசந்த மண்டபத்தில் உலாவிக் கொண்டே].

மடா:—சித்ரா... சித்ரா...

[தோட்டப் பாதையில் கந்தபூபதியும் சித்ராவும்]

கந்த:—(மெல்லிய குரலில்) சித்ரா......இரண்டு பகல் இரண்டு இரவு...ஆசாமி, தேனில் விழுந்த ஈபோல வேண்டும்...

[சித்ரா தலை அசைக்கிறாள்]

கந்த:—மடம் மகோற்சவம் என்று ஏதேனும் பேசினால்...

சி:—முத்தமிட்டு வாயை மூடிவிட வேண்டும்— பாடம், கவனமிருக்கிறது...

[மடாதிபதி இருக்குமிடத்தருகே வந்ததும், கந்தபூபதி பின் தங்கி விட, சித்ரா மட்டும் உல்லாசச் செல்கிறாள். அவளைக் கண்டதும் மடாதிபதி பூரித்துப்பேசுகிறார்].

ஐந்து ரூபாயைத் திருடிய குற்றத்திற்கு ஐந்து மாதச் சிறைத் தண்டனை கிடைத்துவிடுகிறது. ஆனால், அறிவும் உடலும் துரும்பளவும் தேயாமல் ஆயிரக்கணக்கில் லாபம் சம்பாதிப்பவர்கள் பெரிய பக்காத் திருடர்கள் தானே? ஆனால், அவர்களுக்கு ஏன் தண்டனையே இல்லை?

—காண்டேகர்.

மடா:—வர்ணனையைவிட வஸ்து விசேஷமாகத்தான் இருக்கிறது—சொர்ணபிம்பமே! உட்கார் இப்படி. நெடு நேரம் நின்றால் உன் மலரடி கசங்கிவிடும்

சி:—(பாசமாக பார்த்து) இந்தக் கண்களை விடவா?

மடா:—கண்களுக்கென்ன......

சி:—தங்கள் தரிசனத்துக்காகக் காத்துக் காத்துக் கிடந்து கண்கள் பூத்துப்போய்விட்டன.

மடா:—பார்த்தபின்......என் வேடம்.........?

சி:—சிவலோகநாதனைக் காண்பதுபோலிருக்கிறது

மடா:—(அவள் கரத்தைப் பற்றியபடி) சிங்காரி! உன்னைக் காண நான் காலை முதல் தவம்கிடந்தேன். மடத்திலேயோ மன்னர்சாமிகள் வருவதும் போவதும் ஓயவில்லை. என்மனமோ அங்கில்லை மோகனாங்கி!

சி:—சுந்தரரூபா!

மடா:—ஆஹா ஹா......(அணைத்தபடி) என் கண்ணே ....கனியே......

[அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு]

சி:—இதோ தங்கக் கோப்பையிலே கனிரசம் — தங்களுக்கென்று.

[கனிரசக் கோப்பையைக் காட்ட]

மடா:—உன் பவளவாயைவிடவா அந்தக் கோப்பை வசீகரமானது.... உன் பாகுமொழி போதுமே—சித்ரா—பழரசம் வேறு வேண்டுமா.........

[அவளை அணைத்துக்கொள்ள ஆவலாகச் செல்கிறார். அவள் இலாவகமாக அவரை விட்டு விலகியபடி, கோப்பையைத் தருகிறாள். பழரசத்தைப் பருகுகிறார், சித்ராவைப் பார்த்தவண்ணம்

சைவ வேடச் சின்னங்களான உருத்திராட்சமாலை முதலியனவற்றை மடாதிபதி கழற்றி ஒரு புறத்தில் தட்டிலே வைக்கிறார்]

மடாலய உள் கூடம்

[மடாலயத்தின் வேறோர் பக்கம், பல தட்டுகளிலே பழவகைகளைப் பணியாட்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கிறார்கள். பெரிய மாலைகள் —உதிரிமலர்கள் கூடைகளிலே வைக்கப்படுகின்றன. விபூதி மடலில் விபூதியைக் கொட்டி அதிலே பன்னீர் தெளிக்கிறார்கள். மணிகளைத் துடைத்து வைக்கிறார்கள். மயில் விசிறிகளை எடுத்துவைக்கிறார்கள்.

பணியாட்கள் வேலை செய்துகொண்டே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

ஒரு. பணியாள்:—பாழாப்போன பவனி உற்சவம் நம்ம உயிரிலே பாதியைப் போக்கிவிடும் —எவ்வளவு வேலை, எவ்வளவு வேலை.........

மற். பணி:—நரம்பு முறிய நாம்ப பாடுபட்டானதும் மாப்பிள்ளை மாதிரியா அவர் பல்லக்கிலே ஏறிகிட்டு பவனிவருவாரு.........

ஒரு பணி:—விவரம் தெரியாத குப்பல், அவர் நேரே கைலாயத்திலிருந்து வந்தார்னு பேசிகிட்டுக் கீழே விழுந்து விழுந்து கும்பிட்டுவிட்டுக் கூத்தாடப் போவுதுங்க......

[விபூதி மடல் கை தவறிச் சாய்கிறது—விபூதி கீழே கொட்டிவிட, அதை ஒருபுறம் கூட்டித் தள்ளிக்கொண்டே......]

மற். பணி:—இதுக்கு என்ன தவியாத்தவிக்கிறாங்க தெரியுமா—பக்தனுங்க.........

ஒரு பணி:— இங்கே நீ கூட்டிக் குவிக்கிறே...ஆமாம், குருநாதர் அறைப்பக்கம் ஒரே இருள் மயமாக இருக்கே, என்ன விஷயம்...

மற். பணி:— எனக்கும் சந்தேகந்தான்—பவனி உற்சவத்துக்காக பத்து புது பதிகமாவது தயாரிப்பாரு...

[சாம்பிராணித் தூபம் போடும் கலசத்தைச் சுத்தமாகத் துடைக்கிறான் ஒரு பணியாள். மற்றவன் ரிஷப உருவம் கொண்ட பிடி போட்ட மணியைத் துடைக்கிறான்.]

மடாலயக் கொலு மண்டபம்

[சாம்பிராணித் தூபம் குபு குபுவென வருகிறது. மணி ஓசையும் பக்தர்களின் வாழ்த்தொலியும் கிளம்புகின்றன. பக்தர்கள் பலர்—கூடியுள்ளனர். மடாதிபர், விழாக் கோலத்துடன் பீடத்தில் அமர்ந்திருக்கிறார். கையாள், மயில் விசிறிகொண்டு வீசிக்கொண்டிருக்கிறான். கந்தபூபதியும் முருகதாசரும் பணிவுடன் மடாதிபதியின் பக்கம் நின்றுகொண்டுள்ளனர். மடாதிபர் கண்களை மூடிக் கொண்டிருக்கிறார், முகத்திலே மலர்ச்சி காணப்படுகிறது. மணி ஓசை நின்றதும், கண்திறக்கிறார். கையாளும் கந்தபூபதியும் ஒருவரை

> விதி விதி என்று கூறி வீண் பொழுது கழிப்பார்கள், [illegible]லமான அடிமை உள்ளம் உடையவர்கள். முயற்சி செய். முனைந்து உழை. ஓயாது பணியாற்று. வெற்றி நிச்சயம்.
>
> —எமர்சன்.

ஒருவர்பார்த்துக்கொள்கின்றனர் —மடாதிபர், கையைக் காட்டுகிறார் அமைதியாக இருக்கும்படி. சந்தடி நின்று விடுகிறது]

மடாதிபதி:- மெய்யன்பர்களே! இந்த வருஷம் பவனியை நிறுத்திவிட்டோம்......

[பக்தர்களிடையே ஆச்சரியம்]

நமச்சிவாயத்தின் கட்டளை வேறு விதமாகிவிட்டது.

[மடாதிபர் எதிரே சிறு சிறு முடிப்புகளாக காணிக்கைப் பணம் வரிசையாக வைக்கப்பட்டிருக்கிறது. கந்தபூபதியை மடாதிபர் நோக்க, கந்தபூபதி கையாளைப் பார்க்க, கையாள், ஒரு சுவடி எடுத்துப் பிரித்துப் படித்தபடி]

கை:- மூன்று இலட்சத்து முப்பதாயிரம் — பழைய இருப்புடன் சேர்த்து இருபத்தெட்டு இலட்சத்து அறுபதாயிரம்...

மடா:- அதிலே ஒரு இலட்சம், வேலையற்றோர் உதவிக்காக ஊர்ப்பெரியவர் மன்றத்துக்குக் கொடுக்கிறோம்!

[ஊர்ப் பெரியவர் மன்றத் தலைவர் மகிழ்ச்சி மேலிட்டு அருளாளர் வாழ்க! அறம் வாழ்க! அருளாளர் வாழ்க! என்று மன எழுச்சியுடன் கூறி, மடாதிபர் அருகே சென்று வணங்கி, பணமுடிப்பு பெறுகிறார்.]

[பலரும் ஆச்சரியப்படுகிறார்கள். கந்தபூபதியைக் கையாள் முறைத்துப் பார்க்கிறான்.]

மடா:- கந்தபூபதி! இரண்டு லட்சம் ரூபாயை நமது ஊர் நாட்டாண்மைக்காரரிடம் கொடுத்து வரி, குளம், குட்டைகளைச் சீர் செய்து பாதைகளைச் செப்பனிடச் சொல்லு. (கணக்கெழுதுவோனைப் பார்த்தபடி) அப்பனே! ஏட்டிலே குறித்துக் கொள்.

அனாதைவிடுதிக்கு அறுபதாயிரம், முதியோர் பள்ளிக்கு நாற்பதாயிரம், தமிழ் ஆராய்ச்சிக்கு ஒரு இலட்சம், இசைமன்றத்துக்கு ஐம்பதாயிரம் ஏழைகளின் இலவசப்படிப்புக்கு இரண்டுலட்சம்.

[மடாதிபதியின் 'நன்கொடை' கேட்டு மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்கிறார்கள். கந்தபூபதி கடுகடுத்த முகத்துடன் மடாதிபதியைப் பார்க்கிறான்].

மடா:-(குறும்பாக) ஆயாசப்படாதே அப்பனே! நமச்சிவாயத்தின் திரு உள்ளப்படி நாம் நடக்கிறோம்.

[அருளாளர் வாழ்க! அறம் வாழ்க! என்று மக்கள் ஆரவாரம் செய்கின்றனர்.]

மெய்யன்பர்களே! இன்று நாம் நடந்து கொள்ளும் முறை உமக்கு வியப்பாக இருக்கும்—கந்தபூபதிக்குக் கசப்பு—முருகதாசருக்குக் கோபம்—நாம் இன்று மாயாபந்தம் விடுபட்டோம்—மறுபிறவி கொண்டோம் மகேஸ்வரன் அருளால். என் அப்பன், இமயம் வாழும் சொக்கன் நேற்றிரவு என் முன் தோன்றி எனக்குப் புதிய கட்டளைகள் பிறப்பித்தார்.

[பக்தர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஊர்ப் பெரியவர்கள் உள்ளன்புடன் பேசுகிறார்கள், வணங்கியபடி...]

பெரி:-பூலோக கைலாயமன்றோ இது. இங்கு அரன் வருவது முறைதானே—அரனைக் கண்ட அண்ணலே! வாழ்க! சிவனுடன் பேசிய செம்மலே வாழ்க!

மடா:-அன்பர்களே! (சிவனார் பேசுவது போன்ற குரலில்) வெண்பட்டு உடுத்துகிறாயே நீ—நீ காணும் மக்கள் கந்தல் ஆடையுமின்றி உள்ளனரே, காண்கிலையோ (சொந்தக் குரலில்) என்று என்னை என்னப்பன் கேட்டார். உனக்கு மேனியிலே சந்தன மணம்—மக்களின் உடலிலே உழைப்பால் உண்டாகும் வியர்வையின் நாற்றம்! உன் நாசிக்கு எட்டவில்லையா என்று கேட்டார்.

[பக்தர்களின் மனம் உருகுகிறது]

மடா:-(சிவனார் பேசும் பாவனையிலேயே) உனக்கு அறுசுவை உண்டி—உழைப்பாளிக்கு அரை வயிற்றுக் கஞ்சி. உனக்குப் பாலும் பழமும் பட்சணமும்! அவர்களுக்குப் பழம் சோறும் பருக்கையும் கம்பங்கூழும். உனக்குப் பஞ்சணை! அவர்களுக்குக் கட்டாந்தரை! உனக்கு அபிஷேகம், ஆராதனை, அலங்காரம்! அவர்களுக்குக் குன்மம், காசம், கொடு நோய். உனக்குக் கோட்டை போலக் கோயில், கொலுமண்டபம்! அவர்களுக்கு நண்டுவளைபோல் வீடு. ஏ! மடாதிபனே! இதைக் கண்டாயே, உன் கண்களிலே நீர் சுரக்கவில்லையா? இதயம் துடிக்கவில்லையா—இரத்தம் கொதிக்கவில்லையா? (சொந்தக் குரலில்) என்று கேட்டு கடுங்கோபத்துடன் என் எதிரே நின்றார்.

பெரி:·(மனம் உருகிய நிலையில்) என்ன அற்புதம்! இறைவனின் திருவிளையாடலை என்னென்பது!

நீ செய்யவேண்டியது இதுதான். உலகத்தை விரும்பு. பிறருக்கு உதவு. மக்களிடம் தயவாக நட. யாருக்கும் தலை குனியாதே. கடவுளைப்பற்றி வீணாகப் பேசிக் கொண்டிராதே. கொடுங்கோலர்களை வெறுத்துத்தள்ளு. உழைப்பைப் போற்று.

—வால்ட்விட்மன்.

மடா:-நான் மௌனமாக இருந்தது கண்டு இமயவன் என்னை ஏறிட்டுப் பார்த்துக் கூறினார்............ (சிவனார் பேசும் பாவனையில்) உன்னிடம் பக்த கோடிகள் காணிக்கை தருவதும் வேலிகள் விடுவதும் எதற்கு! உன் சுகபோகத்துக்கா? நீ, ஏழைகளுக்கு இதம் செய்யவேண்டும் என்பதற்காக அல்லவா! (சொந்தக் குரலில்) என்று சிவனார் சீற்றத்துடன் கேட்டார். நான் அஞ்சவில்லை.

[பக்தர்கள் முகத்தில் கவலை]

மடா:-காரணம் என்ன? என் மனதிலே இருந்துவந்த கறை—அஞ்ஞானம், என்னைவிட்டு அகலவில்லை. பந்தம், பாசம், பற்று, சுயநலம் இவை என்மனதிலே இருந்துகொண்டு, அஞ்சாதே! அரன் மிரட்டினால் என்ன! உன் உரிமையை இழக்காதே —என்று கூறி என்னை உசுப்பின!

பெரி:-சிவனாரிடம் சண்டையா! சிவ சிவா!

மடா:-நான், கர்மபலன்படி காரியம் நடக்கிறது, கடம்பா, கச்சிஏகப்பா, காமாட்சி மணாளா, காலனைக் கொன்றவா! — என்று துதித்தேன். சிவனார், (சிவன் பேசும் பாவனையில்) ஏ! அஞ்ஞான சொரூபமே! என் அடியவனைவிட்டு வெளியே, வா! — (சொந்தக்குரலில்) என்று முழக்கமிட்டார்—முக்கண்ணுடையார்.

பக்தர்கள்:-ஆஹா......பிறகு......

மடா:-என் தலை சுழன்றது!

பக்:-ஐயோ.........பிறகு...

மடா:-மார்பு வெடித்துவிடும்போலாகிவிட்டது!

பக்:-அடடா!...பிறகு...

மடா:-என்னென்பேன் இறைவனின் திருக்கூத்தை! என் எதிரில் நான் நின்றேன்.

[அனைவரும் திடுக்கிடுகின்றனர்]

மடா:-என்னைப்போன்றே ஓர் உருவம் என் எதிரே நின்றது. பெரிய சுமையைக் கீழே இறக்கிவிட்டவனுக்கு உண்டாகும் ஆனந்தம், எனக்கு! என் எதிரே இருந்த உருவம் உறுமிற்று...நான், ப்ரபோ! இதென்ன என்று கேட்டேன்...

பக்:-சிவனார் என்ன சொன்னார்...?

மடா:-(சிவனார்பேசும்பாவனையில்) பாலகா! ஒவ்வொருவர் உள்ளத்திலும் பற்றும் பாசமும் தன்னலமும் உண்டல்லவா? மனிதனின் மனதிலே அஞ்ஞானமும் உண்டு மெய்ஞ்ஞானமும் உண்டு—இரு சக்திகளுக்கும் கடும்போர்—மனம் எனும் களத்திலே! எவனொருவன் அஞ்ஞானத்தை விரட்டி அடிக்கிறானோ அவனே அரனடியான்—இதோ உன்னைப் போன்றே காணப்படும் உருவம், உன் எதிரே நிற்கும் உருவம், உன் உள்ளத்திலே இருந்து வந்த அஞ்ஞானம்! அந்த அஞ்ஞான சொரூபத்தை நான் வெளியேற்றிவிட்டேன். ஆனால், நான் மறைந்ததும், அஞ்ஞான சொரூபம் மிரட்டும்—அஞ்சாதே! தங்க இடம் கேட்கும்—இசையாதே! விரட்டு-விரட்டு—உன் அடியார்களிடம் கூறிடு—அழித்துவிடு. அஞ்ஞான சொரூபத்தை மீண்டும் உன் உள்ளத்திலே குடிபுகவிட்டால்! பிறகு நான் வாரேன் உன்னைக் காப்பாற்ற, (சொந்தக் குரலில்) என்று கூறிவிட்டு, அஞ்ஞானத்தை விரட்டினார்—அது அகோரக் கூச்சலிட்டுவிட்டு ஓடிவிட்டது—நான் தன்யனானேன்! தயாபரனின் தொண்டனானேன்! மக்களின் தோழனானேன்! உண்மைக்கு ஊழியனானேன்! ஊராருக்கு உழைப்பாளியானேன்!......ஆனால் மெய்யன்பர்களே! மீண்டும் அந்த அஞ்ஞான சொரூபம் வருமோ—வந்தால் என்ன செய்வது என்று அச்சம் எனக்கு அரன் விட்ட வழிப்படி நடக்கட்டும்.

[கூட்டத்திலே பரபரப்பு-அமளி. உண்மை மடாதிபதி ஓடிவருகிறார்-அலங்கோலமாக, ஒரு பணியாளுடன்—கூவியபடி]

[உண்மை மடாதிபதியைத் தொலைவிலே கண்டதும், போலி மடாதிபதி]

போ. மடா:-மெய்யன்பர்களே!...அதோ...அதோ...

[என்று அச்சமேலிட்டு அலறும் பாவனையில் கூவ, பக்தர்கள் திடுக்கிடுகிறார்கள், மற்றோர் மடாதிபதியின் திடீர்ப்பிரவேசம் கண்டு]

உ-மடா:-(ஆத்திரமாகி) யாரடா அவன்—அயோக்யா! அக்ரமக்காரா! வேஷக்காரா! நான் வசந்தமண்டபத்திலே இருந்த சமயம் இங்கே புகுந்து என் பீடத்தில் அமர்ந்துகொண்டு பிதற்றுகிறாய்...... பேயர்களே! எப்படி இதை அனுமதித்தீர்கள்! பித்தர்களே! இதென்ன பாதகம்!

[இரு மடாதிபதிகளைக் கண்ட மக்கள் திகைத்து]

மக்:- இங்கேயும் மடாதிபதி—அங்கேயும் மடாதிபதி —என்ன அதிசயம்......

போ. மடா:—மெய்யன்பர்களே! வந்துவிட்டது அஞ்ஞான சொரூபம்...

[மக்கள் திடுக்கிடுகிறார்கள்.]

உ. மடா:- யாரடா அஞ்ஞான சொரூபம் அக்ரமக்காரா!

[பீடத்தருகே பாய்கிறான். நன்கொடை பெற்றுக்கொண்டவர்கள் தாவிச் சென்று அவனைத் தடுத்து நிறுத்துகிறார்கள்.]

சிந்தனை, சந்தேகத்தை வளர்க்கிறது; சந்தேகம், ஆராய்ச்சியை வளர்க்கிறது; ஆராய்ச்சி, குருட்டு நம்பிக்கைகளை யெல்லாம் குழி தோண்டிப் புதைத்து விடுகிறது.

—இங்கர்சால்.

போ. மடா:—அரன் ஆணை! என்னை அணுகாதே.

உ. மடா:—அரனும் கரனும்! என்னடா உளறல் இது...

போ. மடா:—அபசார நிந்தைப்பட்டுழலாதே—

உ. மடா:—(கதறும் நிலையில்) ஐயோ! கந்தா — முருகா — உங்களுக்குக் கண்ணில்லையா...நான் சித்ரபூஜையில் இருந்த சமயம் விபரீதம் வந்து விட்டதே...

போ. மடா:— பக்தகோடிகளே! விஷயம் விளங்கிவிட்டதா? விண்ணவன் கூறியபடி என்னை விடாமல் பிடித்தாட்ட அஞ்ஞான சொரூபம் வந்துவிட்டது...

[பலரும் அஞ்ஞான சொரூபம்! அஞ்ஞான சொரூபம்! என்று கூவுகிறார்கள்.]

[உண்மை மடாதிபதி பிடித்திருப்போரைத் தாக்கித் தள்ளிக் கொண்டு முன்னால்செல்ல முயற்சிக்கிறான். விபூதிமடலில்இருந்து விபூதியைப் பிடி பிடியாகஎடுத்து போலி மடாதிபதி, உண்மை மடாதிபதியின் கண்ணில் விழும்படி தூவிக்கொண்டிருக்கிறான்.]

போ. மடா:—ஐயோ! அஞ்ஞான சொரூபம்—அடித்து விரட்டுங்கள்...

உ. மடா:—(அழுகுரலில்) அடித்து விரட்டுவதா! என்னையா...

[கந்தபூபதி, முருகதாசர் கையாள் மூவரும் குசுகுசுவெனப் பேசிக் கொண்டு ஒரு முடிவுக்குவந்தவர்களாகி]

மூவரும்:—அடித்து விரட்டுங்கள்—அடித்து விரட்டுங்கள்...

உ. மடா:—பாவிகளே!...என்னையா...

போ. மடா:—பக்தர்களே! அஞ்ஞான சொரூபத்தை...

[பலரும் சேர்ந்து அழித்து விடுகிறோம் என்று கூச்சலிடுகிறார்கள். உண்மை மடாதிபதி பெரும் பாடுபடுகிறார்)

போ. மடா:—நமச்சிவாயத்தின் மீது ஆணை! அஞ்ஞான சொரூபத்தை அடித்து விரட்டுங்கள்.

[பலரும் சேர்ந்து மடாதிபதியைக் கீழே சாயுமளவு அடித்து விடுகிறார்கள். அமளி அதிகமாகிறது போலி மடாதிபதி, குறிப்பாக ஒரு பண முடிப்பை எடுத்துக் கொள்கிறான். கந்தபூபதி அவன் கரத்தைப்பிடித்திழுத்துக் கொண்டு ஓடுகிறான். அமளியிலே இதை யாரும் கவனிக்கவில்லை முருகதாசன் கற்பூரக் குவியலைக் கொளுத்துகிறான். கீழே வீழ்ந்த பிறகும் மடாதிபதியை அடிப்பது ஓயவில்லை. அஞ்ஞான சொரூபம் ஒழிக! அருளாளர் வாழ்க! அஞ்ஞான சொரூபம் ஒழிக—என்ற முழக்கம் பலமாகிறது. மடாதிபதி மாண்டுபோகிறார்]

பெரி:—ஒழிந்தது அஞ்ஞான சொரூபம்! மெஞ்ஞானம் எங்கே!—(என்று ஆர்வத்துடன் கேட்க)

[பலரும் எங்கே? மடாதிபதி அருளாளர் எங்கே? அருளாளர் எங்கே? அரனைக்கண்ட அண்ணல் எங்கே?—என்று கேட்கின்றனர்]

கந்த:—(உருக்கமாக) அப்பனே! ஒட்பிலாமணியே! உன் திருவிளையாடலை என்னென்பேன்! மெய்யன்பர்களே! நீறு பூசுங்கள்! நாதன் நாமத்தைப் பஜியுங்கள், அருளாளரின் மெய்ஞ்ஞான உருவம் அரனடி சேர்ந்துவிட்டது—அஞ்ஞானத்தை அடித்து வீழ்த்தியதும், இங்கோர் ஜோதி தோன்றிற்று—மெய்ஞானி அதிலே கலந்துவிட்டார்—பொன்னார் மேனியனைப் போற்றுங்கள்.........அருளாளரின் சடலத்தை அடக்கம் செய்வோம் வாரீர்...

[கண்களைத் துடைத்துக்கொள்கிறார்கள், பலரும்]

பெரி:—பட்டம்யாருக்கு......?

[கந்தபூபதியும் முருகதாசரும் கையாளின் காலில் வீழ்ந்து வணங்கி]

மடாதிபதி மாசிலாமணியார் வாழ்க! என்று கூறுகிறார்கள்.

[கையாள் கண் துடைத்துக்கொள்கிறான்]

ர:—வாழ்த்துங்கள்! பக்தர்களே! மாசிலாமணியார்...

[மக்கள், வாழ்க! வாழ்க! என்று கூவுகிறார்கள்]

[அதேபோது காட்டுப் பாதையிலே போலி மடாதிபதி தன், வேடத்தைக் கலைத்தபடி]

போ. மடா:—ஒழிந்தான் உலுத்தன்—யார் அவன் அடி பணிந்து கிடந்தனரோ அவர்களே அடித்துக் கொன்றனர்......அக்ரமக்காரன்—சரியான தண்டனை.

[வேகமாகச் செல்கிறான்]

★

ஒரு தனி நபரிடம் தரப்பட்டிருக்கும் அதிகாரம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அவரால் அவருடைய நாட்டுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தும் அதிகமாகி விடுகிறது.

—எட்மண்ட் பர்க்.

குடியாட்சியில் கட்சிகள்

[ஏ. இருதயராஜ், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்]

மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் ஆட்சி குடியாட்சி அல்லது மக்களாட்சி. அதில் ஆட்சிப் பொறுப்பு, ஒரு தனிப்பட்ட வகுப்பினரிடமோ அல்லது பிரிவினரிடமோ நிரந்தரமாக தங்கி இருக்காது. மக்களனைவரும் ஆட்சியில் பங்கெடுத்துக்கொண்டு பொறுப்பை நிர்வகித்து தங்களாட்சி நடக்கிறதென்ற நினைப்பில் நிலைத்திருக்க வேண்டும், குடியாட்சியில்.

மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றாமல், அவர்களுடன் தொடர்பில்லாமல் அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்காமல் தனக்குத் தோன்றியதை செய்துகொண்டிருக்கும் ஆட்சியை, அது ஜனநாயக அமைப்பில் இருந்தாலும் குடியாட்சி என்று கூறுவது, 'விளக்கிருக்கிறது ஆனால், ஒளி இல்லை' என்று சொல்லுவதைப்போன்றது.

முடியாட்சியில் மணிமுடி தரித்த மன்னன் சட்டமியற்றியும், இயற்றிய சட்டத்தை நிலை நாட்டியும், நிலை நாட்டும் நோக்கில், தவறியவர்களை நீதியின் பேரால் தண்டித்தும் ஆட்சியை நடத்துகிறான். அது போல் குடியாட்சியில் குடிமக்கள் அனைவரும் மன்னர்களாகத் திகழவேண்டும், அதாவது மக்கள் அனைவரும் ஆட்சிப் பொறுப்பில் பங்கெடுத்துக் கொண்டு, அவனவன் தான் தான் ஆட்சி செலுத்துவதாக உணர வேண்டும்.

உண்மையான மக்களாட்சி, இப்பொழுது மங்கி மடிந்துபோன, ஆனாலும் இன்றும் அதிசயத்துடன் அறிஞர்களால் போற்றப்படும் பண்டைய கிரேக்க நாகரீக அமைப்பில் ஆதென்ஸ் நகரில் நடைபெற்றதாகச் சரித்திரம் சொல்லுகிறது. அந் நகரில் குடியாட்சி நடந்தபோது பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் அத்தனைபேரும் சட்டசபை அங்கத்தினர்கள். வருஷத்தில் நாற்பது தடவையோ அல்லது அவசியமிருந்தால் இன்னும் அதிகமாகவோ சட்டசபை கூட்டப்பட்டது. கூட்டம் நடைபெறும் நாட்களில் மக்களனைவரும் சட்டசபையில் கூடி இருந்தமையால் நகரில் கடைகள் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டன.

அங்கு சட்டசபையோடு ஒரு மேல் சபையும் இருந்தது. முப்பது வயதுக்குமேற்பட்ட மக்களிலிருந்து சீட்டுக் குலுக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட 500 பிரதிநிதிகள் அதில் அங்கத்தினர்கள். சட்டசபையில் விவாதத்துக்கும் முடிவுக்கும் வைக்கவேண்டிய விஷயங்களை இங்குதான் தீர்மானித்தார்கள். இந்த மேல்சபையின் தலைவர் அங்கத்தினர்களிலிருந்து சீட்டுக்குலுக்கி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆதென்சில் அரசாங்கத்தின் அதிகாரிகள் அத்தனை பேரும்—நீதிபதி முதல் சிறைக் காவலர்வரை—தகுதி, திறமை என்ற தராசில் எடை போட்டுப் பார்க்கப்படாமல் மக்களனைவரிலுமிருந்து சீட்டுக்குலுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த முறைக்கு மாறாக நியமனம் செய்யப்பட்ட அதிகாரி, படைத் தலைவர் ஒருவர்தான். இந்தப் பதவிக்குத் திறமை அவசியம் தேவை என்ற காரணத்தால் சீட்டுக் குலுக்கி எடுக்காமல், பொதுஜன வாக்கெடுப்புமூலம் திறமைசாலி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குள் சீட்டுக் குலுக்கி பொறுக்கப்பட்ட 6000 பேர்கள் கொண்ட நீதிமன்றம் அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. 500 பேர்கள் கொண்ட தனித் தனி சிறு குழுக்களாக அது பிரிக்கப்பட்டிருந்தது. குற்றவாளி விசாரணைக்கு எந்த குழுவின்முன் கொண்டு வரப்படுவான் என்பது எவருக்கும் தெரியாது. சீட்டு குலுக்கி எந்தக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டதோ அதன்முன் இவன் நிறுத்தப்படுவான். அதனால் தன்னை விசாரிக்கப் போகும் நீதிபதிகளை அவன் முன் கூட்டியே தெரிந்துகொண்டு அவர்கள் மனதை அவன் கலைக்க முடியாது. கலைக்க முயன்றாலும் 500 பேர்களையும் அவன் சரிப்படுத்துவது முடியாத காரியம். வக்கீலின்றி குற்றவாளி தானே வாதாடுவது வழக்கம். அதனால், படித்த ஒரு கூட்டத்தாருக்கோ, தனித் திறமையின் பேரால் ஒரு இனத்தாரிடமோ, பிறப்பின் காரணத்தால் பிரபுக்கள் வம்சத்தினிடமோ, அல்லது பணம் படைத்த செல்வந்தர்களின் வசமோ நீதிமன்றம் சிக்கிக் கொள்ளாமல் இருந்தது.

இம்மாதிரி நேரடியாக மக்களாட்சி நடைபெற்ற ஆதென்ஸ் நகரத்தில் ஒவ்வொரு பிரஜையும் சட்டசபை அங்கத்தினர் மட்டுமல்ல, அதற்கென்று தனிப் பயிற்சியோ, பட்டமோ பெறாமல் அடிக்கடி நீதிமன்றத்தில் நீதிபதியாக வேலை பார்க்கவும், தேர்தலில் நிற்கும் சிரமத்துக்கு ஆளாகாமல் எவ்வளவு பெரிய பதவியையும் வகிக்கவும் சந்தர்ப்பம் நிறைய இருந்தது.

வான்முட்டும் கோபுரங்களைக் கட்டியவர் யார்? அவற்றின் உச்சிக்கெல்லாம் தங்கமுலாம் பூசியவர்கள் யார்? தில்லை நடராசனுக்குத் தங்கக்கூரை வேய்ந்தவர்கள் யார்? ஆங்காங்கு ஆயிரக்கால் மண்டபங்களை எழுப்பித்தந்தவர்கள் யார்? சத்திரம் சாவடி கட்டி வைத்தவர் யார்? எல்லாம் நாம்! ஆனால், அவற்றை எல்லாம் அனுபவிப்பவர்கள் யார்? வேற்றூர். ஏன் இருக்கிறது, இப்படிப்பட்ட நிலை? நாம் சிந்திக்கவேண்டாமா? சிந்திப்பது குற்றமா?

—பெரியார்

பெயரளவில் மக்களாட்சி என்று இல்லாமல் நடைமுறையில் மக்கள் பொறுப்பிலேயே நடந்த ஆதென்ஸ் குடியாட்சி முறை இன்றைய உலக நிலையில் சாத்தியமில்லை.

தற்கால குடியாட்சி நாடுகளில் மக்கள் நேரடியாக ஆட்சியை நடத்துவதில்லை. காரணம், இங்கிலாந்து போன்ற ஒரு சிறிய நாட்டில்கூட வயதுவந்த அத்தனை பேரும் ஒரு சட்ட சபையின் அங்கத்தினர்களாகி ஒன்றாகக் கூடுவதென்பது சிரமம். அதுவே சிரமமென்றால் அமெரிக்கா, இந்தியா போன்ற பரந்த நாடுகளில் அது சாத்தியமே இல்லை.

கிரேக்க நாட்டில் அக்காலத்தில் இருந்த நகர அரசுகளிலும், தற்காலத்தில் கிராமங்களிலும் வேண்டுமானால் நேரடியான மக்களாட்சி சாத்தியப்படலாம்.

ஆதென்ஸ் போன்ற கிரேக்க நகராட்சிகளில் மக்கள் முழுநேரமும் அரசியலில் ஈடுபட்டு பொறுப்பு வகித்து நடத்த போதிய பக்குவமும், அரசியல் அறிவும் பெற்றிருந்ததோடு, அரசியல் விவகாரங்களில் முழு நேரத்தையும் செலவழிக்க வாழ்க்கை வசதியும் பெற்றிருந்தனர். இக்காலத்தில் அந்த குடியாட்சியை எடுத்துக்கொண்டாலும் பெரும்பாலானவர்களுக்கு வாழ்க்கையே ஒரு பெரும் போராட்டமாக இருக்கும்போது மக்களில் அநேகர் அரசியல் விவகாரங்களில் அக்கறை காட்டாததில் அதிசயமொன்றுமில்லை. அவர்கள் ஆட்சியில் எடுத்துக்கொள்ளும் பங்கு, தேர்தல் காலங்களில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து சட்ட சபைக்கு அனுப்புவதுடன் தீர்ந்து விடுகிறது. அதனால் மறைமுகமான பிரதிநிதித்துவ மக்களாட்சிதான் இன்றைய நிலைமையில் சாத்தியமே தவிர, நேரடியான ஜனநாயக ஆட்சி ஒரு கிட்டாத இலட்சியமாகத்தான் இருக்க முடியும்.

மறைமுகமான மக்களாட்சியில், மக்கள் தாமே அரசியலில் நேரடியாக ஈடுபடாமல் தங்கள் கருத்தை பிரதிபலிக்கும் ஒரு சிலரைத் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அவர்களைக்கொண்டுதான் ஆட்சியை நடத்தமுடியும். இந்த முறைதான் உலகத்திலுள்ள எல்லாக் குடியாட்சிகளிலும் இன்று நடைபெறுவதைக் காண்கிறோம்.

பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தேர்தலுக்கு நிற்கும் ஒவ்வொருவரும், தான், சட்ட சபைக்குச் சென்று இன்னதைச் சாதிக்கப்போகிறேன் என்று வாக்களித்து மக்களுடைய ஆதரவை நாடினால், ஒரு தனி மனிதனின் வாக்குறுதியை மக்கள் நம்பமாட்டார்கள். அப்படியும் நம்பி ஒருவரைத்தேர்ந்தெடுத்து அனுப்பினால் அவர் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் விட்டு விட்டு தன்னிஷ்டம்போல் நடந்தால், அவரைக் கட்டுப்படுத்தவோ, அல்லது அவருடைய தேர்தல் கால வாக்குகளை அவருக்கு நினைவூட்டி அவைகளை நிறைவேற்றும்படி வற்புறுத்தவோ ஒரு வழியும்கிடையாது.

அத்துடன் தனித் தனியாக தத்தமக்குத் தோன்றிய காரியங்களைச் சாதிப்பதாக வாக்களித்து, தேர்தலில் வெற்றிகண்ட சுயேச்சைகளான சட்டசபை அங்கத்தினர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவது எப்பொழுதும் முடியாது. முடியாததுமட்டுமல்ல; அப்பேற்பட்டவர்களுக்குள் ஏற்படும் ஒற்றுமை எத்தனை நாளைக்கு நீடிக்கும்?

ஜனநாயக ஆட்சியில், சட்டசபை அங்கத்தினர்கள்தான், ஆட்சியை நடத்தும் மந்திரிசபையைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒவ்வொருவரும் தனித் தனிக் கொள்கைகளைக் கொண்டிருக்கும்பொழுது அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒருமுகமாக மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கவும் முடியாது. அப்படித் தேர்ந்தெடுத்தாலும், அங்கத்தினர்களுக்குள் ஒற்றுமை குறைந்த நேரத்திலெல்லாம் மந்திரிசபைக்கு ஆபத்து நேரிடும். இந்தக் குறைகளைப் போக்கத்தான் ஜனநாயக ஆட்சியில் அரசியல் கட்சிகள் அவசியமாகின்றன.

குடியாட்சியில், தங்களுக்கென ஒரு தனிக் கொள்கையும், அபிப்பிராயமும் கொண்டவர்கள்-ஆட்சியில் அவ்வப்பொழுது எழும் பிரச்சனைகளைப்பற்றி ஒருமுகமான முடிவுக்கு வர முடிந்தவர்கள்—ஒன்று கூடி ஒரு கட்சியாக அமைத்துக் கொண்டு அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இம் மாதிரிக் கட்சிகள் குடியாட்சி நாடுகளிலெல்லாம் இன்றியமையாதவைபாகிவிட்டன.

ஒரு நாட்டிலுள்ளவரெல்லாம் ஒரு மனப்பட்டு கருத்து வேற்றுமையின்றி வாழமுடியும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. பலதிறப்பட்ட கொள்கைகள் அபிப்பிராயங்கள், எண்ணங்கள் எழத்தான் செய்யும். 'நாட்டின் நிலைமையில் மாற்றம் தேவையில்லை; அதனால், இருக்கும் நிலைமையே இன்னும் நீடிக்கவேண்டும்' என்று சிலர் நினைக்கலாம் 'நாட்டின் நிலைமையை சீர்ப்படுத்தாவிட்டால், கட்டாயம் கேடு விளையும்' என்று ஒரு சிலர் நினைக்கலாம். 'நாட்டு நிலைமையை அடியோடு மாற்றி புதிய நிலையை உண்டாக்கவேண்டு'மென்று வேறு சிலர் நினைக்கலாம் இம் மூன்று விதமான நினைப்புள்ளவர்களும் மூன்று கட்சியாக இயற்கையாகவே பிரிவார்கள்.

ஒவ்வொருவனும் தன்னுடைய கொள்கையை நிலைநாட்டுவதற்கும், தான் நினைத்ததை செய்து முடிப்பதற்கும், தன் சொந்த பலம் போதாதென்று கண்டு, தன்னையொத்த கருத்துடைய மற்றவர்களோடு சேர்ந்து செயலாற்றுகிறான். புதிய ஒரு கொள்கை, நாட்டுக்குத் தேவையான ஒரு நூதனத் திட்டம்

> திரௌபதியின் மானத்தைக் காத்த கண்ணனுக்கு நாம் உற்சவங்கள் கொண்டாடுகிறோம். கவிகள் அவனைப்பற்றிக் காவியங்கள் பாடுகிறார்கள். தத்துவ ஞானிகள் அவனைப் பூர்ணவதாரம் என்கிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில், ஒரு திரௌபதியின் மானத்தைக் காப்பாற்ற ஓடிவந்த கண்ணன், இன்றைய தினம் உடுக்க ஒரு முழம் கந்தலுமின்றித் தவிக்கின்ற இலட்சக் கணக்கான ஏழைப் பெண்களைக் காப்பாற்ற ஏன் முன் வரவில்லை? தெய்வமே குருடாகி விட்டது என்று எனக்குத் தோன்றுகிறது.
>
> —காண்டேகர்.

இவைகளைக் கொண்ட ஒருவன், தன் பிரச்சார சாமர்த்தியத்தால், பிறரையும் தன் வசப்படுத்தித் தன் கொள்கைக்கு ஆதரவு தேடுகிறான். கட்சி பிறக்கிறது.

குடியாட்சி அமைப்பில், தேர்தல் காலங்களில் ஓட்டளிப்பதன்மூலம்மட்டுமே, ஆட்சியில் தங்கள் பங்கையும் பொறுப்பையும் நிறைவேற்றும் மக்கள், வெவ்வேறு கட்சிகளின் பிரச்சாரத்தைக் கேட்டு, நாட்டில் அவ்வப்பொழுது எழும் பிரச்சனைகளுக்கு அவைகள் காட்டும் வழிகளை ஆராய்ந்து, அவரவர்களுக்கு இஷ்டப்பட்ட கட்சிகளின் அபேட்சகர்களுக்கு ஆதரவு தருவதனால், அவர்கள் பொறுப்பை சுலபமாக நிறைவேற்ற முடிகிறது. இம்மாதிரி கட்சிப் பிரச்சாரங்கள், உண்மையில் நாட்டின் முன்னேற்றங் கருதி செய்யப்படுமானால், அரசியலில் சாதாரணமாக அக்கரையில்லாத மக்களும், தம் பொறுப்பை உணர்ந்து, தங்கள் விருப்பு வெறுப்புகளைக் காட்டி, ஆட்சியிலிருக்கும் கட்சி நிலைக்கவோ அல்லது நீக்கப்படவோ அல்லது புதியதொரு கட்சி பதவிக்கு வரவோ செய்ய முடிகிறது. இந்தியாபோன்ற குடியாட்சிகளில் மக்களுக்கு அரசியல் அறிவு அதிகமாக இல்லாததால், இம்மாதிரிக் கட்சிகள், தங்கள் பிரச்சாரத்தினால் அவர்களுக்கு அரசியல் விவகாரங்களில் அக்கரை ஏற்படச் செய்கின்றன.

ஆனால், பண பலத்தைக்கொண்டோ, பிரச்சார பலத்தைக்கொண்டோ, அல்லது ஆட்சியிலிருக்கும் கட்சி, தன் அதிகார பலத்தைக்கொண்டோ, சில சமயங்களில் மக்களைத் தம் பக்கம் இழுக்க முயற்சிப்பதுமுண்டு. இதற்கு மாற்று மருந்து மக்களிடையே அரசியல் அறிவை வளர்த்து அவர்களுக்குத் தெளிவு உண்டாக்குவதுதான். இந்த வேலையைத்தான் மாற்றுக் கட்சிகள் செய்துவருகின்றன.

அதனால்தான் மக்களாட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கவேண்டும். ஒரே கட்சி ஆட்சி ஏற்பட்டுவிட்டால், மக்களாட்சிக்கு முடிவு வந்துவிட்டது என்றுதான் அர்த்தம். இத்தாலியில் பாஸிஸ்ட் கட்சியும், ஜெர்மனியில் நாஸிக் கட்சியும், ரஷ்யாவில் கம்யூனிஸ்டுக் கட்சியும், மற்ற கட்சிகளைத் தலை தூக்காமற் செய்துவிட்டு என்றைக்கு ஒரே கட்சி ஆட்சியை ஏற்படுத்தினார்களோ, அன்றே மக்களாட்சி அங்கு அஸ்தமித்துவிட்டது. எங்கள் கட்சிதான் இந்த நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு சுயாட்சி பெற்றுக் கொடுத்தது, எங்கள் கட்சிதான் பிரபுக்கள் ஆதிக்கத்திலிருந்து ஆட்சியை மீட்டு, பாமர மக்களாட்சி ஏற்படுத்தியது; எங்கள் கட்சிதான் நாட்டைக் காப்பாற்றியது, அதனால் எங்கள் கட்சிதான் என்றும் ஆளவேண்டும், நிரந்தரமாக நிலைக்கவேண்டும், எங்கள் கட்சியை ஆதரிக்காதவர்கள், குறை கூறுபவர்கள், எல்லோரும் தேசத் துரோகிகள், நாட்டுப் பற்றில்லாதவர்கள், என்ற கொள்கையை உடையவர்கள் — இந்தக் கொள்கையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று வற்புறுத்துபவர்கள் — மக்களாட்சியில் இருக்க அருகதையற்றவர்கள்.

இங்கிலாந்தை, ஹிட்லரின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றிய சர்ச்சில், தன்னுடைய கட்சியேதான் நிரந்தரமாக நாட்டைக் கட்டி ஆளவேண்டும் என்று சொல்லியிருந்தால், அதை அந்நாட்டு மக்கள் ஆமோதித்திருந்தால், சென்ற யுத்தத்துக்குப் பின் தொழிற் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கமுடியுமா? மக்களாட்சிதான் அங்கு நீடித்திருக்குமா?

ரஷ்யாவில் சார் மன்னனின் கொடுங்கோலாட்சியைக் கண்டித்து பலதிறப்பட்ட கருத்துள்ள ரஷ்ய மக்களனைவரும் திரண்டெழுந்து ஆட்சியைக் கவிழ்த்து மக்களாட்சியை ஏற்படுத்தினார்கள். ஆனால் அந்த மாற்றத்துக்கு எங்கள் கட்சிதான் காரணம், வேறெந்தக் கட்சிக்கும் இந்த நாட்டில் வேலையில்லை என்று போல்ஷவிக் அல்லது கம்யூனிஸ்டுக் கட்சி ஒரே கட்சி ஆட்சியை அங்கு அமைத்திருக்கிறது. ஆட்சியை எதிர்த்துப் பேசுவதோ குறை கூறுவதோ மாற்றம் வேண்டுமென விரும்புவதோ அங்கு கூடாது.

சில சமயங்களில், கட்சிகள் பணம் படைத்த ஒரு சிலரின் அல்லது இனத்தவரின் ஆதிக்கத்துக்கு ஆளாகி அவர்களின் கைப்பாவையாக மாறுவதையும் காண்கிறோம். அதனால், மக்களாட்சி அமைப்பிலேயே ஒரு தனிப்பட்டவரின் ஆதிக்கம் ஏற்படுகிறது. இங்கிலாந்தில் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில், நில பலமுடைய நிலச்சுவான்தார்களின் ஆதிக்கத்தில் இருந்த ஒரு கட்சி, அந்நாட்டு மக்களை ஆட்டிப் படைத்து வந்தது. ஜெர்மனியில் யுத்தத் தளவாடங்கள் தயாரிக்கும் முதலாளிகளின் கைப்பாவையாக மாறிய ஒரு கட்சி, அதன் தலைவரான ஹிட்லரைக்கொண்டு, ஒரு உலக யுத்தத்தையே உண்டாக்கிவிட்டது.

குடியாட்சியில் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகளுக்குள் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றக் கட்சிதான் மந்திரி சபையை அமைத்து ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்துகிறது, மாற்றுக் கட்சிகள் அரசாங்கத்தை அவ்வப்பொழுது கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்தும் குறைகளை எடுத்துக் காட்டியும், ஆளும் கட்சியின் திட்டங்களுக்குத் திருத்தங்கள் பிரரேபித்தும் முக்கியமான சேவை செய்கின்றன. அதனால்தான் இங்கிலாந்து போன்ற நாடுகளில் மந்திரிகளுக்குத் தரப்படுவது போலவே எதிர்க்கட்சித் தலைவருக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

உண்மையான ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிக்கு மதிப்பு இருக்க வேண்டும். ஆளும் கட்சியிலிருந்து அதிகாரத்தை கைப்பற்றவேண்டிய சட்டசபையிலும் வெளியிலும் இடைவிடாமல் பிரச்சாரம் செய்து ஆளும் கட்சி செய்யும் தப்புகளையும், செய்யத் தவறிய நலன்களையும் எடுத்துக்காட்டி பொதுமக்களின் ஆதரவைப் பெற முயற்சித்துக் கொண்டே இருக்கும். தோற்றுப்

அமெரிக்கா, பிரிட்டிஷ் நாடுகளில் வெளியாகும் எந்தப் பத்திரிகைகளுக்கும் தயவுசெய்து சந்தா விவரத்திற்கும் மற்றவிவரங்களுக்கும் உடனே எழுதுங்கள்.

அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள்

SALEM ADVERTISING SERVICE
GUGAI, SALEM, SOUTH INDIA

போய் தேய்ந்து போன ஒரு கட்சி தீவிர முயற்சியினால் தன் செல்வாக்கை வளர்த்து அடுத்து வரும் தேர்தலில் பெரும்பான்மை பலம் பொருந்திய கட்சியாக மாறி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அதற்கு முழு சந்தர்ப்பமும் இருக்க வேண்டும்.

ஒரு நாட்டில் பல கட்சிகளிருந்தால் எந்த ஒரு கட்சியும் தனித்து ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டாட்சி ஏற்படுத்தும்படி நேரிடுகிறது. பிரான்ஸ் தேசத்தில் அநேக கட்சிகளிருப்பதால் கூட்டாட்சியைத்தவிர அங்கு வேறு வழியில்லை. பிரஞ்சு மந்திரிசபை பல சிறு கட்சிகளின் ஆதரவைப் பெற்றுத்தான் வாழ முடிகிறது. கூடிச் சேர்ந்த ஒன்றிரண்டு சிறு கட்சிகள் அபிப்பிராய பேதத்தினால் மந்திரி சபையிலிருந்து விலக நேரிட்டால் மந்திரி சபைக்கு ஆபத்து ஏற்படுகிறது. இதனால் எந்த ஒரு மந்திரி சபையும் நிலைத்திருக்க வழி இல்லாமற் போகிறது. பிரான்சில் சாதாரணமாக ஒரு மந்திரி சபை ஒரு வருஷகாலம் பதவியில் நீடித்திருப்பதே கடினம்.

இவ்விதம் அடிக்கடி மந்திரி சபைகள் கலைக்கப்பட்டு, புதிய மந்திரி சபைகள் தோன்றிக்கொண்டிருந்தால் அரசியல் நிர்வாகத்தின் நிலையான தன்மையே போய்விடும். கட்சிகளுக்குள் ஒன்றையொன்று பிரிக்கும் சூழ்ச்சிகளும் அல்லது ஒன்றுக்கொன்று நட்பை வளர்க்க தந்திரங்களும் கையாளப்படும். இதனால் அரசியலில் கண்ணியம் நேர்மை முதலிய நல்ல பண்புகள் பரவுவதற்கே சாத்தியமில்லாமற் போகிறது.

கூட்டாட்சி முறையில் இன்னொரு கெடுதலும் உண்டு. ஆட்சிப்பொறுப்பை ஏற்று வகிக்கும் கூட்டுக் கட்சிகள், தாங்கள் தேர்தல் காலங்களில் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் போகிறது. ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய கொள்கைகளையும், காரியத்திட்டங்களையும், நிறைவேற்ற முயற்சி செய்து கொண்டும், மற்ற கட்சிகளின் முயற்சிகளை முறியடிப்பதிலுமே முனைந்துகொண்டிருக்கும்.

மேலும், கூட்டாட்சியில், பொறுப்பான ஆட்சியையும் எதிர்பார்க்க முடியாது. ஆட்சியில் ஏற்படும் தவறுகளுக்கு யார் பொறுப்பாளி என்று நிர்ணயிப்பது முடியாது. ஒவ்வொரு கட்சியும் தவறுக்கான பொறுப்பை மற்றக் கட்சிகளின் பேரில் சுமத்தப் பார்ப்பதனால் கூட்டாட்சியில் அடிக்கடி பூசல்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

அதனால் ஒரே எதிர்க்கட்சியுள்ள குடியாட்சியில் ஆட்சி நல்லவிதமாக நடக்கிறது. ஒரு கட்சி பதவியிலிருக்கவும், மற்றொரு கட்சி அதன் நடவடிக்கைகளைக் கவனித்து அதன் குறைகளை எடுத்துக் காட்டவும் முடிகிறது. எதிர்ப்பைக்கண்டு ஆட்சியிலிருக்கும் கட்சி தன்னைத் திருத்திக்கொள்ளவும், தவறுகள் செய்யாமல் எச்சரிக்கையுடன் நிர்வாகம் செய்யவும் ஏதுவாகிறது. ஒரே கட்சி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்வதனால், பலமுள்ள எதிர்ப்பு இருக்கும்.

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி என இரண்டு பெரிய கட்சிகள் உண்டு. அவை இரண்டுக்குள்ளாக உண்மையில் பெரிய கொள்கை வேற்றுமையோ அல்லது அபிப்பிராய பேதமோ இல்லை. இருந்தாலும் உண்மையான ஜனநாயகக் கொள்கைப்பிரகாரம் ஒரு கட்சி ஆள, மற்றொரு கட்சி எதிர்க்க வசதியாக இருக்கிறது. ஆளும் கட்சி, முறை தவறாமல் இருக்க உதவுகிறது. பலத்த எதிர்ப்பில்லாவிட்டால், ஆளும் கட்சி எதேச்சாதிகாரமாக நடந்து மக்களின் உரிமைகளைப் பறித்துவிடலாம்.

அமைதியான ஆட்சிக்கு ஆலயமெனப்புகழப்படும் இங்கிலாந்தில், அரசியல் கட்சிகள் அரசியல் பிரச்னைகள் எழும்போது மட்டும் தங்கள் கருத்து, கொள்கை வேற்றுமைகளைக் காட்டிக் கொள்கின்றனவே தவிர, வேறு எப்பொழுதும் தங்கள் வித்தியாசங்களை வளர்த்துக் கொண்டு அரசியல் வாழ்வையே கசப்பானதாக மாற்றிக் கொள்வதில்லை. ஆளும்கட்சி தன் நிலையற்ற தன்மையை உணர்ந்து, எதிர்க்கட்சி ஆட்சிப்பீடத்தில் அடுத்ததேர்தலுக்குப் பின் அமரலாம் என்பதை மனதில் கொண்டு, மதிப்போடும் மரியாதையுடனும் நடந்துகொள்கிறது. அதிகாரம் நம்மிடம் வந்துவிட்டது; நம்மை யாரும் அசைக்கமுடியாது என்ற அசட்டு தைரியத்தில் அடுத்த தேர்தலுக்குள் எதிர்க் கட்சியை அடக்கு முறையினால் நசுக்கி விடலாம் என்ற எண்ணமே எழுவதில்லை. அடக்கு முறை ஆயுதத்தை எந்தக் கட்சி வீசினாலும், அதுவே போதும்—மக்களுடைய ஆதரவு எதிர்க் கட்சிக்கு அபரிமிதமாகக் கிடைப்பதற்கு.

இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளுக்குள் இருக்கும் பேதத்தைச் சட்டசபையில்தான் பார்க்க முடியுமேயல்லாமல், அரசியலுக்கு அப்பாற்பட்ட சொந்த விவகாரங்களில் கட்சி மனப்பான்மையும் குரோதமும் வளருவதற்கு அவர்கள் விடுவதில்லை. அதனால் ஒரு கட்சியினர் மற்றொரு கட்சியினரிடம் சட்டசபை உள்ளேயும் சரி, வெளியிலேயும் சரி, அநாகரிகமான விதத்தில் நடந்துகொள்வதும் வெறுப்பைக் காட்டிக் கொள்வதும் அங்கே காணமுடியாது. இந்த சிறந்த பண்புதான் ஆங்கிலேயர்களின் ஆட்சி, மக்களாட்சிக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும்படி செய்கிறது.

குடியாட்சியில் கட்சிகள் அவசியமென்று ஒப்புக் கொண்டால், அக்கட்சிகள் பொதுவான சில நியதிகளுக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடந்தால்தான் மக்களாட்சி உண்மையிலேயே மக்களுடைய ஆட்சியாக மலர முடியும்.

விற்பனையாகி வருகிறது

திராவிடர் டைரி 1954

தி. மு. கழக முழு விவரங்களும், 800-கிளைகளின் செயலாளர்கள், பொருளாளர் பெயர்ப் பட்டியலும், பேச்சாளர் முகவரியும் விற்பனைவரி ஆவணப்பதிவு, தபால் தந்தி விவரங்களும் அடங்கியது.

சொற்ப காபிகளே உள்ளன. 500-பக்கம் விலை ரூ 1—0—0. விற்பனைக்கழிவு 20% தனிப் படி வேண்டுவோர் ரூ. 1—2—0 அனுப்புக. தேவைக்கு உடனே முன்பணத்துடன் எழுதவும்.

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு, சென்னை 1.

பூக்குடலை

[இராதாமணாளன்]

1

வெயிலின் கனல்மூச்சுச் சிறிது தணிந்ததும், பல வர்ண மலர்கள் நிறைந்த பூக்குடலையைக் கையில் எடுத்துக் கொண்டு, சாரதா தன் குடிசையை விட்டு வெளியே புறப்படுவாள். "பூவோ பூ! மல்லிகை! முல்லை! கதம்பம்! பூவோ பூ!" என்று குயிலினும் இனிய குரலில் கூவிக் கொண்டே, தெருத் தெருவாகச் சென்று விற்பாள். வாடிக்கைக்காரர்களுக்கெல்லாம் பூ கொடுத்து விட்டு, கடைசியாகக் கோவிந்தப்பெருமாள் கோவிலுக்குப் புறப்படுவாள்.

கோயிலுக்கு எதிரே உள்ள சில பெட்டிக் கடைகளும் அதற்கு அப்பாலும் வியாபாரத்திற்கு வைத்திருக்கும் பலவகைப்பட்ட பழங்கள் காய்கறிகளுக்கிடையே, தன் பூக்குடலையையும் வைத்து, அவளும் ஒரு வியாபாரியாகிவிடுவாள். பொழுது தாழத் தாழ ஆண்டவனைத் தொழ வருவோரின் கூட்டம் பெருத்துவிடும். நல்லூரிலுள்ள கோவிந்தப் பெருமாளைத் தரிசிக்க, தினந்தினம் வந்து சேருகின்ற தீர்த்த யாத்திரிகர்களும், பக்தர்களும், கோயிலுக்கு எதிரே உள்ள அந்தச் சிறிய சந்தையில் நின்று ஏதாவது வாங்காமல் போகமாட்டார்கள்.

பூக்காரியான அந்த இளங்குமரி சாரதா எங்கே இருந்தாலும், மக்கள் அங்கே இழுக்கப்படுவார்கள். அந்தத் தங்கமேனியாளைத் தாண்டிப்போகும் எல்லோருக்கும், அவளிடம் காலணாவிற்காகிலும் பூ வாங்காமல் போக மனம் வராது. அப்படிப்பட்ட ஒரு அசாதாரணமான வசீகரத் தன்மை, அந்தத் தாமரை முகத்திற்கும், அந்த முகத்தோடு பிறந்த சுந்தரப் புன்னகைக்கும் இருந்தது. அந்த மங்காத புன்னகை, யாரையும் மயக்கிவிடும். பார்ப்போரைக் கண்டு, தான் புன்முறுவல் செய்வதாகவோ, அந்தப் புன்முறுவல் ஆண்டவனின் பூஜைக்கு வருவோரின் அகத்திலே புயலை எழுப்புவதாகவோ, அவள் அறியமாட்டாள். அவ்வளவு கள்ளங்கபடமற்றவள், அவள்!

சாரதாவிற்குத் தாயும் தந்தையுமில்லை. பெரியப்பாவும் பாட்டியும் இவளை வளர்த்து வந்தார்கள். ஏரிக்கோடியிலிருந்த பூந்தோட்டத்திலும், அதற்கு அடுத்திருந்த மாந்தோப்பிலும், அவர்கள் வேலை செய்துகொண்டும், காவல் காத்துக் கொண்டும் இருப்பார்கள்.

அந்தி மயங்கியதும், காலியான பூக்குடலையில் ஏதாவது பழங்களையோ, காய்கறிகளையோ வாங்கிப் போட்டுக்கொண்டு, அதைத் தோளில் மாட்டிக் கொண்டு, உல்லாசமாக மெல்லிய குரலில் பாடிக் கொண்டே அவள் குடிசைக்குத் திரும்புவாள். பெரியப்பாவும் பாட்டியும் இரவு சாப்பாட்டிற்கு வர, நேரம் கடந்துவிடலாம். அவர்கள் வருவதற்கு முன்னால், அவள்தான் சமையல் செய்யவேண்டும்.

ஊரின் ஒரு ஒதுக்குப்புறத்தில்தான், அவளது குடிசை இருந்தது. மாக்கொம்புகளைக்கொண்டு எழுப்பப்பட்டு, மேல் பாகம் பனையோலையால் மறைக்கப்பட்டு, சுமார் பத்தடி உயரமுள்ள அந்தச் சிறிய குடிசைக்கு மொத்தம் ஒரே ஒரு அறைதான். சமையல் அறையும், படுக்கையறையும் எல்லாம் அதுதான்! அந்தக் குடிசைக்குள்ளே ஒரு திண்ணையுமிருந்தது.

அன்று வழக்கத்திற்கு மாறாக நேரம் கடந்து தான் குடிசைக்குத் திரும்பினாள். குடிசையின் வாயிலை அடைந்ததும், பூக்குடலையை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு தலைகுனிந்து உள்ளே புகுந்தாள்.

பூக்குடலையைத் திண்ணையின்மேல் வைத்து, தீப்பெட்டியைத் தேடியெடுத்து ஒரு தகர விளக்கை ஏற்றினாள். அவள் பூக்குடலையைப் பார்த்தாள். ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது? ஆசையோடு வாங்கி அதிலே வைத்துக்கொண்டுவந்த திராக்ஷை குலைகளுக்குப் பதில், நீண்டு வளைந்த புளியங்காய்கள் இருக்கின்றனவே! இதென்ன மந்திரம்!

நம்ப முடியாமல் அவள் குடலையையே விழித்து விழித்துப் பார்த்தாள். அற்புதமும் ஆச்சரியமும் கலந்த ஒரு புன்சிரிப்பு, அவளுடைய செவ்விதழ்களிலே விரிந்தது.

குடிசைக்குப் பின்னாலிருந்து ஒரு உரத்த சிரிப்பு! அவள் கூர்ந்து கேட்டாள்! மறுமுறையும் அந்த வாய்விட்ட சிரிப்பு முழங்கிற்று. அவள் கண்களிலே ஒரு ஒளி மின்னிற்று. அவள் முகம் குலுக்கி, அந்தப் புன்சிரிப்பை மாற்றி, உதட்டை மடக்கி அழகு காட்டினாள்! பிறகு அவள், "திருடன்! திருடன்! திராக்ஷைத் திருடன்!" என்று கத்தினாள்.

"இல்லை! மந்திரவாதி!" என்று சொல்லிக்கொண்டே, முத்து உள்ளே வந்து திண்ணையில் உட்கார்ந்தான். அவனைப் பார்த்தால்

ஒரு மந்திரவாதியைப் போலத்தான் தோன்றியது. கிழிந்து அழுக்கேறிய ஒரு துண்டும், பொத்தான்களுக்குப் பதில் ஆங்காங்கே இழுத்துக்கட்டிய கறுப்புநிற நீளமான கோட்டும் அணிந்து, கையில் ஒரு சிவப்பு நிறப் பையை வைத்திருந்தான்.

அவளது எழில் முகத்தைப் பார்த்து, எளனத்தோடு அவன் திரும்பவும் சிரித்தான். "திருடன்! திருடன்! திராக்ஷைத் திருடன்!!" என்று பாசமும் பரிகாசமும் கலந்த குரலில் அந்த மலர் மேனியாள் கூறினாள்.

முத்து பையைத் திறந்து, அதனின்றும் திராக்ஷைக் குலைகளை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்தான். "நீ என்ன தூங்கிக்கொண்டா நடக்கிறாய்? அந்தத் தோட்டத்தின் அருகிலிருந்தே உன் பின்னால் வந்து, திராக்ஷையை எடுத்து எடுத்துப் புளியங்காயை வைத்துக்கொண்டே வருகிறேன், உனக்குக் கொஞ்சம்கூடத் தெரியவில்லையே, அப்பாவிப் பெண்ணே!"

பூக்குடலையிலிருந்த ஒரு புளியங்காயை எடுத்துக் கடித்துக்கொண்டே, "பூ விற்க இன்று சிறிய நேரமாகிவிட்டது! நேரமாகிவிட்டதே, இனிமேல்போய் சமையல் செய்தாகவேண்டுமே என்ற கவலையோடு, நான் வேகமாக நடந்துவந்தேன்!" என்று நாணத்தோடு சொன்னாள். ஒரு திராக்ஷைக் குலையை எடுத்து, புன்னகையோடு அவனிடம் கொடுத்தாள். ஒவ்வொரு பழமாக வாயில் போட்டுக்கொண்டே, "இருட்டாகியும் நீ வாராததினால் உன்னைத் தேடி, கோயிலுக்குப் புறப்பட்டேன்! நிழல்போல வந்த உன்னைக் கண்டதும், உடனே பாறைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டேன்......" என்று சிறிது பெருமிதத்தோடு சொல்லிக்கொண்டுவந்தவனை சாரதா இடைமறித்து, "போதும் போதும்! ஜனகமகாராஜாவின் வில்லை ஒடித்த இராமர் கூட இப்படி வீரம் பேசியிருக்கமாட்டார்!" என்று குறும்போடு சொல்லிக்கொண்டே, அந்தக் காளையின் உடல் தன்னுடம்போடு படும்படியாகப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

"வில்லொடித்த இராவணன் என்று என்னைச் சொல்லி, நீ சீதையாகப் பார்க்கிறாயா?"

"வேண்டாம்! வேண்டாம்! நான் சீதையாக வேண்டாம்! எவனாவது 'இராமன்' என்னைத் தூக்கிக்கொண்டு போய்விட்டால், பாவம் நீ அழுவாய்!" என்று கூறி, கலுக்கென்று சிரித்தாள். ஆசைக்குரியவனிடத்தில் பேசிக்கொண்டிருந்ததில், அவள் சமையலை மறந்தே போய்விட்டாள்.

சிறிது நேரம் கழித்ததும், செய்யவேண்டிய வேலை கவனத்திற்கு வரவே, திடுக்கிட்டாள். சமையலுக்குத் தயாரானாள். அந்தக் குடிசையில் துளிதண்ணீர்கூட இல்லை.

"கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து தருகிறாயா?" என்று முத்துவை அவள் கெஞ்சிக்கேட்டாள்.

"ஓ தயார்!"

மூலையிலிருந்த ஒரு மண் குடத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அந்தக் குடத்தை அவன் தலையில் வைத்து, ஒரு பாட்டுப் பாடிக்கொண்டே, இருட்டில் புகுந்து குளத்திற்குச் சென்றான்.

முத்து தண்ணீர்க்குடத்தோடு திரும்பியபோது, அவள் மிளகாய் அறைத்துக்கொண்டிருந்தாள்.

"அரிசி கழுவிப்போடவேண்டும்! இந்த மிளகாயைக் கொஞ்சம் அறைத்துத் தருகிறாயா?" என்று அவள் கெஞ்சினாள்.

முத்து கெம்பீரத்தோடு அவளைப் பார்த்தான். அவளுடைய வளையல் நிறைந்த கையைப் பிடித்துத் தள்ளிவிட்டு, அந்த வேலையில் தீவிரமாக ஈடுபட்டான்.

"இன்று இதை நான் செய்துதருகிறேன். ஆனால் நம்முடைய கல்யாணமான பிறகு, இப்படியெல்லாம் செய்யமாட்டேன்! ஆமாம்! அன்று நான் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, 'அடியே சாரதா கொண்டுவா பலகாரம்! காபி' என்று அதிகாரத்தோடு கட்டளையிடுவேன். உடனே நீ கொண்டுவரவில்லை என்றால் ஒரு உதை தருவேன்! சட்டிபானைகளெல்லாம் தூள் தூளாகப் பறக்கும்! நெருப்பில் தண்ணீரைச் சாய்ப்பேன்! தண்ணீரில் நெருப்பைக் கொட்டுவேன்! தெரியுமா?"

அவள் வாய்விட்டுச் சிரித்தாள். "அப்பப்பா, ரொம்பவும் தொல்லை பிடித்த கணவன்தான்!" என்று சொல்லிக்கொண்டே ஒரு விரலால் மிளகாயை எடுத்து அவன் கன்னத்தில் தேய்த்துவிட்டாள். அவன் துள்ளியெழுந்து, அவளுடைய கன்னத்தைக் கிள்ளினான். அவனைப் பிடித்துப் பின்னால் தள்ளினாள். அடுக்கியிருந்த வறட்டிகளின்மீது அவன் விழுந்ததைக் கண்டதும், அவள் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அவன் திரும்பவும் மிளகாய் அரைக்கத் தொடங்கினான். அந்தத் திண்ணையின்மீது கால் நீட்டி உட்கார்ந்துகொண்டு அவள் புளியங்காயைத் தின்னத் தொடங்கினாள். இடையிடையே அவனது காதுகளைக் குறிவைத்து, புளியங் கொட்டைகளை எறிந்தாள்.

"சாரதா!"

முத்து தன்னுடைய கையை உயர்த்தி, ஐந்து விரல்களை அவளுக்குக் காட்டினான். அவளுக்குப் புரிந்தது! கல்யாணத்திற்கு இன்னும் ஐந்து மாதங்கள்! ஐந்தே ஐந்து மாதங்கள்! நூறு ரூபாய் சேர்த்து, குடிசை கட்டி, சாரதாவை மணந்து, அவன் இன்பமாக வாழ்க்கை நடத்துவான்.

அவர்களிருவம் வரவிருக்கின்ற அந்த இன்ப வாழ்க்கையைக் கற்பனையில் கண்டு, மகிழ்ச்சியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். காதல் தென்றலிலே இன்புற்ற அந்த உள்ளங்கள் சிலுசிலுத்தன. அவர்களின் கலக்கமற்ற காதலை வாழ்த்துவதைப்போல, அந்தத் தரை விளக்கின் தளர்ந்த சுடரும் தலையாட்டியது.

சாரதா குதித்தெழுந்து, "அவர்கள் வருகிறார்கள்!" என்றாள், பதை பதைப்போடு. பெரியப்பாவும் பாட்டியும் ஏதோ பேசிக்கொண்டே வந்தனர். முத்து இருளில் புகுந்து, ஓடி மறைந்தான்.

> சமூகம், ஒரு விசித்திரமான வேதனைக் கூண்டு. அதில் ஏழைகள் கைதிகளாகிறார்கள். அவர்களைத் தண்டிக்கவும், கண்டிக்கவும் பணம் நீதிபதியாகிறது
>
> —காண்டேகர்

2

முத்து ஒரு செக்கு ஓட்டும் தொழிலாளி. வயது சென்ற தாயும் அவனும், சாரதாவின் குடிசைக்குப் பக்கத்துக் குடிசையில்தான், சில ஆண்டுகளுக்கு முன்பு குடியிருந்தார்கள். அப்பொழுது சாரதா, பாவாடை கட்டிக்கொண்டு மான் குட்டியைப்போலத் துருதுருவென்று அப்படியும் இப்படியும் துள்ளிக் குதித்து விளையாடும், ஒரு சிறு பெண். அந்தக் கூவத் தெரியாக் குயிலின் குஞ்சை, முத்துவுக்குக் கட்டிவிட வேண்டுமென்று, அவன் தாய் அடிக்கடி கூறிக்கொண்டிருப்பாள்.

முத்து ஏழைதான். அவனுக்கு மாதச் சம்பளம், சாப்பாடு போட்டு ரூபாய் மூன்று! மூன்று வருடம் வேலை செய்து, பணத்தைச் சிறுகச் சிறுகச் சேர்த்து, கய்யாணம் செய்துவிட அவன் அம்மா நினைத்தாள். ஆனால் அப்படி நினைத்த ஆறும் மாதம், அவள் இறந்துவிட்டாள்.

அம்மாவின் விருப்பத்தின்படியே, சாரதாவையே மணம்செய்துகொள்ள வேண்டுமென்று அவன் தீர்மானித்தான். நாட்களின் ஓட்டத்தில், அவனது மனதை அள்ளும்படியான அழகு சிலையாக அவள் மாறிவிட்டாள். அவளோடு பேசவேண்டும் என்ற ஆசை, அடிக்கடி அவன் மனதில் துள்ளிக்குதித்தது. பொன்னிறமான அந்த இளங்கன்னியின் மனதிலும், காதல் குருத்துவிட்டது! அவனது இதய சிம்மாசனத்தில் அமரும், ராணியாகிவிட்டாள். அவள் வீட்டிலும் அந்தத் திருமணத்திற்குத் தடையில்லை. மூன்றாண்டுகள் முடியும் அந்த நன்னாளை, முத்து ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அவளை ஒரு நாளாவது பார்க்காவிட்டால், அவனுக்குத் தூக்கம் வராது. அவன் தாமரைக் குளத்தில் இறங்கி, அவளுக்குத் தாமரை கொண்டுவந்து கொடுப்பான். மரத்திலேறி மாங்காய்கள் பறித்துத் தருவான். மாலையில் அவள் திரும்பிவரும் வரையில் காத்து, ஏதாவது ஒரு மரத்தின்மீதேறி நாட்டுப் பாடல்கள் பாடிக்கொண்டிருப்பான். சில வேலைகளில் திருட்டுத்தனமாக அவளுக்கு வீட்டுவேலைகளையும் செய்துவருவான். என்றைக்குப் பூக்குடலை சீக்கிரத்தில் காலியாகி விடுகிறதோ, அன்றைக்கு அவர்களிருவரையும் ஊருக்கு வடக்கே இருந்த மணல்மேட்டில், கொஞ்சிக் குலவிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

களிப்போடு இப்படிக்காலம் போய்க்கொண்டிருந்தது. திருமணத்திற்கு இன்னும் மூன்றே மூன்று மாதங்கள்தான் பாக்கி.

அன்றொரு ஞாயிற்றுக்கிழமை. நல்லூரிலிருந்த ஒரு பெரிய மாளிகையிலேயே ஒரு மாதம் தங்குவதற்கு, சென்னையிலிருந்து ஒரு படமுதலாளி தன் குடும்பத்தோடு வந்துசேர்ந்தார். தினந்தினம் தெருவழியாகப் பூ விற்றுச் சென்ற சாரதாவை அவர் பார்த்தார். அவளுடையகுரலின் இனிமையும், பார்வையின் மோகனமும், முகத்தின் வனப்பும் வசீகரமும், குமரிப் பருவத்தின் குதூகலத்தோடு விளங்கிய அங்க அவயவங்களின் கட்டும்; கவர்ச்சியும், அவருடைய இதயத்தைத் தொட்டுத் தடவின.

அவர் 'கிராமமோகினி' என்ற ஒரு புதிய படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார். அந்தப் படத்திற்குக் கதாநாயகியாக அவளைத் தேர்ந்தெடுத்தார். அவளோடு சாகசமாகப் பேசி, குடும்ப விஷயங்களை எல்லாம் தெரிந்து கொண்டார். மறுநாள் அவளது பெரியப்பாவையும் பாட்டியையும் சந்தித்தார். சினிமாவில் நடிக்கச் சாரதாவை அனுப்ப வேண்டுமென்றும், அதற்காக இரண்டாயிரம் ரூபாய் தருவதாகவும் ஆசைவார்த்தைகளைக் கூறி, அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தார். அந்த இளம்பெண்ணிடம் பலதும் கூறி மயக்கி, முத்துவையும் கல்யாணத்தையும் மறந்து, அவளே சரியென்று கூறும்படி செய்தார்கள். புதையல் கிடைத்ததுபோல அந்தப் பணத்தை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு, சாரதாவை அவருக்கு விற்றார்கள்.

3

"சாரதாவைச் சினிமாக்காரர்கள் கொண்டுபோகிறார்கள்!" என்ற பேச்சை, காலையில் ஒரு பழக்கநரியின் மூலமாக முத்து கேள்விப்பட்டான். அன்று மாலை சாரதாவோடு அவன் அந்த மணல் மேட்டிற்குச்சென்றான். இருவரும் ஒன்றும் பேசாமல், மௌனமாகவே நடந்து சென்றனர்.

மணல்மேட்டை அடைந்ததும், "சாரதா, நீ போகத் தீர்மானித்துவிட்டாயா?" என்று ஏக்கமும் ஏமாற்றமும் கலந்த குரலில் கேட்டான்.

சாரதா முகம் தாழ்த்தினாள். அவனை நேருக்கு நேர் பார்க்க, அவளால் முடியவில்லை.

"நம்முடைய இந்தச் சாயங்காலச் சந்திப்புகள், சந்தோஷசல்லாபங்கள், வினோதவிளையாட்டுகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு, காலிகளும், காமுகர்களும், விஷமிகளும், விபசாரிகளும் நிறைந்த பட்டணத்திற்கா போகத் தீர்மானித்துவிட்டாய்?" அவன் குரலில் சோகம் மட்டுமல்ல, ஆத்திரமும் கலந்திருந்தது.

"கிராம பக்களுக்கு பரந்து விரிந்திருக்கும் இந்த உலகம் தெரிவது கிடையாது! அதனால்தான் கிராமத்தைவிட்டு வெளியில் செல்ல மனம் வராமல், தலைமுறை தலைமுறையாக வறுமைக்கும் வாட்டத்திற்கும் இடையில் சிக்கி வதைகிறார்கள்! தங்கள் சந்ததியாருக்கும் அதே அறியாமையையும் அவல வாழ்க்கையையும் சாசனமெழுதி வைத்துவிடுகிறார்கள்!" என்று சினிமா முதலாளி அவளை மயக்கக் கூறிய அதே வார்த்தைகளை அவள் கிளிப்பிள்ளையைப்போல ஒப்புவித்தாள்—தலையை உயர்த்தாமலேயே!

"சாரதா........." என்ன சொல்வதென்று புரியாமல் அவன் திணறினான்.

"நான் நல்ல நிலைக்கு வருவேன்! பணம் சம்பாதிப்பேன்! அதன் பிறகு நாம் மணஞ்செய்துகொண்டு

> சொத்துசொத்தென்று அங்கலாய்க்கிறோமே, அப்படி என்றால் என்ன தெரியுமா? மற்றவர்களுடைய உழைப்பை நம்முடைய பணமாக மாற்றிக் கொள்ளும் ஒரு திருட்டுத்தனம்தான் அது! வேறொன்றுமில்லை
>
> —டால்ஸ்டாய்

இன்பமாக வாழக்கூடாதா?'' என்று மணல்மேட்டிற்கு அருகே முளைத்திருந்த ஒரு சிறிய மாஞ்செடியை உற்றுப் பார்த்துக்கொண்டே, அவள் சென்றாள்.

“நீ யாருக்காக நகரத்திற்குச்செல்கிறாய்?''முத்துவின் குரல் இடறிற்று. அவள் பதில் கூறவில்லை.

“நான் ஏழையாகப் பிறந்துவிட்டேன்! சாரதா, அது என்னுடைய குற்றமா?'' இடறிய குரல், விம்மலாக மாறிற்று.

சாரதாவின் தங்கமேனி தடதடவெனநடுங்கியது. வேல்விழிகளிலே நீர் நிறைந்தது. ஒன்றோடொன்று ஒட்டாமலிருந்த மணலை அவள் வெறித்துப் பார்த்தாள். அவளுடைய தோளின்மீது முத்துவின் கை பட்டதும், உடலிலிருந்து குளிர்ந்த சோக ஊற்றுகள் பீறிட்டுக் கிளம்புவதைப்போல அவளுக்குத் தோன்றியது.

“சாரதா, நான் செக்கு ஓட்டிக்கொண்டே இருக்கிறேன்! நீ பூ விற்றுக்கொண்டே இரு! அதைவிடப் பெரிய இன்பம் — அதைவிடக் கிடைக்கமுடியாத பெரிய சுகம்—நமக்கு வேண்டாம்! அந்தச் சினிமாக்காரனுடன் சென்றால், நீயே உன்னைக் கெடுத்துக் கொள்வாய்!'' என்று கூறிக்கொண்டே தன் கையால் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

“நீ ஏன் இப்படி சஞ்சலமும் சந்தேகமும் கொள்கிறாய்! என்னைக் காப்பாற்றிக்கொள்ள எனக்குத் தெரியாதா? நெருப்போடு விட்டில் விளையாடமுடியுமா? தங்கத்திற்குத் துரு பிடிப்பதுண்டா? அதிருஷ்டம் என்னை அழைக்கிறது! தடுக்காதே! நம்முடைய இந்த அன்பை, காதலை, நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன்! அப்படி மறந்தால் வாழமாட்டேன்! ஒரு நாள்—அது என்றைக்கு என்று இப்பொழுது கூறமுடியாது — பொன்னோடும், பொருளோடும் சாரதா இங்கேதிரும்பி வருவாள், முத்துவின் அன்புப் பீடத்தில் மனைவியாக அமர!''

“இந்த உறுதி தளராதே, சாரதா''

“சத்தியமாகத் தளராது!''

“அதுவே போதும்!'' என்று சொல்லி, அந்த மான்விழியாளை மார்புறத் தழுவிக்கொண்டான்.

கீழே வைத்திருந்த பூக்குடலையை எடுத்துக் கொண்டு, அவள் வேகமாகப் புறப்பட்டாள்.

“இரு! இன்று உன்னுடைய இறுதி வியாபார தினம் அல்லவா? சினிமாவில் நடிக்கச் செல்லும் உனக்கு, இனி எதற்கு இந்தப் பூக்குடலை! அது என்னிடம் இருக்கட்டும்! உன் நினைவுச் சின்னமாக இருக்கட்டும்!''

அவள் ஒப்புக்கொண்டாள். பிரிவு கூறும் முறையில், அவன் முகத்தை மீண்டும் அன்பு கனியப் பார்த்தாள்.

அவளுடைய பொற்கரத்தை அவன் பிடித்தான். அவனது கண்களில் நீர் நிறைந்தது. “இனி என்றைக்கு?.........'' அவனுடைய அந்தப் பார்வையில், இந்தக் கேள்வியின் பல்லாயிரம் நிழல்கள் அடங்கி இருந்தன.

அவளுடைய கருமையான கண்களை, அகல விரித்த கண்களால் உற்றுப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் அசைவற்று நின்றான். பிறகு அவன் முகத்தைத் தாழ்த்தினான். அவனது ஒரு கண்ணீர்த்துளி அவளது கன்னத்தில் விழுந்தது. “என்னுடைய நினைவுச்சின்னமாக இதை வைத்துக்கொள்'' என்று மனதை உருக்கும் குரலில் கூறி, அவளது மாம்பழக் கன்னத்தில் ஒரு முத்தம் வைத்தான்.

4

“கிராம மோகினி'' வெளிவந்ததும், சாரதாதேவியின் புகழ் நாடெங்கும் பரவியது. அவளுடைய அங்க அவயங்களின் அமைப்பும், அழகும், ஒரு முறை கண்டால், மறுமுறை கனவு காணவேண்டிய மதிமுகமும், பார்ப்போரைச் சொக்க வைக்கும் கருவிழிகளும், கேட்போரைப் போதை கொள்ளச் செய்யும் குயிலின் குரலும், சோலை மலரொளி போன்ற சொகுசுப் புன்னகையும், வண்ணமயில்போன்ற அசைவும் நெளிவும்—அவளொரு சிறந்த நடிகை என உலகிற்குப் பறைசாற்றின.

இரசிக கோடிகளின் ஏகோபித்த ஆதரவு! சின்ன—பெரிய பத்திரிகைகளின் ரக ரகமான புகழ்மாலைகள்! நடிக உலகில் எந்த ஒரு நடிகைக்கும், பொறாமையும் பொச்சரிப்பும் உண்டாக்கக்கூடிய வேகத்தில், அவள் புகழின் உச்சாணிக் கொம்பில் ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

அடையாற்றில் ஒரு பங்களா—கோடைக் காலத்தில் வசிக்க! மாம்பலத்தில் ஒரு மாளிகை—குளிர்காலத்தில் தங்க! இப்படி பருவக் காலங்களுக்கு ஏற்ப மாளிகைகளை அமைத்துக்கொண்டாள். பிரபுக்களும், குபேரன் வீட்டுச் செல்வக் குமாரர்களும், உயர்தரமான அரசாங்க அதிகாரிகளும்—அவளுடைய விருந்தினர்! கோடீசுவரர்கள், அவளுடைய நெருங்கிய தோழர்கள்! ஒரே ஒரு முறை அவளைத் தரிசிக்க ஏங்கித்தவம் செய்யும் இலட்சக்கணக்கான விசிறிகள்! கொட்டிக்கிடக்கும் பணம், நாடுமுழுவதும் எதிரொலிக்கும் புகழ், இதைவிட ஒரு சிங்காரிக்கு வேறென்ன வேண்டும்? ஆசை ஆகாயத்தைப் போன்றது! அந்த ஆசை அவளிடத்தில் ஒரு சுயநலத்தை உருவாக்கியது. போகபூமியில் சுற்றிச் சுழலும் சுதந்திரமும், பொங்கிவழிந்த இன்பவசதிகளும் அவளை மயக்கின.

பட்டுப் பட்டாடை அணிந்து, பளிங்கு மாளிகைகளில் செல்வச்சீமான்களின் பக்கத்தில் அமர்ந்து, மகிழ்ச்சி அதிகரிக்கத் தங்கக்கோப்பையில் மது அருந்தினாள். சப்ரமஞ்சத்தில் பட்டு மெத்தையில் சரசசல்லாபங்களில் திளைத்தாள். குடித்தாள்! விபசரித்தாள்! இவையொன்றும் அவளுக்

நாம் யாரையும் அடக்கி ஆள மாட்டோம். அதே நோக்கில், வேறு யாருக்கும் நம்மை அடக்கி ஆளவும் அனுமதிக்கமாட்டோம்.

—சன்-யாட்-சன்

குக் குற்றங்களாகத் தோன்றவில்லை ஆணவமும் அகம் பாவமும் அவளிடம் நாளுக்கு நாள், விஷம்போல் ஏறிக்கொண்டே சென்றன.

*　　*　　*

சதா சர்வ காலமும், அவள் நினைவாகவே—அவளுக்காகவே காத்துக்கொண்டு — நாட்களைக் கழித்து வந்த அந்தப் பழைய முத்துவையும், அவனுக்குத் தந்த வாக்குறுதியையும், அவள் அப்படியே மறந்து விட்டாள் என்பதைக் கூறத் தேவையில்லை.

வேலை முடிந்ததும், முத்து அந்த மணல் மேட்டின்மீது தனிமையில் உட்கார்ந்து சிந்திப்பான். "சாரதா பிரிந்து சென்றபோது சிறிய மாஞ்செடியாக இருந்தது, இப்பொழுது எவ்வளவு பெரிய மரமாகி விட்டது! காய்கள்கூடக் காய்த்துக் குலுங்குகின்றனவே! காலம் எவ்வளவு வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது!" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக் கொள்வான்.

ஊருக்குச் சிறிது தூரத்திலிருந்த பெரிய சாலையில் செல்லும் கார்களையும், அதிலிருக்கும் பணக்காரர்களையும் காணும்பொழுது, 'நானும் ஏன் ஒரு பணக்காரனாகப் பிறக்கவில்லை!" என்று அவனுக்குத் தோன்றும். அந்த நினைப்பு மறுபடியே மறைந்துவிடும். "அப்படி நான் பிறக்காதது எவ்வளவு நல்லதாயிற்று! இல்லாவிட்டால், என் சாரதாவைக் காணவோ, அவள் அன்பைப் பெறவோ முடிந்திருக்குமா? சாரதா! என் சாரதா! அவள்......எங்கே?"

செம்பீர அழகு நகரான சென்னையின் தெருக்களில், ஒரு பெரிய காரில், சாரதாவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு சென்றதாக, ஒருநாள் அவன் கனவு கண்டான். விழித்து, கண்ணைக் கசக்கி, மோவாய்க் கட்டையைத் தடவிக்கொண்டே, "சிலருக்குச் சில வேளைகளில் கனவு நனவாகிவிடும்!" என்று ஆறுதல் அடைந்தான்.

5

சாரதா தேவியின் மூன்று படங்கள் வெளிவந்ததும், அவள் அகில இந்திய புகழ்பெற்ற நடிகையாகி விட்டாள். பம்பாயில் ஒரு படத்தில் நடிக்க, அவளுக்கு அழைப்பு வந்தது. அவளை உடனிருந்து அழைத்துச் செல்ல, அந்தக் கம்பெனியின் டைரக்டர் சென்னைக்கே வந்துவிட்டார்.

தேன் மலர் கண்ட வண்டுபோல, சாரதாவின் மனம் பம்பாயைச் சுற்றியது. ஜுஹூவிலே குடிசைகளில் சென்று இன்பம் கொள்வதுபோலவும், தாஜ் மகால் ஓட்டலில் தனக்காகப் பெரிய விருந்துகள் நடப்பதைப்போலவும், ஸ்டுடியோ வேலைக்குப் பிறகு 'மலபார் ஹில்'லிலுள்ள வசந்த மாளிகையில் ஓய்வு எடுப்பதுபோலவும்—அவள் கற்பனை செய்து பார்த்து களிப்பால் கூத்தாடினாள்.

பம்பாய் செல்வதற்கு முன்னால், நல்லூர் சென்று கோவிந்தப் பெருமாளுக்கு அபிஷேகமும் அர்ச்சனையும் செய்வித்து, மேலும் மேலும் தனக்குப் பணமும் புகழும் தரும்படி பிரார்த்தித்துக்கொள்ளவேண்டுமென்ற ஆசை அவளுக்குத் தோன்றியது. பம்பாயிலிருந்து வந்த டைரக்டரை அழைத்துக்கொண்டு, தன் ஊருக்குப் புறப்பட்டாள். அங்கே ஒரு பெரிய பணக்காரன் வீட்டில், இருவரும் விருந்தினராகத் தங்கினர். மறுநாள் ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினர்.

ஏழாண்டுகள் உருண்டோடிய பிறகும், அவ்வூரின் நித்திய சம்பவங்களுக்குக் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்றும் வரவில்லை. யாத்திரீகர்கள் வந்தும் போய்க்கொண்டும் இருந்தனர். பெட்டிக் கடைக்காரர்கள், அன்றும் வரிசை வரிசையாக இடம் பிடித்திருந்தனர். பழங்களும் காய்கறிகளும் அன்றும் நிறைந்திருந்தன. வியாபாரிகளின் அழைப்பும் ஆரவாரமும், யாத்திரீகர்களின் போக்குவரத்தும், கூட்டத்தின் சலசலப்பும் நெருக்கமும், எல்லாம் ஒன்று சேர்ந்து அந்த இயற்கை அன்னையின் அமைதியைக் குலைத்தன.

டைரக்டர் அந்தப் புதிய காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து, இடையிடையே சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று, கைக்கேமராவால் படம் பிடித்துக் கொண்டார். அக்காட்சிகள், சாரதாவின் மனதில் அனேக சிந்தனைகளை எழுப்பின. ஆனால், சிரமப்பட்டு நினைவுபடுத்திக்கொண்ட இன்ப நினைவுகள், அந்தச் சூழ்நிலையை மூடுவதற்கு ஓர் ஆடையை நெய்து கொடுத்தன. கனவில் நடப்பவளைப்போல, அவள் நடந்துகொண்டிருந்தாள்.

முன்பு, தான் பூ விற்ற இடத்தில், ஒரு தள்ளாத கிழவி தக்காளிப் பழக்கூடையை வைத்துக்கொண்டு தூங்கி விழுந்துகொண்டிருந்தாள். அந்த இடம், அவளுடைய உள்ளத்திலே ஒரு குளிர்க் காற்றைப் பாய்ந்து ஓடும்படி செய்தது. "நேற்றுத்தானா நான் இங்கே பூ விற்றது?" இப்படி எண்ணியதும், அன்

நாடில்லை

தில்லைச்சிவன்

★

வீட்டினிலே சுவர்க்கரையில்
ஒருபுற்று வைத்து
விதம் விதமாய் உணவுபல
சேர்த்தங்கு இன்ப

ஓட்டமுடன் தன்இனத்தின்
கூட்டமுடன் வாழும்
உருவத்தில் மிகச்சிறிய
சிற்றெறும்பைக்கண்டு

வாட்டமுடன் ஐயையோ!
அடடா நாம் என்ன
வாழ வழியற்று விட்டோம்:
மானந்தான் எங்கே?

நாட்டமுடன் சுதந்திரராய்
நாமிங்குவாழ
நாடில்லை, எறும்புக்கும்
வீடுண்டு காண்பீர்!

றைய நாட்டுப்புறத்துச் சிறுமியாகிவிடுவதைப்போல அவளுக்குத் தோன்றியது.

"தயவுசெய்து, அதோ அந்தத் தக்காளி விற்கும் கிழவியை ஒரு படம் எடுங்கள்!" என்று டைரக்டரை அவள் வேண்டினாள். அவர், அந்தத் தூங்கிவிழும் கிழவியைப் படம் எடுத்தார்.

அன்று மாலை அவர்கள் திரும்பவும் வெளியில் சுற்றி வரப் புறப்பட்டனர். சிறு வயதில் கண்டு பழக்கப்பட்ட பல இடங்களின் வழியே சென்றபோது, பல பழைய நினைவுகள் சிறகுகளை அடித்துக்கொண்டு, அவளுடைய மனமென்ற கூட்டிற்குள் பறந்து வந்தன. அவற்றை அலட்சியமாகத் தள்ளிவிட அவளால் முடியவில்லை. அவள் அவற்றை — பழைய நினைவுகளை — தடவிக்கொடுக்கவேண்டியவளானாள்.

தான் பூக்குடலையைத் தோளில் மாட்டிக்கொண்டு சுற்றித் திரிந்த தெருக்கள், வெயிலுக்காக ஒதுங்கிய மரத்தடிகள், அருகிலிருந்த சுமைதாங்கிகள், தாமரைக் குளம், முத்துவோடு கொஞ்சி மகிழ்ந்த மணல்மேடு, அதன் பக்கத்தில் வளர்ந்திருந்த மாமரம்—இவையெல்லாம், அமைதி மொழியில் அவளோடு இன்பப் பேச்சுகள் நடத்தின.

கடைசியாக, முத்து முன்பிருந்த குடிசைக்கு வந்தனர். இப்பொழுது அந்தக் குடிசையோ தோட்டமோ அங்கே இல்லை. உதிர்ந்து இடிந்துபோன சுவர்கள்மட்டுமே நின்றிருந்தன. அங்கே அவள் கண்ட மாற்றம், அவள் உள்ளத்திலே ஒரு பெரும் பிளவை உண்டாக்கிற்று. அந்தப் பிளவை நோக்கி, ஒரு நூறு கேள்விகள் ஒன்றாகப் பாய்ந்தன.

முத்துவைப்பற்றி அறியவேண்டும் என்ற ஆசை அவளை வாட்டியது. மறுநாள் காலை ஒரு பால்காரியின் மூலம், அவனைப்பற்றி அறிந்தாள். முத்து உயிருடன் இருக்கிறான் என்றும், அவன் செக்கு ஓட்டும் வேலையைவிட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன என்றும், அங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் ஒரு குன்றின் சாரலில் ஒரு குடிசை கட்டித் தனியாக வாழ்வதாகவும், யாரோ ஒரு கிழவி உணவு தயாரித்துக் கொடுப்பதாகவும்—அவள் அறிந்தாள். அன்று மாலை அவனைப் பார்க்க டைரக்டருடன் அவள் புறப்பட்டாள்.

குடிசையின் திண்ணையில், ஏதோ சிந்தித்தபடி முத்து அமர்ந்திருந்தான். நாகரிகமான முறையில் ஆடைகள் அணிந்து, பெருத்த பணக்காரர்களைப் போன்ற தோற்றங்கொண்ட இருவர், தன்னருகே வருவதைக் கண்டதும், அவன் திகைத்து எழுந்து நின்றான்.

"பரவாயில்லை, உட்கார்! நாங்கள் இந்தக் குடிசையையும் மலைச்சாரலையும் படம் எடுக்கத்தான் வந்திருக்கிறோம்! வேறொன்றுமில்லை" என்று சாரதா கூறிவிட்டு, அவனது முகத்தைக் கவனித்தாள்.

முத்து அவர்களைக் கூர்ந்து பார்த்தான். சாரதா திண்ணையின் அருகே வந்து நின்றாள். "இந்தக் குடிசைக்குள்ளே போய்ப் பார்க்கலாமா?" என்று சிரித்துக்கொண்டே அவள் கேட்டாள். "எதற்கு? அதற்குள்ளே சட்டி பானைகளைத் தவிர வேறென்ன இருக்கப்போகிறது?" என்று தளர்ந்த குரலில் பதிலளித்தான்.

அவள் உள்ளே எட்டிப் பார்த்தாள். ஒரு கயிற்றுக் கட்டிலும், அதன்மேல் கிழிந்த பாயும், தலையணையும் இருந்தன. ஒரு குடலை, ஆமாம் பூக்குடலை! மிகப் பழையதும் பிய்ந்ததுமான அந்தப் பூக்குடலை, அவளைப் பார்த்து எள்ளி நகைத்தது. ஏழாண்டுகளுக்கு முன் தன்னுடைய குடலை அது! முத்து பூக்குடலையைக் கெஞ்சிப் பெற்றுக்கொண்ட அந்தக் காட்சி, அவள் மனக்கண்முன் வந்து நின்றது. உள்ளத்தில் காட்டு வெள்ளம்போல் பெருக்கெடுத்த அந்தத் திடீர் உணர்ச்சி, அவளது எலும்பையும் தேய்த்துக் கரைத்துவிடும்போலத் தோன்றியது.

"அம்மா, நீங்கள் எந்த ஊர்?" என்று மரியாதை நிறைந்த குரலில், அவன் கேட்டான்.

முத்துவை, பரிதாபமும் அன்பும், கருணையும் நிறைந்த கண்களோடு பார்த்துக்கொண்டு, 'சென்னை' என்று தாழ்ந்த குரலில் கூறினாள்.

"சென்னையா?" முத்துவின் கண்கள் அகன்றன. 'சென்னையா, என்னுடைய சாரதா அங்குதானே இருக்கிறாள்!"

"என்னுடைய சாரதா!" என்று அவன் கூறியது அவளுடைய மனதில் ஒருவித சிலுசிலுப்பை உண்டாக்கியது. என்ன அதிகாரம்—இருந்தாலும் அதைக் கேட்க எவ்வளவு இன்பம்! என்னுடைய சாரதா—வேறு யாராவது இப்படிக் கூறுவார்களா? கூறத்தான் முடியுமா? ஆனால், அடுத்த வினாடியே, அவளுடைய உள்ளத்தில் அகம்பாவம் தலைதூக்கி எழுந்தது.

"சீ! நானொரு செக்கு ஓட்டியின் அன்புக்குரியவளா?" என்று வெறுப்போடு நினைத்து—வேறு பக்கம் முகத்தைத் திருப்பி—எல்லாவற்றையும் மறக்க முயன்றாள்.

"என்னுடைய சாரதா ஒரு சினிமா நடிகை! அவளைப்பற்றி நீங்கள் கேட்டதில்லையா?"

"ஓகோ, சாரதா தேவியா?"

"இல்லை அம்மா, வெறும் சாரதாதான்!"

"எந்தச் சாரதா? அந்த மைசூர்க்காரியா?"

"அல்ல"

"பிறகு?"

"என் சாரதா, இந்த ஊர்தான்!"

"அடஅட, அந்தப் பெண்ணா? பாவம்! தெரியும், தெரியும்!"

'தெரியுமா அம்மா? அவள் சுகமாக, இருக்கிறாளா?"

"சுகமா? சுத்த பைத்தியமப்பா, நீ! ஒரு மோட்டார் விபத்தில் அவள் செத்து எவ்வளவு காலமாகிறது?"

"ஆ!"

மூட நம்பிக்கை— அறியாமை— இவற்றின் விளைவாக ஏற்படுகிற சுடுகாட்டு அமைதியைவிட, சுய சிந்தனை — பகுத்தறிவு — இவற்றின் விளைவாக ஏற்படுகிற கடும் புயலையும் கோடை இடியையும் தான் நான் விரும்புகிறேன்.

—இங்கர்சால்

"ஆமாம், அவள் இறந்து ஆறு வருஷங்களுக்கு மேலாகிறது!" என்று கூறியபோது, அவள் குரலே அவளுக்குப் பயங்கரமாகக் கேட்டது.

"சாரதா? என்னுடைய சாரதா? இறந்துவிட்டாளா?" என்று ஆவேசம் வந்தவனைப்போலக் கூறிக்கொண்டே, சோர்ந்து உட்கார்ந்துவிட்டான். கழுத்தில் புரண்டிருந்த கறுத்த மயிர்ச் சுருள்கள், காற்றில் அசைந்தன! ஆனால், அவன் இதயத்திற்கு அந்த அசைவாகிலும் இருந்ததா என்பது சந்தேகம்! பிணத்தின் முகத்திலாகிலும் சிறிது களையிருக்கும், அதுகூட அப்பொழுது அவன் முகத்தில் இல்லை!

அவனுடைய முகத்தை மறுமுறை பார்க்க, அவளுக்குத் தைரியம் வரவில்லை. அவள் கூறியது—சாரதா செத்துவிட்டாள் என்று சொல்லியது — உண்மையிலேயே நடந்துவிட்டதைப்போல அவளுக்குத் தோன்றியது. அவள் உடலில் உயிர் இருக்கிறதா? அது அவளுக்கே சந்தேகமாகிவிட்டது! "ஓடு! ஓடு! இந்த இடத்தைவிட்டே ஓடிவிடு!" என்று அவள் இதயத்தில் ஒரு குரல் ஓலமிட்டது. எப்படியோ தள்ளாடி நடந்து, டைரக்டரின் அருகே வந்து, "சீக்கிரம் புறப்படுங்கள்! என் தலை சுற்றுகிறது!" என்று திணறிக்கொண்டே கூறினாள்.

வீட்டிற்குத் திரும்பியதும், ஒரு அறையில் தனிமையில் உட்கார்ந்திருந்தாள்.

சுடுகின்ற சிந்தனைகள், இதயத்தை உடைத்துக்கொண்டுவரும் பழைய நினைவுகள், அகம்பாவமும் அன்பும் நடத்திய கொடிய போர்—அவளால் அவற்றை எல்லாம் தாளமுடியவில்லை. கதவுகளையும் ஜன்னல்களையும் மூடி, விளக்கையும் அணைத்துவிட்டு, இருட்டில் அமர்ந்து சிந்தித்தாள். மலைச்சாரலில் அன்று மாலை நடந்த அந்த நிகழ்ச்சிச் சித்திரத்தை, அறையில் ஆக்கிரமித்திருந்த இருள் திரையில், அவள் மீண்டும் கண்டாள். முத்துவின் உணர்ச்சியற்ற முகத்தையும், நீர் கொட்டிய கண்களையும் அவளால் மறக்கமுடியவில்லை. கண்களை மூடிக்கொண்டு யோசித்தாள். கடைசியாக ஒரு முடிவிற்கு வந்தாள். ஒரு புன்சிரிப்பு, அவளுடைய இதழ்களிடையே அரும்பியது.

7

அன்று இரவு!

அழகிய ஆடை அணிகளைப் பூண்டு ஒரு கண்ணாடியின் முன் ஒய்யாரமாகவந்து நின்றாள்.

அவள் சிங்காரத்தை, அவளே இரசித்தாள்! ஆகா, என்ன அழகு? எவ்வளவு ஜிலுஜிலுப்பு! தூயவெண்மை நிறமான பட்டுச்சேலை, இரத்தச் சிவப்பு நிறச் சோளி, பின்னியும் பின்னமலுமிருந்த கார்நிறக் கூந்தலில் வானவில்போல் சூடியிருந்த வண்ண மலர்கள், ஒளிவிடும் வெள்ளை முத்துக்கள் கோர்த்த பிறைசந்திரன் வடிவிலே மூக்கணி, கைவிரல்களில் கனக மோதிரங்கள், காதிலே........கழுத்திலே......கையிலே.......அப்பப்பா! என்ன மினுமினுப்பு? எவ்வளவு பளபளப்பு?

சிலைகள்தான்!

★

இறைவனுக்குப் பல்வேறு உருவங்களையும், அந்தந்த உருவங்களுக்கேற்றமுறையில் கதைகளையும் கற்பனைபண்ணியிருக்கிறார்கள், அன்றைய தமிழர்கள். ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றுமிலாத இறைவன், இப்படித்தான் ஆயிரம் திருநாமங்களுடனும், இன்னும் எண்ணற்ற உருவங்களுடனும் உருவாகியிருக்கிறான்—மனிதனது கற்பனையிலே.

இப்படிக் கற்பனை செய்ததையெல்லாம், கல்லிலும், செம்பிலும் வடித்தெடுத்திருக்கிறார்கள் நம் நாட்டுச் சிற்பிகள். அப்படி அவர்கள் உருவாக்கிய சிற்ப வடிவங்களே இன்று நமது தமிழ் நாட்டுக் கோயில்களில் எல்லாம் நிறைந்திருக்கின்றன.

'கல்கி'யில்

தொ. மு பாஸ்கரத்தொண்டைமான்.

அந்தக் கட்டழகி நிமிர்ந்து ஒரு புன்னகை செய்தாள்—சேசே, அது ஒரு வேசியின் புன்னகை அல்லவா?

திராக்ஷை நிறைந்த ஒரு வெள்ளித் தட்டைக் கையிலெடுத்து, அவள் வெளியே நடந்தாள். வண்டி தயாராக இருந்தது. இருள் நிறைந்த சாலை வழியே, வண்டி ஓடியது.

"கோமான்களும் கோடீஸ்வரர்களும் என் விரல் நுனியை முத்தமிட ஏங்கித் தவித்து, உற்றார் உறவினர்களையும் மனைவி மக்களையும் மறந்து, என் பின்னால் ஓடிவரக் காத்திருக்கிறார்கள்! ஆனால் நான், இதோ இன்றிரவு ஓர் ஓட்டாண்டியை நாடி ஓடுகிறேன்!...... என்னைக் கண்டதும் முத்து திகைப்பான்! விழிப்பவனைப் பார்த்து, 'சாரதாவின் ஆவி நான்!' என்பேன்! அப்பொழுது அந்தப் பரிதாபத்திற்குரியவனின் உணர்ச்சி என்னவாக இருக்கும்? என் நடிப்புத் திறமையை, நன்றாகப் பிரயோகிப்பேன்! பிறகு நான் வாய்விட்டுச் சிரிப்பேன்! ஓடிச் சென்று அவனைக் கட்டித் தழுவுவேன்! ஏழாண்டுகளுக்குமுன் தகர்ந்த காதல் கீதத்தை, நான் இன்று தொடர்ந்து பாடுவேன்! ஆம், இன்று ஒரே ஒரு இரவு மட்டும்—பிறகு, ஒரு கனவு போல எல்லாவற்றையும் மறந்துவிடும்படி நான் அவனிடம் கூறுவேன்..........."

சாரதா பைத்தியக்காரியைப்போல, தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள். அதைவிட ஒரு மகத்தான தியாகத்தை, அவளால் எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆனால் அது காதலுக்காகச் செய்யப்படும் தியாகம்தானா? அல்லவென்று அவள் மனமே, அவளை இடித்துக் கூறியது.

மலைச்சாரலை அடைந்ததும் வண்டியைத் திருப்பி அனுப்பிவிட்டாள். அந்த இருளில் நீந்திக்கொண்டு, மெல்ல முத்துவின் குடிசையை நெருங்கினாள்.

மின்மினியின் ஒளிகூட குடிசைக்குள்ளே காணவில்லை. சிறிதுநேரம் அவள் வெளியே தங்கி நின்றாள். பின்னர் மெதுவாக அந்தச் சிறு கதவைத் திறந்துகொண்டு, உள்ளே புகுந்தாள். சுட்டுத் தள்ளப்பட்ட புறுவின் சிறகுகளைப்போல, அவளது இதயத்தின் சுவர்கள் பட படத்தன.

உணர்ச்சியின் பிரவாகத்தில் சிக்குண்டு, அந்தக் காரிருளில் அவள் விழித்து நின்றாள். சிறிது நேரம் கழிந்ததும், கையிலிருந்த தட்டைக் கீழே வைத்து, மண்விளக்கைத் தேடிக்கொளுத்த முயன்றாள். 'தடார்' என்ற சப்தத்தோடு, சில பொருள்கள் கீழே சிதறி விழுந்தன.

அமைதி திடீரெனப் பயங்கரமாக வாய்விட்டுச் சிரித்தது. அந்தச் சிரிப்பு, அவளுடைய காதுகளைத் துளைத்துக்கொண்டு ஓடியது, யாரோ தன் இதயத்தை ஐஸ்கட்டியால் உரசுவதுபோல அவளுக்குத் தோன்றியது.

தட்டுத் தடுமாறி எப்படியோ தீப்பெட்டியைத் தேடிப் பிடித்து, அந்த மண்விளக்கை ஏற்றினாள். மண்விளக்கின் மங்கிய ஒளியில் அவள் கண்ட முதல் பொருள் பூக்குடலை! அதை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு, குடிசையின் கூரையைப் பார்த்தாள். அவளுடைய செவ்விதழ்கள், "பூவோ பூ! பூவோ, பூ!" என்று முணு முணுத்தன.

கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த முத்துவை, அவள் பார்த்தாள். அந்தச் சரீரத்திற்கு அசைவு இல்லை. ஒரு புன் சிரிப்பின் பிணம், அவனது இதழ்களின் இடையே நிலைத்து நின்றிருந்தது!

மெல்ல அவனுடைய கையைப் பிடித்தாள். பாம்பைத் தீண்டிவிட்டவனைப் போல, திடீரென்று அதிர்ச்சியோடு பின்வாங்கினாள். அந்தக் கை பனிக் கட்டியைப்போல் ஜில்லிட்டு மரத்திருந்தது!

வாழ்க்கையின் நீரோட்டத்தை எதிர்த்துச்செல்ல வேண்டிய அவசியம், இனி அவனுக்கு இல்லை! ஆமாம், கட்டிலிலிருந்தது முத்து அல்ல, இதயத் துடிப்பும் இன்பக் கனவும் நிலைத்துவிட்ட ஒரு சாதாரண பிணம்!

அவள் பூமியைத் துளைத்து விடுபவளைப் போலக் கீழே பார்த்தாள். தரையில் நிறைய வெள்ளிக்காசுகள், காகித நோட்டுகள் — அவளை நோக்கி ஏளனம் செய்தன. சிதறிக் கிடந்த பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாகப் புகழ்மாலைகள்—அவளைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தன. உள்ளூர ஒருகிளர்ச்சி! எல்லாத்திசைகளினுமிருந்து மின்னற் கீற்றுகள், அவளது இருள் கப்பிய இதயத்தை நோக்கிப் பாய்ந்தன! அவளது பெருமூச்சைப் போலவே, ஓசை செய்துகொண்டு வந்த தென்றல் காற்று, அந்த விளக்கின் சுடரை விழுங்கிவிட்டது.

எங்கோ இருந்து ஆயிரமாயிரம் அம்புகள் ஓடி வந்து, அவளது விலாவில் பாய்ந்தன! பல்லிளித்துத் திகிலூட்டும் பயங்கர இருள்! வேகமாக ஓடும் காரின் சக்கரத்தைப்போல, அவள் நினைவு விர்ரென்றுசுற்றிச் சுழன்றது. அந்தச் சுழலிலே—மாளிகைகள் இடிவதைப் போலவும், மயானத்திலே எரியும் பிணங்களின் தீக்

திருநாள்!

—✲—

பொங்கலெனுந் திருநாளில் மட்டுந் தானே
பூரணமாய்த் தமிழ்கமழும்—அதையும் இன்று

'சங்கராந்தி' யாக்கிவிட்டார் தமிழ்ப் பகைவர்!
தமக்கெனவோர் நாடின்றி, நம்மை நாடி,

எங்கிருந்தோ வந்தவரைத் தங்கச் செய்தால்
எம்மினத்தார் தம்மீதே ஏற்றங் கொண்டார்!

'இங்கினிமேல் நடவாது, தூங்கவில்லை!'
என்றுரைப்போம் திராவிடரே, இணைந்துவாரீர்!

பூத்துவரும் புதுமலர்ச்சி உலகந் தன்னில்,
புழுக்கூடத் தன்னுரிமை பாது காக்க

ஆத்திரமாய்த் துடி துடிக்கும் இந்த நாளில்
ஆதிக்க வெறிபிடித்தோர் மற்ற நாட்டைக்

காத்திடுவ தாய்ச் சொல்லிச் சுரண்டு தற்குக்
கடுகளவும் இடங்கொடுக்கத் தேவை யில்லை;

சாய்த்திடுவோம் அயலாரின் சூழ்ச்சி தன்னைச்,
சற்றேனுந் தாமதித்தல் தீமை யாகும்!

அதிகார போதையிலே அறிவு மங்கி,
அடக்குமுறை ஆயுதங்கள் தாங்கிக் கொண்டு,

சதிகாரர் சதிராட்டம் போடு கின்றார்!
தாழ்ந்திடுவார், விரைவினிலே வீழ்ந்து போவார்!

இதுகாறும் உரிமைப்போர் தொடுத்தோர் யாரும்
இறுதியிலே வெற்றியைத்தான் பெற்ற துண்டு;

எதிரிகளாய் அன்னாரை எண்ணி யோர்தாம்
இழிவடைந்து போனதாகச் சரிதம் கூறும்!

—கருணானந்தம்

கொழுந்து வானத்தை அளாவுவதுபோலவும்—தோன்றிய : நிழற்காட்சிகள், ஆழந்தெரியாத கன்னங்கரிய படுபாதாளத்திற்கு, அவளை இழுத்துக்கொண்டு சென்றன.

பூக்குடலையைத் தோளில் மாட்டிக்கொண்டிருந்த ஒரு உருவம், அந்தக் குடிசையைவிட்டு, திசை தெரியாத சூனியவெளியிலே ஓடிக்கொண்டிருந்தது!

(இது ஒரு மலையாளக் கதையைத் தழுவியது.)



[சிறு கதை]

தற்கொலை

[குன்னூர்-புரட்சிப் பித்தன்]

பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருந்தோம். பாலிடிக்ஸிலிருந்து நாங்கள் தற்கொலைக்கு ஒழுகி வீழ்ந்தது எப்படியோ, என்னவோ? பரீட்சை முடிவுகள் வெளிவந்ததுடன் கூடவே, தேர்வில்தோற்றுப் போய்த் தற்கொலை செய்துகொண்ட ஒரு மாணவனைப்பற்றி யாரோ சொன்னாற் போல் தோன்றுகிறது. அதைத் தொடர்ந்து தற்கொலையைப்பற்றி மொத்தத்தில் ஒவ்வொருவருக்குமுள்ள அபிப்பிராயங்கள் அங்கு முழங்கக் கேட்டன.

"தற்கொலை பெரிய கோழைத்தனம்"—குரூப் சொன்னான்.

"ஆனால்; சொந்த உயிரை மாய்க்க கொஞ்சமாவது தைரியம் வேண்டாமா?"—என்று கேட்டான் ஆபிரகாம்.

"தைரியமா? பலவீனம் என்று வேண்டுமானால் சொல். வாழ்க்கையை எதிர்க்கமுடியாமல், அதிலிருந்தும் ஓடி ஒளிவதற்காகத்தான் தற்கொலை செய்வது. ஓடி ஒளிவது கோழைத்தனமல்லவென்றால், பின் வேறு எதுதான் கோழைத்தனம்?"—குரூப் மிகவும் பலமாகத் தன் 'கேஸை' வாதித்தான்.

"இப்படி முடிவேகட்டலாமா?"—நான்சந்தேகப்பட்டேன்.

குரூப் என்னவோ சொல்ல முயற்சிக்கவும், மவுனம் சாதித்துக்கொண்டிருந்த ராகவன்பக்கம் ஆபிரகாம் திரும்பினான்: "உங்களுக்கு என்ன தோன்றுகிறது?"

எங்களைவிட அதிக வயதும், வாழ்க்கையனுபவங்களும் உள்ள ராகவனுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள ஆவலுடன் நாங்கள் காத்திருந்தோம்.

"வேறு எதைப்பற்றியும் போலவே தற்கொலையைப்பற்றியும் வெறுமனே ஏதாவது சொல்வது சிரமமே"—அவர் கூறத் தொடங்கினார்: "பல போதும் கோழைத்தனம்தான் தற்கொலையின் அடிப்படை...... (இந்த சந்தர்ப்பத்தில் குரூப் எங்களை வெற்றியுடன் நோக்கினான்)......என்று சொல்லி, தற்கொலை செய்கின்றவர்களெல்லாம் கோழைகளே என முடிவுகட்டக் கூடாது. தற்கொலையின் மூலகாரணம் எதுவெனத் தெரிந்தால்.........?"

அந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்ய ராகவனை குரூப் அனுமதிக்கவில்லை. "அப்படியானால் தீரமான தற்கொலைகளும் உண்டென்று நீங்கள் கூறுகிறீர்கள்......ஊம்...ம்......!" என்றான், ஆத்திரத்துடன்.

"தீரமான தற்கொலைகளுமுண்டு, நானேநேரில் பார்த்துமிருக்கிறேன், ஒரு தீரன் தற்கொலை செய்துகொண்டதை"

* * *

மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஒரு பிரசங்கம் செய்ததின் பேரால் நான் கைது செய்யப்பட்டேன். வட திருவிதாங்கூரிலுள்ள ஒரு 'லாக்கப்'பில்தான் நான் கிடந்தேன். நான் அங்கே சேர்ந்து ஒரு வாரம் கழிந்த போது, ஒன்றிரண்டுதோழர்கள்கூட் என் கூட்டத்தில் சேர்ந்தனர்.

அன்று, கட்சி, தொல்லைக்குள்ளாகவில்லை. ஆனால் நாடு முழுவதும் 'அரஸ்ட்டு'கள் ஆரம்பமாயிருந்தன.

அந்த ஆரம்பத்தில், போலீஸ்காரர்கள் எங்களுடன் கண்ணியமாகவே நடந்துகொண்டனர். படிப்பதற்குப் பத்திரிகைகள்கூட, எங்களுக்குக் கிடைத்து வந்தன.

நான் இப்போது நினைவு கூறுகிறேன், அந்த ஸ்டேஷனிலிருந்த ஒரு ஹெட்கான்ஸ்டபிள். 'முன்னூற்றொருமத்தாய்' என்பதுதான் அவருடையபெயர். நெம்பர் கூட்டிச் சேர்க்காமல் அவர் பெயர் சொல்வதில்லை. முதலில் கேட்கின்றவர்களுக்கு அது பெரிய வேடிக்கையாயிருக்கும்.

ஸ்டேஷன் 'போனை'க் கையில் எடுத்துக் கொண்டு அவர் பேசுவது இப்படியிருக்கும்: 'இங்கே முன்னூற்றொருமத்தாய்பேசுகிறேன். அங்கேயோ...?'

சில வேளைகளில் எங்களுடன் கதை அளப்பார்—பழைய இன்ஸ்பெக்டர்களுடைய கதைதான். 'இந்த இருபது வருஷ சர்வீஸுக்குள் எத்தனையெல்லாம் எசமான்மாரிடம் வேலை செய்திருக்கிறேன் தெரியுமா! அவர்களுக்கெல்லாம் முன்னூற்றொருமத்தாயை மிகவும் பிடித்தமாயிருந்தது—ஆஹா......'

ஆவலுடன் நாங்கள் கவனிக்கிறோம் என்றால், அவர் இப்படித் தொடருவார்: "முன்பெல்லாம் திருடனையும், கேடியையும் பிடித்தால்போதும், இன்றோ?" இதைச்சொல்வது எங்களிடம் நெருங்குவதற்கே. "ஊம்! சொல்வதையெல்லாம் செய்யவேண்டும், இருபத்தெட்டரை சக்கரம் (திருவாங்கூர் நாணயம்) சம்பளம் கிடைக்கவேண்டுமெனில்......"

அவருடைய அகலமான நெற்றியும், நீண்ட உயர்ந்த மூக்கும், பெரிய கண்களையும் பார்க்கும்போது நான் நினைத்ததுண்டு, போலீஸில் சேரவில்லையெனில் மத்தாய் ஒரு பள்ளிக்கூட வாத்தியாராயிருப்பார் என்று.

இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனில் இருக்கும்போது மத்தாய் எங்களிடம் கேலி பேச வருவதில்லை. அது ஆபத்து என்று அவருக்குத் தெரியும். இதற்கிடையில் மற்றுள்ள 'ஏடுகள்' அவரை 'தோழர் மத்தாய்' எனக் கூப்பிடவாரம்பித்தனர்.

நேரம் சரியாக வெளுப்பதற்கு முன், ஒரு நாள் நான் எழுந்தேன். வழக்கத்தைவிட போலீஸ்காரர்கள்

முன்பின் அனுபவம், பெரும்பாலோரின் எதிர்ப்பு, கேலி, கிண்டல் இவற்றையெல்லாம் நான் மதிப்பதே கிடையாது. வெற்றி கிட்டுமா, இல்லையா—அதைக்கூட நான் கவனிப்பது கிடையாது. நியாயமா இல்லையா — அந்தமட்டும்தான் நான் கவனிக்கிறேன்.

—வால்ட் விட்மன்

வராந்தாவிலும் ஸ்டேஷன் 'ஹாலி'லும் கூடி நிற்கின்றனர். எல்லாரும் துப்பாக்கி பிடித்திருக்கின்றனர். மெல்லிய குரலில் அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கின்றனர். முன்னூற்றொருமத்தாய்தான் போனுக்குப் பக்கத்தில். என்னவோ குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆவலும், அச்சமும் எங்கும் நிறைந்திருப்பதாக எனக்குத் தோன்றியது.

நான் தோழர்களைத் தட்டியெழுப்பினேன். என்னைப்போலவே அவர்களும் பீதியடைந்தனர். வழக்கத்துக்கு மாறான இந்த 'கோலாகலத்'தின் ரகசியம், அதிகம் ஆலோசித்துப் பார்த்தும் எங்களுக்கு விளங்கவில்லை.

அரை மணி நேரம் சென்றது. ஸ்டேஷன் முற்றத்தில் இரண்டு 'ஜீப்'களும், ஒரு போலீஸ் 'வானு'ம் வந்து நின்றது.

ஒரு கூட்டம் 'ரிசர்வ்' போலீஸ்காரர்கள், வானில் வந்திறங்கினர். ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களும், ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்களும் ஜீப்பில்.

ரிசர்வை, அவர்களுடைய உத்தியோகஸ்தர்கள் முற்றத்தில் 'பாலின்' ஆக நிறுத்தினர். நாங்கள் படுத்திருந்த அறைக்குத்தான் இன்ஸ்பெக்டர் நேராக நடந்துவந்தார். கோபத்தால் அவருடைய கண்கள் கலங்கியிருந்தன. ஒரு போலீஸ்காரன் 'லாக்கப்'பைத் திறந்தான். தலைமுடியைப் பிடித்து என்னை இன்ஸ்பெக்டர் வெளியே இழுத்துத்தள்ளினர். எனக்கு அதன் காரணத்தை தெரிந்துகொள்ள முடியவில்லை. இதோ அவர் முதுகில் இடிக்கிறார்—பலமான இடிகள்—எலும்புகளைத் தண்ணீராக்குகிற இடிகள். முதல் இடியை வாங்கியபோதே நான் வாய்விட்டுக் கதறிவிட்டேன். பிறகு அதற்கும் முடியவில்லை. இன்ஸ்பெக்டருடைய ஒரு கை என் கழுத்தில் அழுத்தப்பட்டிருந்தது. 'நீ உயிரோடிருந்தொன்றும் பயனில்லை!' என ஆரம்பித்து, போலீஸ் 'நிகண்டி'லுள்ள எல்லாப் பதங்களையும் அந்த உத்தியோகஸ்தர் பிரயோகித்தார். மயங்கிக் கீழே வீழ்ந்த எனது வயிற்றில் ஒரு 'பினிஷிங் டச்' (Finishing Touch) என்னும் வகையில், அவர் தன் பூட்ஸ் காலால் எட்டி உதைத்தார்.

எனது இரண்டு தோழர்களுக்கும் இதே அனுபவம் ஏற்பட்டது. இறுதியில் நாங்கள் உள்ளே எறியப்பட்டோம். 'லாக்கப்' கதவுகள் மூடிக்கொண்டன.

சிறிது நேரம் கழித்ததும் இன்ஸ்பெக்டர்களும், கூட்டமும் ஸ்டேஷனை விட்டுப்போனார்கள். அப்போதுதான், மத்தாய் எங்களைப் பார்க்க வந்தார். அவருடைய முகம் சிவந்திருந்தது. கண்களில் கடுகடுப்பு. பயங்கர சப்தத்துடன் அவர் கூறினார், "போலீஸ்காரர்களைக் கொன்றுவிட்டுத்தான் நீங்கள் நாட்டை நல்லதாக்குவீர்கள், இல்லையா?"

சட்டென்று அவர் முகத்தைத் திருப்பிக்கொண்டு நடந்தார். பொத்துக்கொண்டு வருகிற கோபத்தால் பீடிக்கப்பட்டு, அவர் ஆத்திரப்படுவதாகத் தோன்றியது.

விநாடிகள் பல கழிந்தன. வெளியில் கேட்ட போலீஸ்காரரின் உரையாடலை நான் கவனித்தேன். சிறிது சிறிதாக எனக்குக் கதையைத் தெரிந்துகொள்ள முடிந்தது—பயங்கரமான ஒரு கதை. அடுத்த டவுனில் போலீஸ் ஸ்டேஷன் முந்திய இரவு கொளுத்தப்பட்டுவிட்டதாம். மக்கள் கூட்டம் இரண்டு போலீஸ்காரரை வெட்டிக் கொன்றனராம்.

இன்ஸ்பெக்டர் எங்களைக் கொடுமைப்படுத்தியதற்குப் பொருள் எனக்கு இப்போதுபுரிந்தது. காரணமில்லாமல் அல்ல, நல்லவனான மத்தாய்கூட எங்களை வருத்தியது, வெறுத்தது. அரசியல் காரணமுள்ள ஒரு நிகழ்ச்சியாகத்தான், அந்தக்'கலவரம்' கணக்கிடப்பட்டது.

மறுநாள் 'லாக்கப்'பில் ஒரு புதிய விருந்தாளி—ஒரு இளைஞன்—வந்தார். இருபதுக்குமேல் வயதாகவில்லை. 'ஜிப்பா' போட்டுக்கொண்டிருந்தார். தலைமயிர் கலைந்துகிடக்கிறது. கண்கள் சிவந்து வீங்கியிருக்கின்றன. அவர் தூங்கிப்பல நாட்களாவது ஆயிருக்கவேண்டும்.

அவரை உள்ளே அனுப்பிய பிறகு போலீஸ்காரர்கள் தங்களுக்குள் பேசுவதைக் கேட்டேன். "எசமான் வந்தபிறகு தொட்டால்போதும் என்றுதான் சொல்லியிருக்கிறார்."

பொருள் நிறைந்த சொற்கள்!

எங்களையே பார்த்துக்கொண்டு மவுனமாயிருந்த அந்த வாலிபன், சிறிது நேரத்தைக் கழித்தார். இறுதியில் அவர் கேட்டார், "நீங்கள்?"

"அரசியல் கைதிகள்—தாங்களோ?"

"நானொரு மாணவன்"

எங்களை அரசியல் கைதிகள் எனக்கேட்டதும் அவருக்குப்பேசுவதற்குகூடுதல் உற்சாகம்ஏற்பட்டது.

"கதைகள் எல்லாம் தெரிந்திருப்பீர்களல்லவா?" அவர் கேட்டார்.

"சிலவற்றைக் கேள்விப்பட்டோம்"—எனதுகூட்டாளிகளில் ஒருவன், கூறினான்.

பரந்துகிடந்த தலைமுடிகளுக்கிடையில் விரல்களை ஓட்டிக்கொண்டே, அந்த வாலிபன் எங்களுக்குஎல்லா விவரத்தையும் விளக்கினார்!

"தாங்கள்......?" — நான் கேட்டேன். "தாங்களும் அறப்போரில் பங்கெடுத்தீர்களா?" என்றுதான், நான் அந்த 'ஒரு சொல்லைக்கொண்டு பொருள் கற்பித்தேன். எனது கேள்வியை அவர் புரிந்துகொண்டார்.

"இல்லை, நான் அங்கு இருக்கவில்லை. ஆனால், அங்கே இருந்த சிலரை எனக்குத் தெரியும்."

"அது ஆபத்தான சங்கதியாயிற்றே" — என் கூட்டாளியொருவன் சொன்னான்.

"தாங்கள் கட்சி உறுப்பினரா?" —நான் கேட்டேன்.

"இல்லை; வேண்டுமானால் என்னை ஒரு அனுதாபி என்று அழைக்கலாம். அரசியலிலிருப்பதைவிட, அர

அண்டை வீட்டு ஏழை, பசியால் வருந்துவதைக் கண்டும், அவனை நோக்காது, பாலும் பழமும் தேனும் கொண்டுபோய் விக்கிரகத்தின் தலையில் பொழிவானின் பூசையைக் கடவுள் ஏற்றுக்கொள்வாரோ? ஒருபோதும் ஏற்றுக்கொள்ளார்.

—திரு. வி. க.

சியல் வாதிகள் சிலரிடமுள்ள அனுதாபம்" — அவர் தெளிவாக்கினர்.

"தங்களைக் கைது செய்தது எதற்காக?"

"நான் சொல்லவில்லையா, அங்கேயிருந்து, ஆட்கள், சில துப்பாக்கிகளைப் பொறுக்கிவைத்தனர்என்று. அதில் சிலவற்றை என் வீட்டினின்றும் கைப்பற்றினர்" — சிறிது நிறுத்திவிட்டு அவர் தொடர்ந்தார். "என்னிடமிருந்தும் தகவல்களைச் சேகரிக்கலாம் என போலீஸ் நினைபபதாயிருந்தால், அவர்களுக்குநிச்சயம் தோல்விதான்."

தாங்கள் எந்த வகுப்பில் படிக்கிறீர்கள்? நான் அவரைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள விரும்பினேன்.

"ஸீனியர், பி. ஏ."

"சொந்த ஊர்?"

"எர்ணுகுளம்"

"அப்பா?"

"பென்ஷன் பெறும் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர்.

"மூத்த மகனே?"

"மூத்தவனும் இளையவனும், ஆணும் பெண்ணுமாக, எனது அப்பாவுக்கு நான் ஒருவன்மட்டுமே இருக்கிறேன்."

கற்பனையில் நான் அந்தச் சிறிய குடும்பத்தைக் கண்டேன். வயது முதிர்ந்த தாய் தந்தையர். அவர்களுடைய எல்லாமே இக்குழந்தைதான். ஓரளவு நல்ல நிலையில் வாழ்கின்றவர்கள். மகன் படித்துப்பெரியவனுவதைக் காண அவர்கள் காத்திருக்கின்றுர்கள். வயதேறிய அவர்களுடைய கண்கள் இப்போதும் திறந்திருப்பது, மகனைக் காண்பதற்காகத்தான். மகன்புத்தியுள்ளவனே. அகலமான நெற்றியும், ஒளி வீசுகின்ற கண்களுமுள்ள மகன்.

என்ன ஆவதற்கு இவர் விரும்புகின்றுரோ! ஒரு எஞ்சினியர் ஆவதற்கோ? அல்லது டாக்டராக ஆவதற்கோ?

அவர் சிறிது பக்குவமாகவே என்னைக்கேட்கிறார் "நீங்கள் எனது பெயரைமட்டும் விசாரிக்கவில்லையே, என்?" பதிலுக்குக் காத்திராமல் அவர் கூறினர், "கோபி"

மவுனம்.

நான் நினைத்தேன் சிறிதுநேரம் சென்றுல் இன்ஸ்பெக்டர் வருவார். சிலையைக்கூட பேசவைக்க அவர்களுக்குத் தெரியும்.

முன்னூற்றெரு மத்தாப் எங்களை அடுத்தான். கோபியிடம் அவர் சொன்னர், "நீங்களெல்லாம் நல்ல நிலைக்கு வரவேண்டியவர்கள். சும்மா உடம்பைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம். உங்களுடைய நன்மைக்கு வேண்டிச் சொல்கிறேன், இன்ஸ்பெக்டர் கேட்கும்போது உங்களுக்குத் தெரிந்ததை யெல்லாம் சொல்லிவிடவும். தப்பித்துவிடலாம்."

கோபி காரி உமிழ்ந்தான். "ஒரு எழுத்தைக்கூட நான் சொல்லமாட்டேன். என்னை என்ன செய்தாலும் சரி."

மேலும் எதுவும் சொல்ல மத்தாப் நிற்கவில்லை.

கோபியால் கொடுமையை எதிர்த்து நிற்கமுடியுமா? இன்றுவரை சுகமாக வாழ்ந்த ஒரு மாணவன் தான், அவர். திட்டமான அரசியல் கொள்கை ஒன்றுமில்லை, அவருக்கு. சிலரோடுள்ள அந்தரங்கமான தொடர்புமாத்திரம்தான் — அவர்களைப் படுகுழியில் தள்ளக்கூடாதென்கிற நினைப்பு.

இடைவேளைக்கு, இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார். கோபியை அவர் வெளியே இழுத்தார்.

"ஜிப்பா போடச் சொன்னதாரடா?" — இன்ஸ்பெக்டர் மீசையை முறுக்கினர்.

"கழற்றடா!"—ஒரு 'எடு' ஆணையிட்டான்.

கோபி ஜிப்பாவைக் கழற்றினர்.

"என்ன முடிவு கட்டினுய்? எல்லாவற்றையும் கூறிவிடவா? அல்லது உடம்பைக் கெடுத்துக்கொள்ளவா?"—இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"எனக்கொன்றும் சொல்வதற்கில்லை"

"அப்படியானல் உடம்பு நொந்தால்தான் வாய் திறப்பாய்—என்?"

"அதை முடிவு கட்டவேண்டியது நீங்கள்தானு?"

"உம்"—இன்ஸ்பெக்டர் உறுமினர்.

கோபுவை வெளியே இழுத்துச் சென்றனர்.

மாலையில் 'லாக்கப்'பைத் திறந்து போலீஸ்காரர் கோபியை உள்ளே எறிந்தனர். ஒரு கசதல் துணித்துண்டுபோல. கோபி சுருண்டு கிடந்தார். அடிக்கடி அலட்டவும் செய்கிறுர், "தண்ணீர்... தண்ணீர்..."

எங்கே போவது, தண்ணீருக்கு?

நான் போலீஸ்காரரோடு கெஞ்சினேன்; கொஞ்சம் தண்ணீர்..."

"உம்! தண்ணீர்......தண்ணீர் குடிக்காமல் சாகட்டும்!"—பதில் கிடைத்தது.

கோபியின் உடம்பில் பல இடங்களில் 'கருவளையங்கள்' போட்டிருந்தன. அங்கங்கே அடியின் தழும்புகள் தெளிவாய்த் தெரிகின்றன. மூக்கினின்றும் குருதி ஒழுகி கட்டியாய்விட்டிருக்கிறது.

யுகங்களைப்போலத் தோன்றிய நிமிஷங்கள் சில கழிந்தவுடன், கோபி 'சைகை' காட்டி என்னை அழைத்தார்.

"நானென்றும்......வெளியிடவில்லை......" அவர் முணங்கினர். அப்போது அவரது முகத்தில் பூர்ணதிருப்தி தெளிவாய்க் காணப்பட்டது.

இரவு சிறிது நகர்ந்ததும், இன்ஸ்பெக்டர் மீண்டும் அங்கு வந்து சேர்ந்தார்.

> முதியவர்கள் அடைகிற வெற்றியைவிட, இளைஞர்கள் அடைகிற தோல்வியே சிறந்தது. ஏனெனில், வெற்றியோ தோல்வியோ, இளைஞர்களின் ஆர்வத்தாலும், ஆவேசத்தாலும்தான் ஒரு நாடு முன்னேற முடியும். முதியவர்களின் ஆமை வேகச் செயல்களால் அல்ல.
>
> —டிஸ்ரலி

அவர்கள், கோபியை மீண்டும் எங்கோ கொண்டு சென்றார்கள்.

நேரம் விடிந்தது. கோபி திரும்பிவந்து சேர்ந்திருக்கிறார்.

நான் அருகில் சென்றபோது, அவர் உறுதியுடன் கூறினார்: "நான் தோற்கவில்லை"

எனக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இவ்வளவெல்லாம் தாங்கவேண்டி வரும்போது, ஒரு முதல்தர அரசியல் ஊழியன்கூட சில வேளையில் உண்மையைக் கக்கிவிடுவார். ஆனால், இக்குழந்தை—?

மிகவும் சிரமத்துடன் கோபி அரற்றினார். சரீரத்தில் ஈக்கள் மொய்க்கின்றன. இதயம் நோகிற காட்சி!

கோபி கண்களை மூடிக் கிடக்கிறார். மிகவும் சிரமப்பட்டுத்தான் மூச்சுவிடுகிறார்.

முன்னூற்றொரு மத்தாய், கம்பிகளுக்கருகில் வந்தார். "நீங்களெல்லாம் சேர்ந்து இந்தப் பையனைக் கொன்றுவிடுவீர்கள்—மத்தாய் கூறினார்.

"ஊம்"

"நீங்கள் சொல்லிக்கொடுத்திருக்கிறீர்கள். இல்லாவிட்டால் அவன் எல்லாம் கூறிவிட்டிருப்பான்"

"நாங்கள் யாரும் ஒன்றுமே சொல்லவில்லை"

"அப்படியானால், கொஞ்சம் புத்தி சொல்லுங்கள். எல்லாம் கூறிவிடட்டும். இந்த வயதில் சாக வேண்டாம்"

கருணையுள்ளத்தாலா மத்தாய் இப்படிக்கூறினார்? அல்லது, கோபியின் மனோ தைரியத்தைக் குலைப்பதற்காக, எங்களையும் கூடச் சேர்க்கிறாரோ?

இடைவேளை; இன்ஸ்பெக்டர் வந்தார். "இன்று இரண்டிலொன்று தெரியவேண்டும். ஒன்று, நீ பேசவாய்; அல்லது......" குரூரத்துடன் சிரித்த இன்ஸ்பெக்டர், கோபியைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்.

படபடப்புடனும், மனவேதனையுடனும் நாங்கள் காத்திருந்தோம்.

நீண்டநேரம் சென்றது. கோபி திரும்பி வரவில்லை. "ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள்" — மத்தாயிடம் கேட்டபோது, சங்கதி தெரிந்தது.

"என்?"

"இன்ஜெக்ஷன் கொடுப்பதற்கு"

"எதற்காக?"

"அவருக்கு மயக்கம் தெளிவதற்கு......! ஆஹா! கோபி எல்லாம் சொல்லிவிடுவதாக ஒப்புக்கொண்டார். இந்தப் புத்தி நேரத்திலேயே தோன்றவில்லையே!"

'இஞ்செக்ஷன்' கொடுத்து பிரக்ஞை வரவழைத்தபிறகு, அவர்கள் கோபியிடமிருந்து உளவறிந்து கொள்வர்! போலீஸ்காரர்களுக்கு 'குற்றவாளிகளை'ப் பிடிக்கமுடியும்.

கோபியை குற்றப்படுத்த எனக்குத் தோன்றவில்லை. அவர் சகித்தது எவ்வளவென்று, உடம்புக்குக் கேடு தட்டாத எனக்குத் தெரிந்திருந்தது. எவ்வளவு உறுதியான மனமும், இவ்வளவெல்லாம் அனுபவித்த பிறகு அடங்கிவிடுமல்லவா?

இளம் பருவம். வாழ்க்கை தொடங்குகிற நேரம். என்னவெல்லாம் அனுபவிக்க இருக்கின்றன? எத்தனையெத்தனை ஆசைகள் கண்டிருப்பார்! கனவுபோன்ற இனிமையான ஆசைகள்!

சிலசமயம், அப்பா-அம்மாவைப்பற்றிய நினைப்பும், அவரைப் பலவீனப்படுத்தியிருக்கலாம். கோபி மட்டும்தான் அவர்களுக்கு இருக்கிறார்.

வாழவேண்டுமென்கிற ஆசை வெற்றிபெறுகிறது.

ஸ்டேஷன் கிளார்க் ஒன்பதடித்தார். இரண்டு போலீஸ்காரர்கள் கோபியைத் தாங்கிக்கொண்டுவந்து கிடத்தினார்கள்.

"சொல்கிறாயா?" — இன்ஸ்பெக்டர் கேட்கிறார். 'முடியாது' என்கிற பாவனையில், கோபி 'சைகை' காட்டினார்.

"முயற்சி செய்து பார்க்கவேணும்"—இன்ஸ்பெக்டர் விடவில்லை. அவருக்கு அவசரம் ஏற்பட்டது, விவரங்களைத் தெரிந்துகொள்ள—அவர் மகிழ்ச்சியடைகிறார்.

கோபி, எல்லாம் கூறுவார். கேஸ் தெளிவாகும்; அப்போது தனக்கு 'பிரமோஷன்' கிடைக்கும். ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டராகலாம். அல்லது டி. எஸ். பி. ஆவோமா? பிரபலமான கேஸ்தான். ஒரு டபுள் பிரமோஷன் கிடைக்காது எனச் சொல்வதற்கில்லை.

"தண்ணீர்......" கோபி முணுமுணுத்தார்.

இன்ஸ்பெக்டர், தண்ணீரில் மருந்து கலந்து கொடுத்தார்.

"கொஞ்சங்கூட முடியவில்லை......சொல்கிறேன் ......எல்லாவற்றையும்......நாளைக் காலையில்..."

சிறிதுநேரம் இன்ஸ்பெக்டர் யோசித்து நின்றார்.

இறுதியில் அவர் ஒப்புக்கொண்டார்—"சரி"

கோபிக்கு நிறையச் சொல்லவேண்டியிருக்கும். சிறிது ஓய்வு தேவைதான்.

லாக்கப் அறை மூடிக்கொண்டது.

கோபி ஒரு கிழிந்த ஓலைப்பாயில் சுருண்டு படுத்தார்.

என் கூட்டாளிகள் தூங்கிவிட்டனர். தூங்கமுடியாமல், நான் கோபியையேபார்த்துக்கொண்டிருக்கிறேன்.

"அவர்கள் வென்றுவிட்டார்கள், இல்லையா?" — மிகவும் சிரமப்பட்டு கோபி என்னைக் கேட்டார். சட்டென்று அவர் உரக்கச் சிரித்தார். நான் ஒன்றும்சொல்லவில்லை.

எதற்காக அவர் சிரித்தார்?

> சடங்கு என்பது ஒரு சிறைச்சாலை. அந்தச் சிறையில் சிக்குண்டு சிதைகிறது, மனித சமுதாயம். அறிவாளிகளே, புறப்படுங்கள்! சிறைச்சாலையைத் தவிடுபொடியாக்கி மனித வாழ்வுக்கு விடுதலை அளியுங்கள்.
>
> —இங்கர்சால்

மணி பதினொன்றாயிற்று. தூக்கமே வரவில்லை என்ன நிசப்தம் எங்கும்!

'ஸ்டேஷன் ஹாலி'லிருந்த 'டூட்டி எடும்' ஒன்றிரண்டு போலீஸ்காரர்களும் தூங்க வாரம்பித்தனர், வெளியில் உள்ள காவல்காரன், கதவில் சாய்ந்துநின்று தூங்குகிறான்.

ஸ்டேஷன் கிளார்க் ஒரு மணி அடிப்பதுவரையிலும் நான் விழித்துக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. பிறகு எனக்கொன்றும் நினைவில்லை. நான் தூங்கிவிட்டேன்.

நேரம் வெளுக்கத் தொடங்கியது. சட்டென்று ஒரு சத்தம் கேட்டு நான் விழித்துக்கொண்டேன். லாக்கப் திறக்கப்படுகிறது. இன்ஸ்பெக்டர் முகத்தில்தான், நான் விழித்தேன்.

அவருடைய முகம் வெளிரிவிட்டிருந்ததாக எனக்குத் தோன்றியது. ஆச்சரியத்தால் அவருடைய வாய், துடிக்கிறது. கண்கள் விரிகின்றன.

அவர் பித்துப்பிடித்தவனைப்போல், மேலே விழித்துப் பார்க்கிறார். நானும் பார்த்தேன்.

லாக்கப் அறையின் மத்தியில், உத்திரத்தில் கோபி தொங்கிக்கொண்டிருக்கிறார். கண்கள் திறந்திருக்கின்றன. நாக்கு வெளியே பிதுங்கிவிட்டிருக்கிறது. அந்தத் திறந்த கண்களில், தியாகத்தை நான் பார்த்தேன். என்ன நினைப்பாயிருக்கலாம்?

ஒன்றும் பேசாமல் இன்ஸ்பெக்டர் வெளியில் போனார்......ஒன்றிரண்டு வினாடிகள் அந்த வீரனையே பார்த்து நின்றேன். உடனே நான்வாய்விட்டழுதேன்.

தோழர்களைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பதற்காக தற்கொலை செய்துகொண்ட அந்த வீர இளைஞனை, நான் இப்போதும் என் கண்முன்னால் காண்கிறேன்.

* * *

ராகவன் கதையை முடித்தார். சிறிதுநேர மவுனத்திற்குப் பிறகு அவர் கேட்டார், "அது ஒரு கோழையின் தற்கொலைதானே?"

'குரூப்' ஒன்றும் பேசவில்லை.

★

கண்ணைக் கவரும்
பட்டு வகைகள்—கைத்தறி ஆடைகள்
எம்மிடம் கிடைக்கும்

விஜயலட்சுமி ஹால்

உரிமையாளர்கள்,
S. P. வில்வநாதன் & சன்ஸ்
ஜவுளிவியாபாரம்
ஆடிசன்பேட்டை காஞ்சிபுரம்

பொங்கற் புதுநாளே!

[லால்குடி-கிருஷ்ணமூர்த்தி]

★

பொங்கற் புதுநாளே (உனை)—
போற்றுதல் எம் கடமை (தமிழ்)
சங்கம் வளர்த்த ஒரு (நற்)—
சாதியின் திருநாளே!
எங்கள் திராவிடத்தின்—
இன்னல்கள் போனதென்று
பொங்கும் மகிழ்ச்சியுடன் (உனை)—
போற்றுதல் செய்குவமே!

வற்றாத பொன்னியிலே புகழ்—
வற்றாத பெண்ணை, பொருனையிலே
முற்றாது பஞ்சமென்று மாசு—
முற்றும் அகல முழுக்கிடுவோடும்
சுற்றாது தீமையினி நம்மைச்—
சுற்றாது வறுமை நோயுமினி
பற்றுக்குறையெனும் பேய்நம்மை—
பற்றிடாவண்ணம் முழுக்கிடுவோம்.

புத்தாடைகள் அணிவோம் அப்—
புத்தாடைகள் யாவும் கைத்தறிதான்
சிற்றாடை, துண்டாயினும் பட்டுச்—
சேலைகள் ஆயினும் கைத்தறிதான்
மற்றோர் துணிவிரும்போம் ஏழை—
மக்கள் துயரினை மாய்த்திடுவோம் (பின்
பெற்றோரை யாம் வணங்கி ஆசி—
பெற்றபின் பொங்கலைப் பொங்கிடுவோம்

பொங்கலைப் பொங்குகையில் உள்ளே—
பொங்குது இன்ப நினைவுகளே
எங்கள் மனத்தினராய் உயர்—
எண்ணம் வளருது, ஆயினுமே
செங்கற் சுவர்நடுவே கனச்—
சீமை இரும்புக் கிராதியுள்ளே
தங்கக் குணம்படைத்த பல—
தங்கப் பழங்களும் வாடுகின்றார்!

[இக்கட்டுரையில் கிராம நிலைபற்றிய பெரியார் அவர்களின் கருத்து தரப்படுகிறது.]

கிராம நிலை

[பெரியார்]

கிராமம் என்கிற வார்த்தையே இன்று மனித சமுதாயத்தில் எப்படி பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கிற வருணாச்சிரம தர்ம முறையில் பஞ்சமன் இருக்கிறானோ அதுபோல் தான் ஊர் தன்மையில் அல்லது ஊர்வரிசையில் பஞ்சமன் நிலையில் கிராமம் இருக்கிறது.

வர்ணாச்சிரமத்தின் கருத்து என்ன? ஒருவன் மேல் ஜாதி, ஒருவன் கீழ்ஜாதி, ஒருவன் பாடுபடுவதற்கு ஆக இருக்கவேண்டியவன்—ஒருவன் சரீரப் பாடுபடாமல் வாழ்வதற்கு இருக்கவேண்டியவன், ஒருவன் உழைக்கவேண்டியவன், ஒருவன் அந்தஉழைப்பை அனுபவிக்கவேண்டியவன்; இதைத் தவிர வருணத்தின் தத்துவம் என்ன?

உதாரணம் என்னவென்றால் "முதல் மூன்று வருணத்தார் வாழ்வுக்கு ஆக 4-வது 5-வது வருணத்தானைக் கடவுள் சிருஷ்டித்தார்"

"ஆகையால் 4-வது 5-வது வருணத்தார், முதல் மூன்று வருணத்தாருக்கு தொண்டுசெய்து திருப்தி செய்வதன் மூலம் மோக்ஷமடையவேண்டுமே ஒழிய நேரே மோக்ஷத்தை அடையக் கருதக் கூடாது"

"4, 5-வது வருணத்தான் பணம், காசு கையில் வைத்திருந்தால் முதல் வருணத்தார் அவற்றைப் பலாத்காரமாய் பிடுங்கிக்கொள்ளலாம்." "முதல் வருணத்தார்தான் படிக்கலாம் 4, 5, வருணத்தார் படிக்கக் கூடாது, படித்தால் உலகம் நடைபெறாது" என்பது போன்ற மனுதர்ம முறைப்படிதானே அனுபவத்தில் கிராமத்திற்கும் வருண முறை ஊர் தர்மம் இருந்து வருகிறது? இது உண்மையா இல்லையா என்று யோசித்துப் பாருங்கள்.

கிராமம் என்றால் என்ன? அதில் பள்ளிக்கூடம் இல்லை, ஆஸ்பத்திரி இல்லை, டிராமா இல்லை, பார்க்கு இல்லை, நீதிஸ்தலம் இல்லை, போலீசு காவல் இல்லை, நல்ல ரோட்டு வசதி இல்லை, விளக்கு இல்லை, நல்ல தண்ணீர் இல்லை, உயர்ந்த நாகரீகம் என்பது இல்லை, பெரும்பாலும் வயிற்றுக்கு ஆகாரம் சம்பாதிப்பதை விட வாழ்வு ஆசைக்கு பணம் சம்பாதிக்கும் வசதி இல்லை, ஒய்வு இல்லை, புத்தியைச் செலவழித்து முற்போக்கடைய வழி இல்லை, இப்படி இன்னும் பல வசதிகள் (நகரத்தானுக்கு இருப்பவைகள்) கிராமத்தானுக்கு இல்லை என்பதல்லாமல், கிராமம் என்றால் வேறு என்ன?

ஆனால் "நகரங்களுக்கு ஆதாரம் கிராமங்கள் தான்" என்று சொல்லப்படுகிறது. சொல்லுவதுமாத்திரமல்லாமல் கிராமத்தாரின் உழைப்பும், உழைப்பில் ஏற்பட்ட விளை பொருள்களும் உற்பத்திப் பொருள்களுமே நகரத்தார் அனுபவிக்கவும், நகரத்தார் செல்லவான்களாக ஆகவும், அரசாங்கம் நடக்க வரி கொடுக்கவும், அரசாங்கம், நகர மக்கள் ஆகியவர்கள் மாத்திரமல்லால் கடவுள் கோவில்கள்கூட அங்கிருப்பவர்களும் சேர்ந்து தேவஸ்தான சட்டப்படி ஒழுங்காய் சகல இன்பங்களும் அனுபவிக்கவும் வசதியாக இருந்து வருகிறது.

லேவாதேவிக்கு வட்டி கொடுத்துவந்த கிராமங்களான நஞ்சை, புஞ்சை நிலவசதிகளுள்ள நீர்ப்பாசனமும், பருவம் தவறாமல் மழைபெய்யும் கொழுத்த நீர் வசதியும் உள்ள நிலப்பரப்புக்கு மத்தியில் உள்ள கிராமங்களின் நிலை எப்படி இருக்கிறது? அவர்கள் வீடு வாசல் மக்கள் நிலை எப்படி இருக்கிறது? என்பதையும், பொட்டல் காடு, கானல் காடு, பாலைவனங்கள் ஆகியவைகளில் குடி இருக்கும் லேவாதேவி தொழிலாளர்களான நாட்டுக்கோட்டையார், மார்வாடிகள் ஆகியவர்கள் வீடுகள் எப்படி இருக்கிறது? அவர்கள் வாழ்க்கை நிலைகள் எப்படி இருக்கிறது? என்பதையும் பாருங்கள். இதற்குக் காரணம் என்ன? இது வருணாச்சிரம முறையா அல்லவா யோசித்துப் பாருங்கள். மற்றும் பாடுபட்ட மிராசுதாரர், குடியானவன் ஆகியவர்கள் வீடு எப்படி இருக்கிறது? இவர்களிடம் சரக்கு வாங்கி விற்ற நகர வியாபாரிகள் வீடு, அவர்களது வாழ்வு எப்படி இருக்கிறது? பாருங்கள்.

கிராமத்தானுக்குக் கல்வி இல்லாமல் இருந்தால் தானே பயிரிட்டு உழைத்து உழைத்து, அறுத்து, மூட்டையாக்கி தைத்து வண்டியில்போட்டு நகரத்துக்கு அனுப்பிவிட்டு, சாவியாய்ப் போன தானியத்தை வீட்டுக்கு எடுத்துக்கொண்டுபோய் கஞ்சியாகக்காய்ச்சி கலயத்தில் ஊற்றி பிள்ளை குட்டிகளை சுற்றி வைத்துக் கொண்டு "இன்று கடவுள் நமக்கு இவ்வளவு கொடுத்தார்" என்று வாழ்த்துப்பாடி எருமைமாடு தவிட்டுத் தண்ணீர் குடிப்பதுபோல் வயிறுமுட்டக் குடிக்க முடியும். அதோடு அவன் திருப்தி அடையவும் முடியும்!

அப்படி இல்லாமல் கிராமத்தானுக்கு கல்வி கொடுத்துவிட்டால் "நாம் உழைக்கிறோம், நாம் விளைவித்தோம், நாம் உருப்படி பண்ணினோம், அப்படி இருக்க நாம் கஞ்சி குடிப்பதும், உழைக்காதவன் உடுத்துப் புடைத்து ஆக்கிப் படைத்துக்கொண்டு இப்படி தொப்பை வெடிக்க அமுக்குவதா" என்கிற எண்ணம் ஏற்பட்டுவிடாதா? அதனால்தான் கிராமம் ஒரு பஞ்சமனுடைய நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையை நிலைக்கவைக்க "கிராம சீர்திருத்தம்" என்கின்ற பித்தலாட்டப் பெயரை வைத்துக்கொண்டு ஒரு கூட்டம் அதுவும் வருணாச்சிரம தர்மத்தில் மேல்படியில் இருப்பவர்கள் சீர்திருத்தக்காரர்களைப் பார்த்து "கிராமத்திற்குச் செல்லுங்கள்" (Go to The Village) என்று வாயில் கத்திக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை அன்றைக்கு வியாபாரத்துக்கும், வக்கீல் வேலைக்கும் (கட்சிக்காரர்களைச் சேர்க்கும் நோக்கத்தோடு) கிராமங்களுக்குச் சென்று விளக்கு மாற்றால் (துடைப்பத்தால்) ஒரு வீதியை கூட்டிவிட்டு அதற்கொரு பஜனைப் பாட்டைப் பாடி ஒரு கூடையில் அக்குப்பையை

வாரித் தூக்கிக்கொண்டுபோய் நத்தத்தில் கொட்டி விட்டு ஒரு சிறு பிரசங்கம் இராமாயணத்தில் இராவண கொடுமையும் அனுமான் பெருமையும் பற்றிப் பேசி விட்டு வந்துவிட்டால் கிராமம் சீர்பட்டுவிடுமா என்று யோசித்துப் பாருங்கள்.

கிராமம் என்று ஒரு குப்பைக்காடு எதற்காக இருக்கவேண்டும். ஆடு மாடு எருமை மேய்ப்பதும் அவைகளைக் காப்பாற்றி பால், தயிர், நெய், மோர் உற்பத்தி செய்வதும் கிராமத்தான். அவ்வளவையும் அனுபவிப்பது நகரத்தான். கிராமவாசி கிராமத்தில் இரவு 3-மணிக்கு எழுந்து மாட்டுக்குத் தண்ணீர் வைத்து கொட்டத்தைக் கூட்டி சுத்தம் செய்துவிட்டு 4-மணிக்கு பால் கறந்துவிட்டு கஞ்சிகாய்ச்சிக் குடித்துவிட்டு 5-மணிக்குப் புறப்பட்டு 3, 4, 5-மைல் நடந்து 6-மணிக்கு நகரத்துக்கு வந்து நகரத்து மக்களை 'அய்யா பாலு' 'அம்மா பாலுகாரி நான்' என்று சொல்லிக் கதவைத் தட்டி எழுப்பிவிட்டு பால் ஊற்றிவிட்டுப் போகிறார்கள். தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு பால், நெய் ருசியே தெரியாமல் செய்துவிடுகிறார்கள். இதற்கு "நகரத்தார் பணம்கொடுக்கிறார்கள்" என்பது உண்மைதான். கிராமத்தான் கையில் கிடைத்த இந்தப் பணம்தான் என்ன ஆகிறது? போலீசுக்கு ஒரு பங்கு, முனிசிபல் சிப்பந்திகளுக்கு ஒரு பங்கு, போனது போக கணமாக ஏதாவது மீதி இருந்தால், அது வக்கிலுக்கும், அதிகாரிகளுக்கும் போகிறது.

நல்ல பெரிய விவசாயி என்பவனும் கிராமத்தில் இருந்தால் இதுபோல்தான், கிராமத்தார்கள் பாடுபட்டு பயிராக்கி, தானியமாக்கி, நகரத்துக்குக் கொண்டுவந்தால், நகர வியாபாரி கிராமத்தானின் பயிர்ச் செலவு-முட்டுவளிக்குக்கூட பத்தும் பத்தாமல் கணக்குப் போட்டு விலை பேசி ஒன்றுக்கு ஒன்றேகாலாக ஏமாற்றி அளந்து வாங்கிக்கொண்டு மொத்தக் கிரயத்தை, 'தரகு, மகிமை, சாமி காசு, நோட்டு வட்டம், வாசக்காரிக்கு, கலாஸ்காரனுக்கு, வெத்திலை பாக்குச் செலவு' என்றெல்லாம் பல செலவு கணக்குப் போட்டுப் பிடித்துக்கொண்டு, மீதி ஏதோ கொஞ்சம் கொடுக்கிறான். பணத்தை மொத்தமாகக் கண்டறியாத கிராம விவசாயி, தன்மீது கருணைவைத்து 'கடவுள் இவ்வளவு ரூபாய் கை நிறையக் கொடுத்தார்!' என்று கருதிக்கொண்டு, வாங்கி துணியில் முடிந்துகொண்டு, காப்பி சாப்பிட்டு சினிமா பார்த்துவிட்டு ஊருக்குப் போகிறான். வியாபாரியோ இந்தச் சரக்கை வாங்கி இருப்பு வைத்து, அதிக விலை வரும்போது விற்று லாபமடைந்து லட்சாதிபதியாகி, மேடை மாளிகை கட்டிக்கொண்டு, கிராமவாசியை வண்டி ஓட்டவும், மாடு மேய்க்கவும் வீட்டு வேலை செய்யவும், உடம்பு பிடிக்கவும் வேலைக்கமர்த்திக்கொள்ளுகிறான்.

சர்க்காருக்கும் கிராமவாசி என்றால், கசாப்புக் கடைக்குப் போகும் ஆடுகள்போல காணப்படுகிறார்கள்.

ஆகவே, கிராமம் என்பது தீண்டப்படாத மக்கள் நிலையில்தான் இருந்துவருகிறது. கிராமத்தார் அல்லாத மற்றவர்களுக்காகவே இருந்துவருகிறது. இந்த நிலையில், அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு கிராமத்தை எவ்வளவு சீர்திருத்தினாலும், கிராமம் "சூத்திரன்—தீண்டாத ஜாதியான்" நிலையில்தான் இருக்கும்.

எனவே, சமுதாயத்தில் மக்களின் தன்மையை பெறவேண்டுமானால், பிராமணன் என்று ஒரு ஜாதியும் பறையன் என்று ஒரு ஜாதியும் அடியோடு இல்லாமல் மனிதன் என்கிற ஜாதிதான் இருக்கவேண்டும் என்று எப்படிக் கருதுகிறோமோ, அதுபோல் ஊர்களிலும் பட்டணம் நகரம் என்று சில ஊர்களும் இல்லாமல் பொதுவாக ஊர்கள்தான் இருக்கவேண்டும் என்று ஆக்கப்படவேண்டும்.

வருணாச்சிரம தர்மத்தைப்போல்தான் கிராமங்களும் என்பதற்கு மற்றொரு உதாரணம் பாருங்கள். ஜனத்தொகைப்படி 100-க்கு 90 பேர்கள் 4-வது, 5-வது வருணத்தார்கள்; 10 பேர்கள்தான் மேல் வர்ணத்தார்களாக (முதல் மூன்று வர்ணத்தார்களாக) இருப்பார்கள், அதுபோலத்தான் மொத்த ஊர்களில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட ஊர்கள் கிராமங்களாக இருக்கின்றன. அதாவது இந்தியா பூராவும் 7 லட்சம் கிராமங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், பட்டணங்கள் நகரங்கள் 100-க்கு 10-கூட இருக்காது.

மற்றும் பார்க்கப்போனால், பட்டணத்தில் உள்ள ஒரு கைவண்டி இழுப்பவன், ஒரு கோர்ட்டு பியூன், ஒரு பிச்சையெடுக்கும் புரோகிதன், மணியாட்டும் அர்ச்சகன் ஆகிய இவர்கள் பிள்ளைகள் எஸ். எஸ். எல். சி, பி. ஏ., இஞ்சினீயர், டாக்டர் ஐ. சி. எஸ். கூட படிக்க முடிகின்றது. ஆனால், கிராமத்தில் 100 ஏக்ரா 200 ஏக்ரா உள்ள குடியானவன் மகன்கூட எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் வரும்படியில் பகுதி செலவாகிறது.

மேலும் நகரவாழ்க்கை நகரத்தில் இருந்தால் 100-க்கு 90க்கு மேற்பட்ட மக்களுக்கு உடலுழைப்பு இல்லாத சுகவாழ்வு வாழமுடிகிறது. கிராம வாழ்வு கிராமத்தில் இருந்தால் 100-க்கு 90பேர் உடலுழைப்பு வேலையே செய்தாக வேண்டும். அவர்களுக்குள் ஒரு சிறு தகராறு, சண்டை, விவகாரம் ஏற்பட்டாலும் விவகாரப் பொருமானத்தைவிட அதிகமான செலவு செய்து நகரத்துக்கு பலதடவை நடந்து நீதி பெறவேண்டும். இதன் பயனாய் போக்கிரிக்கும் செல்வவான்களுக்கும் அடங்கி வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

விவசாயம் 200 வருஷத்திற்குமுன் இருந்தமாதிரிதான் இன்றும் இருக்கிறது. அதில் நீர்பாய்ச்சல் வசதி நீர்நிலை தேக்கம் ஆகியவை ஏற்பட்டு சில நிலங்களுக்குப் புதிதாய் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டது என்பதல்லாமல், விவசாயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. சர்க்காரின் விவசாய இலாக்காவானது சில பேருக்கு உத்தியோகத்தைத்தான் கொடுத்தது. அதுவும் விவசாயத்தை தொழிலாகக் கொள்ளாத பரம்பரைக்கே பெரிதும் உத்தியோகமாய் முடிந்தது என்பதல்லாமல், மற்றப்படி விளை பொருளில் மாறுதல் இல்லை, விளைவு அளவில் கூடுதல் இல்லை. விவசாய முறையில் மாற்றம் இல்லை, விவசாயிகள் விளை பொருளின் சரியான விலையை அனுபவிக்க வழி இல்லை. விவசாயி விவசாய விஞ்ஞானம் பெற வழி

இல்லை. விவசாயிகள் விஷயத்தில் சர்க்கார் எடுத்துக் கொண்ட மற்ற முயற்சி என்ன என்று பார்ப்போமானால், மேல் நாட்டாரைப்போல் இந்நாட்டு விவசாயிகள் எல்லோரும் படித்தமக்கள்என்று கருதிக்கொண்டு அவர்களுக்கு அறிவுறுத்த,துண்டு பிரசுரம்மூலம் சில முறைகள் கையாண்டார்கள் என்பதைத் தவிர , அவர்கள் பெரும்பாலோர் படிப்பும் நாகரீகமும் இல்லாதவர்களாக பட்டணங்களுக்கு வெகு தூரத்தில் இருக்கிற நாகரீகமும் பகுத்தறிவும் அற்ற மக்கள் என்கிற எண்ணமே இல்லாமல் அவர்களுக்கு நலம் செய்யும் வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள்.

உண்மையில் கிராமங்களை சீர்திருத்த வேண்டுமானால் நான் சொல்லப்போகும் முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டும். விவசாயம் உடலுழைப்பில் நடைபெறுவதை மாற்றி அதை ஒரு தொழில் முறையாக (Industrial இன்டஸ்ட் ரியலாக) ஆக்கப்படவேண்டும்.

உழுவதும் விதைப்பதும், அறுப்பதும் இயந்திரத்தால் செய்யப்படவேண்டும். கிணறு வெட்டுவதும் தண்ணீர் இறைப்பதும் பாய்ச்சுவதும் இயந்திரத்தால் செய்யப்படவேண்டும்.

அந்த அளவுக்கு பூமிகளைத் திருத்தி இணைக்க வேண்டும். அதற்குப் பயன்படாத பூமியை தனிப்படுத்தி, அடிக்கடி பாடுபடவேண்டிய அவசியம் இல்லாத பயிர் செய்யவேண்டும்.

விளைப்பொருளால் ஆக்கப்படும் பண்டங்களை ஆங்காங்கே விவசாயிகள் கூட்டுறவு முறையில் ஆக்கப்பட்டு அந்தப் பயன் விவசாயிகளுக்கே கிடைக்க வேண்டும்.

பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக ஆக்கி அதில் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பார்க்கு, சினிமா, டிராமா, தமாஷ் அறை, வாசகசாலை, புத்தகசாலை, ரேடியோ நிலையம், நல்ல கோர்ட்டு, கால அளவுப்படி போக்குவரத்து உள்ள பஸ் ஸ்டேஷன், போலீஸ் ஸ்டேஷன், நன்றாய்ப் படித்த ஒரு நீதிபதி, சகல சாமானும் கிடைக்கத்தக்க கடைகள், ஏற்படுத்த வேண்டும்.

இயங்கும்படியான (சுற்றுப்பிரயாண) கண்காட்சி சாலைகள் அடிக்கடி பற்பலவிதத்தில் அமைத்து ஊர்கள் தோறும் சுற்றிசுற்றி வரும்படியாகவும் ஆனகாரியங்கள் செய்யவேண்டும்.

ஆங்காங்கு அப்பீல் கோர்ட்டுகள்முறை தெரியும் அதிகாரிகள் சுற்றுப் பிரயாணம் செய்து ஆங்காங்கு வாரா வாராம் முகாம் போடவும், ஆன ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், சென்னை 14 லட்சம் ஜனத்தொகை கொண்ட நகரம். கோவை ஒரு லட்சம் ஜனத்தொகை கொண்ட நகரம். பெருந்துறை 5000 ஜனத்தொகை கொண்ட நகரம். இது போலவே இப்போது கிராமமாகப் பாவிக்கப்படும் ஈரோட்டுக்குப் பக்கத்தில் உள்ள கொல்லம்பாளையம், மூலப்பாளையம், சூரம்பட்டி, மேட்டுவலசு என்கிறவை போன்ற பக்கப் பக்க கிராமங்கள் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு, ஏதோ ஒரு பெயர்கொண்ட சர்க்கிளாக்கி 2500 அல்லது 5000 ஜனத்தொகைகொண்ட நகரமாக ஆக்கிவிட்டு, அதை நகரத்தார்கள், நாகர்கள் சுரண்ட முடியாமல் செய்யவேண்டும். "நகரத்தாருக்காகத்தான் அவர்கள் வாழ்கிறார்கள், வாழவேண்டும்" என்று சொல்லப்படுவதை அடியோடு மாற்றவேண்டும்.

அதோடுகூடவே, அந்த இடங்களில் அவற்றிற்குத் தகுந்தபடி, இயந்திரத்தால் செய்யப்படும் சிறு சிறு தொழிற்சாலைகளை நிறுவி, அவர்கள் வேறு ஊருக்கு பிழைப்புக்குப் போகாதபடி பிழைப்பு ஏற்படுத்தவேண்டும்.

கிராமத்தான், பட்டிக்காட்டான், குப்பைக்காட்டான் என்கின்ற பெயர் ஒரு மனிதனுக்கு ஏன் இருக்கவேண்டும்?

ஆதலால், அப்பெயர்கள் இல்லாமல் செய்யப்பட்டுவிடவேண்டும்.

மேல்நாடுகளில் பெரும்பான்மை கிராமங்கள், நான் விரும்புகிற முறைப்படிதான் இருக்கின்றன.

அதாவது: தார் ரோட்டு, குழாய் தண்ணீர், எலக்ட்டிரிக் விளக்கு, எலக்ட்டிரிக் பவர், பஸ் சர்வீஸ், பள்ளிக்கூடம், விளையாட்டு மண்டபம், சமநீதி, தொழிற்சாலை ஆகியவை இல்லாத இடங்கள் (கிராமங்கள்) மேல்நாடுகளில் காண்பது மிகமிக அதிசயமாகும். ரஷ்யாவில் மாத்திரம் சில இடங்கள் கிராமங்கள்போல் காணப்படுகின்றன. அதுவும் இதற்குள் நகரமாகி இருக்கும். மற்றப்படி, ஐரோப்பாவில் கிராமங்கள் என்ற நிலை இல்லவே இல்லை. இருந்தபோதிலும், அது அந்த இடத்திற்கு ஏற்ற வாழ்வாய் இருக்கலாமே தவிர, "பிராமணனுக்குத் தொண்டு செய்வதற்கே கடவுள் சூத்திரர்களைப் பஞ்சமனைப் படைத்தார்" என்பது போல், "நகரத்தார்கள், நல்வாழ்வு வாழ்வதற்கே கிராமங்கள் ஏற்பட்டன" என்கிற முறையில் கிராமங்கள் அங்கு இல்லை. அங்கு ஏதாவது ஒன்றிரண்டு இருந்தபோதிலும், இங்கு இருக்கக்கூடாது என்று சொல்லுவேன்.

கீழான தொழில், ஈனமானதொழில், கஷ்டமான தொழில், சரீர உழைப்பு அதிகமாகவும்-பயன் மிக்க அற்பமாகவும், குறையாகவும், வாழ்வில் இழிவாகவும் இருக்கும்படியான தொழில் முறைகளை நாட்டில் இல்லாமல் செய்யவேண்டும். அதுதான் நாட்டு முன்னேற்றமாகும்.

கப்பல் கட்டி எவனோ ஒருவன் கோடீஸ்வரனாவது முன்னேற்றமாகாது. எங்கேயோ ஒரு இரும்புத் தொழிற்சாலை வைத்து, யாரோ கோடீஸ்வரனானால் நாட்டுக்கு முன்னேற்றமாகிவிடாது.

நான் கூறுகிற முன்னேற்றம் செய்யமுடியவில்லையானால், அதற்கு அதாவது அப்படிப்பட்ட இழிவான, கீழான, பிரயாசையான வேலை செய்பவர்களுக்கு அதிக லாபமும், சலுகையும், மேன்மையும் இருக்கும்படியான பிரதிபலன் அடையச் செய்யவேண்டும். இரசாயன முறை, விஞ்ஞான முறை, யந்திரமுறை முதலியவைகளைக் கையாண்டு, அவைகளைக்கிராமங்கள் என்பவைகளில் இருந்து தொடங்குவோமேயானால், இந்தப் பிரச்னைகள் சுலபத்தில் தீர்ந்துவிடும். கிராமம் என்கிற பெயரும் தானாக மாறிவிடும்.

முன்னேறும் உலகம்

[ப. வாணன்]

"உலகம் கெட்டுவிட்டது. மக்கள் தவறு வழியில் சென்று அழிந்துகொண்டிருக்கின்றனர். வாழ்வாவது மாயம்; சாவது திண்ணம்!" என்று வேதாந்தம் பேசி, "மனித சமுதாயம் இன்று தாழ்மையான நிலைக்குப் போய்விட்டது. வேதகாலத்திலே மக்களுக்குள் பேதாபேதம் கிடையாது. வேற்றுமை கிடையாது. அவனவன் தன் வேலையை செய்துகொண்டு நிம்மதியான வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். மேல் நாட்டில் உற்பத்தியான இந்த நவீன நாகரீகம்மனிதனுடைய நிம்மதியையே ஒழித்துவிட்டது. முன்னேற்றம் முன்னேற்றம் என்று கூறி மக்களை பிற்போக்கில்தள்ளி விட்டனர், இந்த நாகரிக வாதிகள்" என்று ஹிந்து கலாச்சாரத்தைப் பாதுகாக்கப் புறப்பட்டிருக்கும் தேசியவாதிகள் கூறி வருகின்றனர்.

இந்திய உபகண்டத்தை ஆளும் உரிமை பெற்றவர்கள் வேதகாலப் பெருமையை மகிழ்ச்சியோடு இன்று நாடெங்கணும்சுற்றி வெளியிட்டுவருகின்றனர்.

இந்திய உபகண்டம் பூராவும் ஒற்றுமையான சூழ்நிலையை உண்டாக்க, இந்தியா பூராவும் மிக உயர்ந்த கலாச்சாரம் நிலவியது என்றும், மேல்நாட்டு நாகரிக நுழைவால்தான் அந்த உன்னதநிலை அழிந்துவிட்டதென்றும் கூறுகின்றனர்.

இந்தக் கூற்று எந்தளவு வரலாற்றுக்குப் புறம்பானது என்பதை நாம் ஆராயும் முன், "நாகரீக வாழ்வு" என்றும் "ஆத்மார்த்திக வாழ்வு" என்றும் அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

"நாகரீக வாழ்வு" என்று தேசியவாதிகள் கேலிபேசும் வாழ்க்கை முறை, மேல் நாட்டில் பிறந்து வளர்க்கப்பட்டுவரும் விஞ்ஞான வாழ்வைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அவர்கள் எண்ணும் "ஆத்மார்த்திக வாழ்வு" கடவுளுக்குப் பயந்து, விதியின்படியே உலக வாழ்க்கை நடைபெறுகிறது என்று நம்பி, இகத்தின் சுகத்தை மறந்து பரத்தை அடைய ஆண்டவனின் தியானத்தில் வாழ்க்கையை வேத விதிப்படி நடத்தும் முறையைத் தான் குறிக்கிறது.

இந்த இரண்டு முறையில் எது சிறந்தது என்பதை ஆராயும் முன், வரலாறு இந்த முறைகளைப் பற்றி என்ன கூறுகிறது என்பதையும் சிறிது கவனிக்கலாம்.

மனித சமுதாயம் நமக்கு ஆராய முடிந்த அளவில், ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது.

மனித வரலாற்றில் "விஞ்ஞான வாழ்வு" என்பது மனித சமுதாயத்தில் ஆரம்பித்து சுமார் முன்னூறு ஆண்டுகள் தான் ஆகிறது! இந்தக் குறுகிய காலத்தில் அவனுக்கு கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளும், செல்வப்பெருக்கும் எவ்வளவு என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

ஆரம்பத்திலேயே இப்படிப்பட்ட எண்ணற்ற வசதிகளை விஞ்ஞானம் கொடுத்திருக்கிறதென்றால் இன்னும் ஆண்டுகள் செல்லச் செல்ல எத்தனை விதமான புதிய கருவிகள் மனிதனுக்குக் கிடைக்கப் போகிறதோ!

பேரறிஞன் ரஸ்ஸல் கூறுவதுபோல, நமக்குப் பின் வரப்போகும் சந்ததியார் நம்மை காட்டுமிராண்டிகள் என்று அழைக்குமளவுக்கு முன்னேறிவிடுவார்கள்.

* * *

நாகரிக வாழ்விற்கு அடிப்படையான விஞ்ஞான விளக்கம் முன்னூறு ஆண்டுகளுக்குமுன் இத்தாலி நாட்டில் தோன்றிய கலிலியோவிலிருந்து ஆரம்பிக்கிறது. இதில் முதல் நூற்றைம்பது ஆண்டுகள் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியுரைகள், மதவாதிகளின் அடக்குமுறையுடன் போராடிக்கொண்டு வெளிவந்துகொண்டிருந்தன. தனிப்பட்ட விஞ்ஞானிகள் அவரவர்கள் நாட்டைவிட்டு ஓடி, மத குருமார்களின் கொடுமைக்குத் தப்பி, வெவ்வேறு நாட்டில் தங்களுடைய புதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டனர். அந்த ஆராய்ச்சியுரைகள் மனித வாழ்க்கையைத் தொடும் அளவு, அவனுடைய அறியாமையை நீக்குமளவு, சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாகத்தான் பயன்பட்டு வருகின்றன.

ஆகவே, மொத்தமாகப் பார்த்தால், சென்ற ஒன்றரை நூற்றாண்டில் மனித சமுதாயம் அடைந்த முன்னேற்றம், அதற்குமுன் சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுகளில் அவன் அடைந்ததைவிட அதிகம்.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின் முழுப்பலனை நன்கு அநுபவித்துக்கொண்டே, அவர்கள் கொண்ட கொள்கைக்கு நேர்எதிரான வாழ்க்கைமுறையை மக்களுக்கு உபதேசம் செய்யும் மதவாதிகள் ஆரம்ப காலங்களில் விஞ்ஞானிகளுக்குக் கொடுத்த தொல்லைகள் எழுதி முடியாதவை.

அநேகமாக எல்லா விஞ்ஞானிகளும் வறுமையில் வாடினர். கேலிக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாயினர். தாங்கள் எழுதியதை தங்கள் பெயரிட்டுகூட பிரசுரிக்க முடியாமல் வெவ்வேறு பெயர்களில் வெளியிட்டனர்.

வானநிலையையும், சூரிய சந்திர மண்டலங்களையும் தொலை நோக்காடியையும் கண்டுபிடித்து வெளியிட்ட

கலிலியோ, தன் கடைசி நாட்கள் பூராவும் மதகுருமார்களின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டு கட்டாயமாக ஆண்டவனைத் தொழ வைக்கப்பட்டார். சூரியனைச் சுற்றி பூமி சுற்றுகிறது என்று எழுதிய குற்றத்திற்காக எழுபது வயதில் உடல்நிலை குன்றிய நிலையில் ரோமாபுரி போப்பின் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். "சூரியன் தினம் கிழக்கிலிருந்து மேற்கே செல்லவில்லை யென்றும், பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்று வேதநூலில் இல்லாத பைத்யக்காரத்தனமான எண்ணத்தை வெளியிட்ட நீ திருந்தவும், உன்னைப்போல் மற்றவர்கள் தவறு எண்ணம் கொள்ளாமலிருக்கவும், உன்னுடைய புத்தகத்தை தடை செய்வதோடு, உன்னையும் மூன்றாண்டுகள் சிறையில் தள்ளுகிறோம். இந்த மூன்றாண்டுகளும், வாரம் ஒரு முறை வேதநூலை நீ படிககவேண்டும்!" என்று தன்னுடைய நீண்ட தீர்ப்பில் போப்பாண்டவர் கூறியது மாத்திரமில்லை; கலிலியோ, அவர் வாயாலேயே தான் எழுதியவை யாவும் தவறானவை என்று வாக்குமூலம்கூறச் செய்து அதை பிரசுரித்தனர், மதவாதிகள். தன்னுடைய தொலை நோக்காடியை வைத்துக்கொண்டு சிறையில் கிடந்த வண்ணம், வானநிலையை மேலும்ஆராய்ந்து கொண்டிருந்த கலிலியோவின் கண்கள் குருடாயின. மனித சமுதாயத்திற்கு விஞ்ஞான வாழ்வின் அஸ்திவாரத்தைப் போட்ட கலிலியோ 1642-ல் பரிதாபகரமான முறையில் இறந்தார்.

அவர் இறந்த அதே ஆண்டில்தான் இங்கிலாந்தில் நியூடன் பிறந்தார். வான ஆராய்ச்சிக்கு கலிலியோ எப்படி அடிப்படை தத்துவங்களைக் கண்டு பிடித்தாரோ, அப்படியே, கிரஹங்களும், பொதுவாக ஒரு பொருளும் மற்றொருபொருளும் ஏன் தனித் தனியாக நிற்கின்றன. என்றவிவரங்களைநியூடன்கண்டுபிடித்தார். மரத்திலிருந்து ஆப்பிள் ஏன் கீழே விழவேண்டும்; ஏன் மேல்நோக்கி போகவில்லை? என்று நியூடன்ஆராய ஆரம்பித்தார் என்று கூறுவார்கள். அந்தக் கதை நடந்ததோ இல்லையோ; அந்தக் கதைமூலம் நியூடனின் ஆராய்ச்சிகளின் அடிப்படையை தெரிந்துகொள்ளலாம். நியூடனின் ஆராய்ச்சிகளுக்குப் பிறகுதான் கலிலியோவின் சூரிய சந்திரமண்டல கொள்கைகளுக்கு நல்ல விளக்கம் கிடைத்தது. பூமிக்கும் மற்றக் கிரஹங்களுக்கும் இருக்கும் ஆகர்ஷ சசதியால்தான் கிரஹங்கள் தனித் தனியே இயங்குகின்றன, என்று தெரிய வந்தது. நியூடனின் கொள்கையை மேலும் வளர்த்து பூர்த்தி செய்த பெருமைதான் இன்று உயர்ந்த விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் செய்த ஆராய்ச்சி.

கலிலியோவிற்கு ஏற்பட்ட பரிதாப முடிவு, நியூடனுக்கு ஏற்படவில்லை. அதற்கு இரண்டு காரணம். கலிலியோவின் காலத்திற்குப் பிறகு மக்களின் பக்தியைக் கெடுக்காத வழியில, சாதாரண ஜனங்களின் அறிவுக்கு எட்டாத விஷயத்தைப்பற்றி அந்த விஞ்ஞானிகள் ஏதோ கூறிப்போகட்டும்; என்று தங்கள் அடக்கு முறைகளை மதவாதிகள் தளர்த்திக் கொண்டதும்; இங்கிலாந்தில் நியூடன் வாழ்ந்த நேரத்தில் இருந்த அரசியல் நிலைமையும்தான்.

சார்லஸ் மன்னன் கொல்லப்பட்டு, கிராம்வெல் ஆட்சி முடிந்து, இரண்டாம் சார்லஸ் ஆட்சிக்கு வந்த நேரம்; நியூடனின் கருத்து சரியோ, தவறோ நாம் ஏன் அதை எதிர்த்து மறுபடியும் அரசியல் குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்று நியூடனை கௌரவமாகவே விட்டு விட்டனர், ஆங்கில சர்க்கார்.

ஆனால் நியூடனுக்குப் பின்னால் வந்த டார்வினை அவ்விதமாக நடத்த முடியவில்லை. நியூட்டனே கண்ணுக்குத் தெரியாத ஆகர்ஷண சக்தியைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். டார்வினோ, மனிதனின் படைப்பைப்பற்றியே பேச ஆரம்பித்து விட்டார். "வேத நூலுக்கு விரோதமாக மனிதன் குரங்கிலிருந்துதான் வந்தான் என்று கூறும் டார்வின், ஆண்டவனின் படைப்புத் தொழிலையே மறுக்கிறான். ஆகவே ஆண்டவனின் விரோதி; மனிதரில் சாத்தான்!" என்று கூறி, அவர் நூல்களை எந்த உண்மை கிறிஸ்துவனும் படிக்கக்கூடாது என்று கூறியது, ரோமாபுரி மத பீடம். ஐரோப்பா பூராவும் சென்ற நூற்றாண்டில் புரட்சிப புயலை வீசிய டார்வின் கூறிய கொள்கைகள் விஞ்ஞான உலகிற்கு முற்றிலும் புதிதுகூட அல்ல. மனிதன் தோன்றியதற்கு இயற்கை வளர்ச்சிதான் காரணமென்று டார்வினுக்கு முன்பே பலர் கூறிப்போன போதிலும், டார்வின் அந்தத் தத்துவத்தை விரிவான உதாரணங்களோடு விளக்கி, மனிதன் முடிவில் குரங்கிலிருந்து தான் தோன்றினான் என்பதை நன்கு விளக்கினார். மதவாதிகளுக்கு ஆண்டவனின் அருஞ்செயலையே குறை கூறினாரே டார்வின் என்று கோபம். பெரிய மனிதர்களுக்கும், பிரபுக்களுக்கும் தங்களை குரங்கு வம்சம் என்று கூறினாரே என்று கோபம். இருந்தபோதிலும் டார்வினைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான உடற்கூறு வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்து மேலும் பல உண்மைகளை வெளியிட்டனர்.

இதைத் தொடர்ந்து மனித உடலைப் பற்றிய ஆராய்ச்சிகளும் நடைபெற்றன. முன்பே, பதினேழாவது நூற்றாண்டில் அந்தோணி வான் லீவன் ஹீக் பெரு நோக்காடிமூலம் அணுவளவு இருக்கும் பாக்டீரியாக்களைக் கண்டுபிடித்தார் இதைத் தொடர்ந்து உடலில் பாக்டீரியாக்களின் வேலையையும், உணவுகளில் அவைகள் ஏற்படுத்தும் மாறுதல்களையும் சென்ற நூறு ஆண்டுகளுக்குள் கண்டுபிடித்தனர். இதன் மூலம் மனிதனுக்கு ஏற்படும் எந்த வியாதிக்கும் காரணம் தெரிந்தது.

உலகத்தில் பாறைகளுக்கிடையில் கிடைத்த எலும்புக் கூடுகளை வைத்துக்கொண்டு பூமியின் வரலாற்றையும் அறிய முடிந்தது.

உடலுக்குள் ரத்தம் குழாய்களில் ஓடுகிறது என்பதையும், எலும்புகளின் அமைப்பையும், கண்டுபிடித்தனர்.

* * *

இயந்திரத் துறையில் மர இயந்திரங்களுக்குப் பதில், இரும்பு இயந்திரங்களையும், அதற்கு இரும்பு கிடைக்க சுரங்கம் தோண்டுவதையும், அந்தச் சுரங்கம் தோண்டிய பின் அதிலிருந்து எடுத்த இரும்புக் கனிமை உருக்க காடுகளை எரிப்பதில் லாபமில்லை என்பதை உணர்ந்து, நிலக்கரியைக் கண்டுபிடித்ததும்,

அந்த நிலக்கரியை எடுக்கும்பொழுது வெளிவரும் தண்ணீரை அகற்ற 'சைபன்' பம்புகள் கண்டுபிடித்ததும், மனித சமுதாயத்தில் சென்ற மூன்று நூற்றாண்டுகளில் நடந்தவை. இந்த மகத்தான கண்டுபிடிப்பில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் பெயரையும் அவர்கள் பட்ட கஷ்டத்தையும் கூற ஆரம்பித்தால் விரியும் என விடுகிறோம்.

கிடைத்த நிலக்கரியையும், இரும்பையும், தொழிற்சாலைக்குக் கொண்டுவர நீராவி இயந்திரம் கண்டுபிடித்ததும், ஆலையில் செய்யப்பட்ட சாமான்களை தூர தேசங்களுக்கு எடுத்துச்செல்ல ரயில்களை நிர்மாணித்ததும், கால்வாய்களையும், கடல்களையும் தாண்ட நீராவிக் கப்பல்களைக் கண்டுபிடித்ததும் மனித சமுதாயத்திற்கு விஞ்ஞானிகள் செய்த அரிய சேவையாகும்.

கையினால் நூற்றுக்கொண்டிருந்த நிலையை மாற்றி ஜான்கே கண்டுபிடித்த நூற்கும் இயந்திரமும், ஹார்கிரோவ்ஸ் கண்டுபிடித்த பஞ்சாலை இயந்திரங்களும் மனித நாகரீகத்தை வளர்ப்பதில் பெரும் பங்கைப் பெறுகின்றன.

மின்சார சக்தியைக் கண்டுபிடித்த வில்லியம் கில்பர்ட்டும் அவரைத் தொடர்ந்து மின்சாரம் வெளிச்சத்தைத் தரும் என்று ஆராய்ந்து வெளியிட்ட பெஞ்சமின் ப்ராங்க்லினும் மனித வளர்ச்சியில், அதிக அளவு உதவிசெய்தவர்கள்.

வோல்டாவின் உதவியால் மின்சார சக்தியை சேமித்து வைக்கவும், கல்வானி, டே, ஹான்ஸ் கிறிஸ்தியன், ஆம்ப்ரி, ஆராகோ, மைகேல்பாரடே, எடிஸன் இவர்கள் எல்லோரும் சமீபகாலத்தில் உலகத்தையே மின்சார மயமாக்கிவிட்டுப் போனவர்கள்.

தொழிலபிவிருத்தியிலும்; பொருள் உற்பத்தியிலும் மின்சாரம் மிக உதவியானது, இந்த விஞ்ஞானிகளினால்தான்.

சாமுவேல் மோர்ஸ், பெல், மார்கோனி மூவரும் மின் சக்தியை மேலும் ஆராய்ந்து, தந்தியையும், கம்பியில்லாத் தந்தியையும் உலகுக்குத் தந்தனர்.

இப்படி, நம்முடைய மூதாதையர்கள், எந்தெந்த விஷயங்களுக்குப் பயந்து, ஆண்டவனையும், அவன் துணைவர்களையும் உதவிக்கு அழைத்தனரோ, அந்த பயத்தையெல்லாம் போக்கிவிட்டனர், விஞ்ஞானிகள். எந்தெந்த செயல்களை, நாம் செய்த பாவத்தின் விளைவு என்று எண்ணி, ஆலயத்தைச் சுற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று எண்ணினரோ, அந்தத் துயர்களையெல்லாம் துடைத்துவிட்டனர்.

மலேரியா சுரம் வந்தபின், அது நம் தலைவிதி என்று கூறிக்கொள்வதைவிட, சுத்தமாக சுடு தண்ணீரை சாப்பிடுவதன்மூலம் மலேரியாவே வராமல் தடுத்துக்கொள்ளலாம் என்று இன்று ஒரு குழந்தைக்குக்கூடத் தெரியும்.

அம்மை வந்தபின், மகமாயிக்குப் பூசை போடுவதும், காலரா ஊசி போட்டுக்கொள்ளாமல், அவதிக்காளாகி, பின் மாரியாத்தாளின் திருவிளையாடலைத் தணிக்க கூட்டல் போடுவதும், எந்தளவு அறிவீனம் என்று ஆரம்பப்பள்ளிக்கூட பையன்கூட கூறுவான். உடலிலே ஏற்படும் ஒவ்வொரு வியாதிக்கும் மருந்துகள், ஆபரேஷன்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு மனிதவாழ்வு நீடிக்கப்பட்டிருக்கிறது.

உயிரைப் பாதுகாக்க மருத்துவ வசதி கிடைத்ததுபோல், உணவைப் பெருக்க விஞ்ஞானக் கருவிகளும், எருக்களும், பூச்சிகளால் தானியங்கள் வீணாகாமலிருக்க கிருமிநாசம் புரியும் மருந்து வகைகளும், இன்று விஞ்ஞானிகளின் உதவியால் மனித வர்க்கத்திற்குக் கிடைத்திருக்கின்றன!

தங்கியிருக்க, சுகாதார வசதியடைந்த வீடுகளையும், உடுத்திக்கொள்ள அழகிய பட்டாடைகளையும், அன்றாட தேவைக்கு ஆயிரக்கணக்கான சாமான்களையும், விஞ்ஞான அடிப்படையில் அமைந்த 'நாகரீக வாழ்வு' அவனுக்குத் தந்திருக்கிறது.

இதோடு பல்வேறு நாட்டு மக்களும் கூடி குலாவும் முறையில் பிரயாண வசதிகளும் கூப்பிட்டால் எட்டாயிரம் மைல்களுக்கப்பால் இருந்துகூட பேசக்கூடிய டெலிபோன் வசதிகளும், மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்தும் ஸ்தாபனங்களான பத்திரிகை, சினிமா, டெலிவிஷன் எல்லாம் விஞ்ஞான வாழ்வு கொடுத்ததுதான்.

உண்மையில் நாம் நன்றியுடையவர்களாக இருந்தால் இந்த வசதிகளை செய்துதந்த விஞ்ஞானிகளை நாம் வாழ்த்தி, அவர்களைத் தொடர்ந்து மேலும் ஆராய்ச்சிகள் செய்து நமது பின் சந்ததியார்களுக்கு இன்னும் பல வசதிகளை செய்து தந்துபோகவேண்டும்.

இதை விட்டுவிட்டு, ஆத்மார்த்திகப் பெருமை பேசுவதும், மைக் வைத்துக்கொண்டு திருவெம்பாவை மாநாடுகள் நடத்துவதும், ஏரோப்ளேனில் பறந்து வந்து திருப்புகழை மணி மணியாகப் பாடுவதும், கேலிக்கும், சிரிப்புக்கும் உரிய விஷயமாகத்தானிருக்கிறது.

பண்டையகால மனிதனும், இன்றைய மனிதனும் எப்படி இருக்கிறான் என்றுதான் மேலே பார்த்தோம். பண்டைய மனிதன் காட்டு மிராண்டியாக—விதியே முடிவு என்று நம்பிக்கையற்று வாழ்நாள் பூராவும் யாரும் நிரூபிக்கமுடியாத ஆண்டவனைத் தொழுதி காலந்தள்ளினான்.

இன்றைய மனிதனோ எல்லாத்துறையிலும் சகல வசதிகளும் பெற்று சுகவாழ்வு நடத்துகிறான். இந்த நாகரீக வாழ்வு முன்னேற்றமான வாழ்வில்லை என்று கதறுகிறவர்கள், அதை அனுபவித்துக்கொண்டே அவ்விதம் கூறுகின்றனர். அந்த நயவஞ்சகத் தன்மையை நாட்டில் விளக்கினாலே நாம் விஞ்ஞான வளர்ச்சிக்கு சேவை செய்தவர்களாவோம். அறிவு வளர்ச்சிக்கு உதவிசெய்தவர்களாவோம்.

மனிதன் இந்த தேசியத் தலைவர்கள் கூறும் ஆத்மார்த்திகத்துறையைத் தாண்டிதான் இன்றைக்கு இருக்கும் நாகரீக வாழ்விற்கு வந்தான். நிச்சயமாக நேற்றைவிட இன்று முன்னேறியிருக்கிறான்; இன்றைக்கிருப்பதைவிட நாளை இன்னும் முன்னேறுவான்!

✻

தலை காத்த தமிழ்

இரா. நெடுஞ்செழியன்

சேரன் அரண்மனை. அழகான வேலைப்பாடுகள் அமைந்த மண்டபம். மண்டபத்தின் நடுவே கட்டில் ஒன்று போடப்பட்டிருக்கிறது. கட்டிலின்மேல் விரிக்கப்பட்டிருக்கும் மெத்தை கண்ணைக் கவர்கிறது. வழவழப்பான பட்டு மெத்தையின்மேல் வெண்ணிறப் பூக்கள் தூவப்பட்டிருக்கின்றன. எண்ணெய்க் குடத்தில் பொங்கி எழும் நுரை, எவ்வளவு வெண்மையாகவும், மென்மையாகவும், எழிலாகவும், எடுப்பாகவும் காணப்படுமோ, அத்தன்மையெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று, அழகுறக் காட்சி அளித்தவண்ணம் மிளிர்கிறது, அப்படுக்கை.

அரண்மனையின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டுவரும் மோசிகீரனார் என்ற புலவர், இந்த மண்டபத்தின் எதிரே வந்து நிற்கிறார். மோசிகீரனார், மோசி என்ற ஊரிலிருந்து, சேரமன்னனின் பேர் புகழ், அறிவு ஆற்றல், வரையாது வழங்கும் வள்ளல் தன்மை, புலவரைப் போற்றும் பண்பு ஆகியவற்றைக் கேள்வியுற்று, அவனின் ஆதரவைப் பெற வேண்டி வந்தவர்; அரசனால் அன்பு பாராட்டப்பெற்றுச் சில நாட்களாக அரண்மனையிலேயே இருந்து வருகிறவர். ஒருநாள், அரண்மனையைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்குப் பிறக்கிறது. அப்படிச் சுற்றிப் பார்த்து வரும்போதுதான், இந்த மண்டபத்தை, அவர் காண நேரிடுகிறது. கட்டிலின் அழகுத் தோற்றமும், படுக்கையின் மென்மையும், அவர் உள்ளத்தைக் கவருகின்றன. கட்டிலின் அருகே மெல்லச் சென்று, அந்தப் படுக்கையைத் தம் கையால் மெதுவாகத் தொட்டுப் பார்க்கிறார். அவர் உடலெல்லாம், உள்ளமெலாம் சிலிர்த்துப் போகின்றன. படுக்கையில் உட்கார்ந்து பார்க்கலாமா என்ற எண்ணம் அவருக்குச் சிறிதளவு ஏற்படுகிறது. சுற்றுமுற்றும் பார்க்கிறார்; யாரேனும் இருக்கிறார்களா என்று. யாரும் தம்மைக் காணவில்லை என்பதைத் தெரிந்துகொண்டவுடன், சற்றுத் துணிவை வரவழைத்துக்கொண்டு, படுக்கையின்மேல் உட்காருகிறார். மட்டிலா மகிழ்ச்சி உள்ளத்தில் கரைபுரண்டு ஓடுகிறது. அந்த அளவோடு மீள அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. சிறிதுநேரம் அதில் சாய்ந்திருந்தால் என்ன என்ற ஆவல் தோன்றுகிறது. உடனே படுக்கையில் சாய்கிறார். மகிழ்ச்சியில் அப்படியும் இப்படியும் புரளுகிறார். அவருடைய உணர்வு, அவரை இன்ப உலகுக்கு அழைத்துச் செல்கிறது. அவர் தம்மை யறியாமலேயே அப்படியே கண்ணயர்ந்துவிடுகிறார்.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரனின் அரண்மனையில்தான், ஒருநாள், இந்தக் காட்சி நடைபெற்றது. மன்னனின் இயற்பெயர் இரும்பொறை என்பது. அவன் அவனோடு பிறந்தவர்களில் மூத்தவனாக இருந்தபடியாலும், சேர மன்னர்களிலே பெரும்புகழ் வாய்ந்தவனாக இருந்தபடியாலும் அவனுக்கு பெருஞ்சேரல் என்ற அடைமொழி கொடுத்துப் பெருஞ்சேரல் இரும்பொறை என்று அக்காலத்தவர் அழைக்கலாயினர். அவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்ற சிற்றரசனைத், தகடூரில் (தர்மபுரி) முறியடித்து, வெற்றிக் கொடியோடு மீண்டதால், அவனுக்குத் தகடூர் எறிந்த என்ற அடைமொழியும் வழங்கப்பட்டது. பெருஞ்சேரல் இரும்பொறையின் வீரமேம்பாடும், வெற்றிச் செயல்களும் தமிழகமெங்கணும் சிறக்கப் பரவியிருந்தது. பண்டைக்காலத் தமிழக முறைப்படி, வெற்றியின் அறிகுறியாக விளங்கிய தன் வீரமுரசத்தை மிகச் சிறப்புக்குரிய பொருளாக வைத்துக் காத்துவந்தான் அச்சேரமான். அந்த நாட்களில் இரு வேந்தர்களுக்கிடையே போர் மூண்டெழுந்தது என்றால், மாற்று அரசனின் வீரமுரசத்தைக் கைப்பற்றுவதிலேதான், இருசாரினரும் கண்ணுங்கருத்துமாக இருப்பர். வீரமுரசம் கைப்பற்றப்பட்டுவிட்டால், வெற்றி கைப்பற்றியவன் பக்கம் என்பது அக்கால மரபு. அந்தவகையில் இரும்பொறையின் வீரமுரசம் யாராலும் கைப்பற்றமுடியாத அளவுக்கு வெற்றிச் சிறப்போடு நிலைநின்று வந்தது. அரசன் வணக்கம் செலுத்தும் அளவுக்குப் பெருமை பூண்டது அந்த முரசு. அத்தகைய முரசுவைக்கப்பட்டிருந்த கட்டில்தான், மோசிகீரனார் பார்த்து, மகிழ்ந்து, படுத்துறங்கியதாகும்.

அந்த முரசு, பல போர்க்களங்களைப் பார்த்தது; அதனுடைய முழக்கம், குருதியாறுகள் பலவற்றை ஓடச்செய்தது. அது, படை வீரர்களுக்கு வீரஉணர்ச்சியைத் தூண்டிவிடும் ஒரு பெரும் கருவியாகக் காட்சியளித்து வந்ததாகும்! இரும்பொறை போற்றி வந்த அந்த முரசு, கருங்காலி மரத்தால் செய்யப்பட்டு, குறைபாடு சிறிதும் இல்லாத வகையில் வாரால் இழுத்து நன்கு கட்டப்பட்ட தோலையுடையதாய் மயிலினது தோகையால் தொடுக்கப்பட்டதும் ஒளி வீசும் பொறியையுடையதும், நீல மணிபோலும் நிறத்தையுடையதும் ஆன மாலை சூட்டப்பட்டதாய், பொன்னாலான தளிரை அணிந்ததாய், உழிஞைமாலையை உடையதாய் அணி செய்யப்பட்டு, முரசு கட்டிலின் வைத்து அழகு பார்க்கப்பட்டதாகும். அந்த முரசை, நீரில் கழுவி, தூய்மை செய்துகொண்டு வருவதற்காகச் சில வேளைகளில், நீராடு துறைக்கு எடுத்துச் செல்வது வழக்கம். அதனை மரியாதைகளோடு எடுத்துச்சென்று, மரியாதைகளோடு கொண்டுவந்து சேர்ப்பர் போர் வீரர்கள். மோசிகீரனார் அரண்மனையைச் சுற்றிப் பார்த்து வந்த அந்தக் குறிப்பிட்ட நாளில், நீராட்டு

வதற்காக முரசம் வெளியே எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. முரசம் வெளியே சென்றிருந்த நிலையில்தான் மோசிகீரனார் முரசு கட்டிலைக் காண நேர்ந்தது.

புலவர் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார். முரசத்தைக் கழுவிக்கொண்டு வீரர்கள் வருகிறார்கள். முரசத்தோடு மண்டபத்திற்குள் நுழையும்போது அனைவரும் திடுக்கிட்டுப்போகின்றனர். அரசனே உட்கார அஞ்சும் முரசு கட்டிலில், யாரோ படுத்திருப்பதைக்கண்டு திகைத்துவிடுகின்றனர். சில வீரர்கள் உருவிய வாளுடன் கட்டிலருகில் ஓடோடி நின்றுப் படுத்திருப்பவரை வாளுக்கிரையாக்கத் துணிகின்றனர். படுத்திருப்பவர், அரசனால் போற்றிப்பாராட்டப்படும் ஒருவராக இருக்கக் கூடுமோ என்று ஐயுறுகின்றனர். உடனே பின்வாங்கி, என்ன செய்வதென்று தோன்றாமல் நிற்கின்றனர். அரசனிடம் செய்தியை அறிவிப்பதுதான், தாம் செய்யக்கூடிய முறையான செயல் என்ற முடிவுக்கு வந்து, அரசனிடம் ஓடிப்போய் கூறுகின்றனர்.

"மன்னர் மன்னா!......"

"ஏன்? என்ன நடந்தது?"

"முரசு கட்டிலை இழிவுபடுத்திவிட்டான் முழு மூடன் ஒருவன்"

"முரசு கட்டிலை இழிவுபடுத்தினானா? யாரவன்? அவன் இன்னமும் உயிருடனா இருக்கிறான்?"

"யாரவன் என்றே தெரியவில்லை, அரசே! அவன் வெளிநாட்டுத் தூதுவனாகவோ அல்லது தங்கள் விருந்தினனாகவோ இருக்கக்கூடும் என்று கருதி, நாங்கள் எதும் செய்யவில்லை"

"இப்பொழுது அவன் எங்கே இருக்கிறான்?"

"எங்கும் போகவில்லை. முரசு கட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறான்."

"முரசு கட்டிலிலா? உறங்கிக்கொண்டிருக்கிறானா?"

"ஆம், அரசே! நாங்கள் அவனை எழுப்பவில்லை."

"ஆ! நான் வணங்கும் முரசு கட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறானா! என்ன திமிர்! எடு அந்த வாளை" என்று கூறி, உருவிய வாளுடன், சினம் பொங்க, முரசு கட்டிலிருக்கும் மண்டபம் நோக்கி விரைவாகச் செல்கிறான். அரசனின் சினக் குறிப்பைக் கண்ட போர்வீரர்கள் நடுநடுங்கிப்போய், அரசனுக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கின்றனர். அரசன் முரசு கட்டிலருகில்போய் நின்று, வாளை விசையுடன் தூக்குகிறான். வாள் நிமிர்ந்து மீண்டும் வீழ்வதற்குள், அவனது இரண்டு கண்களும் படுக்கையில் கிடப்பவரை உற்று நோக்குகின்றன; உடனே வாளுடன் ஓங்கி நின்ற கை, மெதுவாகக் கீழே விழுந்துவிடுகிறது. அரசன் படுக்கையில் கிடப்பவரை உற்றுநோக்கியவண்ணம் அசைவற்று நிற்கிறான். பின்னர், கையிலுள்ள வாளை அருகே வைத்துவிட்டு, அங்கிருந்த கவரிமான் மயிரினாலான வெண்சாமரையை எடுத்துப், புலவருக்குக் காற்றுப்படும்வண்ணம் வீசுகிறான். அரசனுடைய செயல், அங்குக் கூடியிருந்தோர் அனைவர்க்கும் வியப்பைத் தருகிறது. அனைவரும் ஆடாமல், அசையாமல் அப்படியே நிற்கின்றனர். அரசன்மட்டும், தன்னுடைய கையை ஓச்சிச் சாமரையை வீசிக்கொண்டிருக்கிறான்.

சிறிது நேரத்தில், புலவர் கண் விழித்துப் பார்க்கிறார்; அரசனையும் ஏனையோரையும் பார்க்கிறார்; தம்மைத் தாமே தெளிவுபடுத்திக்கொள்கிறார்; தாம கனவுலகத்திலிருந்து மீண்டுவந்துள்ளோமோ என்று நினைக்கிறார்: அடுத்த கொடியில், திடுக்கிட்டுத் திகைத்துப்போய், வாரிச்சுருட்டி எழுந்து, கட்டிலினின்றும் துள்ளிக் குதிக்கிறார்.

அரசன், புலவர் அச்சத்தால் துள்ளுவதைக் கண்டு, "அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்! கவலைவேண்டாம்! தவறு ஒன்றும் இல்லை!" என்று கனிவோடு கூறுகிறான்.

புலவர், இருகைகளையும் ஏந்தியவண்ணம் இரும்பொறையை உற்றுப்பார்க்கிறார்: மகிழ்ச்சியும் அச்ச

திராவிட நாகரிகம்

சில வருடங்களுக்கு முன்னால் பம்பாயில் ஒருமொழி ஆராய்ச்சி கூட்டத்திற்குப்போயிருந்தேன். வங்காளி, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி போன்ற பாஷை பிரச்னைகள் பேசப்பட்டு வந்தது. முடிவாக 500 வருடங்களுக்கு முந்திய பழைய இலக்கியமுடைய மொழி குஜராத்திதான் என்று முடிவு செய்தார்கள். அந்த சமயம் என்னை நோக்கி, தமிழில் இப்படி ஏதாவது பண்டை இலக்கியம் இருக்கிறதா? என்றார்கள் கி. மு. 500 வருடத்திற்கு முன்னதாகவே உள்ள இலக்கிய நூல்கள் தமிழில் இருக்கிறதென்று சொன்னேன். அவர்கள் பிரமித்துப்போய் விட்டார்கள்.

இந்திய சரித்திர வரலாறும் சரியாய் எழுதப்படவில்லை. கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி ஆரம்ப காலத்தில் சர். வில்லியம் என்பவர் வங்காளத்திற்கு வந்தார். சம்ஸ்கிருத சாஸ்திரிகள் இவரது துணைகொண்டு அம்மொழி கற்றனர். பிறகு இந்திய சரித்திரம் ஆரம்பமாகி விட்டது. இது எப்படி சரியாகும்? இந்திய சரித்திரம் எழுதப்படவேண்டுமானால் இமய மலையிலிருந்து தொடங்கக்கூடாது. கன்னியாகுமரியிலிருந்துதான் ஆரம்பமாக வேண்டும். ஆரிய நாகரிகத்திற்குமுன் திராவிட நாகரிகம் இந்நாடு பூராவிலும் மட்டுமல்லாமல், மெஸபடோமியா, ஈரான்போன்ற நாடுகள்வரை பரவியிருந்தது. அரசியல்நிலை காரணமாக 'திராவிட' என்றவார்த்தைகள் நமக்கு பிடிக்காதிருக்கலாம். அதற்காக பூர்வீக வரலாற்றை அறியாமல் கண்ணை மூடிக் கொள்ள முடியாது.

ஆர். கே சண்முகம்,
(மறைந்த வீரர்.)

மூம் அவர் கண்களில் நீர்த்துளிகளைச் சொட்ட விடுகின்றன.

மன்னன் புன்சிரிப்பு பூத்தவண்ணம் புலவரை நோக்குகிறான்; மோசிகீரனாரும் மன்னனை நோக்குகிறார். புலவரின் உதடுகள் வெடித்துச் சில சொற்களைச் சொரிகின்றன: "வெற்றியிற் சிறந்த வேந்தே! மென்மையான பூக்கள் சொரியப்பட்ட இந்த அழகிய படுக்கையில் நான் அறியாது ஏறினேன். அப்படி ஏறிய என்னைச், சினம்பொங்க, நீ உன் வாளால், இரு கூறாக வெட்டி வீழ்த்தியிருக்கவேண்டும். அப்படி நீ செய்யவில்லை. அதற்குக் காரணம் தமிழிடத்தில் நீ கொண்டிருக்கும் தணியா ஆர்வமும், தமிழை நீ நன்கு அறிந்திருப்பதுமாகும். நீ உன் சினத்தைத் தணித்துக் கொண்டதே பெரியதொரு செயல் அந்த அளவோடு நீ அமைந்துவிடாமல், என் அருகேவந்து, வலிமையையும் முழவுபோன்ற திரட்சியையும் கொண்ட உன் கையைத் தூக்கி, வெண்சாமரையால், எனக்குக் குளிர்ச்சி பொருந்தும்படி வீசினாய். அப்படி நீ வீசியதற்குக் காரணமென்ன? இவ்வுலகத்தில், புகழோடு வாழ்ந்தால்தான், இறந்த பிறகு மக்களின் நினைவிலே தங்கும் புகழுலகில் வாழமுடியும், இல்லையேல், அந்தப் புகழுலகு வாழ்வு ஏற்படாது என்ற தன்மையை நீ நன்கு கேட்டறிந்துள்ள காரணத்தால்தான் இவ்விடத்தில் வெண்சாமரை வீசினையோ? கூறுவாயாக!" என்று மோசிகீரனார் இரும்பொறையினது தமிழ் ஆர்வத்தையும் புகழ் விழைச்சியையும் கூறி மகிழ்ந்து நிற்கிறார்.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை மோசிகீரனாரைக் கட்டித் தழுவி அன்பு பாராட்டுகிறான். தமிழறிந்ததால், மோசிகீரனாரின் தலைதப்பிற்று!

இந்தச் செய்தியை உள்ளடக்கி, மோசிகீரனாரே, செய்யுள் வடிவில் செப்பும் திறத்தைக் கீழே காணுங்கள்.

மா(சு) அற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலம்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந்(து) அன்ன மெல்பூஞ் சேக்கை
அறியா(து) ஏறிய என்னைத் தெறுவர
இருபால் படுக்கு(ம்) நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலு(ம்) நல் தமிழ்முழு(து) அறிதல்
அதனொடும் அமையா(து) அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடம் கமழ
இவண் இசை உடையோர்க்(கு) அல்ல(து)
அவ(ண்) அ(து)
உயர்நிலை உலகத்(து) உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசி(ல்) நீ ஈங்(கு) இது செயலே.

(புறம்-50)

[மாசு—குற்றம்; அற—நீங்க; விசித்த பிணித்த; வார்புறு—வாரப்பட்ட; வள்பின்—வாரையுடை; தோல் வாரையுடைய; மைபடு—கருநிறம் பொருந்திய கருங்காலியால் செய்த; மருங்குல் — பக்கம்; பொலிய — விளங்க; மஞ்ஞை—மயில்; பீலி—தோகை; ஒண்—ஒளி வீசும்; மணித்தார் — நீலமணிபோலும் நிறத்தையுடைய மாலை; உருகெழு—சினம் பொங்கிட; மண்ணி—நீராடி; வாரா அளவை—வரும் நேரத்திற்குள்; சேக்கை—படுக்கை; தெறுவர—சினம் தோன்ற; மதனுடை—வலிமை பொருந்திய; முழவுத்தோள்—மிருதங்கம் போன்று திரட்சிகொண்ட தோள்; ஓச்சி—தூக்கி; தண்என—குளிர்ச்சி பொருந்த; வியலிடம்—பரந்த உலகம்; வலம்படு—வெற்றி பொருந்த; குருசில் — ஆடவரில் சிறந்தவன்.]

தீர்ந்துவிட்டது!

நியூயார்க் பட்டணத்திலே ஒரு புத்தகக் கடை. போஸ்ட்டன் என்ற ஊரிலிருந்த ஒரு வாடிக்கைக்காரர் நியூயார்க் கடைக்காரரை,

"கடவுளை நாடுவோர்" "கடவுள் நம்பிக்கை" என்ற இரண்டு புத்தகங்கள் அனுப்பி வைக்கும்படி எழுதியிருந்தார். நியூயார்க் கடைக்காரர் கீழ்க்கண்ட தந்தியை வாடிக்கைக்காரருக்கு அனுப்பினர்.

'நியூயார்க்கில் கடவுளை நாடுவோர் இல்லை. பிலடெல்பியா நகரில் கேட்டுப் பாருங்கள். கடவுள் நம்பிக்கை தீர்ந்துவிட்டது."



கொடி பறக்குது! குப்பி காயுது!!

—※—

ஆப்கனிஸ்தான்
அர்ஜென்டினு
ஆஸ்திரேலியா
ஆஸ்திரியா
செக்கோஸ்லோவேகியா
கிழக்கு ஆப்பிரிக்கா
எதியோபியா
இந்தோ—சைனு
இந்தோனேஷியா
அயர்லாந்து
நெதர்லாந்து
நியுஜிலாந்து
ஸ்விட்சர்லாந்து
தாய்லாந்து
அமெரிக்கா
ரஷியா
பிரிட்டன்
கனடா
பாகிஸ்தான்
இத்தாலி
ஜப்பான்
மலாயா
மொரீஷஸ்
பிலிப்பைன்
போர்ச்சுகல்
புதுச்சேரி
கோவா
சவுதி அரேபியா
சிக்கிம்
தென் ஆப்பிரிக்கா
ஸ்வீடன்
மேற்கிந்தியத்தீவுகள்
டென்மார்க்
ஈரான்
ஈராக்
ஏடன்
பெல்ஜியம்
பர்மா
சிலோன்
சைனு
பிரேசில்
எகிப்து
நேபாளம்
துருக்கி
பிஜீத்தீவுகள்
பிரான்சு
ஜெர்மனி

* * *

இந்த நாடுகளிலெல்லாம் இந்தியாவின் சுதந்திரக் கொடி கெம்பீரமாகப் பறக்கிறது! தூதுவர்கள் தர்பார் நடத்துகின்றனர். அலுவலர் பலர் கொலுவீற்றிருக்கிருர்கள். தீபாவளியின்போது 'பட்டாசு' கொளுத்துகிருர்கள்; திருநாள் வரும்போதெல்லாம் விருந்துபசாரம் நடத்துகிருர்கள். எப்போதும் இந்தியாவின் முடிசூடா மன்னர் பாரீர் என்று கூறி, பண்டித நேருவின் படத்தை அலங்கரித்துக் காட்டுகிருர்கள்.

கொடி பறக்கிறது, இதற்காக, குப்பி காயும்விதமான நிலையில் உள்ள இந்துணைக்கண்டத்து மக்கள், ஆண்டுதோறும் கொட்டிக் கொடுக்கும் பணம் எட்டு கோடி ரூபாய்!

வெளிநாட்டு தூதராலயங்களின் செலவு, சென்ற ஆண்டு 8 கோடி ரூபாய் என்று சர்க்கார் அறிவித்துள்ளனர்.

இதுமட்டுமல்லாமல், தூதுக் கோஷ்டிகளுக்காக 1952–53-ல் மட்டும் 2,92,13,100 ரூபாய் கரைத்திருக்கிருர்கள். அரசியல் காரியமல்லாத தூதுக் குழுக்களுக்காக வேறு, 17,42,900 செலவிட்டிருக்கிருர்கள்.

இவ்வளவு பணம் கொட்டி, நாம் காண்பது என்ன? வெளிநாடுகளிலே, உறுதியான நண்பர்கள் உண்டா? இல்லை! இந்தியா இன்னமும் மதில்மேற் பூனையாக இருக்கிறது என்ற பழிச்சொல்தான் மிச்சம்!

அமெரிக்காவின் ஆடும் பதுமையாக உள்ள சிங்மன் ரீ, மட்டரகமான பாஷையில் பண்டிதநேருவைப் பகிரங்கமாகத் திட்டுகிருன்.

கோழிக்குஞ்சு – குரங்கு – என்றெல்லாம், நேருவைப் பழித்துப் பேசுகிருன். அவனுடைய வாய்க்கொழுப்பை அடக்கும்விதமாக, ஜாடைகூடச் செய்யவில்லை அமெரிக்கா.

கொரியா களத்துக்குச் சென்று வீண்செலவையும் தொல்லையையும் தேடிக்கொள்வதற்குத்தான் இந்தியாவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதேதவிர, கொரியா அரசியல் மாநாட்டிலே, இந்தியாவுக்கு இடம் தரமறுத்துவிட்டனர்.

ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவிடப்படுகிறது, ஐக்கிய நாடுகள் சபைக்காக. அங்கு தலைமைஸ்தானம் எனும் அலங்காரப்பீடத்தில் நேருவின் உடன்பிறந்தாரை அமரச் செய்தனரே தவிர, ஆளும் அதிகாரத்தை வல்லரசுகளே வைத்துக்கொண்டுள்ளன.

இவ்வளவு செலவுடன் நடைபெறும் கொலு உற்சவத்துக்குப் பிறகும், காஷ்மீர் பிரச்னையில், இந்தியாவின் கட்சியை ஆதரிக்க எந்தவல்லரசும் முன்வரவில்லை. மாருக, பாகிஸ்தானுக்கே பக்கபலம் கிடைத்தவண்ணமிருக்கிறது.

அரசியலிலே செல்வாக்கு கிடைக்காதது மட்டுமல்ல, பொருள் துறையிலே நமது 'வெளிநாட்டுக் காரியாலயங்கள்' கவைக்கு உதவும் வெற்றி எதனையும் பெறவில்லை. வெளிநாடுகளுடன் நடத்தும் வியாபாரத்தில், சென்ற ஆண்டுமட்டும் 156 கோடி ரூபாய், நம் கையைவிட்டுப் போயிற்று!

வெளிநாட்டுத் தூதராலயத்தினர், நமது நாட்டுச் சரக்குகளுக்கு, கிராக்கியும் மார்க்கட்டும் ஏற்படச் செய்யத் தமது திறமையைப் பயன்படுத்தவேண்டும்.

இந்தியாவில் 'முகாம்' அமைத்துள்ள வெளிநாட்டுத் தூதர்கள், சாமர்த்தியமாகத் திறமையாகப் பணியாற்றி, 858 கோடி ரூபாய் சரக்குகளை, இங்கு சென்ற ஆண்டிலேமட்டும் விற்பனை செய்திருக்கிருர்கள்.

நமது சர்க்கார் எட்டுக்கோடி ரூபாய் செலவு செய்து, வெளிநாடுகளிலே அமர்த்தியிருக்கும் அலுவலர்கள் இந்த அளவு சாமர்த்தியம் காட்டவில்லை—ஏமாந்தும் இருக்கிருர்கள்.

ஓடாத ஜீப்மோட்டார், பறக்காத ஏரோப்ளேன், காற்றடித்தால் ஆடிக் கீழேவிழும் ரெடிமேட் வீடுகள், கவைக்கு உதவாத மெஷின்கள்—இவைகள் எல்லாம், எட்டுக் கோடியை விழுங்கும் அலுவலர்கள் நமது சர்க்காருக்குத் தேடித்தந்த காணிக்கைகள்.

ஒரே ஒரு காரியத்தை மட்டும் அவர்கள் ஒழுங்காகவும் திறமையாகவும் நடத்திக்கொண்டு வருகிருர்கள் — பண்டிதஜவஹருக்கு லாலி பாடும் காரியம்!! இதற்கு எட்டுக் கோடி!! கொடி பறக்குது! கும்பி காயுது!!

✲



ஐந்தாண்டுத் திட்டத்தின்
அவலட்சண விளக்கம்.

★

நேரு குடும்பத்துக்கு
ஒரு முறையில் சலு
கையும் மற்ருேர்
வகையில் அநீதியும்
இழைக்கிறது
அமெரிக்கா.

★

ஈரானுக்கு அமெரிக்கா
பெரும் தொகை கொடுத்திருக்கிறது!

★

(பிலிம் இந்தியா படப்பிடிப்பு.)

பூபதிகள் கொட்டம்

[கே. ஏ. மதியழகன்]

“அவளோ முகராதமுல்லை. கொய்யாக்கனி. குடியான குலத்திருமகள், என்மீது மாளாத காதல்கொண்டாள். அவளை அன்பு மனைவியாக ஏற்றேன். அந்த கோமளவல்லியின் கொவ்வை இதழுக்காக இந்தக் குவலயத்தையே அடகுவைப்பேன் அவளைச் சந்திக்கப் போகும்.........முதல் இரவு மோகனமான இரவு...........என் வாழ்வின் இன்பநாள். பொன்னை அந்த ஏந்திழை எனக்காக என்ன என்ன எழிற்சித்திரங்களைத் தீட்டியிருக்கிறாளோ, அவள் இதயத்தில்...!” இப்படி எண்ணினான் புதுமணமான அந்த மணமகன். மறு நிமிடம் அவன் மனது கூறுகிறது. “போடா, போக்கத்தவனே! முதல் முத்தம், பூபதிக்கு அல்லவா உரிமை? அவர் காத்திருக்கிறாரடா. உனது கண்மணியை ‘கசங்கிய கனி’யாக்க! பாவைக்கு உன்னிடம்தான் பற்று - அவள் உள்ளம்கவர் கள்வன் நீதான்—ஆனால் மணமான புதுப்பெண், முதல் நாள் பூபதியின் போகப் பொருளாக இருக்க வேண்டுமே; மறந்துவிட்டாயோ? அதுதானே நாட்டின் நியதி; நடைமுறைச்சட்டம். பூபதி படுக்கையறையிலே பாவையின் வருகைக்காக துடிதுடித்துக் கிடக்கிறார்! நீ, இங்கே, பரவசத்தைப் பருகலாமென ஆசைப்படுகிறாய்! வேல் விழியாள் விடியற்காலைக்கு மேலே தான் உனக்குச் சொந்தம். நீ அவள் அத்தான் அதனாலென்ன? காத்துக்கிட!”

அவனது உள்ளம் ஊமைபழுதை அழுகிறது. அந்த இரவு—அவனை நொந்த மனதினனாக்கிய இரவு! பூபதிக்கோ சுந்தரியுடன் சோபிதமாய் குலவிய இரவு!! காரணம் அவன் பூபதி—இவன் குடியானவன்.

* * *

கோட்டை வீட்டிலே பூபதி படுத்து உறங்குகிறார். தடாகத்திலேயுள்ள தவளைகளின் சத்தம் அவரது தூக்கத்திற்கு தொந்தரவு கொடுக்காதே இந்த இரைச்சலிலே அவர் நித்திரை செய்யமுடியுமா? தவளைகள் சப்தம் செய்யாமல் பார்த்துக்கொள், போ! அவைகளை விரட்டு, விடியுமட்டும். இருளாயிற்றே, சேறும் சகதியும் இருக்கிறதே, நள்ளிரவாயிற்றே, நான் மட்டும் உறங்கவேண்டாமா என்கிறாயே. சேறும் சகதியும் உனக்கு ஒன்றும் புதிதல்லவே நீ என்ன அம்ச தூளிகா மஞ்சத்திலே அரமங்கைகளுடன் தினம் சயனம்’ செய்கிறாயாக்கும்: போய் நில்லடா — போக்கிரி! தவளைகளின் இரைச்சல் தாங்கமுடியவில்லை!! கட்டளை பிறப்பிக்கப்படுகிறது, இவ்வண்ணம்!! காரிருள். அவன் காவல் புரிகிறான். காரணம் இவன் குடியானவன் அவன் பூபதி.

* * *

ஆறுமாதம் அல்லும் பகலும் உழைத்தேன். பூத்துக் குலுங்கிய தானியக் கதிர்கள் என் இதயத்திலே இன்பத்தைவார்த்தன. பாழாய்ப்போன அந்த, மான் கூட்டம்—பன்றிக் கும்பல் பயிரையே பாழ்செய்துவிட்டது. இந்த ஆண்டு அறுவடை அவ்வளவுதான். “பாழாய்ப்போன” என்று சொல்கிறாய், யாராவது பார்த்துவிடப் போகிறார்கள், பூபதிக்கு வேண்டியவர்கள்! மான் கூட்டமும் பன்றிக் கூட்டமும் பூபதி வேட்டையாடுவதற்கு அல்லவா, இருக்கிறது? அதை விரட்டிவிட்டால் அவர் விளையாட்டு என்னவது! வேலாமரங்களை வெட்டலாம், வெட்ட வெளிகளைத் திருத்தலாம். மேடு பள்ளங்களை சமனாக்கலாம், பயிர் விளையும் பண்பட்ட நிலமாக்கலாம் என்ற ஆசை இருக்கிறது. வேலாமரங்களை வெட்டிவிட்டால், பூபதி வேட்டையாடுவதற்கு வேண்டிய ‘பறவை’கள் எங்கே தங்குவது? பறவைகள் பறந்துவிட்டால் முட்டை இடுவதெங்கே — குஞ்சு பொரிப்பதெங்கே? நீயோவது வேதனையின் உருவம் தாங்கிக்கொள்வாய். உனக்கொன்றும் புதியதல்ல. பூபதிக்கு வேட்டையாடாவிட்டால் பொழுது போகுமா? மாவு அரைக்கவேண்டுமா, திராட்சை ரசம் பிழியவேண்டுமா - அதோ அவர் ‘மில்’ இருக்கிறது. அங்கேபோ இல்லாவிட்டால் உனக்கு அபராதம் கிடைக்கும். இதுவெல்லாம் என்ன அக்ரமம் என்று மனதுக்குள் சொல்லிக்கொள்கிறாயா? உரக்கச் சொல்லிவிடாதே, இந்த கேள்விகளுக்குத் தண்டனை சிறைச்சாலை. சிறைச்சாலை என்றுமட்டும் நினைக்காதே. இந்த கேள்வியே மறுமுறையும் நீ கேட்காமல் இருக்கும் நிலையில் ஆக்கப்பட்டாலும் படலாம். காரணம் அவன் பூபதி. நீ குடியானவன்.

* * *

எதிரி நாட்டுப் படைகள் தாயகத்தை முற்றுகையிட்டுவிட்டன. நீ பிறந்த பொன்னாடு காப்பாற்றப்பட போர் வீரனாகவேண்டும்! போர்வீரனாகிறேன் களத்திலே எதிரியைக் கண்டதுண்டமாக்குகிறேன். இந்த கழனிவேலைவேண்டாம் நான் போர்த்தளபதியாகலாமல்லவா. “போடா முட்டாளே, நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், துப்பாக்கியேந்தவேண்டும். இது துரைத்தனத்தின் கட்டளை. ராணுவத்திலே உயர் பதவியா வேண்டும். அது எப்படி முடியும்? ‘பூபதிகள்’ குடும்பத்திலே பிறக்கவில்லையே. உனக்கு எப்படி உயர்ந்த உத்தியோகம் கிடைக்கும், ஏன் என்கிறாயா? இது கூடத்தெரியவில்லையே. நீ குடியானவன் — அவன் பூபதி.

* * *

“நிலம் என் தரிசாகக் கிடக்கிறது”

“ஏரிலே பூட்ட ஒரு மாடுதான் உள்ளது.”

“மற்றொன்று இல்லாவிட்டால் என்ன! நுகத்தடி உன்னை வேண்டாமென்று சொல்லிவிடும்”

“ஒரு பக்கத்திலே நீ—மற்றப் பக்கத்திலே மாடு —உழவு ஆரம்பமாகட்டும். நான், மாடா, என்கிறாயா? உழவு நடைபெறாவிட்டால் நாடு சுடுகாடாகிவிடும் இது தெரியவில்லையா?”

காரணம் கேட்கிறாயா—நான் பூபதி. நீ குடியானவன்.

* * *

புரட்சி பூப்பதற்கு முன்னாலே பிரஞ்சு நாட்டின் குடியானவனின் அவல வாழ்க்கையின் சில கட்டங்கள்தான் மேலே தீட்டப்பட்டுள்ள காட்சிகள். நிலப்பிரபுக்கள் என்று கருதப்பட்ட பூபதிகள் சகல உரிமையும் பெற்று குடியானவர்களை மாடென நடத்தி வந்தனர். மணமான புதுப்பெண் முதல்நாள் இரவில் பூபதியுடன் தங்கவேண்டும் மானையோ, பன்றியையோ, விளைநிலங்களிலேயிருந்து விரட்டக்கூடாது. போருக்குக் கூப்பிட்டால் பதிவு செய்துகொள்ளவேண்டும். மாடு இல்லாவிட்டால், மனிதன் நுகத்தடியிலே மாட்டிக்கொண்டு உழவேண்டும். இவ்வளவுதானா என்று கேட்டால், மன்னனும், மதகுருவும், பூபதிகளும் மனோகரமானவாழ்வு வாழ உரிமையும் கொடுத்தாகவேண்டும் உழுது பயிரிடுபவன் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ‘முப்பெரும் பகுதியினரும் வரி கொடுக்க மாட்டார்கள். அவர்களின் வசந்த வாழ்விற்கு வாய்க்காலிலே, வயல்புறத்திலே, முழங்கால் சேற்றிலே, முதுகை வளைத்து, வியர்வையைச் சிந்தி, தான்யத்தை விளைவிக்கும் குடியானவன் கொட்டி அளக்க வேண்டும். கொடுக்காவிட்டால், சும்மா விடுவார்களா? பட்டாளம் வரும். பரிதாபத்துக்குரிய குடியானவன் காராக்கிருகத்துக்கோ, தூக்குமேடைக்கோ, அனுப்பப்படுவான். அத்துடன் முடிந்துவிடாது. வீட்டுவாசலிலே உலர்த்தப்பட்டிருக்கும் துணிமணிகளை எடுத்துக்கொள்வார்கள். தட்டு முட்டுச்சாமான் கைப்பற்றப்படும். அதுவும் போதவில்லையென்றால் கதவுகள் எடுக்கப்படும். கூரையிலே இருக்கும் ஓடுகள் பிரிக்கப்படும் அப்போதும் தொகை போதவில்லையென்றால் வீட்டைத் தரைமட்டமாக்கி அகப்படுகிற மரப்பலகைகள், தூண்கள் ஆகியவற்றை விலை கூறுவர். வரிப்பணம் கொடுப்பதற்காக தங்கள் பஞ்சு மெத்தைகளை விற்றுவிட்டு, வைக்கோல்போரைப் படுக்கையாக்கிக் கொண்டோர் தொகையும், குடம், கூஜா, ஆகியவற்றைவிற்றுக் குடிசைகளில் குமுறியோர் தொகையும் வர்ணனைக்கு அப்பாற்பட்டது. விளைவித்த தானியத்தை வரியாக அழுதுவிட்டு, வயற்றுக்கு இல்லாமல் தழை, தாம்புகளை சாப்பிட்டுக் காலங்கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஒட்டாண்டியாகிய குடியானவர்களை ஒழிந்து ‘போகட்டும்’ என்றாவது விட்டார்களா? அதுதான் இல்லை. ஆண்டிலே சில நாட்கள் பட்டாளம் கிராமப் பக்கங்களிலே நுழையும் பாதைகள் போடுவதற்கு அனைவரையும் அழைத்து வருவர். ரோடுகள் போடப்படும். அதற்குக் கூலி கிடையாது. வழியில் போவோர் வருவோர் கொடுக்கும் தர்மத்திலேதான் அவர்கள் வயிறு கழுவவேண்டும். பாதைகள் பண்படுத்தியோ அவர்களுக்கு பழக்கம் கிடையாது. பயிர்த் தொழில்தான் தெரியும். மீண்டும் ‘பழுது பாருங்கள்’ என்று சிரமப்படுத்தப்படுவர்.

நாட்டின் நரம்புகளாம் குடியானவர்கள் இந்தக் கொடுமைகளுக்கு ஆளாகிக்கொண்டிருந்த நேரத்தில் பூபதிகளோ, போக போக்கியங்களில் புரண்டுகொண்டிருந்தனர்.

பதினான்காம் லூயி மன்னன் காலத்தில் மனிதனுக்கும், மிருகத்திற்கும் வித்யாசம் தெரியாத மதோன்மத்தம் பிடித்த ஓர் பூபதி, கூரைவேய்ந்துகொண்டிருந்த குடியானவர்களை தனது கைத்துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி உருண்டு விழுந்தவர்களின் பிணங்களைக் கண்டு அதன் காட்சியை ரசித்தான்.

பர்கண்டி மண்டலத்து வரி வசூலிக்கும் அதிகாரி பௌலான் என்பவன் “ரொட்டி வாங்கப் பணமில்லையென்றால் புல்லைப் புசிக்கட்டும்!” என்று புகன்றான். பட்டினிப்பட்டாளம் ஓர் பக்கம் வருகிறது வேறோர் பக்கம், பூபதி அரண்மனையின் அலங்காரப் பொம்மைகளாக ஆனந்தபுரியில் உலவினர். ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதக் காட்சிகளின் மறுபதிப்பு பாரிஸிலும் வர்சேல்ஸிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, லூயி மன்னர்களின் நாட்களிலே நடத்திக் காட்டப்பெற்றது.

பதினைந்தாம் லூயி மன்னன் பாலகனாக இருந்தபோது அவனுக்கு ரீஜெண்டாக நாட்டைப் பரிபாலனம் செய்துவந்த பூபதியின் கொட்டம், ஆளும் கூட்டத்தார் மீது இருந்த அருவருப்பை மிகவும் அதிகரித்தது. காமுகனான இவனின் நடத்தையை மக்கள் காரியுமிழ்ந்தனர். நாடாளும் முறைகளை, இவனது படுக்கையறையை அலங்கரித்த பாரிஸ் நடனமாதுக்கள் முடிவு செய்தனர். வழுக்கி விழுந்த வனிதையரின் வசந்த மண்டபமாக்கப்பட்டது இவனது மாளிகை. பாரிஸ் நகரத்திலேயிருக்கிற விபசார மங்கைகள், 100 பேர், 150 பேர் என்று ஒவ்வொரு இரவும் அழைத்துவரப்பட்டனர்! வழியிலே அவர்கள் கண்கள் துணியால் கட்டப்பட்டது எங்கே அழைத்துச் செல்லப்படுகிறோம் என்பது தெரியாமல் இருப்பதற்காக! கட்டுகள் அவிழ்க்கப்பட்டவுடன், உல்லாச உப்பரிகை ஒன்றின் நிலாமுற்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டனர். மதுவும் பழவகைகளும் நிறைந்தவிருந்து அந்த வெட்கங்கெட்ட வேசிகளுக்காக காத்துக்கிடந்தது. வேசிகள் விருந்துண்ண ஆரம்பித்தனர் என்று சொல்லிவிட்டால் பூபதிக்கும் மற்றவருக்கும் இருக்கும் வித்யாசம் என்னாவது? அந்த ஒய்யாரிகளின் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக அமர்ந்து மதுவருந்தி மயங்கிக்கிடந்தனர், அதற்குப்பின் நடந்த சம்பவங்கள் அரண்மனையின்மீது மக்களுக்கு ராஜ விசுவாசத்தையா பெருக்கியிருக்கும்?

இந்த நெறிகெட்ட போக்கால்தான், புரட்சி பூத்தது. பூபதிகள் கொட்டம் அடக்கப்பட்டது. பாஸ்டில் படுசூரணமானதும், பட்டத்தரசன் குடும்பம் கொலையுண்டதும், பாட்டாளி வெற்றி பெற்றதும், பாரைக்குலுக்கிய மகத்தான சம்பவமாய் மாறிவிட்டது வால்டேரும், ரூசோவும் கொளுத்திய பகுத்தறிவுத் தீயும், அக்ரமத்தைத் தீய்த்து, நாங்களும் மனிதர்கள்தான், மண்ணல்ல, மாடல்ல என்ற மகத்தான உண்மையை மாநிலத்திற்கு வழங்கியது. அதனை மறந்து புரட்சியின் இரத்த வெறியை மறுப்பவர், புரட்சிக்கு முன் கொடுமைக்காளான அந்த மக்களின் சோகச் சம்பவங்களை மறப்பவர்களாகவே கருதப்படுவர். இரத்த வெறி தவறு அல்ல என்பதாக நாம் வாதிக்கவில்லை. ஆனால் அவர்களின் செயல், அவர்களின் நிலைமை விளக்கம், அதை மறுத்துப் பயனில்லை. மான

ஆடும் திரிசூலம்

[இரா செழியன்]

"முசபர்பூர் நகரில், அயோத்யநாத் மகாதேவர் ஆலயத்திலுள்ள திரிசூலம் தானாக அசைந்தாடுகிறது. ஏராளமான பக்தர்கள் கூடிநின்று பூஜை செய்து வணங்குகின்றனர்!"

'பவானி சங்கமகேஸ்வரர் கோயிலில் உள்ள வாழை, நடுமரத்தில் குலைதள்ளியிருக்கிறது!"

"குடகில் தனலட்சுமி என்பவள் உணவேதுவையும் தீண்டாது, ஓராண்டு காலமாக இருக்கிறாள்!"

"ஒரிசா மாகாணத்தில் மாடு மேய்க்கும் சிறுவனொருவன் அற்புத மூலிகை ஒன்றைத் தருகிறான், அதனால் தீராத நோய்களெல்லாம் தீர்ந்துவிடுகின்றன"

இதைப்போன்று பல செய்திகளை வாரந்தோறும்—சில சமயங்களில் நாள் தோறும் கேட்டவண்ணமிருக்கிறோம். இவைகளை வெறும் செய்திகளாக மட்டும் பத்திரிகைகள் பிரசுரிப்பதில்லை. ஆண்டவனின் அற்புதமாக, கலியுக அதிசயமாக, மாபெரும் மகத்துவமாக, தெய்வீக மகிமையாக அந்தச் செய்திகளை முக்கியப்படுத்துகின்றன. படிப்போரில் பலரும் அந்த 'அதிசயச்'செய்திகளை மறுக்கொணாச் சாட்சியங்களாகக் கொண்டு பேசவும், மறுப்போரை ஏசவும் முற்படுகின்றனர். இந்த அதிசய சம்பவங்களும் நீண்ட நாட்களுக்கு நீடித்து நிற்பதில்லை முதலில் ஒரிசா மாகாணத்து மாடுமேய்க்கும் சிறுவனின் அற்புதத்தைப்பற்றிச் சில மாதம்வரை பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வெளிவரும். பின் அவன் தரும் மருந்தில் எத்தகைய அதிசயிக்கத்தக்க பலனும் கிடையாதென்று நிரூபிக்கப்பட்டுவிட்டால், அது அத்துடன் கைவிடப்படும். பின் திடீரென்று குடகில் ஒரு கோமளாங்கி உண்ணாமலே ஓராண்டாக இருக்கிறாளாம் என்ற அற்புதம் பேசப்படும். பின் அதுவும் சூதான செய்தி என்று முடிவுசெய்யப்பட்டால், பின் அற்புதங்களைத் தேடி பத்திரிக்கைகளின் கண்கள் அலையும்.

இவ்விதமானசெய்திகளை வெளியிடும் போது பத்திரிகைகள், புண்ணியபூமி! தெய்வீக சக்தி! ஆத்மீக பலம்! ஆண்டவனின் அருள்! என்றெல்லாம் விளம்பரப்படுத்தின. விஞ்ஞானத்தின் வெற்றிகளை மட்டுப்படுத்த, தளர்ந்துவரும் மதநம்பிக்கைகளை மீண்டும் உறுதிப்படுத்த இந்தச் சம்பவங்களுதவுகின்றன என்ற எண்ணத்தில்தான் பத்திரிகைகள் பரிவுடன் போடுகின்றன, பக்தகோடிகள் பரபரப்புடன் படிக்கின்றனர். "விஞ்ஞானத்தின் மேன்மைபற்றிப் பேசிடும் வீணர்களே! அறிவாராய்ச்சி செய்யும் அதர்மர்களே! பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பிடும் பாபிகளே! இதோ! பாருங்கள், விஞ்ஞானத்திற்குப் புரியாத—அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்ட—பகுத்தறிவு வாதிகளால் முடியாத ஒரு சாதனை—அற்புதம் நிகழ்ந்திருக்கிறது, பக்தி மார்க்கத்தில்! என்று எடுத்துக் காட்டவே அவர்கள் அந்த அற்புதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

இதுபோன்ற அபூர்வ சம்பவங்கள், நம் நாட்டில் மட்டும் உண்டாகின்றன என்று கூறமுடியாது. மேல் நாடுகளிலும்உண்டு. ஆனால், அங்கு அவற்றிற்கு ஆண்டவனுடைய அருளென்றோ தெய்வீக சக்தி என்றோ எவரும் காரணங் கொடுத்துப் பிரசுரிப்பதில்லை, படிப்பவர்களும் நினைப்பதில்லை. படிப்பவர்கள் "ஏதோ அபூர்வ வகை!" என்று நினைத்துக்கொள்வார்கள். அதை ஆராய்ந்து பார்த்து, ஏதாவது, புதுமையிருக்கிறதாவென்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வெளியிடுவார்கள்.

அங்கெல்லாம் புதிதாக ஒன்று இருந்தால், சிந்தனை அதை ஆராய முற்படுகிறது. இங்கோ ஆண்டவனிடமிருந்து வந்த அதிசயம் என்று பூஜை போட்டு வணங்கும் மனப்பான்மைதான் வளர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தப் போக்கால், மேலை நாடுகளில் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சி—விஞ்ஞான மேம்பாடு நம் நாட்டிற்கு வராமற் போயின.

ஆதிமனிதனுக்கு, மின்னலும், இடியும், வானவில்லும், சந்திர சூரிய கிரகணங்களும் இன்னதென்று புரியாமலிருந்தன. புரியாத நிலையில், அவைகளைக் காணும்பொழுதெல்லாம் பயந்தான்; பயந்த நிலையில், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவைகளை வணங்கினால் தான் முடியுமென, அவைகள்முன் மண்டியிட்டு வணங்கினான். புரியாத நிலை பயத்தை உண்டாக்கியது. பயம் உள்ளத்தை அடிமைப்படுத்தியது. இது ஆதி மனிதனின் நிலை. பின் சிறுகச் சிறுக அவைகளின் தன்மைகளைப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற துணிவு

பங்கப்படுத்தப்பட்ட மாதாக்களின் மைந்தர்கள், கற்பழிக்கப்பட்ட காரிகையின் கணவர்கள், கொல்லப்பட்ட தந்தையர்களின் தனயர்கள், அத்தகு காரியங்களில் ஈடுபட்டனர். அவர்களின் உள்ளத்திலே கனன்று எழுந்து கொண்டிருந்த நீதியுணர்ச்சிதான், நிர்மூலச்செயல்களுக்கு காரணமாய் அமைந்தது. அந்த உணர்ச்சி, நாட்டின் முதுகெலும்புகளான, ஏழை மக்களின் இதயத்திலே, எழுப்பிவிட்ட தீ தான் பாக போக்கியத்தில் திளைத்தோரின் வாழ்க்கையைப் பாகங்கச் செய்தது. ஏழை, அழுத கண்ணீர்—பிரெஞ்சுப் பூமியிலே, கடல் போலத் தேங்கியது அந்தக் கண்ணீர்க் கடலிலே, பூபதிகள், தமது இன்பக் கப்பலை மிதக்கவிட்டு, அட்டகாசம் செய்தனர். அதனை, கவிழ்த்தது, பிறகு. அந்தப் புயல்தான், ஏழைகள் விட்ட பெருமூச்சு. இந்தப் பெருமூச்சுக்குமுன், பூபதிகள், வாழமுடியாது—இதனை பிரெஞ்சு ஏடுகள் மட்டுமல்ல, பூபதிகள் வாழ்ந்த பூமிகள் யாவும் உணர்த்துகின்றன. இதனை, இங்கு வாழும், பூபதிகள் உணர்ந்தால், போதும்—புது வாழ்வு மலரும்.

—x—

வந்ததும்தான், தன்னளவில் நடத்திய ஆராய்ச்சிகளின் பயனால், இயற்கைச் சக்திகளின் போக்கைப் புரிந்து கொண்டான்; பயம் அவன் உள்ளத்தைவிட்டு நீங்கியது. தன்னைப் பயமுறுத்தி அடிமைப்படுத்திய சக்திகளை, இவன் அடிமைப்படுத்தி, பல வெற்றிகளைக் கண்டான். மேலை நாடுகளில், ஆராயுந் திறமையால், விஞ்ஞான உண்மைகள் பல வெளிப்பட்டன; விஞ்ஞான வளர்ச்சியால் மனித வாழ்வு வளம்பெறுவதற்கான வகை பிறந்தது.

இங்கோ, வெளிப்புறத்தில் விஞ்ஞான வசதிகள் பல காணப்பட்டபோதிலும், உள்ளத்தில் ஆதிமனிதனின் நிலைதான் இன்றும் இருக்கின்றது. ஆதிமனிதனைப்போலவே, மின்னலும், இடியும், புயலும் வெள்ளமும் வந்தால், "ஆண்டவன் நம்மீது கொண்ட கோபம்!" என்றுதான் நினைக்கிறார்கள். பாமரர்கள் நினைப்பதில் தவறில்லை; அவர்களுக்கு உண்மையான காரணங்கள் தெரியாதிருக்கலாம். ஆனால், படித்தவர்கள்—மேல்நாட்டு உயர்தர படிப்புகளில் கரைகண்டவர்களே சொல்கின்றனர்; பிறரை நம்பவைக்க முயல்கின்றனர். 'இன்றைக்கு எந்த மடத்தில் சோறு கிடைக்கும்' என்று இடந்தேடி அலையும் ஆண்டி, அப்படிப் பேசிப்போவதில் ஆச்சரியமில்லை. நம்புகிறவர்கள் இருக்கிறவரை, அவனுடைய வேலை அதுதான். ஆனால், விஞ்ஞானத்தின் முழுப் பயனையும் பெற்று, விஞ்ஞானிகளின் உழைப்பில் உதித்த எண்ணற்ற இயந்திரங்கள், மின்சாரம், செய்தியடிக்கும் பொறி, அச்சுக் கோர்க்கும் சாதனம், வெள்ளைப் பேப்பரை ஒருபுறத்தில் கவ்வி, மறுபுறம் பலவகை வண்ணங்களுடன், புகைப்படங்களுடன் செய்தித் தாள்களாக அழகுற மடித்துத் தருகிற இயந்திரங்கள், இவைகளை வைத்துக் கொண்டு வெளிவருகிற பத்திரிகைகள்தாம் "என்ன இருந்தாலும் ஆத்மீக பலத்திலே, பக்திப் பிரவாகத்திலே மூழ்கியெழுந்த நம் பாரதவர்ஷம் பெருமையுடையது!" எனக் கூசாது எழுதுகின்றன.

உண்மையிலேயே விஞ்ஞானி தனக்கு எல்லாம் தெரிந்ததென்றோ, விஞ்ஞானத்தின் கீழ் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டதென்றோ கூறிக்கொள்வதில்லை. ஆராய்ச்சிகள் வளர, வளர, கண்டுபிடிப்பவைகள் பெருகிக்கொண்டே போகின்றன. இதற்கு எல்லையென்று ஒன்று இருக்கமுடியாது. புரியாத ஒன்று வந்தால், அதை ஆராய்ந்து புரிந்துகொள்ள வேண்டுமென்பது தான் விஞ்ஞானத்தின் அடிப்படையாகும். புரியாத ஒன்று வந்தால், உடனே "இது ஒரு தெய்வீக சக்தி, நம்மால் புரிந்துகொள்ள முடியாது!" என்று மதவாதிகள் ஒதுங்கிவிடுகின்றனர்.

புரிந்துகொள்ள வேண்டும்—புரிந்துகொள்ள முடியும், என்ற குறிக்கோள்தான் விஞ்ஞானத்திற்கும், மனித வாழ்வின் வளர்ச்சிக்கும் அடிப்படையாயிற்று.

உதாரணமாக முசபர்பூர் நகரில் ஆண்டவனின் சன்னதியில் திரிசூலம் தானாக அசைந்தாடியது என்ற செய்தியை வெளியிட்ட பத்திரிகை, அந்தச் சம்பவத்தின்போது அவ்வூர் மக்கள் என்ன செய்தார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது. "இவ்வதிசயத்தைக் காணச் சுற்றுப்புறமெங்குமிருந்து ஆயிரக் கணக்கானோர் வந்த வண்ணமிருக்கின்றனர். கூட்டத்தைச் சமாளிக்க ஏராளமான போலீசாரை ஏவவேண்டியிருக்கிறது... ஆபத்து நேரவிருக்கின்றதென்று எச்சரிக்கவே இந்த ஆட்டம் என்று நம்புகின்றனர் பலர். ஆலய மூர்த்தியான ஸ்ரீ பரமசிவனின் கோபத்தையே குறிக்கிறது இந்த ஆட்டம் என்கின்றனர் பலர். எனவே அவரைச் சாந்தப்படுத்த ஏராளமாகப் பூஜைகள், நடக்கின்றன" என்று பத்திரிகைகள் பெருமைப்படுத்தி எழுதியுள்ளன.

இந்தச் செய்தியை வெளியிடும்போது, விஞ்ஞான வளர்ச்சி, ஆராய்ச்சி மனப்பான்மை இவை வேண்டுமென்போரை இடித்துக்காட்டுவதுபோலவே, "இன்ஜினியர்களுக்குப் புரியாத புதிர்; சலனத்தை நிறுத்தவும் முடியவில்லை" என்று இரண்டு காலத்தில் கொட்டையெழுத்தில் போட்டிருந்தது.

இவ்வாறு மக்களுக்குப் புரியாத சம்பவங்கள் நடைபெற்றால், உடனே அங்கே பத்திரிகை நிருபர்கள் கூடி, புராணம் தீட்டமுனைகிறார்கள்,

'ஆழப்பதிந்த திரிசூலம் ஏன் அசைந்தாடியது அதற்கு யாரைக்கொண்டு ஆராய்ந்தால் உண்மை புலப்படும்? இதற்கு மக்கள் ஏன பயந்து கலவரமடைய வேண்டும்?' என்று அதிசயம் நிகழ்ந்ததும், உண்மை நிலையைக்காண உதவி, மக்களின் மனத்தை சீர்திருத்தும் நோக்கம் எவருக்கும் கிடையாது. மக்களை இன்னும் மடைமையிலும், மூடநம்பிக்கையிலும் ஆழ்த்தி

அனைவருக்கும்
எங்கள் பொங்கல் வாழ்த்து

பாலு பிரதர்ஸ்,
ஆர்டிஸ்ட்ஸ்,
2, தாயார்சாகிப் தெரு,
மவுண்டுரோடு சென்னை.

வைப்பதில், நம்நாட்டில் 'பெரிய' பத்திரிகைக்காரர்கள் தான் முன்னணியில் நிற்கின்றனர்.

குடகு தனலட்சுமி உண்ணாமலேயே ஒரு ஆண்டாக இருக்கிறாள் என்ற செய்திவந்தபோது அவள் புகைப்படத்தைப் போட்டு ஆடம்பரமாக வெளியிட்ட பத்திரிகைகள் சில, பின்பு அந்தப் பெண்ணைப் பரிசோதித்து மற்றவர்களைபபோலவே அவளும், உணவருந்துகிறாள் என்று முன்பு கூறிய கதையெல்லாம் அபத்தமானது என்ற முடிவைப் பங்களூர் பிரபல டாக்டர் தகுந்த காரணங்களுடன் தெரிவித்ததும், முதலில் வெளியிட்ட தெய்வாம்சம்—ஆத்மிக பலம்—அதிசயம் இவைகளைப்பற்றித் திருத்தியோ, குறைத்துக்காட்டியோ எதுவும் கூறாமல் விட்டு விட்டன. பத்திரிகைகளுக்கு உண்மையில் மக்களுடைய அறிவை வளர்க்கவேண்டும் என்ற எண்ணமிருந்தால், முதலில்வந்த பொய்ச் செய்திகளை வெளிப்படையாகவே மறுத்துவிட்டு, முன்னைவிட அதிக அளவுக்கும் மதிப்புக்கும் உரியமுறையில் வெளியிட்டிருக்கவேண்டும் பத்திரிகைகள் அவ்வாறு செய்வதில்லை. இதுபோலவே, அதிசயங்கள் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டதற்குத் தகுந்த காரணங்களோ, மறுப்போ தரப்பட்டு, அதிலொன்றும் அதிசயமில்லையென்று தெரிவிக்கப்பட்டதும், பத்திரிகைகள் உண்மைக்கு முழு இடமும், அளிப்பதில்லை, வேண்டா வெறுப்பாக ஒரு மூலையில் போட்டுவிடுகிறார்கள். அதற்குள் இன்னொரு அதிசய நிகழ்ச்சி வந்துவிடும். அதைப் பிடித்துக்கொண்டுவிடுவார்கள்,

முசபர்பூரில் திரிசூலம் அசைந்தாடியதைப்பார்த்தவர்கள் எல்லோரும் பயந்து பணிந்துவிட்டுப் போய்விடவில்லை. அதைக் கேள்விபட்ட என்ஜினியரிங் கல்லூரியொன்றின் தலைவராக இருக்கும் டாலோ என்பவர் அந்தக் கோயிலுக்குப்போய் திரிசூலத்தின் அமைப்பு, அது நடப்பட்டிருக்கும் விதம் இவைகளைப் பார்வையிட்டார்; பின் ஆராய்ந்து பார்த்ததில், இரும்பாலான அந்த திரிசூலம் மறைவாக தூரத்திலிருக்கும் ஒரு மின்காந்த சக்தியால் (அதாவது ஆங்கிலத்தில் எலக்ட்ரோ மாகினட்டிசம் என்பார்கள் — மின்சார உதவியால் ஒரு இரும்புத் துண்டுக்குக் காந்த சக்தியை உண்டாக்குவது. இந்தமுறையால் பலமான சக்தியுள்ள காந்தம் உண்டாக்க முடியும்) ஆட்டி வைக்கப்படுகிறது என்ற உண்மையைக் கண்டறிந்தார், அந்த ஆராய்ச்சியாளர் டாலோ என்பவர் தாம் கண்டுபிடித்ததை விளக்கியதுடன்; அந்த அதிசயத்தை தாமே நடத்தியும் காட்டினாராம்.

அயோத்யநாத் மகாதேவர் ஆலயத்திலிருந்த திரிசூலத்தைவிட, பலமடங்கு அதிக கனமுள்ள இரும்புச் சூலம் ஒன்றைத் தயாரித்தார். பின் தூரத்தில் அதை வைத்துவிட்டு, எட்டியிருந்து காந்த சக்தி ஒன்றைக் கொண்டு அந்த திரிசூலத்தை ஆடவைத்துக் காட்டினாராம். பத்திரிகை இந்தச் செய்தியையும் போட்டது, முன்போன்ற ஆடம்பரமில்லாமல், வேறு எந்த வர்ணனையுமின்றி.

புரியாத சம்பவங்கள், அறிவுக்கு ஒவ்வாத செய்திகள், நம்மனோரைப் பயமுறுத்தும் கருத்துக்கள் வரும்போதும் அப்படியே ஒதுக்கித் தள்ளிவிட வேண்டுமென்பதில்லை, ஆனால் அவசரப்பட்டு அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் கூடாது. ஆராய்ந்து, உண்மை நிலைகண்டதும், அறிவுக்கு ஒத்ததை ஏற்றுக்கொள்ளவேண்டும் ஆராய்ந்தால், ஆகாதது என்று அஞ்சவோ, முடியாதது என்று பணியவோ, வேண்டியதில்லை. ஆண்டவன் கோயிலில் ஒரு திரிசூலம் அசைந்தாடியது, மறுநாள் விஞ்ஞானியின் ஆய்வுக் கூடத்தில் அதைவிடப் பெரிய திரிசூலம் யார் கை படாமலும் அசைந்தாடியது, எனவே, உள்ளத்திலுள்ள அச்சத்தை நீக்கி, புரிந்துகொள்ளவேண்டும் — புரிந்துகொள்ளமுடியும் என்ற துணிவுடன் நாம் ஒவ்வொன்றையும் சீர்தூக்கி நலம் காணவேண்டும்.

நமது வாழ்க்கைப் பாதையில் பலவித சிக்கல்கள், இடர்ப்பாடுகள், துன்பங்கள் சூழ்ந்திருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து, அவற்றின் தன்மைகளைப் புரிந்துகொண்டால்தான், அவற்றை நீக்கமுடியும். ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற துணிவும், புரிந்து கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையும் வேண்டும். ஏனெனில இதைவிட இடர்ப்பாடுகளிடை—வாரிருளில் மூழ்கிக்கிடந்த பலநாட்டினர் தமது முயற்சியால்—ஆராய்ச்சித் திறமையால் புது வாழ்வு பெற்று விளங்குகின்றனர்.

நமது திராவிடத்தின்மீது சமுதாயம்—அரசியல்—பொருளாதாரம் என்ற மூன்று முனைகளைக் கொண்ட திரிசூலம் அசைந்து வருகிறது. எப்படி அசைகிறது என்று புரியாத நிலையில், முசபர்பூர் வாசிகளுக்கு ஏற்பட்டதுபோல பயமும் "ஆண்டவனின் கோபமோ, விதியின் பயனோ!" என்று பணிந்துபோகும் மனப்பான்மையும்தான் தோன்றும். தூரத்திலிருந்து ஒருவன் மறைவாக இருந்து ஒரு மின் சக்திகொண்டு அந்தச் சூலத்தை ஆட்டிவைக்கிறான் என்ற சூட்சமத்தை நாம் புரிந்துகொண்டால், பயப்படத் தேவையில்லை, மண்டியிட்டு வணங்கி வாழவேண்டிய அவசியமுமில்லை. நமது தனி முயற்சிகொண்டு அதைவிடப் பலமான திரிசூலத்தை ஆட்டிவைக்கலாம், பார்ப்போர் கருத்தும் மனதும் மகிழும் வகையில்.

எதிர்கால உலகம் இன்புற
அறிவுநூல்களை ஏந்துங்கள்!

எல்லோருக்கும்
எமது வாழ்த்துக்கள்

அண்ணாவின்
"கலிங்கராணி"
(அச்சில்)

திராவிடப்பண்ணை
தெப்பக்குளம், திருச்சி

மூன்று கடிதங்கள்

அண்ணாதுரை

சிறு கதை

அந்தக் கலியாணத்தைப் பார்த்தாகவேண்டுமென்று எனக்கு ஒரே துடிப்பு, கடன் வாங்கிக்கொண்டு கிளம்பினேன் கிள்ளிக்கு. என் அத்தை மகள் முத்தம்மாவையும் பார்த்துவிட்டு வரலாம் என்று ஆசைதான்—உங்களிடம் உண்மையைச் சொன்னால் தவறல்ல, சொல்லிவிட்டேன்! கலியாணம், வேம்புக்கும் அரசுக்கும்!!

கிள்ளியிலே, முத்து, மாணிக்கம், மீனாட்சி, அபுரூபம், அகிலாண்டம், இன்னாசிமுத்து, இபுராகிம், சொக்கன், மாரிமுத்து, என்று இப்படிப் பலர் உண்டு, எனக்குத் தெரிந்தவர்கள்; பல கலியாணங்களும் நடந்திருக்கின்றன; நான் சென்றதில்லை, ஓய்வு ஏது, இங்குதான் 'சர்வஜன சகாயநிதி'யில் எனக்குக் கடுமையான வேலையாயிற்றே, லீவு தருவாரா, மானேஜர் மார்க்கபந்து சாஸ்திரி.

இந்த வேப்பு—அரசு கலியாணத்தை மட்டும் எப்படியும் பார்த்துத் தீர வேண்டும் என்று எனக்கு ஒரே ஆவல், ஏன் என்கிறீர்களா, வேப்பஞ் செடிக்கும் அரசஞ் செடிக்கும் கலியாணம் அது, அடிக்கடி நடைபெறக்கூடியதா, கிள்ளிகள் மறைந்து கொண்டல்லவா வருகின்றன.

தற்செயலாகத்தான் இந்தக் கல்யாணச் 'சேதி' எனக்குத் தெரிந்தது—நான் மும்முரமாக ஈடுபட்டிருந்த பகுத்தறிவு படிப்பகத்தில், 'பலகணி' பத்திரிகையில் கொட்டை எழுத்தில் இந்தக் கலியாணச் செய்தி வெளிவந்திருந்தது. மாஜி மந்திரி பாஜிராவ் அதன் ஆசிரியர்.

கலியாணம் செய்துகொள்ளும் பக்குவமடைந்த எவ்வளவோ பேர், பணவசதி இல்லாததால், மனப் பசியைப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள்—ஊரைச் சொல்லுவானேன், எனக்கே ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால், முத்தம்மா இப்போது, இங்கு இருப்பாள்! இப்படி நிலைமை இருக்கிறது, கிள்ளியில், வேப்புக்கும் அரசுக்கும் கலியாணமாம், அதற்குத் தங்கராயனம் தணிகாசலம் கச்சேரியாம், பொய்க்கால் குதிரையாம், போகர்பரம்பரை பொய்யாமொழியார் 'கிரிசடையும் விரிசடையும்' என்ற காலட்சேபம் செய்கிறாராம், பாயாசத்துடன் விருந்தாம், எல்லாம் பக்தர்கள் உபயமாம், இந்தப் பக்தியையும் அதை எடுத்துக்காட்ட பணத்தையும் திரட்டும் பொறுப்பை, பூமிநாத முதலியார் ஏற்றுக்கொண்டிருக்கிறாராம்!

இவ்வளவும் 'பலகணி'யில் வெளிவந்தது. இந்த வேம்பு-அரசு திருமணம், இனியும் நெடுங்காலத்துக்கு நடக்கப்போவதில்லை, கண் இருக்கும்போதே பார்த்துவிடுவோம், முடியுமானால், இந்த முயற்சி எவ்வளவு பைத்யக்காரத்தனமானது என்பதை எடுத்துச் சொல்லுவோம்—யார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் முத்தம்மா இருக்கிறாள், கேட்க! என்று எண்ணினேன். கடன் பெறுவது கஷ்டமான காரியமல்ல—பழகிப்போன காரியம் கிள்ளி வந்து சேர்ந்தேன்—முத்தம்மாவைக் கண்டு பேசினேனா என்று கேட்கிறீர்களா? அதிகமாகக் கிளறுகிறீர்களய்யா, நீங்கள் என்ன செய்திருப்பீர்கள், உங்கள் முத்தம்மாவைக் கண்டால்!

வேப்பு—அரசு திருமணம் வெள்ளிக்கிழமை—நான் கிள்ளிக்கு நாலுநாள் முன்னதாகவே வந்துவிட்டேன்—சிலரிடம் இலேசாகப் பேசிப்பார்த்தேன், 'பைத்யக்காரப் பிள்ளை!" என்று கேலி செய்தார்கள்.

அத்தை வீட்டுத் திண்ணையில் ஆயாசத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தேன். சுருள் கத்தி சுந்தர வாத்தியார், மீசையை முறுக்கியபடி வந்தார்—கையிலே கடிதத்துடன்!

'சுருள்கத்தி' விளையாட்டிலே அவருக்கு நிகர், அந்தப் பக்கத்திலேயே யாரும் கிடையாது—சிலம்பக் கூடம் நடத்திவந்தவர்—வாத்தியார் பட்டம் அதனால்தான். கிள்ளையிலும் அதைச் சுற்றி பத்துமைலுக்கும் அவர் வைத்ததுதான் சட்டம். "போக்கிரி! தன்னந்தனியாக இராக்காலத்திலே போகும்போது கத்தியாலே குத்திவிடுவான், நமக்கேன் அவனிடம் பகை" என்று பேசிக்கொள்வார்கள்; எதிரே பார்க்கும்போது, "வாத்தியாரே! சௌக்யமா?" என்று கேட்பார்கள். "ஆண்டவன் புண்யத்திலே சௌக்யத்துக்குக் குறைவு இல்லை" என்று அவரும் சொல்லுவார்.

"தம்பி! பட்டணத்துத் தம்பிதானேடா அது" என்று கேட்டுக்கொண்டே அருகே வந்தார், பார்வை பழுதாகிக்கொண்டு வருகிற வயது.

"ஆமாம், வாத்யாரே! நான்தான், நடராசன்" என்றேன்.

"நல்ல வேளையாய்ப் போச்சுது— இதோ பாரு, ஒரே அடியா மூணு கடுதாசி வந்திருக்கு. முத்தாகிட்ட கொடுத்து படிக்கச் சொல்லிக் கேட்கலாம்னு வந்தேன் ராஜாவே இருக்கிறபோ, ராணியைத் தேடுவானேன், படி—" என்று சொலியபடி மூன்று

கடிதங்களைக் கொடுத்தார், பக்கத்திலே உட்கார்ந்தார்.

ஒரு கடிதத்தைப் பிரித்தேன். அனுமார் படம் போடப்பட்டு, அதனடியில் அனுமத் உபாசகர். ஜேஹிந்து ஜோதிட சபா, என்று அச்சிடப்பட்டிருந்தது.

"படி! படி" என்று ஆவலுடன் கேட்டார்.

ஸ்ரீமான் சுந்தரத்துக்கு, பகவத் கடாட்சத்துடன், தெரிவிப்பது என்னவென்றால், இப்பவும் உன்னுடைய, பெயர் வாசிக்கும், கடிதம் எழுதிய நேரத்துக்கும் பிறந்த வருஷம் மாதம் தேதி குறித்த அனுப்பி இருந்ததக்கும் சேர்த்து, ஜோதிடம் கணித்துப் பார்த்தாகிவிட்டது.

உம்முடைய 'ஜாதகம்' யோக ஜாதகம்; அதாவது, நல்ல கீர்த்தியும், பெயரும், இருக்கும். ஐஸ்வரியத்துக்குக்குறைவு இல்லை, அது இல்லை என்ற குறையும் உமக்கு இராது. ஆரோக்கிய விஷயத்தில், உமக்கு அவ்வளவு யோக ஜாதகமாக இல்லை.

இப்போது உமக்கு ஒரு நல்ல 'கிரஹம்' உதவியாக வந்து சேர்ந்திருப்பதால், கூடிய சீக்கிரத்தில் தனம் தானியம் கிடைப்பதோடு, பெரிய இடத்திலே சிநேகமும், மனச்சந்தோஷமும், கௌரவமும், ஏற்படும். ராஜ பார்வை ஏற்படலாம்; அதாவது சர்க்காரிடமிருந்து விசேஷமான சன்மானங்கள் கிடைக்கும்.

மற்றப்படிக்கு, உம்முடைய ஜாதகமோ, வேண்டியவாளுடைய ஜாதகமோ அனுப்பிவைத்தால், முழு ஆயுள் பலன் எழுதி அனுப்பப்படும். அனுமன் காணிக்கை ஆறு ரூபாய் அனுப்பவும், ஆசீர்வாதம்.

அனுமத் உபாசி ஜே ஹிந்து.

* * *

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

பாலிசிதாரர்களுக்கும், பங்குதாரர்களுக்கும்,
வைத்திய பரிசோதகர்களுக்கும் மற்றும்
சோசைடியின் ஆதரவாளர்களுக்கும்

இத் தமிழர் திருநாளன்று
எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

ஜீவிய-மோட்டார்-தொழிலாளர் விபத்து
நஷ்ட ஈடு-இன்ஷ்யூரன்சுக்கும்
ஊதியமுள்ள பிரதிநிதித்துவத்திற்கும்

இந்தியா லைப் & ஜெனரல் அஷ்யூரன்ஸ்
சொசைடி, லிட்
தலைமை காரியாலயம், கோயமுத்தூர்

ஓங்கி வளர்ந்துவரும் ஓர் தென் இந்திய நிலையம்

M S பழனியப்ப முதலியார் B. A.
சேர்மேன் & Mg டைரக்டர்,

C. R. சிவசுப்பிரமணியம் B. A. காரியதரிசி.

படித்துக்கொண்டுவரும் போதே 'வாத்தியார்' குதூகலமடைந்தார்! " 'சன்மானம்'-னு சொல்றுரே, தம்பீ, அதிலேயும் சர்க்கார்லே இருந்து சன்மானம்னு சொல்றுரே, எனக்கு எதுக்குச் சர்க்கார் சன்மானம் தரப்போவுது, நான் என்ன எலக்ஷன்லே நிற்கறவனு, ராவ் பகதூரு பகல் பகதூரா? விளங்கலியே" என்று கேட்டார். நான் என்ன பதில் சொல்ல! "அளப்பு வாத்யாரே! வெறும் அளப்பு!" என்றுதான் சொல்லவேண்டும், சொன்னால், கோபம் தானேவரும், 'வாத்தியார்' தான், ஜோதிடர் எழுதி இருந்ததை அப்படியே நம்பிப்பூரித்துக்கிடக்கிறரே. மற்றோர் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

வந்தேமாதரம் ஸ்டோர்,
வரதப்ப செட்டியார்.

என்று அச்சிடப்பட்ட தாளில் எழுதப்பட்டிருந்தது.

"வந்தேமாதரம் இஸ்ட்டோரா? அது என்ன தம்பீ...வரதப்பசெட்டியாரு, யாரு...?" என்று வாத்யார், கேட்டார். நான் கடிதம் எழுதியவர் பெயர், என்ன என்று பார்த்தேன், சின்னசாமி சேந்தமங்கலம், என்று இருந்தது, சொன்னேன்.

"அடடே! நம்மசின்னுன்! என் மருமவனுக்குத் தம்பி...படி, படி" என்றூர் வாத்யார். படித்தேன்.

மகாராஜராஜஸ்ரீ வாத்யார்க்கு, சின்னசாமி நமஸ்காரம். நம்மதலையிலே பெரிய இடிவிழுந்து போச்சு, அண்ணனைப் போலிசிலே பிடிச்சி இருக்கருங்க—கொலைக்குத்தத்துக்காக—வீடு பூராவும் இழவுவிழுந்தமாதிரி இருக்குது. யாரார் காலிலேயோ, நானும் அண்ணியும் விழுந்து கும்பிட்டும் அண்ணனை விடமாட்டேன்னு சொல்லிவிட்டாங்க—அண்ணிக்கு மயக்கம், வந்துடிச்சி; போன தைமாசம் நீ ஒரு பாவிப்பயலே, அனுப்பிவைச்சதாலே வந்ததுதான் இந்த ஆபத்து. பால்காவடி வேல்சாமியாராலேதான், அண்ணன் இப்ப, ஜெயிலிலே இருக்குது—அவனையும் அடைச்சிவைச்சிருக்காங்க. எங்க வீட்டுத்தோட்டத்திலே, பெரிசா புதையல் இருக்குதுன்னு சொல்லி அண்ணனை ஏமாத்தி இருக்கிறன் அந்தப்படுபாவி. அண்ணன் பைத்யக்காரத்தனமா அதை நம்பிக்கிட்டு, அவன் சொன்னபடி ஐஞ்சு வயது பையனைக் 'காவு' கொடுத்துதாம்—பக்கத்துத் தெருவு பையன். போலீசுக்கு எட்டிப்போச்சு — அண்ணனைப் புடிச்சிகிட்டாங்க. உடனே ஒரு நூறு ரூபா, கையாத்து வாங்கிகிட்டு, வரணும். மறக்காம, பணம் வாங்கிவரவேணும். இங்கே ஊரே, அண்ணன் மேலே விரோதமா இருக்கறதாலே ஒத்தைக்காசுகூட கடன் கிடைக்கல்லே. நம்ம போறுதவேளை, குடிமுழுகுது, உடனே வரணும்,

சின்னசாமி,

ஊரையே மிரட்டுகிற 'வாத்யார்' பட்ட வேதனையைப் பார்த்து, எனக்குப் பரிதாபமாக இருந்தது 'ஐய்யய்யோ! என் தலையிலே இடி விழுந்துதே! கொலைக்குத்தம்னு இலேசானதில்லையே, நான் என்ன செய்வேன்" என்று கண்ணீர் விட்டபடி சொன்னூர்.

மூன்ருவது கடிதத்தைப் பிரித்தேன்—வாத்தியார், தலையில் கைவைத்துக்கொண்டு, சோகமாக

இருந்தார், படிக்கும்படிக்கூடச் சொல்லவில்லை—எனக்கும் கடிதத்தை ஒருவாறு பார்த்த உடன், படிக்கத் தோன்றவில்லை—மடித்து உரையிலே போட்டுவிட்டு. "சேந்தமங்கலம் போகிற ஏற்பாட்டைப்பாருங்க, வாத்தியாரே!" என்றேன்.

"என்னடாப்பா சொல்றே!" என்று அழுது கொண்டே கேட்டார்.

"கிளம்பறேண்டாப்பா, கிளம்பறேன் — என் மருமவன் கதி இப்படி ஆச்சே..." என்றார் —சொல்லி விட்டு, இந்த இழவிலே என்ன இருக்கு, படிடாப்பா, என் தலைக்கு இன்னும் என்ன தீம்பு வருமோ, படி" என்றார். படிக்க என்மனம் இடம்தர வில்லை "இது ஒண்ணுமில்லை, வாத்தியாரே, யாரோ ஒருத்தரு, எதை எதையோ எழுதி இருக்கறாரு, வேப்பமரம் அரசமரம் கலியாண விஷயமாக" என்றேன்.

"என்ன எழவோ, படிச்சிச்சொல்லு" என்றார்— மீற முடியவில்லை, படித்தேன்.

சுருள்கத்தி சுந்தரவாத்தியாருக்கு, அருள்வாக்கு அம்பலவாண குரு, எழுதியது,

நம்ம கிள்ளையிலே, நடக்கற சகல காரியத்துக்கும், நான் உன்னை நம்பி இருக்கிறவன் என்பது உனக்கே தெரியும். அதனாலேதான், நம்ம அருள்சாமி கோயில் தோப்பு 'குத்தகை' இந்த வருஷம் உனக்கு கொடுத்திருக்கிறது, கவனப்படுத்தத் தேவை இல்லைன்னு நினைக்கறேன்.

கிள்ளையிலே, பூமிநாதர் புண்ய காரியமாக, 'வேம்பரசு விவாஹ சுப முகூர்த்தம்' செய்கிறார் என்கிறதாகக் கேள்விப்பட்டு, மெத்தச் சந்தோஷமானேன்—நம்ம தோப்பிலே இருந்து அவர் கேட்கற இளநீரு, வாழை, தரவேண்டியது கூடமாட இருந்து ஆகவேண்டிய காரியத்தைக் கவனிக்கவேண்டியது. நீ, கிணத்துத் தவளை மாதிரி இருக்கறதாலே, உனக்கு ஊர் விவகாரம் தெரியாதில்லை. சொல்லிவைக்கறேன்.

இப்ப, ஒரு தறுதலைக் கூட்டம் கிளம்பி இருக்கு, சாமீ இல்லை, பூதம் இல்லை, ஜோதிடம் பொய், ஆருடம் அர்த்தமில்லே; கோயில் வேண்டாம், கொளம் வேண்டாம்னு கூவிக்கொண்டு, நல்ல காரியத்தைக் கெடுக்கறானுங்க.

கிள்ளையிலே நடக்கப்போகிற, வேம்பரசு விவாஹத்தை பைத்யக்காரத்தனம் என்று சொல்லி, பேசி, ஏசி, கலாட்டா செய்ய, அந்தப்பசங்க ஏற்பாடு செய்கிறதாக வதந்தி வந்திருக்குது. நம்ம மதம், எப்படிப்பட்டது, என்கிற விஷயம், அதுகளுக்கு என்ன தெரியும். நம்ம பெரியவர்கள் காலத்திலே இருந்து, ஜோதிடம் இருக்குது — அதிலே இருக்கிற விசேஷம், மகத்துவம், இந்த மதிகெட்டவனுங்களுக்குத் தெரியாது. உன்னைப்போல இருக்கிறவங்களுக்குத் தெரியும். அதனாலே, நம்ம ஊரிலே எந்த ஒரு கலகமும் நடக்காதபடி, பார்த்துக்கொள்ளவேணும். வாய்மிரட்டு' கைமிரட்டு, எதைச்செய்ய வேணுமோ அதைச்செய்து, நம்ம பூமி நாதர் காரியத்துக்குக் குந்தகம் வராதபடி பார்த்துக்கொள்ள வேணும். இங்கே இருந்து இந்த கழகத்தானுங்களுடைய ஆள், ஒருத்தன், மூன்னதாகவே, கிள்ளைக்கு வந்திருக்கிறானும் — நடாசன்னு பேராம்—ஆசாமியை, முதலிலே கவனிச்சுக்கோ— பிறகு, மத்தவனுங்க தலைகாட்டாது. கேசுக்குப் பயப்படாதே, நான் இருக்கறேன். இப்படிக்கு

குருநாதன்.

சிரமப்பட்டுத்தான் படித்தேன் — அவ்வளவு சோகத்துக்கிடையிலேயும், வாத்தியார் சிரித்தார்.

"தம்பீ! மூணு கடுதாசியும் ஒண்ணுவந்ததே — என் கண்ணு தொறந்துது. இந்த ஜோசியக்காரனுங்க, சாமி வேஷக்காரனுங்க, குருவுங்க, இவங்களை நம்பறது, பைத்யக்காரவேலை, இப்பத்தான் புரியுது. மூணு ரூபாயை முள்ளங்கிபத்தைமாதிரி அனுப்பினேன் — அந்த அனுமார்காரன் எனக்கு 'வெருமானம்' கிடைக்கப்போவுதுன்னு ஒரு அண்டப்புளுகு கடிதம் அனுப்பினான்—அங்கே என் மருமவன், சாமியார் பேச்சாலே கொலைகாரனானன், இப்ப இந்த அகப்பட்டதைச் சுருட்டற ஆசாமி உன்னை உதைக்கச்சொல்லி, எனக்குத் தூபம் போடறான். பார்த்தயா, வேடிக்கையை. நான் ஒரு மடயன், இப்படிப்பட்ட விஷயத்தை எல்லாம், நம்பிகிட்டுக் கிடந்தேன்—புத்தி வருது இப்பத்தான்" என்றார்.

எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில், என்னிடம் நூறுரூபாய் இருந்தால், அவரிடம் அப்போதே கொடுத்து, சேந்தமங்கலம் அனுப்பிவிடுவேன்—நான்தான் மாதம் நாற்பதுக்கு மார் உடையும்படி வேலை செய்பவனாயிற்றே.

சுக்கு நூறாகக் கடிதங்களைக் கிழித்துப் போட்டபடி, வாத்தியார், "இந்த ஜோசியக்காரனுங்க, சாமியாடற பசங்க, கொளம் குட்டையைக்காட்டி மூட்டை அடிக்கிறவனுங்க இவனுங்களை நம்பினா, நம்பினவன் தலையிலே இடிதான் விழும் — இதோ, என் தலையிலே விழுந்ததே, தெரியலையா" என்று கூறிக்கொண்டே போகிறார்.

முத்தம்மாவின் குரல் கேட்கிறது, குழந்தையைக் கூப்பிடுகிறாள், ...என்னைத்தான் ......எனக்கல்லவா, அவளுடைய 'பிளான்' தெரியும்! போகிறேன்!!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.

வருகிறது
பரிமளம் பிக்சர்ஸ்
சொர்க்கவாசல்
கதை, வசனம்.. அறிஞர் அண்ணா
BALU BROS
டைரக்ஷன் A. காசிலிங்கம்